ஸ்ரீ ப்ரஹ்ம புராணம்

ஈ-௧௦௬

ஸாஹித்ய வாங்முக பூஷணம்
ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவசர்மா

ரகலாவிலாஸினீமலர் 15

ஸ்ரீ வேதவ்யாஸாயநம :

ஸ்ரீப்ரஹ்ம புராணம்

ஆசிரியர்

ஸாஹித்ய வாங்முக பூஷணம்

மஹோபதேசக, தர்மஸேவாதுரந்தர

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவசர்மா.

ஸ்ரீ அமரகலாவிலாஸினீ ஸபை.

154, தம்புசெட்டி வீதி சென்னை.

பவ வருஷ பங்குனிமீ

1935

காபிரைட்]

முகவுரை.

பதினெண் புராணங்களுக்குள் பிரம்ம புராணம் முதன்மையானதாகும். இது பத்தாயிரம் சுலோகங்களும் நூற்றுமுப்பத்தெட்டு அத்யாயங்களும் கொண்டதென சிலரது மதம். மற்ருேர் சாரார் பதிமூன்ருயிரம் சுலோகங்களும் இருநூற்று நாற்பத்திமூன்று அத்யாயங்களும் பூர்வோத்தரமென இருபாகங்களும் கொண்டதெனக் கூறுகின்றனர். பிரும்மா மஹர்ஷிகளுக்குக் கூறியதால் பிரும்ம புராணம் எனப்படும். மும்மூர்த்திகளில் ஒருவரான பிரும்மாவின் பெருமையைக் கூறுவதாலும் பிரும்ம புராணம் எனப்படும். இது மும்மூர்த்திகளையும் ஸமமாகவே கூறுகிறது. பற்பல இடங்களில் கீதாச்லோகங்கள் அப்படியே காணப்படுகின்றன. ஏனைய புராணங்களைப்போல் புராண லக்ஷணங்களான ஐந்து விஷயங்கள் கூறப்படுவதுடன் ச்ராத்தத்தைப் பற்றி மிக விஸ்தாரமாக வர்ணிக்கிறது. தேவதைகள் கூறும் க்ருஷ்ண தண்டகஸ்துதியும் கண்டுமுனிவர் கூறும் பிரும்ம பாரம்யஸ்துதியும் மிக ரஸமானவைகள். உத்தரபாகத்தில் கௌதமீ மாஹாத்ம்யத்தை விளக்கி நூற்றுநான்கு ருசியான கதைகளும் பற்பல அரியபெரிய தர்மங்களும் காணப்படுகின்றன. அமரகலாவிலாஸினீயின் க்ரமத்தில் ஆருவதாக இதை வெளியிடுகிறேம். இது வெளிவரும் விஷயத்தில் மிக்க உத்ஸாஹத்தை ஊட்டிய நண்பர்களுக்கு நன்றிபல. தர்ம விஷயத்தில் உத்ஸாஹத்தை ஆசீர்வாத மூலமாக விருத்திசெய்து வரும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ பகவத்பாதாளது திவ்ய ஸ்ரீ பாதார விந்தங்களில் பணிவுடன் பல கோடி நமஸ்காரங்களை ஸமர்ப்பிக்கிறேன்.

ஆஸ்திக ஜநவிதேயன்,

வெ. ஸோமதேவசர்மா.

விஷய ஸூசிகை.

நெ.	விஷயம்.	பக்கம்.
1.	ப்ருது சரிதம்	1
2.	பதினான்கு மனுக்கள்	3
3.	மார்த்தாண்ட சரிதம்	,,
4.	துந்துமார சரிதம்	5
5.	ஸத்யவ்ரதன் சரிதம்	7
6.	ஸகர சரிதம்	8
7.	சந்த்ர சரிதம்	10
8.	அமாவஸு வம்சம்	12
9.	ரஜி சரிதம்	13
10.	யயாதி சரிதம்	14
11.	கார்த்தவீர்ய சரிதம்	16
12.	கிருஷ்ணன் சிவனருளால் புத்திரனைப் பெற்றது	17
13.	சிவன் லிங்கமானது	19
14.	அர்ஜுனனுக்கு வ்யாஸர் உபதேசம்	20
15.	காசியின் மாஹாத்ம்யம்	21
16	சங்குகர்ண சரிதம்	22
17.	வியாஸர் காசியை விட்டது	24
18.	ப்ரயாகை மாஹாத்ம்யம்	,,
19.	புவன மண்டலம்	26
20.	மேருமலை	27
21.	ஜம்பூத்வீபத்தில் தேவாலயம்	29
22.	வேதவ்யாஸாவதாரங்கள்	,,
23.	சிவாவதாரங்கள்	30
24.	ஈச்வர கீதை	31
25.	ஏகாம்ர க்ஷேத்ரம்	33
26.	புருஷோத்தம க்ஷேத்ரம்	,,
27.	இந்த்ரத்யும்நன்	35
28.	வடவிருக்ஷமும் மார்க்கண்டேயரும்	37
29.	ஹரியும் ஹரனும் ஒன்றே	38
30.	நரஸிம்ம பூஜை	39
31.	ச்வேதமாதவம்	40

32.	த்வாதசயாத்ராபலன்	41
33.	ஸ்ரீ க்ருஷ்ண விக்ரஹ ஸ்ருஷ்டி	,,
34.	கண்டு முனிவர்	42
35.	வாஸுதேவ வ்யூஹமும் கேசமும்	45
36.	ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம்	46
37.	பூதனை முதலிய அரக்கர் வதம்	48
38.	காயத்ரீ	49
39.	க்ருஹஸ்த தர்மம்	50
40.	ச்ராத்தம்	62
41.	ச்ராத்தார்ஹமானவர்கள்	63
42.	ச்ராத்த அனர்ஹர்கள்	64
43.	உஷா பரிணயம்	65
44.	பௌண்ட்ரகவதம்	67
45.	பலதேவ வீர்யம்	,,
46.	பகவான் ஸ்வர்க்கம் செல்லுதல்	68
47.	அர்ஜுன சோகம்	70
48.	பகவதவதாரங்கள்	71
49.	புண்யபாபம், ஸ்வர்க்க நரகம்	72
50.	தர்மமும் ஸ்வர்க்கமும்	75
51.	பாபபலன்	76
52.	ச்ராத்தம்	77
53.	வராஹமூர்த்தியால் துவக்கப்பட்ட ச்ராத்தம்	79
54.	ஸதாசாரம்	80
55.	பாத்ர சுத்தி	84
56.	வர்ணாச்ரமாதி தர்மம்	85
57.	பக்த சண்டாளன்	87
58.	பக்தசண்டாளனது முற்பிறவி	91
59.	காமதமனனது மாயாதர்சனம்	94
60.	கலியின் தோஷமும் குணமும்	97
61.	ஜ்ஞான ஸாதனங்கள்	100
62.	கௌதமீ மாஹாத்ம்யம்.	102

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய.

ஸ்ரீ ப்ரஹ்ம புராணம்.

நைமிஷாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகள் பனிரண்டாண்டு செய்யத்தக்க ஓர் ஸத்ரத்தைச் செய்தனர். அவ்வுத்தம யாகத்தைத் தர்சிக்க நான்கு திக்குகளிலிருந்தும் எண்ணிறந்த மாமுனிவர்கள் வந்தனர். அவர்களிடையே வேதவ்யாஸரின் சிஷ்யரான ரோமஹர்ஷண ஸூதரும் காணப்பட்டார். வேள்வியிலீடுபட்ட வைதியரனைவரும் மற்றவர்களைப்போல் ஸூதரையும் நன்கு வரவேற்று உபசரித்தார்கள். அனைவரும் அவரவருக்கேற்ற ஆஸநத்தில் அமர்ந்தனர். நற்கதை கேட்பதில் பேராவா கொண்ட நைமிஷாரண்ய முனிவர்கள் ஸூதரைப் போற்றி உலகு, அஃதுண்டான வகை, பரிபாலநம், லயம், இவைகளுக்குக் காரணமான ஈசன், அவனது ஆணையான ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள், ஆங்கு காணப்படும் அரிய தர்மங்கள் ஆகிய எல்லாவற்றையும் விரிவாக விளக்க வேண்டுமென வேண்டினர். ஸூதர் தனது குருவையும் பகவானையும் பணிந்து உலக ஸ்ருஷ்டியை உரைத்து மற்றும் பல கதைகளைக் கூறினர்.

ப்ருது சரிதம்.

அத்ரி வம்சத்தில் அங்கன் என்றோர் ப்ரஜாபதி இருந்தார். அவர் மிருத்யுவினது பெண்ணான ஸுநீதையை மணந்தார். அவ்விருவர்களுக்கும் வேநன் என்றோர்

குழந்தை பிறந்தது. அவன் வயது வந்தபோது வேத மோதல் வேள்வி செய்தல் முதலிய ஸத்தர்மங்களை எவரும் செய்யலாகாதென தடுத்தான். மநவருத்தங் கொண்ட மஹர்ஷிகள் அவனிடம் வந்து முறையிட்டனர். அதைக் கேளாமல் தானே யக்ஞமென்றும் தன்னையே எல்லோரும் பூஜிக்க வேண்டுமென்றும் கூறினன். இதைக் கேட்டு சினங்கொண்ட முநிவர்கள் சாபத்தினுல் அவனைக் கீழே தள்ளினார்கள். அரசனில்லாவிடில் அதர்மம் அதிகமாகு மெனக்கருதி அரசனைநாடி அவன் இடது தொடையைக் கடைந்தனர். அங்கிருந்து க்ரூரவடிவத்துடன் மிகக் குள்ளமான ஒருவன் தோன்றினன். அவனை அத்ரி நிஷீத என்று கூறி வேடஜாதிக்குத் தலைவனுக்கினர். வலது தொடையைக் கடைந்தனர். அங்கிருந்து மிக அழகிய ரூப முள்ள ப்ருது தோன்றினன். இவ்வரிய ஸத்புத்ரனுல் புத் எனும் நரகத்தைக் கடந்து வேநன் ஸ்வர்க்கம் சென்முன். ஸகல தேவர்களுடன் கூடி பிரும்மா ப்ருதுவுக்குப் பட்டா பிஷேகம் செய்தார். வேநனிடம் வெறுப்புண்ட அனை வரும் ப்ருதுவினிடம் பேரன்பு பூண்டனர். அவன் ப்ரயாணம் செய்யும்போது ஜலம் அசையாது கனமாக நின்று வழிகொடுக்கும். மலை பூமிமட்டத்திற்குத் தழை ந்து நிற்கும். பூமி உழாமலே பலனை அளித்தது. அதே ஸமயத்தில் பிரும்மா ஓர் யாகம் செய்தார். ஸூத்யாஹஸ் என்ற தினத்தில் இருபுருஷர்கள் ஜநித்தார்கள். அவர்களுக்கு ஸூதர், மாகதர் என பிரும்மா பெயரிட்டார். பிரும்மா அவர்களை ப்ருதுவின் குணத்தைக் கொண்டாடும்படி கட்டளையிட்டார். ஸூதருக்கு அநூபதேசத்தையும் மாகதனுக்கு மகத தேசத்தையு மளித்தார்.

தார்மிகனை ப்ருதுவினிடம் ஸகல ஜநங்களும் வந்து தங்களுக்கு ஜீவநத்தை அளிக்கும்படி வேண்டினார்கள்.

வேனனது பாபத்தால் பூமியில் விதைத்த விதைகள் முளைப் பதில்லை. ஆதலால் ப்ருது பூமியைச் சிக்ஷிக்கக் கருதி கையில் வில்லேந்தி சென்றான். பூமி ஆவினுருவ மெடுத்தோட அரசன் அவளைத்துரத்திச் சென்றான். அவனது இஷ்டப் படி நடக்க பூமி இசைந்தாள். அவன் வில்லின் நுனியால் பூமியின் மேடு பள்ளங்களைச் சமமாக நிறவினான். ஸ்வாயம் புவ மநுவைக் கன்றாக்கித்தனது கையில் ப்ருது பயிர்களைக் கறந்தான். அங்ஙனமே தேவர் முனிவர் ஸித்தர் ஸாத்யர் முதலிய அனைவரும் தத்தமக்கேற்ற த்ரவ்யங்களைக் கறந்துக் கொண்டனர். உலகிற்குப் பேருபகாரம் செய்த ஆதிராஜ னை பிருதுவை வணங்கித் துதித்து எந்த காரியத்தை ஆரம்பித்தாலும் அது நன்கு பூர்த்தியாகும்.

பதினான்கு மனுக்கள். ஒவ்வொரு மனுவின் ஆயுட்கா லம் மந்வந்தர மெனப்படும். அந்தந்த மனுவின் காலத் தில் அவர்கள் ஸந்ததியில் வெவ்வேறு ஸப்தரிஷிகள் தோன்றுவார்கள். இவர்கள் மூலமாகவே ராஜவம்சமும் ரிஷிவம்சமும் விருத்தியாகும். ஸ்வாயம்புவமநு ஸ்வாரோ சிஷமநு ஔத்தமமநு தாமஸமநு ரைவதமநு சாக்ஷு ஷமநு வைவஸ்வதமநு ரௌச்யமநு பௌத்யமநு ஸூர்ய ஸாவர்ணிமநு ப்ரம்மஸாவர்ணிமநு தர்மஸாவர்ணிமநு ருத்ர ஸாவர்ணிமநு தக்ஷஸாவர்ணிமநு ஆகிய இப்பதினான்குமநுக் களின் காலம் பதினான்கு மந்வந்தரங்களாகும். ஆறுமநுக் களின் ஆக்ஷி முடிவடைந்து ஏழாவதான வைவஸ்வத மநு வின் காலமே தற்சமயம் நடைபெறுகிறது. இவர்களது சரிதத்தைக் கேட்டாலும் படித்தாலும் நமது பாபமகலும்.

மார்த்தண்ட சரிதம். வைவஸ்தமநுவின் தந்தை விவஸ் வான் எனப்படுவார். அவர் கச்யபரது புத்ரர். கச்ய பரது மனைவியான தாக்ஷாயணி கர்ப்பிணியாக இருக்கும் போது ஓர் மஹர்ஷி பிக்ஷைகேட்டார். கர்ப்ப பாரத்தால்

ச்ரமப்படும் தாக்ஷாயணி பிக்ஷையை எடுத்துக் கொண்டு மந்தமாக வந்தாள். அதிதியை விட கருவினிடம் அதிக அன்பு செலுத்தியதால் அக்கரு அழிந்து விடுமென முநி சாபமளித்துச்சென்றார். இதைக்கேட்டு அடங்காத்துயரங் கொண்ட தாக்ஷாயணி அண்டவடிவமான தன் கரு இறந்ததெனக்கச்யபரிடம் கூறினாள். அவர் அதைக்கேட்டு ஞானக்கண்ணால் நோக்கி பெண்ணே! அது மிருத அண்டமல்ல என்றார். ஆதலால் அக்குழந்தைக்கு மார்த்தண்டன் எனப்பெயர்வழங்கிற்று. அவருக்கே விவஸ்வான் ஸூர்யன் என பல நாமங்கள் உண்டாயின. த்வஷ்டா என்பவர் தனது புத்ரியான ஸம்க்ஞை என்பவளை அவருக்களித்து மணம் செய்வித்தார். இவர்களுக்கு ச்ராத்த தேவரெனப்படும் வைவஸ்வதமநு யமன் யமுனை என மூன்று குழந்தைகளுண்டாயின. தன் கணவனது ச்யாமவர்ணத்தைக்கண்டு ஸஹியாத ஸம்க்ஞாதேவி தனது நிழலை ஓர்பெண்ணாக்கினாள். அவளே சாயாதேவி எனப்படுவள். தனது குழந்தைகளை ரக்ஷிக்கும்படியும் தான் சென்றதை வெளியிடாதிருக்கும் படியும் ஸம்க்ஞை சாயையிடம் கூறினாள். தன்னை எவரும் சபிக்காதவரையிலும் தன் மயிரைப்பிடித்திழுக்காத வரையிலும் இந்தரஹஸ்யத்தைத் தான் வெளியிடுவதில்லை என்று சாயை கூறினாள். ஸம்க்ஞை தன் பிறந்த வீட்டிற்குச்சென்றாள். அவளது தந்தை எப்படியிருந்தாலும் பெண்கள் தன் புருஷனகத்தை விட்டு வருவது தர்மமில்லை. ஆதலால் அங்கேயே செல் எனக் கூறினார். அவள் அங்கு செல்ல மநமில்லாமல் பெண் குதிரைவடிவ மெடுத்து உத்தரகுரு க்ஷேத்ரத்தில் மேய்ந்துக்கொண்டிருந்தாள். இதனிடையில் சாயாதேவிக்கு மநு ஸாவர்ணி சனைச்சரன் என இருபுதல்வர்கள் பிறந்தனர். இவள் தன் குழந்தைகளிடம் அதிக அன்பு செலுத்தி

மூற்றவள் குழந்தைகளை அலக்ஷ்யம் செய்து வந்தாள். இதை யறிந்த வைவஸ்வதமநு பொறுத்திருந்தார். யமனோ சினங்கொண்டு புதல்வர்களுக்குள்ளே பேதம் பாராட்டுபவள் உண்மைத்தாயோ என்று காலைத்தூக்கினான். சாயை அக்கால் அழுகி விழும்படி சபித்தாள். இந்த விருத்தாந்தத்தை யமன் தந்தைக்கறிவித்துத் தான் கோபத்தினால் காலைத் தூக்கியதாகவும் உதைக்க வில்லை ஆதலால் அச்சாபத்தை அகற்றும் படியும் வேண்டினான். ஸூர்யன் அக்காலின் மாம்ஸத்தைப் புழுக்கள் பூமிக்குக்கொண்டுசெல்லும். அக்கால் அழியாதெனக் கூறி சாயையினிடம் சென்று உண்மையை அறிந்தார்.

ஸமக்ஞயைத் தேடி த்வஷ்டாவின் அகஞ்சென்றார். த்வஷ்டா பானுவின் உருவைப்ரகாச முள்ளதாகச் செய்ய அவரைச் சாணைபிடித்தார். மிக அழகிய ரூபமுள்ள சூரியன் உத்தர குருக்ஷேத்திரஞ்சென்று பெண்குதிரையாக நிற்கும் மனைவியைப்பார்த்தார். தானும் ஆண்குதிரை வடிவமெடுத்து அவளுடன் சேர்ந்தார். அவள் ஏதோ அன்னிய அச்வமிது எனக்கருதி அவரது சுக்கிலத்தை மூக்கினால் கீழேவிட்டாள். அதிலிருந்து அச்விநீதேவரெனும் இரு தேவ வைத்யர்கள் தோன்றினார்கள்.

துந்துமார சரிதம். வைவஸ்வதமனுவின் மூலமாக ஸூர்யவம்சம் வளர்ந்தது. அந்த வம்ச பரம்பரையில் பிருஹதச்வன் என்றோர் அரசனிருந்தான். மநுநீதி தவறாது அவன் அரசுசெலுத்தி வந்தான். குவலாச்வன் என்பவன் அவனது புதல்வனாகும். அவனுக்குத் தக்க வயது வந்தபின் தந்தை தரணியை அவனிடமளித்து வாநப்ரஸ்தாச்ரமந் தாங்கி வநஞ்சென்றார். உத்தங்கர் எனும் முனிவர் வேந்தனை நோக்கி விளம்பினார். மன்ன! நமது ஆச்ரமத்திற்கருகே ஸமுத்ரமணலின்கீழ் ஓர் அரக்

கன் படுத்துக்கொண்டு தவம் செய்கிறான். துந்து என்பது அவன் பெயர். அவன் தந்தை மது எனப்படுவான். துந்து ஆண்டுக் கோர் முறை மூச்சுவிடுகிறான். அச்சமயம் ஏழுநாள் பூகம்பமுண்டாகிறது. தூளிகள் சூர்யமண்டலம் வரை செல்கின்றது. பூமியிலிருந்து கட்டைத்தணல்களுடன் புகை கிளம்புகிறது. இதனால் எண்ணிறந்த ஸாதுக்கள் மடிகின்றனர். அவனைக்கொல்ல தேவரால் இயலாது. அத்தகையவர்களைச்சிக்ஷித்து ஸாதுக்களை ரக்ஷிப்பது அரசர் கடமையாகும். அதைவிட்டு நீ முநிவரைப்போல் தவவேடம் பூண்டது தகாதகாரியம். என்று உத்தங்கர் கூறியதைக் கேட்டு பிருஹதச்வன் முநிவரே! முற்றிலும் நீர் கூறியது உண்மையே. ஆயினும் புத்திரனிடம் பூபாரத்தை அளித்து மறுமைக்குரிய கருமத்திலீடுபட்டேன். வேண்டாமென்று விட்ட வில்லை மறுபடியும் ஏற்பது தர்மமோ ? எனது புதல்வன் குவலாச்வன் துந்துவைக்கொல்வான். என்று கூறி அவரிடம் விடைபெற்று வனஞ் சென்றான். தந்தை சொற்படி குவலாச்வன் உத்தங்கருடன் ஸமுத்ரதீரஞ் சென்றான். அவன் புதல்வர்கள் நூறுபேறும் அவனைப்பின் தொடர்ந்தனர். ஸமுத்ரமணலை இவர்கள் தோண்டினர். மேற்குதிக்கில் சய்யாஸநத்தில் அந்த துந்து தவஞ் செய்யக்கண்டனர். இவர்களைக் கண்டு அரக்கன் மிகக்கோபம் கொண்டான். அவனது கோபக்கனல் மூவர் தவிர மன்னன் மைந்தரனைவரையும் சாம்பலாக்கிற்று.. குவலாச்வன் தனது யோகசக்தியால் அக்கனலை அணைத்தான். அரக்கன் மாயையால் ஸமுத்ரஜலம் பொங்க அரசனது சேனை அழிய ஆரம்பித்தது. மன்னன் அந்த ஜலத்தைத் தவ வலிவால் அருந்திவிட்டு அரக்கனைக் கொன்றான். அதுமுதல் குவலாச்வனைத் துந்துமாரன் என எல்லோரு மழைத்தனர். உள்ளங் குளிர்ந்த உத்தங்கர் அர

சனுக்கு நீண்ட ஆயுளும் அழியாச் செல்வமும், ஸத்ஸந்ததியும் உண்டாகும்படி வரந்தந்தார். இறந்த புத்ரர்களுக்கும் உத்தம லோகத்தை அளித்தார். அவரிடம் விடைபெற்று வேந்தன் அவநியை ஆண்டுவந்தான்.

ஸத்யவ்ரதன் சரிதம். அந்த வம்சத்தில் த்ரய்யாருணி என்றோரரசனிருந்தான். அவனது புதல்வன் ஸத்யவ்ரதன் எனப்படுவான். அவன் மிகக்காமுகன். விவாஹமான பெண்களைக் கெடுத்து வந்தான். இதை அறிந்த த்ரய்யாருணி இத்தகைய புத்ரனை யான் வேண்டேனெனக் கூறி அவனை த்யாகம் செய்தார். நான் எங்கு செல்வேன்? எவருடன் வஸிப்பேன் என்று புத்ரன் கேட்க, சினங்கொண்ட தந்தை நீ எங்கேனும் ஒழி! சண்டாளருடன் கூடிவஸி என்றார். அச்சமயம் அருகிலிருந்த வஸிஷ்டர் ஒன்றும் கூறாது மௌனமாக இருந்தார். ஸத்யவ்ரதன் கானகஞ் சென்று நீசர்களுடன் கூடிவாழ்ந்து வந்தான். அவன் தந்தையும் தவஞ்செய்ய வனஞ்சென்றார். இந்த அதர்மத்தினால் அவ்வேந்தனது நாட்டிலே பன்னிரண்டாண்டு மழை பொழியவில்லை. அதுகாலை விச்வாமித்திரமுநி தன் மனைவிமக்களை விட்டுவிட்டு தவஞ்செய்து வந்தார். துர்ப்பிக்ஷத்தினால் பசிக்குப் புசிக்க உணவின்றி எல்லோரும் வருந்தினர். விச்வாமித்ரரது மனைவி தம்மக்களைக்காக்க வகையின்றிதவித்தாள். காலவனெனும் தன் புதல்வன் கழுத்தில் கயிற்றைக்கட்டி அவனை விலைக்கு விற்கமுயன்றாள். அதன் மூலம் மற்றபுதல்வர்களை ரக்ஷிக்கலாமென்பது அவள் உள்ளம். இதைக்கண்ட ஸத்யவ்ரதன் காலவனை விடுவித்து எல்லோருக்கும் உணவளித்தான். அன்றன்றும் வேட்டையாடி வேண்டிய மாம்ஸங்களைக் கொண்டு கொடுப்பான். இங்ஙனமிவன் பன்னிரண்டாண்டு வநவாஸம் செய்தான். அச்சமயம் வஸிஷ்ட முநிவரே இவனது நாட்டை ஆண்டுவந்தார்.

ஸத்யவ்ரதன் பால்யத்தினுலும் பவிதவ்யையினுலும் பிரும்ம நிஷ்டரான வஸிஷ்டரிடம் கோபங்கொண்டான். தன்னைத் தந்தைத்யாகம் செய்தபோது தர்மமறிந்த இவர் பேசாமலிருந்தது ந்யாயமல்ல. ஸப்தபதீ என்ற கர்மா நடந்தபின்னரே விவாஹம் பூர்த்தியாகிறது. அதற்கு முந்தியல்லவோ பெண்கள் அபஹரிக்கப்பட்டனர். அது பிறர் மனைவியைக் கெடுத்ததாமோ? என்பது அவனது எண்ணம். அவனுக்கு இதனுல் அதிக நற்குண முண்டாக வேண்டுமென்பது வஸிஷ்டர் எண்ணம். அதை அவன் அறியவில்லை. அவரது காமதேனுவைக் கொன்று அதன் மாம்ஸத்தைத் தானு முண்டு விச்வாமித்திரர் புதல்வர்களுக்கு மளித்தான். இதைக்கண்டு வஸிஷ்டர் வருந்தினுர். பிறர் மனைவிகளை அபஹரித்த பாபம் மாத்ரமிருந்தால் அதை அகற்றலாம். தந்தைக்குச் சிந்தையளித்தது, குருவின் கோவைக்கொன்றது, யாகத்தில் உபயோகியாமல் மாம்ஸ முண்டது என மூன்று மாபாபங்களிருப்பதால் த்ரிசங்கு எனப்படுவானிவனென்றுர். த்ரிசங்கு சரீரத்துடன் ஸ்வர்க்கஞ் செல்லக்கருதினுன். அவன் தனக்குச் செய்த உதவியை மறவாது விச்வாமித்ரர் அவனுக்கு அயோத்தியில் பட்டம் சூட்டி, சரீரத்துடன் ஸ்வர்க்கத்திற்கனுப்பினுர்.

ஸகர சரிதம். அவ்வம்சத்தில் பாகு என்றேர் அரசனிருந்தான். அவன் நீதியாக பூமியைப்பரிபாலநம் செய்யாததால், ஹைஹய ராஜனது ஸகாக்களான யவநர் காம்போஜர் பாரதர் பல்லவர் சகர் என்ற ராஜகணங்கள் பாகுவை ஜயித்து ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டன. பாகு தன் மனைவியுடன் வநஞ்சென்று இந்த துக்கத்தினுல் பிராணனை விட்டான். அரசனுடைய விதிப்படி தீயிலிட்டுத் தானும் அதில் விழக்கருதினுள் ராஜபத்நி. யாதவி எனும் அவ்வுத்தமியின் கற்பைக்கண்டு வியந்த ஔர்வர் என்ற முநி

அவளருகே சென்றார். கர்ப்பிணியான அவள் உடன் கட்டை ஏறுவது முறையல்ல என்றார். யாதவிதனது கருவைக்கண்டு பொறாமை கொண்ட சக்களத்தி தன் கரு அழிய விஷமளித்ததால் அது அழிந்திருக்கு மென்றும் தன் கணவனுடன் சென்று உத்தமலோகம் அடைய அருள் புரியவேண்டுமென்றும் மஹரிஷியை வேண்டினாள். அவர் ஞானக்கண்ணால் கருஅழியாமலிருப்பதைக் கண்டு சக்களத்தி அளித்த விஷத்துடன் விரைவில் ஓர் குழந்தை உண்டாகப் போகிறது. அதைக் காப்பது அவள் கடமை என்றார். மஹர்ஷி கூறியபடி அவளுக்குச் சிலகாலம் சென்றபின் ஓர் புத்ரனுண்டானான். விஷத்துடன் பிறந்ததால் ஸகரனென்று ஔர்வர் அதற்கு நாமகரணம் செய்தார். வயது வந்தபின் ஸகரனுக்கு முனிவர் ஸகல கலைகளையும் கற்பித்தார். ஆக்நேயாஸ்த்ரத்தையும் அருளினார். ஔர்வர் ஆசீர்வாதத்தைப் பெற்று ஸகரன் சத்ருக்கடனென ஸமர்செய்யக் கிளம்பினான். சிறுவனாகவும் ஒருவனாகவுமிருந்தும் இவன் சத்ருசேனைகளை முறியடித்தான். இவன் பலத்தைக்கண்டு பயந்த பகைவர்கள் வஸிஷ்டரைச் சரணமடைந்தனர். அவர் தனது சிஷ்யனான ஸகரனைச் சமாதானப்படுத்தி, சகரைப் பாதி தலையை மொட்டையடித்தும் யவந காம்போஜர்கள் தலையைப் பூர்ணமாக மொட்டையடித்தும் பாரதரைத் தலை மயிரை எப்பொழுதும் அவிழ்த்திருக்கும்படியும் பல்லவர்களைத் தாடி மீசைகளை வளர்க்கும்படியும் செய்து அவர்களைக்கொல்லாது விட்டுவிட்டார்.

பிறகு ஸகரனுக்குப் பட்டாபிஷேகம் செய்து இரு மனைவிகளையும் மணம் செய்து வைத்தார் வஸிஷ்டர். விதர்ப்பராஜனது புதல்வியும் ஸகரனது முதல் மனைவியுமான கேசினி என்பாள் வம்சத்தை விருத்தி செய்யத்தக்க

ஓர் புதல்வனை வேண்டினாள். அரிஷ்ட நேமியின் புத்திரியான இளைய மனைவி அறுபதுஆயிரம் புதல்வர்கள் வேண்டுமென்றாள். இருவருக்கும் ஒளர்வமுநி அங்ஙனமே வரமளித்தார். மூத்தவள் அஸமஞ்ஜஸனையும் இளையவள் ஓர் மாம்ஸ பிண்டத்தையும் பெற்றார்கள். அறுபதினாயிரம் பாத்திரங்களில் நெய்யைவிட்டு அப்பிண்டத்தைத் துண்டித்து வைத்தார்கள். சில நாட்கள் சென்றபின் அவைகளிலிருந்து அறுபதினாயிரம் புத்ரர்கள் உண்டாயினர். இப்புதல்வர்களுடன் ஸகரன் தர்மம் தவறாது தரணியை ஆண்டுவந்தான். ஒருஸமயம் அரசன் அச்வமேதயாகம் செய்யக்கருதி குதிரையை திக்விஜயம் செய்யவிட்டு அதைக்காக்க அறுபதினாயிரம் புதல்வர்களை அனுப்பினார். தேவேந்திரன் மாயையினால் மறைந்து பரியைப் பாதாளத்தில் கொண்டுவிட்டான். பார்முழுவதும் பரியைக் காணாமல் அவர்கள் பூமியைத் தோண்டி பாதாளஞ் சென்றனர். அங்கு ஸ்ரீமந் நாராயணரின் அவதாரமான கபில முநிவரைக்கண்டு இவரே இதைக்களவாடினார் என்றெண்ணி தவத்திலிருக்கும் அவருக்கு அபசாரம் செய்தனர். கபிலரது கோபக்கனலில் பர்ஹி கேது முதலிய நால்வரைத்தவிர எல்லோரும் விழுந்திறந்தனர். பின்னர் ஸகரனுக்கு மஹாவிஷ்ணு தர்சநமளித்து இக்ஷ்வாகுவம்சம் அழியாதிருக்கும்படி வரந்தந்தார். ஸமுத்ரராஜன் ஸகர புத்ரர்களால் தான் விருத்தியடைந்ததால் அரசனுக்கு அச்வமேதக் குதிரையையும் எண்ணிறந்த ரத்நங்களையுமளித்தான். ஸகரன் வேள்வியைப் பூர்த்தி செய்து புத்ரனிடம் பூபாரத்தை யளித்து அழியா உலகைப் பெற்றார். அவ்வம்சமும் அம்சுமான் திலீபன் பகிரதன் நாபாகன் அம்பரீஷன் ரகு, என இவர்களால் விருத்தியாயிற்று.

சந்த்ர சரிதம். ஸூர்ய வம்சமான பிறகு சந்த்ர வம்சம் வர்ணிக்கப்படுகிறது. உலகைப் படைக்கவேண்டுமென்று

அவர் கொண்ட சதுர்முகனது மநதிலிருந்து அத்ரீ எனும் மஹர்ஷி தோன்றினர். அவர் மூவ்வாயிரமாண்டுகள் அநுத்தரம் எனும் தவத்தைச் செய்தார். அவரது ரேதஸ் சந்த்ரனாக மாறி இரண்டு கண்களிலிருந்தும் நீராக வெளிவந்தது. அதைப் பத்துதிக் கன்யகைகளும் கர்ப்பமாகக் கருதி காத்தனர். பின் அவர்கள் இதைச் சுமக்க முடியாமல் சந்த்ரனுடன் பாரினில் வீழ்ந்தனர். இதைக்கண்ட பிரும்மா இச்சந்த்ரனுக்கோர் அழகிய ரதத்தை யளித்தார். ஸகல தேவர்களும் ஸோமனைத் துதித்துச் சூர்யனிடமிருந்து தேஜஸ்ஸைத் தேடித் தந்தனர். அந்த பலத்தினால் சந்த்ரன் தேர்மீதேறி இருபத்தோரு முறை பூமியை ப்ரதக்ஷிணம் செய்தார். அவனுடன் பூமியில் சிந்தியதேஜஸ் ஓஷதிகளாகத் தோன்றிற்று. அவைகளுக்குச் சந்த்ரனை ப்ருஹ்மா அரசனாகச் செய்தார். உடனே ஸோமன் ராஜஸூயமெனும் யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார். அதில் ஹிரண்யகர்ப்பன் பிரும்மாவாகவும் அத்திரி ப்ருகு முதலியோர் அத்வர்யு முதலிய ரித்விக்குகளாகவும் மஹாவிஷ்ணு ஸதஸ்யராகவும் இருந்தனர். ஸிநீவாலிகுஹூ முதலிய ஒன்பது தேவிகளும் சந்த்ரனைச் சேவித்தனர். எவருக்கும் எட்டாத கீர்த்தியையும் அழகையும் செல்வத்தையும் பெற்ற ஸோமனது வேள்வி நன்குமுடிந்தது. அவபிருதஸ்நாநமும் ஆயிற்று. செல்வச் செறுக்கால் சந்த்ரனது புத்தி சஞ்சலமாயிற்று. பிருஹஸ்பதியின் மனைவியான தாரையைத் தூக்கிச் சென்றான். தேவரனைவரும் தாரையைத் தரும்படி சாந்தமாக வேண்டியும் சந்த்ரனவளைத் தந்தானில்லை. அன்றியும் அமரசத்ருவான அஸுர குரு சுக்ரரைச் சரணமடைந்தான்.

தாராநிமித்தமாக தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இருபுறத்திலும் பலர் மாண்

டனர். மிகுந்த தேவர்கள் பிரும்மனைச்சரண மடைந்தனர். அவர் போரை நிறுத்தித்தாரையை ப்ருஹஸ்பதியினிட மளித்தார். தாரை கர்ப்பிணியாக இருப்பதைக்கண்டு பிறர்கருவைத் தன் மனைவிதாங்கலாகா தென்றார் பிருஹஸ்பதி. அவளும் புற்புதரில் அக்குழந்தையை ப்ரஸவித்தாள். தேவர்கள் அதனருகே சென்று இது யார் குழந்தை என தாரையை வினவினர். வெட்கத்தாலவள் வாய்திறவாதிருந்தாள். குமரர் அவளைச் சபிக்க ஆரம்பித்தார். பின்னரவள் சந்த்ரனது குழந்தைஇது என்றாள். சந்த்ரன் அன்புடன் அதை அணைத்துப்புதன் எனப் பெயரிட்டான்.

அமாவஸு வம்சம். புதனது புதல்வன் பூரூரவஸ். அவன் ஊர்வசியை மணந்து ஆயுஸ் அமாவஸு முதலிய ஏழு புதல்வர்களைப் பெற்றான். அமாவஸுவின் ஸந்ததியில் ஜந்ஹு எனும் ராஜர்ஷி தோன்றினார். அவர் ஓர் வேள்வியைச் செய்யும் போது கங்கை அங்கு அவரைப் பதியாக வரித்து வந்தாள். அவரதை ஏற்காததால் கோபங் கொண்ட கங்கை அவர் யாகத்தைத் தன் ப்ரவாஹத்தினால் அழித்தாள். அவர் கங்கையை உள்ளங்கையிலேந்தி ஆசமநம் செய்து விட்டார். பின்னர் அங்குள்ள மஹர்ஷிகள் யுவநாச்வ ராஜனது புத்ரியான காவேரியை மணந்து கங்கையைப் பெண்ணாகப் பெறும்படி ஜந்ஹுவைவேண்டினர். அவருமங்ஙனமே செய்தார். அவர் ஸந்ததியில் குசிகர் எனும் ராஜர்ஷி தோன்றினார். அவர் செய்த கடுந்தவத்தைக்கண்ட தேவேந்த்ரன் காதி என்ற பெயருடன் தானே அவருக்குப் புதல்வனாகப் பிறந்தான். அந்த காதிதன் கன்யகையான ஸத்யவதியை ரிசீகரெனும் முனிவருக்களித்தார். முனிவர்தன் மனைவி விரும்பியபடி அவளுக்கும் அவள் தாய்க்கும் குழந்தைகள் உண்டாகுமாறு

இருசருக்களை வைத்தார். மஹர்ஷி தன் மனைவிக்களித்த சரு மிக்க மேலானதாக இருக்கும் என்றெண்ணி மகள் சருவை மாதா உண்டாள். ஆதலின் அன்னை வயிற்றில் சாந்தமான பிராம்மணக் கருவும் ஸத்தியவதி வயிற்றில் உக்ரமான க்ஷத்ரியக் கருவும் தோன்றிற்று. இதை யறிந்த ஸத்யவதி தன் பதியைவணங்கி இதை அகற்றமுடியாதாயின் தன்புதல்வன் சாந்த பிராமணனுகப் பிறத்தல் வேண்டும். புதல்வனது புதல்வன் வேண்டுமாயின் வீர க்ஷத்ரியனுகப் பிறக்கட்டு மென்றுள். அங்ஙனமே முனிவரருளால் அவள் வயிற்றில் ஜமதக்நியும் அவருக்குப் பரசுராமரும் பிறந்தனர். காதிக்கு விச்வாமித்திரர் பிறந்தார். அவர் வஸிஷ்டருடன் காமதேனு நிமித்தம் போர் புரிந்து முடிவில் பிரும்மரிஷியானுர். அவரது ராஜவம்சமும் வளர்ந்து வந்தது.

ரஜிசரிதம். அமாவாஸுவின் மூத்தவரான ஆயு என்பவருக்கு நகுஷன் விருத்தசர்மா ரஜிரம்பர் அநேகர் முதலிய ஐந்து புதல்வர்கள் உண்டாயினர். அவர்களுள் ரஜி என்பவனே மிக்க தார்மிகனுகவும் வீரனுகவுமிருந்தான். அச்சமயம் வானுலகில் தேவாஸுர யுத்தம் நடைபெற்றது. வெற்றியோ தோல்வியோ எவரும் பெற்றுரில்லை. இருதிறத்தினரும் ஸத்தியலோகஞ் சென்று தான் வெற்றி பெற வழியாதென விதியை வினவினர். அவர், எவரது கக்ஷியில் பூலோக ராஜனுனரஜி சேர்கிருனே அவரே ஜயம் பெறுவர் என்றுர். இருவரும் விரைவாக வேந்தனிடம் சென்று தமக்கு உதவிபுரியுமாறு வேண்டினர். அவ்வரசன் தனக்கு இந்த்ர பதவி தருபவருக்கே தான் ஸஹாயம் செய்வதாகக் கூறினுன். அஸுரர்கள் ப்ரஹ்லாதனுக்கு இந்த்ர பதவியளிக்கவே தாங்கள் போர்புரிவதால் ரஜிக்கு அதை அளிக்க முடியாதென்றனர். ஸுரர்கள் ரஜிக்கு

இந்த்ர பதமளிக்க இசைந்தனர். ஆதலின் அவன் அமரருடன் சேர்ந்து அரக்க சேனையை அழித்தான். அதில் தப்பிப்பிழைத்த அஸுரர் பயந்து பாதாளஞ் சென்றார். வெற்றிபெற்ற வானவரை வேந்தன் இந்த்ரபதவியையளிக்கும்படி வேண்டினான். தேவர்தலைவன் மன்னனை நோக்கி எங்களுக்கு உயிர்ப் பிச்சை அளித்த நீர் தந்தையாவீர். உமது மைந்தன் இந்த்ரன் எனில் உமக்கு இந்த்ர பதத்தை விட உயர்ந்த கௌரவம் உண்டன்றோ? என்றான். இதைக் கேட்டு சொல்லால் மயக்கிய ஸ்வர்க்காதிபதியின் வஞ்சனையை நினைத்து வருந்தினான் வேந்தன். பதிலொன்றும் கூறாது பார்த்திவன் பாருக்குச் சென்று நெடு நாள் சென்றபின் விண்ணுலகெய்தினான். அவனது புதல்வர் ஐந்நூறு பேரும் தந்தையை வஞ்சித்த அமராதிபதியினிடம் அடங்காக்கோபங் கொண்டனர். எங்கள் தந்தைக்குரிய இந்த்ர பதத்தை நாங்கள் அடைவோமென ஸ்வர்க்கத்தை ஆக்ரமித்தனர். காமக்ரோதம் நிறைந்தோர் தேவருலகம் வரத் தகுமோ என்று கூறி இந்த்ரன் அவர்களைக் கொன்று வெற்றிபெற்றான். இச்சரிதத்தைப்படிப்போரது ஏழ்மை அகலும்.

யயாதி சரிதம். நகுஷராஜன் பித்ருக்களின் பெண்ணான விரஜையிடம் யதி யயாதி சர்யாதி முதலிய ஆறு புதல்வர்களைப் பெற்றான். யதி வேதாந்த விசாரம் செய்து பிரும்ம நிஷ்டனானதால் யயாதியே அரசனானான். அவன் சுக்ரரது ஸுதையான தேவயானியை மணந்தான். இவளுக்கு அடிமையான சர்மிஷ்டை எனும் விருஷபர்வாவின் மகளிடம் தேவயானி அறியாதபடி நராதிபன் நட்புகொண்டான். யயாதியினது தர்மத்தையும் வீர்யத்தையும் கண்டு வியந்த தேவேந்த்ரன் அரிய ஓர் ரதத்தை அவ்வரசனுக்களித்தான். அதைக் கொண்டு யயாதி ஆறு நாட்களில்

அவநி அனைத்தையும் ஜயித்தான். அவனுக்குப் பிறகு அந்த ரதம் குருவினிடமும் பாரீக்ஷதனிடமும் சென்றது. பாரீக்ஷதனெனும் ஜநமேஜயன் வநஞ் சென்றபோது வாயாடியான கர்க்கஸுதனைக் கொன்றான். கர்க்கரது சாபத்தால் அந்த திவ்ய ரதம் அவனைவிட்டு இந்த்ரனிடம் சென்றது. இந்த்ரனதைச் சேதிபதிக்களிக்க அவனதை ஜராஸந்தனுக் களித்தான். பீமன் ஜராஸந்தனைக் கொன்று அதைக் கிருஷ்ணனுக்குக் கொடுத்தான். ஜநமேஜயன் சௌநக முநிவரைக் கொண்டு ஓர் அச்வமேதயாகம் செய்து பிரும் மஹத்திபாபத்தை அகற்றிக் கொண்டான்.

யயாதிக்கு தேவயானியினிடம் யதுதுர்வஸு என இரு புதல்வர்கள் தோன்றினார்கள். சர்மிஷ்டையினிடம் த்ருஹ்யு அநு பூரு என மூன்று புத்ரர்கள் உண்டாயினர். சர்மிஷ்டையினிடம், தன்பதி நட்பு கொண்டதைக் கண்டு தேவயாநி கோபங் கொண்டாள். தன் தந்தையினிடம் சென்று இதை முறையிட்டாள். சுக்ரர் தன் மகளது மநம் மகிழ்வுற யயாதியைக் கிழவனாகும்படி சபித்தார். அரசன் அசுர குருவின் அடிபணிந்து தனக்குத் தந்த சாபத்தை அகற்றும்படி வேண்டினார். மூப்பை எவரேனும் ஏற்று அவரது இளமையை அளித்தால் உனது கிழத்தனமகலு மென்றார். மன்னன் முறையே முதல் நான்கு புதல்வர்களையும் மூப்பை ஏற்று இளமையை அளிக்கும்படி வேண்டினான். முடியாதென நால்வரும் மறுக்கவே இளைய குமாரனை பூருவைக் கேட்டான். அவன் தந்தை உள்ளத்தை மகிழ்விப்பதே மகன் கடமை என்று மூப்பை ஏற்று காளைப் பருவத்தை அளித்தான். யயாதி இளைஞனாகிப் பல இல்லற தர்மங்களைச் செய்து வேண்டிய அளவு விஷயஸுகத்தையும் அனுபவித்தான். எவ்வளவு காலம் அனுபவித்தாலும் அனுபவத்தினால் ஒருநாளும் ஆசை அகலாது. அன்

றியும் நெய் தீயை வளர்ப்பது போல் அனுபவம் ஆசையை மேல் மேலும் விருத்தி செய்கிறது. ஜீவித்திருக்கவேண்டு மென்ற ஆசையும் தந ஆசையும் எத்துணை நாட்களாயினும் எவரையும் விடுவதில்லை என்று யயாதி சிந்தித்தான். விஷய இன்பத்தை வெறுத்தான். தந்தைசொல் கேளாத மூற்று நான்கு புதல்வர்களுக்கும் ராஜ்யத்தை அளிக்காமல் பெற் றோரிடம் பேரன்பு பூண்ட பூருவுக்கு இனிமையுடன் ராஜ்யத்தையுமளித்துத் தவம் செய்ய வநஞ் சென்றான். ப்ருகு துங்கமென்ற புண்யக்ஷேத்ரத்தில் உணவை ஒழித்து உடலைவிட்டு மனைவியுடன் ஸ்வர்க்கஞ் சென்றான்.

கார்த்த வீர்யசரிதம். யதுவின் வம்சத்தில் கிருத வீர்யன் என்றோரரசனிருந்தான். அவனது புதல்வன் கார்த்தவீர்யார்ஜுநன் எனப்படுவான். அவன் பதினாயி ரமாண்டுகள் தத்தாத்ரேயரைக் குறித்துத் தவம் செய்தான். அவர் ப்ரத்யக்ஷமாகி ஆயிரங்கரங்களையும் அபாரமான சக்தி யையும் மற்றும் பல வரங்களையும் தந்தார். அவன் ஏழுத் வீபங்களையும் ஜயித்துத் தனக்கு வசமாக்கிக் கொண்டான். எழுநூறு வேள்விகளைச் செய்தான். ஸ்வர்ணயூபங்களை நிறுத்தினான். இவனது யாகத்தில் வானவரனைவரும் ப்ரத் யக்ஷமாகத் தோன்றி வயிறார உண்டு வாயாரப் போற்றினர். நாகர்களை ஜயித்து நாகரத்நத்தினால் எப்போதும் ஒளி வீசும்படி அவர்களைத் தன்னகரத்திலமர்த்தினான். யோக மஹிமையால் மேகமாகி மழை பொழிவான். அவனாளுகை யில்திருடுவதென்பது மறைந்து விட்டது. காணுதபொருள் கார்த்தவீர்யன் பெயரைக் கூறின் தானே கிடைத்து விடும். ஆயிரம் கரங்களுடன் கடலில் இறங்கி ஜலக்ரீடை செய்வானவன். அகாலத்தில் ஜலப்ரளயம் நேர்ந்ததோ என எல்லோரும் அஞ்சுவர். அவன் பெயரைக் கேட்டு பயந்தோடாத பகைவரிரார். நாரதர் முதலிய தேவர்ஷி

களு மிவனைப் போற்றுவர். இவனது வீர்யத்தைக் கேட்ட தசமுகன் செறுக்குடன் சேனையோடு சண்டைக்குச் சென்றான். அர்ஜுநன் ஐந்தே சரங்களால் அவன் செறுக்கை அகற்றி அவனைச் சிறைப்படுத்தினான். நாரதரை முன்னிட்டுக்கொண்டு நற்சொற்களைக் கூறி புலஸ்த்யர் தன் பேரனான ராவணனை விடுவித்தார். இங்ஙனம் உலகில் ஒப்புயர்வற்று விளங்கும் வேந்தனிடம் வேதியர் வடிவத்துடன் அக்நி பகவான் வந்து தனக்குள்ள அடங்காப்பசிக்கு அன்னமளிக்கவேண்டு மென்றார். அர்ஜுநன் அங்ஙனமே ஆகுக என்றபின் நிஜஉருவைக்காட்டி ஏழுத்வீபங்களையு மளிக்க வேண்டுமென்றார். சொன்ன சொல்லைக் காக்க மன்னன் மற்றவர் தடுக்காதபடி காவலிருந்து ஸப்தத்வீபங்களும் எரியும்படிச் செய்தான். தனது ஆச்ரமத்தையும் அக்நிக்கு அர்ப்பணம் செய்ததால் ஆபவரெனும் வஸிஷ்டருக்குக் கோபமுண்டாயிற்று. அர்ஜுநனது ஆயிரங் கரங்களையு மறுத்து ஓர் அந்தணனே அவரைக் கொல்வான் எனச் சபித்தார். சிலகாலஞ் சென்றபின் கார்த்தவீர்யன் ஜமதக்நி முனிவரின் காமதேனுவை அபகரித்தான். அதனால் பரசுராமருடன் போர் நிகழ்ந்தது. அதில் ஆயிரங் கைகளு மறுபட்டு அரசனுமிறந்தான். தான் ஓர் அந்தணர் மூலமாகவே இறக்கவேண்டுமென வரம் வாங்கியதால் அர்ஜுநன் வீரஸ்வர்க்கம் சென்றான்.

ச்வபல்க சரிதம். யது வம்சத்தில் பிறந்த க்ரோஷ்டு என்பவருக்கு மாத்ரீ காந்தாரீ என இருமனைவிகளிருந்தனர். மாத்ரிக்கு விருஷ்ணி அந்தன் என இருபுதல்வர்கள் பிறந்தனர். வ்ருஷ்ணிக்கு ச்வபல்கர் சித்ரகர் என இரு புத்திரர்கள் உண்டானார்கள். ச்வபல்கர் மிகப் புண்யசாலி. ஆதலின் அவர் வஸிக்குமிடத்தே நோய்கள் தோன்றா. நன்கு மழை பொழியும். காசிதேசத்தில் ஓர் ஸமயம் மூன்றாண்டு

வரை மழை பெய்யவில்லை. ஆதலின் அத்தேச அரசன் ச்வபல்கரைத் தன்னூட்டிற்கழைத்துவந்தான். உடனேவா னம் சுறந்தது. அப்பேருபகாரத்திற்குப் பதிலாகக் காசிரா ஜன் காந்திநீ எனும் தன் கன்யகையை அவருக்களித்தான். அவள் தன் தாயின் கருவிலே பல வருஷகாலங்கள் வசித் திருந்தாள். அவள் தந்தை ஒருநாள் மநம்நொந்து வயிற்றி லுள்ளது சேயோ? பேயோ? ஏனிது பிறவாமலுளது? என்று வருந்தினன். வயிற்றிலுள்ள கன்யகை தந்தையே! யான் உமது சேயே. யான் கூறுகிறபடிசெய்வதாக வாக்களிப்பின் இப்போதே பிறப்பேன் என்றது. அங்ஙனமே ஆகுக என்றரசன் கூறியவுடன் குழந்தை பிறந்தது. தந்தை அன்புடன் வளர்க்க வயது வந்தபின் அவள் திநமும் தான் கோதாநம் செய்ய வேண்டுமென்றாள். அரசனதற்கிணங்க அதனால் அவளுக்குக் காந்திநீ என்று பெயர் வழங்கிற்று. அவளை ச்வபல்கர் மணந்து கொண்டார். இவ்விருவருக் கும் அக்ரூரரெனும் பக்தசிகாமணி பிறந்தான். சித்ரகன் வம்சத்தில் வஸுதேவர் பிறந்தார். அவர் பிறந்தபோது தேவதுந்துபி முழங்கியதால் அவரை ஆநகதுந்துபி என் பார்கள்.

ஸுபத்ரோத்பத்தி. வஸுதேவருக்குத் தேவகி ரோ ஹிணி முதலிய பதினான்கு மனைவிகளுண்டு. கம்ஸனெ னும் தேவகியின் ஸஹோதரனிடமுள்ள பீதியால் வஸு தேவர் தேவகியைத் தவிர மற்றவர்களை நந்தனெனும் நண் பன் மூலமாக வேறிடத்தே வைத்துக் காப்பாற்றி வந்தான். பகவதாக்ஞையால் ஏழுமாதம் தேவகியின் வயிற்றிலிருந்த கரு யோகமாயையால் ரோஹிணியின் வயிற்றில் இழுத்து வைக்கப்பட்டது. ஆதலின் ஸங்கர்ஷணன் எனப் பெயர் பெற்ற பலராமன் முதல் புதல்வனானன். அவருக்கு சாரணன் சடன் துர்த்தமன் தமநன் சுப்ரன் பிண்டாரகன்

உசீநரன் என்ற ஏழு ஸோதரர்கள் உண்டாயினர். பின்னர் சித்ரா என்றோர் கன்யகை ஜநித்தாள். இவள் முற்பிறவியில் ஓர் மஹர்ஷிக்குச் செய்த அபசாரத்தால் பூமியில் மாநிடப்பிறவி பெற்றாள். பிறந்தவுடன் இறந்து தேவலோகஞ் சென்றாள். ஆங்குள்ள அப்ஸரஸுகள், "பகவான் தேவகியினிடம் க்ருஷ்ணனாக அவதரித்துளார். அவரது திவ்ய லீலைகளைக்காண இங்குளோர் இடைச்சேரியில் கோபிகளாகப் பிறக்கின்றனர்." அங்கிருந்த நீ ஏனிங்கு வந்தாய்? என்று வினவினர். இவள் விரைந்து ஓடி சித்ரை உடலில் புகுந்து ஸுபத்ரையானாள். இவள் கண்ணனருளால் அர்ஜுநனை மணந்து அபிமன்யுவை ஈன்றெடுத்தாள்.

காலயவநன். த்ரிகர்த்தராஜன் தனது கன்யகையை சிசிராயணி என்பவருக்களித்தான். ஒரு ஸமயம் அவள் கார்க்யரை நோக்கி அவர் நபும்ஸகர் எனப் பரிஹஸித்தாள். அவளது கருத்திற்கிணங்கிய பலரால் அவர் புருஷரா அல்லவா எனப் பலவகையில் பரீக்ஷிக்கப்பட்டார். ஜிதேந்த்ரியரான அவரது வீர்யம் பனிரண்டாண்டு பரீக்ஷையிலும் வெளிவரவில்லை. ஆதலின் அவர்கள் நபும்ஸகர் என்றே இவரைக் கூறினர். இதைக்கண்டு சினங்கொண்ட கார்க்யர் கோபாலீ எனும் இடைச்சியுடன்ரமித்தார். அவள் ஓர் அப்ஸரஸ் ஆதலின் மஹேச்வரனது கட்டளைக்கிணங்கி இடைச்சியாகி கார்க்யரது இச்சைக்கிசைந்தாள். இவர்களுக்கு மிக்க பலசாலியான ஓர் புத்ரனுண்டானான். இருவரும் அதை ஏற்காமல் பூமியில் விட்டுவிட்டனர். யவநன் எனும் அரசன் தனக்குக் குழந்தையில்லாததால் இறைவனே இதை அளித்தார் என அன்புடன் அதை எடுத்து வளர்த்தான். அதற்குக் காலயவநன் என்ற பெயருண்டாயிற்று. பலச்செருக்கினால் அவன் தன்னுடன் போர்புரியயார் பலமுள்ளவர்என எல்லோரையும்வினவினான்

நாரதர், விருஷ்ண்யந்தக வம்சத்தில் கிருஷ்ணனிருக்கிறார்; அவரே உனக்கேற்றவீரர் என்றார். ஓர் அக்ஷௌஹிணி சேனையைத்திரட்டிக்கொண்டு அவன் மதுராநகரைத் தகர்த்தான். க்ருஷ்ணனுடன் அவ்வம்சத்தினர் நீண்ட ஆலோசனை செய்தனர். பரமசிவத்தினிடமுள்ள அன்பால் அவராணையால் ஜநித்தகாலயவநனைக் கொல்லாது பயந்தவர் போல் ஓடினர். த்வாரவதி என்ற புதிய இடத்தை நிர்மாணம் செய்து ஆங்கு வஸித்து வந்தனர்.

ஸ்யமந்தகமணி. விருஷ்ண்யந்தக வம்சத்திற்கு மூலபுருஷனான க்ரோஷ்டா என்பவரின் முதல் மனைவியான காந்தாரி அநமித்ரனைப் பெற்றாள். அவனுக்கு ப்ரஸேநன் ஸத்ராஜித் என இரு பேரர்கள் இருந்தனர். அதில் ஸத்ராஜித் இடைவிடாது ஸூர்யனை உபாஸித்து வந்தான். ஒரு நாள் காலையில் அவன் ஸ்நாநம் செய்து ஸூர்யனைப் பூஜிக்க ஆரம்பித்தான். அச்சமயம் உதயமான ஆதித்யனவனருகே வந்தான். ஸத்ராஜித் பானுவைப் பார்த்து தேவ! ஆகாயத்திலிருப்பதற்கும் அருகில் வந்ததற்கும் யாதொரு விசேஷமும் காணப்படவில்லையே என்றான். உடனே அவர் தன் கழுத்திலணிந்திருந்த மணியை மறைத்து வைத்து அரசனெதிரில் சென்றார். அச்சமயம் அவரது அழகிய உருவைத்தர்சித்து ஸத்ராஜித் ஸந்தோஷமடைந்தான். அரசனை வாழ்த்தி அம் மணியை அர்க்கன், கழுத்தில் அணிந்து கிளம்பியபோது அரசன் அம் மணியைத் தனக்களிக்கும்படி வேண்டினன். அவருமதை பக்தனுக்களித்துச் சென்றார். அம் மணியுடன் வரும் அவனை எல்லோரும் திநமணி என்றே எண்ணிப் பயந்து மறைந்தனர். மணியின் மஹிமையைப் பின்னர் அறிந்தனர். அஃதுள்ள விடத்தே நோய்வாரா. நாடு செழிக்கும். அன்றன்றும் அது அபரிமிதமான ஸுவர்ணத்தை அளிக்கும்.

அதை ஸத்ராஜித் அன்பினால் தன் ஸஹோதரனைப்ர ஸேநனுக்களித்தான். அம் மணி அரசனுக்கே ஏற்றதென அச்யுதன் கூறினார். தவவலிவால் வந்த அதை அளிக்க அவன் ஸம்மதிக்க வில்லை. அதை அரசாங்கத்திற்கெடுத்துக் கொள்ள நீதியும் சக்தியுமிருந்தும் கண்ணனதை விரும்பாமல் விட்டுவிட்டார். வேட்டையாட வநஞ்சென்ற ப்ரஸேநனை ஓர் ஸிம்ஹம் கொன்று அம்மணியைக் கொண்டு சென்றது. அம்மிருகேந்த்ரனை வென்று ஜாம்பவானெனும் கரடி அதை எடுத்துச் சென்றது. முன்னரதை விரும்பியதால் முகுந்தனே அதை அபஹரித்தான் என அபவாதமுண்டாயிற்று. அதை அகற்ற பகவான் நகரஜநங்களுடன் பிரஸேநன் அடியைத்தேடி வநஞ்சென்றார். ப்ரஸேநன் ஓர் சிங்கத்தால் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டனர். மிருகேந்த்ரனது அடிச்சுவட்டைப் பின் பற்றிச் செல்ல அது ஓர் கரடியால் கொல்லப்பட்டிருப்பதைக்கண்டனர். அக்கரடியின் அடியைப் பின்பற்ற அது ஓர் குஹைக்குக்கொண்டு சென்றது. குஹையின் வாயிற்படியில் எல்லோரும் நிற்க க்ருஷ்ணன் அதனுள்ளே நுழைந்தார். பல நாட்கள் சென்றும் பகவான் திரும்பிவாராததால் பகைவனலவர் கொல்லப் பட்டிருப்பார் என்று எண்ணி யாதவரனைவரும் த்வாரவதிக்குச் சென்றனர். இருபத்தோருநாள் ஜாம்பவான் யுத்தம்செய்து தோல்வியுற்று ஜாம்பவதி எனும் தன் பெண்மணியோடு ஸ்யமந்தக மணியையும் அச்யுதனிடம் அளித்தார். ஸத்ராஜித்தினிடம் அம்மணியை யளித்து க்ருஷ்ணன் தனக்குத் தோன்றிய அபக்யாதியை அகற்றிக் கொண்டார். குற்றமில்லாதபோது கண்ணனைக்குறை கூறிய பாபமகல ஸத்ராஜித் தனது கன்யகையான ஸத்யபாமையை அவருக்களித்தார். இச்சரிதத்தை ச்ரவணம்செய்தோர் பொய்ப்பழிக்காளாக மாட்டார். சததந்வா எனும் நரபதி

பகவான் பாண்டவருக்காக வாரணாவதஞ் சென்றிருந்த போது ஸத்ராஜித்தைக் கொன்று அக்ரூரரிடம் அம் மணியையளித்தான். ஸத்யபாமைக்குண்டான துக்கத்தை அகற்ற வாஸுதேவன் பலராமனுடன் சேர்ந்து சததன்வாவுடன் சண்டைக்குச்சென்றார். அவன் ஓர் க்ஷணத்திற்கு நூறு யோஜனை தூரம் ஓடும் ஹ்ருதயா என்ற அச்வத்தின் மீதேறி யுத்தம் செய்தான். அச்யுதன் அப்பரியைக் கொன்று பலராமனை நோக்கி வாஹந மில்லாதவருடன் வாஹநத்தின் மீதிருந்து போர்புரிவது முறையல்ல. ஆதலின் நீ ரதத்தின்மீதிரு; நானவனைக்கொன்று மணியை மீட்டு வருகிறேனென்று கால்நடையாகச் சென்றார். சததன்வாவை வென்று மணியைத் தேட, அவனிடமும் அவன் நகரத்திலும் அது காணப்படவில்லை. மணியில்லாது மீண்டுவந்த மாதவனிடம் பலராமன் சினங்கொண்டார். இனி உன்னாலும் யாதவர்களாலும் த்வாரகையினாலும் எனக்கு யாதொரு பயனுமில்லை, என்று கூறி மிதிலாபுரஞ் சென்றார். அவ்வரசன் பலராமனை வரவேற்று நன்கு உபசரித்தான். அங்கு வந்த துர்யோதநனுக்கு ராமன் கதாயுத்தம் கற்பித்தார். இதனிடையே ஸ்யமந்தக மணியளித்த ஸ்வர்ணத்தைக் கொண்டு அறுபது ஆண்டு அக்ரூரர் அநேக வேள்விகளைச் செய்துவந்தார். த்வாரகையில் பல்லாண்டுகள் மழை பொழியாதொழியவே அந்நாட்டு ஜநங்கள் அக்ரூரரை அங்கு அழைத்து வந்தனர். மழை பொழிந்து நாடு செழித்தவுடன் பலர் முன்னிலையில் பகவான் அம் மணியை அளிக்கும்படி அக்ரூரரைக் கேட்டார். அக்ரூரர் அதை அளித்தவுடன் கிருஷ்ணன் அது சென்றவழியைக் கூறி அவரிடமே அதை அளித்தார். மிதிலைசென்று பலராமனைச்சமாதானம்செய்து அவரை த்வாரகைக்கு மீண்டுமழைத்துவந்தார்.

ஸப்த த்வீபங்களும் பதினான்கு லோகங்களும். ஜம்பூத்வீபம் சாகத்வீபம் ப்லக்ஷத்வீபம் சால்மலித்வீபம் குசத்வீபம் சாகத்வீபம் புஷ்கரத்வீபம் என ஏழுத்வீபங்கள் பூலோகத்திலிருக்கின்றன. முறையே அவைகளைச் சூழ்ந்து உப்புக்கடல் கருப்பஞ்சாற்றுக்கடல் ஸுராக்கடல் நெய்க்கடல் தயிர்க்கடல் பாற்கடல் சுத்தஜலக்கடல் ஆகிய ஏழு கடல்கள் இருக்கின்றன. எல்லா த்வீபங்களுக்குமிடையே ஜம்பூத்வீபமுளது. அதன் நடுவே மேருபர்வதமுளது. இது பூமியெனும் தாமரைக்குக் கர்ணிகைபோலுள்ளது. இதைச் சுற்றி பாரதவர்ஷம் கிம்புருஷவர்ஷம் ஹரிவர்ஷம் ரம்யகவர்ஷம் ஸுவர்ணவர்ஷம் முதலிய ஒன்பது வர்ஷங்களிருக்கின்றன. ஒவ்வோர் த்வீபத்திலும் சில குலபர்வதங்களிருக்கின்றன. கடலுக்கு வடக்கிலும் ஹிமாசலத்திற்குத் தெற்கிலும் ஒன்பதாயிரம் யோஜனை விசாலமாயிருக்குமிடமே பாரதவர்ஷமெனப்படும். இங்குத்தான் கிருதயுகம் த்ரேதாயுகம் த்வாபரயுகம் கலியுகம் என நான்குயுகபேதங்களுண்டு. இதைக்கர்மபூமி அல்லது புண்யபூமி என்றழைப்பார்கள். இதற்குள் இந்த்ர, கசேரு, தாம்ர, சாரண, பரத, கபஸ்திமான், நாக, ஸௌம்ய, கந்தர்வ என நவகண்டங்களுள. இதில் கங்கை கோதாவரி முதலிய பற்பல புண்ய நதிகளும் தண்டகாரண்யம் முதலிய அரண்யங்களுமிருக்கின்றன. பல்லாயிரம் பிறவிகளில் செய்த புண்யங்களால் இங்குமானிடப் பிறவி கிட்டுகிறது. பூமியின் கீழ் அதலம் விதலம் நிதலம் ஸுதலம் தலாதலம் ரஸாதலம் பாதாலம் என ஏழுலோகங்களிருக்கின்றன. பாதாளத்தின் கீழே பகவான் ஆதிசேஷனாக இருந்து உலகைத் தாங்கிவருகிறார். ஜலத்திற்குக் கீழ் ரௌரவம் லாலாபக்ஷயம் வைதரணிக்ரிமிபக்ஷயம் முதலிய மஹாநரகங்களிருக்கின்றன. மஹாபாபங்களைச் செய்தோர் ஆங்குப் பற்பல நரகயாதனை

களை அநுபவிக்கின்றனர். பூலோகம் புவர்லோகம் ஸுவர்
லோகம் மஹர்லோகம் ஜநோலோகம் தபோலோகம் ஸத்ய
லோகம் என மேலே ஏழுலோகங்களுள. த்யுலோகத்தில்
நக்ஷத்ர மயமான சிசுமாரசக்ரமொன்றுளது. அது ஸ்ரீமந்
நாராயணமூர்த்தியின்ஸ்வரூபமாகும். அதன் புச்சதேசத்
தில் த்ருவமண்டலமுளது. அதைத்தழுவி ஸௌர்யமண்டல
முளது. ஸூர்யனது சில கிரணங்கள் ஆகாய கங்கையின்
ஜலத்தைப் பூமியின்மீது தெளிக்கும். வெய்யிலுடன்
பெய்யும் மழையில் நீராடினால் ஸகல பாபங்களுமகலும்.
அது திவ்ய ஸ்நாநமெனப்படும்.

தீர்த்தமும் க்ஷேத்ரமும். ஸ்நாந மாத்ரத்தினால்
ஸகல துரிதங்களையு மகற்றி ஸ்வர்க்கத்தை அளிக்கவல்ல
பல புண்ய தீர்த்தங்கள் புவிமீதிருக்கின்றன. அவைகளை
விட மிகச்சிறந்த தீர்த்தம் மனித சரீரத்திலேயே அமைந்
துளது. சுத்தமான மநம், ஸத்யமானவாக், அடங்கிய ஐம்
புலன்கள், இவைகளே சரீர தீர்த்தங்களாம். இவைகளை
விட்டு புஷ்கரத்தில் பல்லாண்டு புனலாடினும் தீர்த்த பய
னுண்டாகாது. ப்ரயாகம் புஷ்கரம் ப்ரபாஸம் கநகலம் ப்ரு
குதுங்கம் கோடிதீர்த்தம் சக்ரதீர்த்தம் பஞ்சநதம் ஸாரஸம்
ஸப்த ஸாரஸ்வதம் முதலிய பற்பல பவித்ரதீர்த்தங்களிருக்
கின்றன. புண்யதீர்த்தங்களில் ஸ்நாநம் செய்வோர் பல
நியமங்களைக் கைக்கொள்ளவேண்டும். வாஹநங்கள் மீதேறிச்
செல்லக்கூடாது. மூன்று நாளல்லது ஓரிரவேனும் அங்கு
உபவாஸமிருத்தல்வேண்டும். தீர்த்தத்தினருகே தாநம்
வாங்கலாகாது. தூயமநத்துடன் போக வஸ்துக்களை விலக்கி
ஸ்நாநம் செய்யவேண்டும். குருக்ஷேத்திரத்தில் அமர்ந்
திருந்த வேதவ்யாஸரை அண்டி கச்யபாதி மஹர்ஷிகள்
பாரினில் புக்தி முக்திகளை அளிக்கும் புண்யக்ஷேத்ரங்கள்
யாவை என்று வினவினர். அவர் மேருமலையின் மீதிருந்து

சதுர்முகன் ப்ருகு முதலிய முநிவருக்குக் கூறியதைச் சொன்னார். பாரதவர்ஷமனைத்தும் மிகப்புண்ய க்ஷேத்ர மாகும். அதிலும் ஓண்டதேசம் மிகமிகப் பவித்ரமானது. அங்கு கோணாதித்யமெனும் ஸூர்யக்ஷேத்ரமொன்றுளது. ஆங்கு மாகமாஸ சுக்லபக்ஷ ஸப்தமியில் உபவாஸத்துடன் அர்க்கனை அர்ச்சிப்போர் புக்திமுக்திகளைப் பெறுவர். ஸ்ரீ ராகவனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ராமநாதேச்வரரை ராமேச்வரத்தில் புனலொடிப் பூஜிப்போர் புண்யலோகஞ் செல்வர்.

ஸூர்யபூஜை. க்ருஷ்ணபக்ஷ ஷஷ்டியிலோ ஸப்தமியிலோ உபவாஸாதி நியமத்துடனிருந்து ஸூர்யனை ஷோடசோபசார பூஜை செய்வோர் நோய்வாய்ப்படார். அவர் ஸந்ததி மேலும் மேலும் விருத்தியாகும். ஸூர்யன் உதயமாகும் ஸமயத்தில் ஓராண்டு தவறாமல் அர்க்யமளிப்போர் நினைத்தகாரியம் கைகூடும். உதய அஸ்தமந காலங்களில் தீபதாநம் செய்வோர் ஞாநத்தைப் பெறுவர். நேத்ர நோய் அவரருகே செல்லாது. சுக்லபக்ஷ ஸப்தமிக்கு விஜயா என்று பெயர். அச்சமயம் அளிக்கப்படும் தாநம் அமோகமான பயனைத்தரும். உத்தராயணதக்ஷிணாயன காலங்களில் பாலல்லது ததியினால் அர்க்ய மளித்தால் எடுத்த கார்யம் செவ்வனே முடியும். இச்சூர்யனே பனிரண்டு உருவமெடுத்து த்வாதசாதித்யரென அழைக்கப் படுகிறார். இந்த்ரன் தாதா பர்ஜந்யன் த்வஷ்டா பூஷா அர்யமா பகன் விவஸ்வான் விஷ்ணு அம்சகர் வருணர் மித்ரர் என்பன அவர்களின் நாமங்களாம். பனிரண்டு மாதங்களை இவர்களே தனித்தனியாக நடத்துகின்றனர். இவரைப் பூஜித்தால் ஸகல தேவர்களும் ஸந்தோஷமடைகின்றனர். அஸுரர்களால் ஸுரர்களுக்குத் துன்பம் தோன்றிய போது தேவமாதாவான அதிதி ஆதித்யனை ஆராதித்தாள்.

அவர் அதிதி முன்னே தோன்றி யாது வரம்வேண்டு மென்றார். தங்களது அம்சத்தால் எனக்கோர் புத்ரன் தோன்றி அஸுரரை அழிக்க வேண்டு மென்றாளவள். அங்ஙனமே அவர் அதிதி குக்ஷியில் தோன்றி ராக்ஷஸர்களைச் சிக்ஷித்தார். (31 அத்யாயத்தில் ஸூர்ய அஷ்டோத்தர சதநாமங் கூறப்பட்டுளது) ஸூர்யோதயகாலத்தில் அர்க்யதாநம் செய்து ஸூர்யஸ்துதியைக் கூறுவோருக்கு முற்பிறவியைப்பற்றிய அறிவு முண்டாகும்.

தக்ஷசாபம். தக்ஷனெனும் பிரும்மனுக்கு ஸதியை மூத்தவளாகக் கொண்ட எட்டுகன்யகைகள் பிறந்தனர். தக்ஷன் ஓர் ஸமயம் ஸதியை விட்டு மற்றமக்களைத் தம்மனைக் கழைத்துப் பூஜித்தான். தன்னை அழைக்காததால் மநம் நொந்து ஸதி தானே தக்ஷனிடம் சென்று முதல்வளான தன்னை அழைக்காதகாரணம் யாதெனவினவினாள். தான் ஸபைக்கு வந்தபோது மற்றோரெழுந்து நின்று தன்னைப் பூஜிக்க, உமாபதி தன்னை மதித்தானில்லை. அன்றியும் மற்ற மாப்பிள்ளைகளான ஸப்த மஹர்ஷிகளையும் அவர் மதிப்பதில்லை. ஆதலின் உமையையும் தான் மதிக்கவில்லை என்றார். தன் பதி நிந்தையைக்கேட்டு மநம் பொறுக்காமல் தக்ஷஸம்பந்தத்தை ஒழிக்கத் தாக்ஷாயணி யோகாக்நியால் தன்னுடலை எரித்தாள். இதையறிந்த ருத்ரன் கோபாவேசங்கொண்டு ஸப்தர்ஷிகளையும் தக்ஷனையும் சாக்ஷுஷமன்வந்தரத்தில் மானிடஜன்மமெடுக்கும்படியும் அச்சமயமும் தக்ஷயக்ஞத்தைத் தானழிப்பதாகவும் சபித்தார். தக்ஷனும் சிநங்கொண்டு தேவர்களுடன் வேள்வியில் சிவனுக்கு எவனும் பாகம் கொடுக்கக்கூடாதென்றும் அப்படி அளித்தாலும் அதற்கு முன்னும் பின்னும் ஜலத்தைத் தொடவேண்டுமென்றும் ஈசன் பூமியிலேயே வஸிக்கவேண்டுமென்றும் மறுசாபமளித்தான். தான் தனியாகவே யாகத்தைப்

புஜிப்பதாகவும் தன் விருப்பத்தின்படியே தரணியில் வஸிப்பதாகவும் சிவன் கூறிச்சென்றார்.

உமாஸ்வயம்வரம். ஓர்ஸமயம் தன்னிடம் வந்த கச்யபரை நோக்கி ஹிமயமலை எதனால் தனக்கு நற்கதியும் நற்கீர்த்தியும் கிட்டும் என்று கேட்டார். கச்யபர், நான் ஆகாயத்தில் ஓர் அழகிய விமாநத்தைக்கண்டு அதன்கீழ் அழுகைக் குரலைக் கேட்டு அங்குச் சென்றேன். அருகம்புல்லில் காலை மாட்டிக்கொண்டு தலை கீழாகத் தொங்கும் பெரியோர்களை, புலிக்குப் பயந்து ஓடிவந்த ஒருவன் தாங்கள் யார்? ஏன் தொங்குகிறீர்கள்? என்றுகேட்க, அவர்கள் எங்களது புண்யத்தால் திவ்விய விமாநங் கிட்டியது. எங்கள் ஸந்ததியை விருத்திசெய்யாத நீயே ஓர் அருகம்புல். உனக்குப் பிறகு நரகத்தில் விழப்போகிறோம், என்றனர். உடனே அவன் பரமசிவத்தைநாடித் தவம்செய்து ஸத்ஸந்ததியைப் பெற்று தன் பித்ருக்களைச் சிவகணமாக்கித் தானும் ஸாவேசன் எனும் கணாதிபதியானன். ஆதலின் நீயும் சிவபூஜையால் மக்களைப்பெற்று மாபெருங்கீர்த்தியால் மகிழ்ச்சிபெறுவாய் என்றார். அங்ஙனமே மலையரசன் மாதேவனருளால் அபர்ணா ஏகபர்ணா ஏகபாடலா எனும் கன்யகைகளைப் பெற்றான். அபர்ணா சங்கரனை மணந்து சுக்ரனைத்தத்த புத்ரனைப் பெற்றாள். ஏகபர்ணை தேவலரை ஈன்றெடுத்தாள். ஏகபாடலை ஜைகீஷவ்யரை மணந்து அயோநிஜர்களான சங்கலிகிதர்களுக்குத் தாயானாள். உலர்ந்த இலைகளைக்கூட உண்ணாது ஆயிரமாண்டு தவம்செய்யும் அபர்ணையை அவள் தாயான மேனை, பெண்ணே! வேண்டாம்! தவத்தை நிறுத்து என்றதால் உமை என்ற பெயர் உண்டாயிற்று. பிரும்ம தேவன் தேவியினருகே வந்து தாயே! தங்களை விட்டு ஓர் க்ஷணமேனும் பிரிந்திருக்க முடியாத பரமசிவன் விரைவில் தங்களை மணப்பார். தவத்தை நிறுத்து மௌனக்

கூறி வலமாகச் சென்றார். அன்னை ஆச்ரமத்வாரத்தி லுள்ள அசோக மரத்தருகே நிற்க கைலாஸநாதன் சப்பை மூக்கும் செம்மட்டை மயிரும் வாமந ரூபமும் விகார வேஷமுந்தாங் வந்து பார்வதி! என்னை மணந்துகொள் என்றார். யோகமஹிமையால் தேவி இவர் இறைவர்க் கிறைவரென்றுணர்ந்து மநமகிழ்ந்து ஐயா! என் தந்தை யிடம் விடை பெற்று வாருமென்றாள். வாமநர் ஹிமய னிடம் கேட்க; ஸுந்தரியை அந்தமில்லா இவருக்கோ அளிப்பது? இல்லையெனில் சபிப்பரிவர்! என் செய்வதென யோசித்து, ஐயார்! ராஜகன்யகைகட்கு ஸ்வயம்வரமன்றோ ஏற்ற தர்மம்? உம்மை உமை வரித்தால் எனக்காக்ஷேப மில்லை என்றார். அக்கணமே சிவபிரான் அம்பிகையின ருகே சென்று இச்செய்தியைக் கூறினார். அன்னை ஆதர வுடன் அருகிலுள்ள அசோக மரத்திலிருந்து மலர்கொய்து மாதேவன் மீதணிந்தாள். சந்த்ர சூடன் தனது இனிய அமிருத மொழிகளால் அன்னையையும் அசோக மரத்தை யும் அவ்வாச்ரமத்தையும் புகழ்ந்து மறைந்தார். உமை, உமாபதி சென்ற வழியையே நோக்கி இறைவன் வருங் காலம் எப்போதோ என ஏங்கி நின்று கொண்டிருந்தாள். அச்சமயமருகிலுள்ள தடாகத்தினின்று "அந்தோ! முத லைக் கிறையாகிறேன் என்னைக்காக்க ஒருவருமிங்கில்லையோ? வயதான என் பெற்றோர் ஏகபுத்ரனை இழந்து எங்ஙனம் பிழைப்பர்?" என்ற ஓர் அழுகைச் சத்தம் செவியில் வீழ்ந் தது. உள்ளங்கரைந்து உமாதேவி அங்கு ஓடக் கருணை யுடன் கதறும் அந்தணச் சிறுவனை அம்முதலை நடுத்தடா கத்திற்கிழுத்துச் சென்றது. பார்வதிதேவி பரிதபித்த மநதினளாய் முதலை, அரசே! ஏகபுத்ரனை இவ்வேதியச் சிறு வனைவிட்டுவிடு. அதற்கீடாக நீ விரும்பும் பொருளை யளிப்பே னென்றாள். இதை வினவிய முதலை, அம்மா

ஐந்து நாள் உபவாஸமிருந்து ஆறும் நாள் காலையில் வருபவனே உனக்குணவு என ஈசன் ஆணையிது. அதை மீற எவராலுமியலாது. ஆயினும் நீ இதுவரை செய்த தவப்பயனை அளிப்பதாயின் ஓர் ஸமயம் இவர் விடுபடலாம் என்றது. அங்ஙனமே தேவி! தவப்பயனைத்தர, தேவி; உனது பிராம்மண பக்தியைக் கண்டு மகிழ்ந்தேன். உன் தவத்தை நீயே பெற்றுக்கொள். அந்தணனை விடுகிறேன் என்று முதலை சொல்லிற்று. தானம் செய்த பொருளைத் திரும்பப் பெறுவது தர்மமாமோ? என்று தேவி கூற முதலையும்விடுபட்ட வேதியனும் தம் மிருப்பிடஞ் சென்றனர். கௌரி தனது தவம் செலவானதால் மீண்டும் தவஞ் செய்ய யத்தனித்தாள். சங்கரனங்குத் தோன்றி தேவி, நீ என்னிடமே தவத்தைத் தானம் செய்தாயாதலின் அது அக்ஷய மாக உளது. இனி தவம் வேண்டாம். விரைவில் மணம் நடைபெறுமென்று கூறிச்சென்றார்.

இமயவன் கன்யகையின் கருத்திற்கிசைந்து கைலாஸ நாதனுக்கே அபர்ணையை அளிப்பதென்று தீர்மானங்கொண்டான். எனினும் முன்னம் வாமந முநியினிடம் கூறியபடி, பார்வதிக்கு ஸ்வயம் வரமென்று எங்கும் ப்ரகடநம் செய்தான். இந்த்ரன் முதலிய ஸகல தேவர்களும் தம் தம் பரிவாரங்களுடன் மணக்கோலம் பூண்டு பர்வதராஜன் மனைக்கு ஏகினர். மணமகளும் மங்களஸ்நாநம் செய்து திவ்யாபரணந்தாங்கி, கையில் மாலை ஏந்தி மநத்திற்கிசைந்த மணாளனைத்தேட தேவர் ஸபைமுன் தோன்றினள். அது காலை ஜகன் மாதாவின் மடிமீது ஜகத்ஜ்யோதியாய் ஓர் குழவி தோன்றியது. இஃதென்ன விந்தை என எல்லோரும் சிந்தை கொண்டிருக்க அமராதிபதி அகங்கொண்டு அதன் மீது தன் வஜ்ராயுதத்தை வீசக் கரத்தைத் தூக்கினன். ஏந்திய வஜ்ரத்துடன் இந்த்ரனது அஸ்தம் அசை

வற்று சித்ரம் போல் நின்றது. ஆதித்யனுமங்ஙனமே ஆயுதத்தைத் தூக்கி அசையாது நின்றான். மாதவன் மாதேவனது மாயாவிலாஸத்தைக்கண்டு மகிழ்ந்து சிரக்கம்பம் செய்தார். பின்னர் பிரும்மனும் பரமனது லீலையை உணர்ந்து அவரடிபணிந்து துதித்தார். இந்த்ராதி தேவர்கட்கும் இறைவன் பெருமையைவிளக்கி அவரடி பணிந்து போற்றும்படி புத்தி கூறினார். அங்ஙனமே அமரரனைவரும் தேவனைத் துதிக்க மஹேசன் மகிழ்வுடன் தோன்றி ஆசீர்வதித்தார். கரங்களும் ஸ்வாதீனமாயின. அம்பிகை அம்பிகாபதியின் பொற்பாத கமலங்களில் பூமாலையை நாணத்துடன் சாற்றினாள். முப்பத்து முக்கோடி தேவர்களது முன்னிலையிலே சதுர்முகன் விதிப்படி விவாஹ கார்யங்களைச் செய்வித்தான். வேதியர் வேதமோத, கந்தர்வர்கானம் செய்ய அப்ஸரஸ்ஸுகள் ஆட தேவர் துதி பாட இமயவன் ஆநந்தக் கண்ணீர் சொறிய அஷ்டாதச மங்கள வாத்யங்களும் முழங்க உமயவள் உள்ளங் குளிர சுந்தரவடிவம் வாய்ந்த புவனேசன் த்ரிபுரஸுந்தரியின் கரத்தைக் கரத்தாலேந்தி ஸகல லோகங்களுக்கும் மங்களத்தையளித்தான். ஒப்புயர்வில்லாத உமையின் திருமணத்தைக்கண்டு தன்னை மறந்த தேவர்கள் அய்யன் அடிபணிந்து துதித்தனர். மணக்கோலத்துடன் மாதேவன் தேவரை அருள் சுறந்தகடைக்கண்ணால் நோக்கி யாது வரம் வேண்டுமென்றார். ஸமயம் வந்தபோது சிந்தை உவந்து சிவன் தந்தவரத்தைப் பெறுவதாகக்கூறி வானவர் விடைபெற்றுச் சென்றனர். பார்வதி தேவியின் மநம் மகிழ இமயமலைமீதே பல நாள் இறைவன் இன்பமாக வஸித்து வந்தார். முனிவர்களது மனதையும் மயக்கி தவத்தை அழிக்கும் மன்மதன் ரதியுடன் சக்ரவாக உருக்கொண்டு ருத்ரன்மேல் கணைவிடுத்தான். முக்கண்ணன்

மூன்றுங்கண்ணாலவனை எரிக்க ரதி உமையின் பொன்னடியைப் போற்றிச்சரணடைந்தாள். சரணாகத வத்ஸலையான அன்னை கருணாநிதியைக்கடைக் கண்ணால் காண பரமன், ரதியே! இச்சமயம் உருவற்று உன் கண்ணுக்கு மாத்ரம் புலப்படுவன் காமன். மஹாவிஷ்ணு மானிலத்தில் அவதரிக்குங் கால் அவர் புதல்வனாகத் தோன்றுவான் என்றார். ஓர் ஸமயம், மலைமீதும் காடுகளிலும் க்ரீடை செய்யும் கணவனைக்கண்டு மகிழ்ந்தனையோ என்று மேனை மாதேவன் மனைவியை எள்ளி நகைத்தாள். அது முதல் பார்வதீ பரமேச்வரர்கள் மலையரசனை விட்டு மந்தரமலைமீது வஸித்து வந்தார்கள்.

தக்ஷயக்ஞவிநாசம். நவப்ரஜாபதிகளில் ஒருவரான தக்ஷர் சிவனிடங்கொண்ட சினத்தால் அவருக்கு அவிர்ப்பாக மளிக்காது ஓர் வேள்வி செய்தார். அவரழைப்பிற்கிணங்கி அமரரனைவரும் முநிவருடன் கங்காத்வாரம் சென்றனர். ஆங்கு ததீசி எனும் தபஸ்வி மாதேவனது மஹிமையை விளக்கிச் சிவனன்றி செய்யும் யாகம் அழிவது திண்ணமென்றார். இதனிடையே பார்வதி விமாநத்தின் மீதேறிச் செல்லும் வானவர்களை நோக்கி இவர்கள் எங்குச் செல்கின்றனரெனப்பதியை வினவினாள். அவர், தக்ஷன் வேள்விக்குச் செல்கின்றனரென்று விடையளிக்க, தேவி தாங்கள் செல்லாத காரணமென்னே என்றனள். தேவர்களே என்னுடன் ஹவிஸ்ஸைப் புஜிக்க விரும்பவில்லை என்று சிவன் கூற அம்பிகை மநம் நொந்து அங்ஙனமாயின் கடுந்தவம் புரிந்தேனும் இக்குறையை அகற்றுவேனென்றாள். தேவி உனது தவத்தை உலகந்தாங்காது. பிரும்மர்ஷிகளது யக்ஞத்தில் எமக்கு வேண்டிய பாகமளிக்கப்படுகின்றது. என்று சங்கரனுரைத்தார். நாதா !பெண்மக்களிடம் ஆண்மக்கள் பெருமை பாராட்டிக்கொள்வதியற்கை என்றம்பி

கை கூற, ஆயின் உன் விருப்பப்படி தக்ஷயக்ஞத்திலும் பாகம் பெறுவேனென்று கூறி ருத்ரன் தனது க்ரோதத்தினல் வீரபத்ரனைப் படைத்து தக்ஷன்வேள்வியை நாசம் செய்து வாவென்று கட்டளையிட்டார். மாதாவினது சினத்தால் மஹாகாளி தோன்றினள். வீரபத்ரனது ரோம கூபங்களிலிருந்தும் காளியின் தேஹத்தினின்றும் கோடிக்கணக்கான ருத்ரகணங்கள் தோன்றின. அனைவரும் அரைக்கணத்திற்குள் கங்காத்வாரம் சென்று தக்ஷன் யக்ஞசாலையைத் தாக்கினார்கள். முனிவர் மௌனமாய் பயந்தோடத் தேவர் திகைத்து நிற்க பர்வதங்கள் சிதறிவிழ கடல்கலங்க அவநி அசைய அகாலப்ரளயம் தோன்றிற்றோ என அனைவரும் அஞ்சினர். ப்ராணனைக்காக்கப் பலரும் பயந்தோட யக்ஞதேவனும் மானுருக்கொண்டு மாயமாகப் பறந்தான். வில்லேந்தி வீரனதைத் தொடர்ந்தோட அவர் நெற்றியிலிருந்து வியர்வை நீர் நிலத்தில் வீழ்ந்தது. அதிலிருந்து அதிபயங்கரமான சிவஜ்வரந் தோன்றி யக்ஞத்தை எரித்தது. இதைக்கண்ட சதுர்முகன் சிவனைச்சரணமடைந்து துதித்தார். எல்லா வேள்விகளிலும் சிவபாகத்தை இயற்றினர். உடனே சிவன் ப்ரஸந்நமாகத் தோன்றி இறந்தவர்களை எழுப்பினர். மெய்யறிவு பெற்ற தக்ஷனும் ஸதாசிவனைச்சரண மடைந்து ஸஹஸ்ர நாமங்களால் துதித்தான். (38-வது அத்யாயம் சிவஸஹஸ்ரநாமம்) அதனல் ஸந்தோஷ மடைந்த ஸர்வக்ஞன் தக்ஷன் முன் தோன்றி ஆயிரம் அச்வமேதங்களையும் நூறு வாஜபேயங்களையும் விதிப்படி செய்து முடித்துச்சிவகணமாவாய் என்றருள் புரிந்து மறைந்தார். வீரபத்ரன் வேர்வையாலுண்டான மாஹேச்வர ஜ்வரத்தைத் தனியேவிடின் தரணியை அழிக்குமெனக்கருதி பலவிடங்களில் அதைப் பகுத்து வைத்தார். நாகங்களிடம் மதமாகவும் பர்வதங்களிடம் சிலாஜத் எனும் தாதுவாகவும்

நீரில் நீலிகையாகவும் ஸர்ப்பத்தினிடம் தோலாகவும் பூமியில் களராகவும் கோகிலத்தினிடம் நேத்ரரோகமாகவும் கிளி யினிடம் விக்கலாகவும் புலியினிடம் ச்ரமமாகவும் மானிட ரிடம் ஜ்வரமாகவும் மாஹேச்வரஜ்வரம் காணப்படுகிறது.

ஏகாம்ர க்ஷேத்ரம். பக்தவத்ஸலனை பரமசிவன் பாரின் மீது பல விடங்களிலே ஸ்வயம்புலிங்கமாகத் தோன்றினர். ஏகாம்ரம் என்பது ஓர் உத்தம க்ஷேத்ரமா கும். முன் கல்பத்தில் ஆங்கு ஓர் மாமரம் தோன்றியது. ஆதலின் அது ஏகாம்ரம் எனப்படுகிறது. அங்கு கோடிலிங் கங்கள் அமைந்திருக்கின்றன. அங்கு எட்டு புண்யதீர்த் தங்களுமுள. இறைவனது ஸன்னதி விசேஷத்தால் அந் நாடு செழித்திருக்கும். அரம்பையருக்கொப்பான மங்கை யர்களும் குபேரனுக்கொத்த தனவான்களு மிருக்கின்ற னர். உலகிலுள்ள பற்பல நதீநதங்களினின்றும் பிந்து பிந்துவாக நீரெடுத்து வந்து நீலகண்டன் அங்கு ஓர் தீர்த்த மமைத்தார். ஆதலின் அது பிந்துஸரஸ் எனப்படும். அங்கு நீராடின் பாபமகன்று நிர்மலமாவர். மார்கழிமா தம் சுக்ல அஷ்டமியில் அங்கு சென்று தேவபித்ரு தர்ப் பணம் செய்து ஏகாம்ர நாதனைத் தர்சிப்பபோர் இவ்வுலகில் கோரியபலனைப் பெற்று இறுதியில் இறைவனடி சேர்வர். காசிக்கு ஈடான இப்புண்ணிய க்ஷேத்ரத்தில் நிரந்தரமாக சிவபக்தி செய்தால் இருபத்தோரு தலைமுறை சிவலோகஞ் செல்வர். விரஜமெனும் க்ஷேத்திரத்தில் ஸ்வயம்புவான வராஹ மூர்த்தியும் வாராஹிதேவியும் எட்டு புண்ய தீர்த்தங் களுமிருக்கின்றன.

புருஷோத்தம க்ஷேத்ரம். வட தேசத்தில் உத்கல க்ஷேத்ரத்தின் அருகே அவந்திகாபுரம் என்றோர் புண்ய நகரமுளது. அதன் ராஜதாநி உஜ்ஜயினியாம். ஆங்கு க்ஷிப்ரா எனும் பாவநமான நதி ஓடுகிறது. அதன் கரைமீது மஹா

காலேச்வர மெனும் சிவ க்ஷேத்ரமொன்றுண்டு. சிவகுண்ட மெனும் தீர்த்தத்தில் நீராடி நீலகண்டனைப் பூஜிப்போர் கோரியபலனைப் பெறுவர். இதனருகே புருஷோத்தம க்ஷேத்ர மமைந்திருக்கிறது. அங்கு ஸ்ரீ கிருஷ்ணன் பலராமன் ஸுபத்ரை மார்க்கண்டேயர் வடவிருக்ஷம் ஆகிய இவர்களது தர்சநம் மிக விசேஷமானது. புக்திமுக்தி என இரண்டையுமளிக்கவல்லது இந்த திவ்யக்ஷேத்ரம். இதற்கீடான உத்தமக்ஷேத்ரம் உலகிலில்லை. (இது தற்சமயம் பூரிஜகன்னாத மெனப்படுவது) ஓர் ஸமயம் ஸுமேரு மலைமீது அமர்ந்திருக்கும் அச்யுதனை வணங்கி பூமகள் பூமியின் மீதுள்ள புண்ய க்ஷேத்ரம் யாதென வினவினள். புன்னகையுடன் புருஷோத்தமன் கூறினார். தேவி! ஒரு ஸமயம் லோகஸ்ருஷ்டியில் ஈடுபட்ட சதுர்முகன் மாநஸிக ஸ்ருஷ்டியால் படைப்பு பெருகாததைக் கண்டு தானே ஆணும் பெண்ணுமாக இருஉருவங்களெடுத்தார். அவ்விரண்டும் காமத்தினால் சிற்றின்பத்தைப் பெற்று முன்னினும் பன்மடங்கு ஸ்ருஷ்டிசெய்தன. அன்று முதல் ஒவ்வோர் பிராணியும் காமக்ரோதங்களிலீடுபட்டு திருமாலின் திருவடியை மறந்து நரகத்திலிடர் ப்பட்டன. கருணைகொண்ட கமலாஸநன் என்னைப்பணிந்து யக்ஞதாநாதி ஸத்கருமங்களைச் செய்ய இயலாதவரும்கூட நற்கதிபெற ஓர் ஸுலப வழிகாட்ட வேண்டுமென்றார். அச்சமயம் அவருக்குரைத்ததை உனக்குயான் கூறுகிறேன் கேள். புருஷோத்தம க்ஷேத்ர மென்பது தென்கடல் தீரத்திலுள்ள உத்தம க்ஷேத்ரமாகும். ஆங்கு இந்த்ர நீலமயமாயுள்ள கிருஷ்ண உருவைத்தர்சிப்போர் துன்பமுறார். ஸ்வர்க்கமல்லது, வேண்டின் வைகுண்டமுஞ் செல்வர். ஆங்குள்ளோர் யமபுரியை அணுகாததால் காலனது ஆயுதங்கள் துருபிடித்துப் பாழாயின. ஆதலின் அந்தகன் என்னடி

பணிந்து அவ்வரியக்ருஷ்ண உருவைச் செடி கொடிகளால் மறைக்கும்படி மன்றாடினன். அங்ஙனமே நாம் செய்த பின் பாபிகள் நரகஞ் செல்ல யமன்தன் பணியைச் செவ்வனே செய்தான் என்று மாதவர் உரைத்தார்.

இந்த்ரத்யும்நன். அந்த க்ஷேத்திரத்தில் தற்போதுள்ள விக்ரஹம் எங்ஙனமுண்டானதென மஹர்ஷிகள் வினவ, பிரும்மனளித்த விடையை ஸூதருரைத்தார். கிருதயுகத்திலே அவந்திமா நகரிலே விஷ்ணுபக்தரில் சிறந்த இந்த்ரத்யும்நன் என்றோரரசனிருந்தான். அவன் தன் தேசத்தைவிட்டுப் புண்யமான புருஷோத்தம க்ஷேத்தரஞ் சென்றான். விந்த்யாபலாஎனும் நதி தென்கடலில் அங்கு ஸங்கமமாகிறது. அமாத்தியர் முதல் அனைவரும் அவ்வரசனையே பின் தொடர்ந்தனர். மன்னனங்கு மாதவனது திவ்ய விக்ரஹத்தைக் காணாமல் தேடித் திரிந்தான். தனது பாபத்தினாற்றான் தைவ உருவம் தன் முன் தோற்றவில்லையோ என அஞ்சி அச்வமேதயாகம் செய்தான். அது ப்ரஹ்மஹத்தி முதலிய ஸகல பாபங்களையுமகற்றவல்லது. விதிப்படி வேள்வி முடிந்தது. அபரிமிதமான தக்ஷிணையைப் பெற்ற அந்தணோத்தமர் அரசனை ஆசீர்வதித்துச் சென்றனர். இந்த்ரத்யும்நன் ஏகாந்தமாக அமர்ந்து இறைவனைக் காருண்யஸ்தவம் எனும் துதியால் மெய்வருந்தப் பாடினான். ஹே லக்ஷ்மிகாந்த! பக்தவத்ஸல! தீநபந்தோ! தயாஸிந்தோ! அடியேனைக் கடாக்ஷிப்பது கருணைக்கடலான தமக்கோர் பாரமோ? எத்தனைப்பிறவி பிறப்பேன்? யார் யாரைத் தந்தைதாயென அழைப்பேன்? எத்தனைமுறை தாய்க்கருவில் துன்புறுவேன்; பிறப்பிறப்பெனும்கடலைக் கடக்க கருணைபுரியாயோ? ஆசையாலலைந்து திரியும் சித்தம் ஓர்கணமும் உமதுபொன்னடியில் பொருந்தவில்லையே! ஏழையானேன்! தனிகனானேன்! எங்கும் என் மநதிற்கு இன்ப

மூண்டாகவில்லையே! யார்யார் எனக்குபதேசித்தபோதிலும் பேரின்பம் பெறவில்லையே! இனி ஓர்கணமும் பொறுக்கமாட்டேன்! நின்னடிசரணமென்றேன். அடியேனைக் காத்தருள்வாயாக! பிரும்மாதி தேவரும் வேதமுமஞ்சி நிற்கப் பேதைமையால் தம்மைப் போற்றத்துணிந்தேன். குற்றத்தைமன்னித்து குணக்கடலே! அடியேனைக்காக்கவா? என்று நிசியெல்லாம் கேசவனைத்துதித்துக் கண் அயர்ந்தான் மன்னன்; விடியற்காலையிலே கனவில் கண்ணன் அவருககுக்காக்ஷியளித்தான். சங்க சக்ரங்களைக் கரத்திலேந்தி பீதாம்பரமுடுத்தி பச்சைமலைபோலுருவும் பவளவாயும் கமலக்கண்ணுமாகத்தோன்றி வேந்தே, வருந்தாதே! விரைவில் முக்திபெறுவாய். உனது உள்ளத்தை உணர்ந்தோம். யமனால் மறைந்த திவ்ய விக்ரஹத்தை நீ விரும்புகிறாய். அது கிட்டாது. காலையில் கடற்கரைக்குச்செல். ஆங்கோர் அச்வத்த விருக்ஷமிருக்கிறது. அதை நீயே சங்கையின்றி சேதித்து என் உருவை அமைத்து ஆலயத்திலமர்த்தி அர்ச்சனை செய் என்றார். வேந்தன் விடியற்காலையில் கண்ட கனவு விரைவில் பயனை அளிக்குமென்றெண்ணி காலைக்கடனை முடித்துக் கடற்கரை சென்றான். ஆங்கு ஓர் அரிய அச்வத்த தருவைக்கண்டான். தானே அம்மரத்தை வெட்டி வீழ்த்தினான். மன்னனது முயற்சியையும் மட்டில்லா பக்தியையும் கண்டு பரந்தாமன் அகமகிழ்ந்தான். விச்வகர்மனெனும் தேவதச்சனுடன் தானும் வேதியர் வடிவந்தாங்கி அச்யுதன் அரசனருகே வந்தார். வேந்தே! நீ விரும்பியபடி விஷ்ணுவின் விக்ரஹத்தை அமைக்க விச்வகர்மனைப்போல்வல்லவரிவர் என்று இறைவன் கூற மன்னனது மனம்போலவே மற்றவர் ஸ்ரீ கிருஷ்ணன் பலராமன் ஸுபத்ரை ஆகியவர்களின் பிம்பத்தை வெகு விரைவாகச் செய்து முடித்தார். கண்ணைக்கவரும் கருத்தமேனியுள்ள

கண்ணன் உருவமும் வெண்மைவர்ணம்வாய்ந்த பலராமனது பிம்பமும் ஸ்வர்ணவர்ணமான ஸுபத்ரையின் ப்ரதிமையும் பார்த்திவன் மனதைப் பரவசமாக்கின. அவைகளைப் பார்த்துப் பார்த்து மெய்மறந்த மன்னன் ஆடுவான். பாடுவான். அவனியில் விழுவான். ஆனந்த பாஷ்பம் சொரிவான். கரங்குவித்துக் கண்ணனைத் துதிப்பான். அரிய உருவை அமைத்தளித்த அந்தண வேஷதாரியின் தாளில்வீழ்ந்து தஞ்சமென்பான். திவ்யமான தேவனுருவைத் தந்த நீங்கள் மானிடரல்ல! அமரரே என்பான்! பக்தனது பாரவச்யத்தைப் பார்த்த பங்கசயனன் நிஜஉருவைக்காட்டி இந்த்ரத்யும்ந! உனது உவமையில்லா பக்தியால் உள்ளமுவந்து பரவசமானோம். நீ விரும்பியவரம் யாதாயினும் அதைத் தந்தோமென்றார். பார்த்திவன் பிறப்பிறப்பற்ற பேராநந்த நிலையைப் பிரார்த்திக்க பகவான் பத்தாயிரமாண்டுகள் பாரினைப் பரிபாலநம் செய்து பின்னர் முத்தி பெறுவாய் என்றார். அன்றியும் அவ்வரசன் பிரதிஷ்டைசெய்த அந்த திவ்விய க்ஷேத்திரத்தையும் அரசன் புனலாடிய இந்த்ரத்யும்ந தீர்த்தத்தையும் ஆங்குள்ள வடவிருக்ஷத்தையும் அரசனுக்கு வரமளித்த ஜ்யேஷ்டமாத சுக்லத்வாதசியில் தர்சிப்போர் வைகுண்டம் செல்வரென்றும் வரமளித்து மறைந்தார். பார்த்திவனும் பேராநந்தம்கொண்டு புண்ய தினத்திலே வேதவிதிப்படி அம்மூன்று விக்ரஹங்களையும் அரிய ஓர் ஆலயத்தில் ப்ரதிஷ்டைசெய்து ப்ரதிதிநம் தானே அர்ச்சித்து முடிவில் முக்திபெற்றான்.

வடவிருக்ஷமும் மார்க்கண்டேயரும். அந்த க்ஷேத்ரத்திலுள்ள வடவிருக்ஷம் ப்ரளயகாலத்திலும் அழியாதது. ஓர் அவாந்தர ப்ரளயத்தில் ப்ரளயாதித்யனால் உலகெல்லாமெரிந்து பெருந்தாபமுண்டாயிற்று. மார்க்கண்டேயர் ஒருவரே உயிர்பெற்றிருந்தார். தாகந்தாளாது அவர் அலையும்

போது புருஷோத்தமனெனும் வடவிருக்ஷம் அவர் கண்முன் தோன்றிற்று. அதனடியிற்சென்று அவர் களைப்பாறுகை யில் ப்ரளய மேகங்கள் பனிரண்டாண்டு பெய்த மழையால் உலகெலாம் ஜலமயமாயிற்று. ஆங்கு வடவிருக்ஷத்தையுங் காணாது மார்க்கண்டேயர் மனம்நொந்து தன்னந்தனியே நிற்குமெனக்குத் துணைவ னொருவருமில்லையே ! எங்கு செல்வேன்! என்செய்வேனென வருந்தினார். வத்ஸ! அஞ்சாதே! எனதருகே வந்துவிட்டாய்! இனிபயமேது! என்றோர் குரல்கேட்டது. பல்லாண்டுகள் பிழைத்திருக்கும் என்னை வத்ஸ எனக்கூறுபவர்யார்? என்று முனிவர் சிந்தித்து கூறினார். பின்னர் அவர் உண்மையறிந்துமாதவனைத் துதிக்க அழியாத ஆலமரமும் அதன்மீது அத்புதக்குழந்தை வடிவ மெடுத்த அச்யுதனும் காணப்பட்டனர். பரமனைப்பணிந்து முனிவர் துதிக்க அப்பால் முகுந்தன் தனதுவாயைத் திறந்து அதனுள்ளே செல்லும்படி அவருக்கு ஆக்ஞையிட் டார். மார்க்கண்டேயர் மாலினுள்ளே புகுந்து பதினான்கு உலகங்களையும் கண்டு மதிமயங்கி வெளியில் செல்ல வகை யறியாது விழித்தார். மதுஸூதன னருளால் மறுபடியும் வெளியில்வந்து பகவானைப் பன்முறை பணிந்து பாடி சிசு வடிவங்கொண்ட தங்கள் நிஜஉருவைக் கூறவேண்டுமென மார்க்கண்டேயர் வேண்டினார். நாராயணன் பரம பக்த னான மார்க்கண்டேயனுக்கு ஆத்மஸ்வரூபத்தை அழகாகக் கூறி வேண்டிய வரத்தைக் கேட்கும்படி கூறினார்.

ஹரியும் ஹரனும் ஒன்றே. சிவபக்த சிகாமணியான மார்க்கண்டேயர் ஹரியின் உடலில் புகுந்து ஆங்கு கைலா ஸம் வைகுண்டம் முதலிய காக்ஷிகளைக்கண்டு இவ்விரு மூர்த்திகளும் ஒன்றே என்று கண்டுகொண்டார். சைவர் களும் பாகவதர்களும் வீண்வாதம் செய்யாவண்ணம் ஹரி ஹரர்கள் இருவரும் ஒருவரே என்று எண்ணி மோக்ஷ

மகன்று முக்திபெறுமாறு இஜ்ஜகன்னாத க்ஷேத்ரத்திலேயே சிவலிங்கப்ரதிஷ்டை செய்தல் நலமென நினைத்தார். தனது விருப்பம்நியாயமாயின் அச்யுதன் அதற்கு ஆக்ஞையளித்து அருள்புரியவேண்டுமென்று இதையே விஷ்ணுவிடம் வரமாகவரித்தார். அகமகிழ்ந்து பகவான், பக்த! சிவப்ரதிஷ்டை செய்தால் என்னைப்ரதிஷ்டை செய்வது போலாகும். எங்களிருவர்களுள் எள்ளளவும் பேதமில்லையாது. ஹரிவேறு ஹரன்வேறெனக் கருதுவோர் பேதைகள்! ஆகாயமும் காற்றும்போலுள்ள இரு மூர்த்திகளுள் ஒன்றைப் பிரிப்பது முடியாது. கருடத்வஜனும் விருஷபத்வஜனும் ஒன்றே. என்னருகே ஓர் சிவாலய ப்ரதிஷ்டைசெய். அதன் ஸமீபத்தில் ஓர் புண்ய தீர்த்தத்தையும் ப்ரதிஷ்டை செய். அது உனது பெயரால் மார்க்கண்டேய தீர்த்தமென்றழைக்கப்படும். ஆங்கே புனலாடிச் சிவலிங்க தர்சநம் செய்து வடவிருக்ஷத்தையும் என்னையும் தர்சிப்போர் எளிதில் முக்திபெறுவர் எனக்கூறி மாதவன் மறைந்தார்.

நரஸிம்ஹ பூஜை. ஜகன்னாதத்தில் ஸ்ரீ க்ருஷ்ணதர்சநம் செய்தபிறகு கடற்கரையில் மணலிலே மறைந்திருக்கும் நரஸிம்ஹ தேவரைப் பூஜிக்கவேண்டும். சுக்லபக்ஷ த்வாதசியே அவரை அர்ச்சிப்பதற்கேற்ற நன்னாளாகும். அங்கிருந்து பனிரண்டு யோஜனை தூரத்தில் பிலத்வாரமொன்றுளது. ஆங்குசென்று மூன்றிரவுகள் உபவாஸமிருந்து இருபதுலக்ஷம்முறை நரஸிம்ம மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். பின்னர் இருநூறுமுறை பலாசஸமித்துகளால் அம்மூல மந்த்ரத்தைக்கூறி அக்நியில் ஹோமம் செய்தல் வேண்டும். அதன்பிறகு அந்தப் பிலத்தின் த்வாரம் திறக்கப்படும். அங்குக் காணும் ராஜமார்க்கமாக உட்புகுந்தால் அப்ஸரஸ்ஸுகளால் ஆராதிக்கப்படும் நரஸிம்ஹனைக் காணலாம். அங்குச் செல்லும் பக்தருக்கு ஓர் திவ்ய ரஸாயனமளிக்கப்

படும். அதை அருந்தின் திவ்ய தேஹமுண்டாகும். விருப்ப மிருப்பின் அங்கு ஸுகமாக வஸிக்கலாம். இல்லையேல் அங்குக் கிடைக்கும் கத்தி சூலம் கோரோசனை மணி ரஸரஸாயநம் முதலியவைகளைப் பெற்று வெளிவரலாம். இத்தகைய ஸாதகனுள்ள விடத்தே தீயினாலும் வாளாலும் விஷத்தாலும் ராக்ஷஸராலும் மற்ற பூதப்ரேத பிசாசங்களாலும் தீங்கு நேராது. இத்தகைய ஸித்தர் நரஸிம்ஹ மந்திரத்தைப் பூர்ஜப்பட்டையில் கோரோஜனையால் வரைந்து ரோகிகளுடலில் கட்டினாலும் அருகில் வைத்தாலும் பிணி அல்லது பூதங்களால் தோன்றும் துன்பம் தொலைந்துபோம். நரஸிம்ஹபக்தனுக்கு எவ்வுலகிலும் கிட்டத்தகாததொன்றுமில்லை.

ச்வேதமாதவம். கிருதயுகத்தில் ச்வேதனென்றோர் நரபதி மநுநீதி வழுவாது அரசு செலுத்திவந்தான். அவனது ராஜ்யத்தில் பிணி கிடையாது. அகாலமரணம் தோன்றுவதில்லை. ஒரு ஸமயம் கபால கௌதமர் என்ற வேதியரின் பல் முளையாத பாலகனொருவனிறந்தான். இந்த துக்கத்தைச் சஹியாத அந்தணன் அக்குழந்தையின் சவத்தை அரசனருகே வைத்து வேந்தே! இச்சிசுவைப் பிழைப்பிப்பது உன்கடன் என்றார். ச்வேதராஜன் அவர் சாபத்திற்கஞ்சி ஐயனே! ஓர் வாரத்திற்குள் உமது சிசுவை மீட்பேன்? இல்லையேல் தீயில் புகுந்து யான் மாள்வேனெனக் கூறி வெண்டாமரை மலர்களால் கைலாஸ நாதனை அர்ச்சித்தான். பக்தனது பக்தியால் பரவசமான பரமசிவன் பார்த்திவனெதிரே தோன்றி அந்தணச்சிறுவனை எழுப்பிச் சென்றார். பூபன் ஹரனிடம் போல் ஹரியினிடமும் அளவற்ற அன்பு பூண்டவனாதலின் ச்வேத மலைமீதிருந்து அழகிய சிலையைக் கொண்டுவந்து மாதவனுக்கோர் மாளிகையைக் கட்டினான். அதனிடையே மத்ஸ்ய ரூப

மான மாதவனுருவை ஸ்படிகம்போல் வெண்மையான சிலை யாலமைத்து விதிப்படி ப்ரதிஷ்டை செய்தான். தானே அவ்வாலய பணிவிடைசெய்து, முடிவில் முகுந்தனருளால் முக்தி பெற்றான். (இங்கு அஷ்டாக்ஷரீ பூஜாவிதி விஷ்ணு கவசம் தீர்த்தமகிமை தண்டகஸ்துதி முதலியன 6அத்யாயங் களால் வர்ணிக்கப் பட்டுள்ளது.)

த்வாதசயாத்ராபலன். ஆடிமாத சுக்லத்வாதசியன்று ஜகன்னாத க்ஷேத்ரத்திற்கு யாத்திரையாகச் செல்லவேண்டும். பனிரண்டாண்டு தொடர்ந்து அங்ஙனம் யாத்திரை செய் வதே த்வாதசயாத்ரை எனப்படும். பனிரண்டாமாண்டு யாத்திரை பூர்த்தியானபின் பனிரண்டு வேத வித்துக்களை வரித்து த்வாதச கலசங்களில் பரமனை ஆவாஹநம்செய்து விதி வழுவாது வேதோக்த பூஜைசெய்யவேண்டும். இத ற்கு ஈடாக வேறொரு விருதமுமில்லை எனத்தகும். விஷ்ணு லோகம் கைலாஸம் ஸத்யலோகம் இந்த்ரலோகம் சந்த்ர லோகம் நக்ஷத்ரலோகம் ஆதித்யலோகம் கந்தர்வலோகம் ஆகிய புண்யலோகங்களில் இவ்விருதம் செய்வோர் பேரின் பம் பெறுவர். பின்னர் பாரினில் சக்ரவர்த்தியாகத் தோ ன்றிப் பற்பல தாந தர்மங்களைச் செய்வர். மறுபிறவியில் விஷ்ணுபக்தரான விப்ரர் குலத்திலே பிறந்து வேள்விகள் பலசெய்து முடிவில் அழிவற்ற ஆநந்தநிலையான முக்தியைப் பெறுவர்.

ஸ்ரீக்ருஷ்ண விக்ரஹ ஸ்ருஷ்டி. ஆதி கல்பத்தில் கமலாஸநன் விச்வகர்மனை அழைத்து ஸகல லக்ஷணங்களும் பொருந்தி காண்போர் கண்ணையும் மநத்தையும் கவரத்தக்க ஓர் கண்ணன் உருவைச் செய்தளிக்கும்படி கூறினார். தேவத்தச்சனும் தேவனிடமுள்ள பத்திக்கேற்ப அரிய ஓர் உருவை அமைத்தான். அதனழகைக்கண்டு வியந்து புக ழாதவாரில்லை. பிரும்மனைஸேவிக்க வந்த தேவராஜன்

அதைத் தனக்களிக்கும்படி வேண்ட அவரும் அதைத் தந் தருளினார். பல்லாண்டுகள் இந்த்ரன் பரிவுடனதைப் பணிந்து பூஜித்தான். இந்த்ரஜித் எனும் ராவண னது புதல்வன் இந்த்ரனுடன் போர் புரிந்து ஜயித்த காலத்தில் ராவணன் அந்த அச்யுத உருவை லங்கைக்குக் கொண்டுசென்றான். விஷ்ணுபக்தனான விபீஷணன் ஸோதரனை வணங்கித் தனது உபாஸனா மூர்த்தியின் திரு உருவைத் தனக்களிக்க வேண்டுமென்றான். அங்ஙனமே தசமுகன் விஷ்ணுபிம்பத்தை விபீஷணனுக்களிக்க அவன் நூற்றெட்டாண்டுகள் தனதில்லத்தே வைத்துப் பூஜித்து வந்தான். ஸ்ரீராம சந்த்ரமூர்த்தி ராவணனைப் போரில் வென்றபின் அவ்விக்ரஹத்தைப் புஷ்பக விமானத்தின் மீதேற்றி விபீஷணன் அயோத்திமாநகரம் சென்று தாசரதிக்கர்ப்பணம் செய்தார். காகுஸ்தனும் பத்தாயிரத்து நூறாண்டுகள்வரை அப்புராதந புண்யவிக்ரஹத்தை ஆரா தித்துத் தான் வைகுண்டஞ் சென்றபோது கடலில் வைத்து விட்டார். த்வாபரயுகத்தில் பூபாரத்தைக் குறைக்கப் பாரினில் கிருஷ்ணனாகத் தோன்றிய போது அவர் லோகநன்மையை நாடிக் கடலிலிருந்து அவ்வழகிய திருஉருவை எடுத்து ஜகன்னாதத்தில் ப்ரதிஷ்டை செய் தார். அத்தகைய அநாதிக்ஷேத்ரமான ஜகன்னாதத்தில் ஜகன்னாதனைத் தர்சிப்போர் முக்திபெறுவது திண்ணம்.

கண்டு முநிவர். கௌதமீதீரத்தில் கண்டு என்றோர் முநிவரிருந்தார். அவர் செய்த கடுந்தவத்தால் உலகெலாம் உஷ்ணமாயிற்று. தாபத்தைச் சஹியாத ஸுரர்கள் ஸுரேச னுடன்கூடி ஸத்யலோகஞ் சென்றனர். ஸமயத்தை அறிந்து சதுர்முகனைப் பணிந்து இத்தாபத்திற்குக் காரணம் யாது? அது அகலும் வழி என்ன? என்று வினவினர். பிரும் மனும் பிராமணோத்தமரான கண்டுவின் தவமே காரண

மென்றும் காமத்தால் அவர் தவமழியுமென்றும் கூறினார். அவரிடம் விடைபெற்று விரைந்து விண்ணுலகம் சென்ற தேவேந்திரன் ப்ரம்லோசந்தி எனும் அப்ஸரஸை அழைத்தான். கௌதமீ தீரத்திலுள்ள கண்டுவின் தவத்தைக் கணப்பொழுதில் கலைத்துவா எனக் கட்டளையிட்டான். அவளுக்குத் துணையாக மந்தமாருதம் வஸந்தன் மன்மதன் ஆகியவர்களையுமனுப்பினான். இவர்கள் ஆங்கு செல்ல தபோவநம் உத்யாநவநமாக மாறியது. முநிவர் சித்தம் சஞ்சலமாயிற்று. ப்ரம்லோசந்தியின் இனிய ஸங்கீதம் செவியில் விழ முனிவர் மநம் பரவசமாயிற்று. கண்ணைத்திறந்தார். கனக லதைபோன்ற ஓர் உரு மின்னல் போல் தோன்றி மறைந்தது. அவ்வுருவைத் தேடிப்பிடிப்படேததவமென்க்கருதினார். அவள் நாணத்துடன் தபஸ்வியின் எதிரே வந்து தலைகுனிந்துநிற்க, மாதரசே என் இஷ்டத்திற்கிசைந்து இன்பந்தராயோ? நீ என்னை ஏற்றருள்வாயாகில் யானுனது அடிமை! என்றார். இதற்கென வந்த இந்த்ரனின் தாஸி முனிவரை மயக்கிக் காமவலையில் சிக்கவைத்தாள். கண்டுரிஷி காளைப்பருவமும் காமனையொத்த உடலுமெடுத்து மந்தரமலைமீது நூறாண்டுகள் அவளுடன் இணைபிரியாது இன்பத்தை அனுபவித்தார். தேவதாஸி தனக்குத் தேவலோகஞ் செல்ல விடைதந்தருள வேண்டுமென்றாள். சிறிது நேரம் சென்றபின் நீ செல்லலாமென்றார் முநிவர். அவர் சாபத்திற்கஞ்சி ப்ரம்லோசந்தி பதில் கூறாது பல நாட்களிருந்தாள். மறுபடியும் நூறாண்டுகள் சென்றபின் தேவமாது பூஸாரரை விடையளிக்க வேண்டினாள். அச்சமயமு மவர் முன்போலவே கூறினார். இங்ஙன மாயிர மாண்டுகளுக்கு இரண்டொருமாதங்களே குறைவாக இருந்த போது சயநத்திலிருந்து திடீரென்றெழுந்து கன வேகமாகக் கண்டு முநி கிளம்பிச் சென்றார். இதைக்கண்டு

வியந்த தேவதாஸி புன்னகை புரிந்தாள். முனிவர் அதைக் கண்டு நகைக்குக்காரணம் யாதென்றார். அவள் பல நூற்றாண்டுகள் படுக்கையிலேயே இருந்த தேவரீர் சூர்யன் மறைவதற்குள் ஸாயம் ஸந்த்யையைச் செய்ய வேண்டுமென இன்றுவிரைவாகச்செல்வதைக்கண்டுநகைத்தேன் என்றாள். ஆஹா! ஆயிரமாண்டுகள் அநுஷ்டான மின்றிச் சென்றனவே! காமனுக்கு வசமானேன்! கர்மங்களை மறந்தேன்! என் செய்வேன்? எவரைக் குறைகூறுவேன் ? எல்லாமறிந்த நானே காமநரகத்தில் இறங்கினேன். தூதாக வந்து இதுவரை என்னுடன் பழகிய இவளைச் சபிப்பது நன்றி கொன்றதாகும். நான் இந்திரியங்களுக்கு வசப்பட்டு கிடக்க இந்திரனைச் சபிப்பதும் நீதியாமோ? என்று சிந்தித்து பெண்ணே! ஒரு க்ஷணமேனும் என் முன் நில்லாதே! செல்! செல்! என கண்டுமுனி கடிந்து கூறினார். ப்ரம்லோசந்தி பயந்து நடுங்கிப் பதைபதைத்து உடலெல்லாம் வியர்வை பெருக அதை இலைகளால் துடைத்து மரந்தோறும் மறைந்து சென்றாள். அம்முநிவரது அமோகமான வீர்யம் வேர்வையாக வெளிவர அதிலிருந்து மாரிஷா எனும் பெண்ணொருத்தி தோன்றினாள். ஓஷதிகளுக்கரசான சந்த்ரன் மரங்களிலிருந்து பிறந்ததால் தேனுவின் பாலை அளித்து மாரிஷையை வளர்த்தான். அவளைப்ராசேதஸ்ஸுகள் மணந்து தக்ஷப்ரஜாபதியைப் பெற்றனர். தவத்தை இழந்த தபஸி புருஷோத்தமமெனும் ஜகன்னாதத்தையடைந்து மனமுருக பிருஹ்மபாரம் எனும் மந்திரத்தைப் பலமுறை ஜபித்துத் துதித்தார். (பாரம்பாரம் என்று துவக்கி எனது காமாதி தோஷங்கள் அகலுக என்கருத்துக்கொண்ட 3 ச்லோகங்கள்) இதைக்கேட்டு மகிழ்ந்த மாதவன், முனிவர் எதிரே தோன்றி இவ்வுத்தம க்ஷேத்திரத்தில் என்னை ஆராதித்து முக்திபெறுவாய் என்றார். அன்றன்றும் புண்யதீர்த்தத்

தில் புனலாடி கண்டு முநிவர் கண்ணனை நல்மலர்களால் அர்ச்சித்துப் பரமனுடன் இரண்டற ஒன்ருகக்கலந்து பேரின்பம் பெற்ருர். கண்டுசரிதமும் பிருஹ்மபாரம் யஸ்துதியும் பக்தரது பாபத்தை அகற்றி ஸ்வர்க்கத்தை அளிக்கவல்லவை.

வாஸுதேவவ்யூஹமும் கேசமும். ஸகுணமாகவும் நிர்க்குணமாகவும் நிற்கும் வாஸுதேவன் தன்னுடலை நான்கு பாகங்களாகப் பகுத்துளார். சுக்லை எனப்படும் முதற்பகுதி யோகிகளால்மட்டு மறியத்தக்கது. இன்னதென எவராலும் சொல்லமுடியாமல் அருகிலும் தூரத்திலுமுளது. குணங்களைக்கடந்தது அது. இரண்டாவது தமோ குணத்தால் திர்யக்ஜாதியைச் சார்ந்து சேஷனென்று பெயர்பெற்றுப்பாரினைத் தலையால் சுமக்கின்றது. மூன்ருவது மூர்த்தி ஸத்வ குணமேலீட்டால் பதினான்கு உலகங்களையும் பரிபாலித்து வருகிறது. இஃதே தர்மங் குறைந்து அதர்மம் மேலிட்டபோது அந்தந்த காலத்திற்கேற்றபடி உருவெடுத்து துஷ்டசிக்ஷணமும் சிஷ்டரக்ஷணமும் செய்து வருகிறது. நான்காவது மூர்த்தி நாகசயநத்தின்மீது பள்ளிகொண்டு பாற்கடலிலே ரஜோ குணத்துடன் விளங்குவதாம். ஓர் ஸமயம் அவநி தேவி ஆவினுருத்தாங்கி அமரருடன் ஸத்யலோகஞ்சென்று அரக்கர்கள் அரசர்களாகத் தோன்றி இருப்பதால் அவர்களது பாரத்தால் தான் ரஸாதலம் செல்லும்படி நேரிடுமோ என்றஞ்சுவதாகக் கூறினள். ப்ரம்மா பூதேவியுடன் தேவர்களையுமழைத்துக்கொண்டு பாற்கடலுக்குச் சென்ருர். ஆங்குப் பன்னகசயநத்தே படுத்து உறங்காமல் உறங்கும் உத்தமபுருஷனைப் பணிந்து துதித்தார்கள். கருடத்வஜன் கருணை ததும்பும் கடைக்கண்ணால் காணவந்தோரைக் கடாக்ஷித்து மேருமலைக்கு எலலோரையுமழைத்துவந்து வந்த காரியம் யாதென வினவி

ஞர். தரணி தேவி தாமோதரனை வணங்கி தேவரால் கொல்லப்பட்ட காலநேமி கம்ஸனுகத் தோன்றி பல அரக்கர்களுடன் பாரினைப் பாழ்செய்கிறான். அசுரர்களை வென்று ஸுராம்சமுள்ள ஸாதுக்களைக் காத்து தர்மத்தைத் தழைக்கும்படிச் செய்யவேண்டுமென்று ப்ரார்த்தித்தாள். இதைக் கேட்ட பக்தவத்ஸலன் தனது தலையிலிருந்து வெண்மை நிறமுள்ளதும் கருத்தநிறம் வாய்ந்ததுமான இருகேசங்களை எடுத்து இவைகள் பூமியில் மனிதர்களாகத்தோன்றி தைத்யர்களைக் கொன்று உன்பாரத்தை அகற்றி நன்மை புரியும். அமரர்களும் அம்சாவதாரமாக அவனியிற்சென்று அஸுரர்களுடன் ஸமர் செய்யட்டுமென்றார். தேவரனைவரும் பூதேவியுடன் விஷ்ணுவைப் பணிந்து விடைபெற்றுச் சென்றனர்.

ஸ்ரீ கிருஷ்ணவதாரம். கச்யபாம்சம் வஸுதேவராகவும் அதிதி யினம்சம் தேவகியாகவுந் தோன்றின. தேவர்கள் மேருமலைமீதுகூடி அச்யுதனுடன் அமரர்கள் அரக்கரை அழிக்கச் செய்த யோசனையையும் தேவகியின் எட்டாம் கரு அவனைக் கொல்லுமென்பதையும் நாரதர் கம்ஸனிடம் கூறி மறைந்தார். அன்றுமுதல் கம்ஸன் தேவகியெனும் தன்ஸோதரியையும் அவள் பதியான வஸுதேவரையும் தன்னில்லத்தேவைத்து ஜாக்ரதையாக ரக்ஷித்துவந்தான். கம்ஸன் அவர்களுக்குத் தோன்றும் ஒவ்வொரு குழந்தையையும் தன்னிடமளிக்கவேண்டுமென்று கட்டளையிட்டான். இதனிடையில் பகவான் யோக நித்ரையை அழைத்து; பாதாளத்தில் ஹிரண்யகசிபுவின் ஷட்கர்ப்பர்களெனும் ஆறு புதல்வர்கள் பிரும்மனை நாடித் தவம் செய்ததால் சினங்கொண்ட ஹிரண்யனுலிறக்கும்படி சாபமளிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களை ஒவ்வொருவராகத் தேவகியின் வயிற்றில் பிறக்கும்படிச்செய். ஏழாவது கர்ப்பத்தை ஏழாம்மாதத்

திலிழுத்து வஸுதேவனது மற்றோர் மனைவியான ரோஹிணியின் குக்ஷியில் வைத்துவிடு. கம்ஸ பயத்தால் தேவகியின் ஏழாங்கரு அழிந்ததென உலகத்தவர் கூறட்டும். நீ யசோதையின் வயிற்றில் பெண்ணாகப் பிறப்பாயாக! என்று கட்டளையிட்டார். அங்ஙனமே அவள் ஆக்ஞையைச் செய்ய ஆறு குழந்தைகளையும் கம்ஸன் இரக்கமின்றிக் கொன்றான். ஏழாவது கருவும் ரோஹிணியின் உதரத்தினின்று உதித்துப் பலராமனெனப் பெயர்பெற்றது. எட்டாவதாகத் தேவகியின் குக்ஷியில் பகவதம்சம் புகத் தனது சத்ரு இது எனக்கருதி கம்ஸனதைக் காத்துவந்தான். தனது மித்ரரென்றெண்ணி வானவரும் முநிவரும் போற்றிவந்தனர். ஆவணிமாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியன்று ரோஹிணீ நக்ஷத்ரத்திலே நள்ளிரவிலே தேவர் பூமாரி பொழிய மேகம் மிருதங்கம் போல் சப்திக்க கந்தர்வர் காநம்செய்ய அப்ஸரஸ்ஸுகள் ஆட தேவதுந்துபி முழங்க ஸநகாதிமுநிவர் ஜயகோஷம் செய்ய ஸர்வலோக சரண்யன் தேவகியினிடமிருந்து வெளிவந்தார். திருமாலின் திவ்ய உருவைக்கண்டு பணிந்து துதித்து தேவகியும் வஸுதேவரும் கம்ஸபயத்தால் கண்ணனைக் குழந்தையாகும்படி வேண்டினர். பகவானும் பால உருவமெடுத்து நந்தன் மனையிலே தன்னைக் கொண்டுவிட்டு ஆங்குள்ள பெண்குழந்தையை இங்கு கொண்டுவரும்படி கட்டளையிட்டார். மாதவனது மாயையால் காவலாளிகளும் மற்றோரும் மதிமயங்கிக் கிடக்க பால முகுந்தனைப் பாணியிலேந்தி வஸுதேவன் சென்றான். தனது பணமண்டலத்தால் ஆதிசேஷன் வஸுதேவனுக்கும் வாஸுதேவனுக்கும் குடை பிடித்தான். யமுனை தன் ப்ரவாஹத்தையடக்கி முழங்காலளவு ஜலமாகி அவர்களுக்கு வழியளித்தது. கம்ஸனுக்குக் கப்பமெடுத்துவரும் நந்தன் முதலியவர்களை நதியில்வஸுதேவன் கண்டான். யசோதை யோக

நித்திரையைப் பெண்ணுகப் பெற்று பகவன்மாயையால் ஒன்றுமறியாதிருந்தபோது வஸுதேவன் ஸ்ரீக்ருஷ்ணனை அங்கு விட்டுவிட்டு ஆங்கிருந்த பெண்குழந்தையைத் தேவகியினிடம் கொண்டுவைத்தான். இக்குழந்தை செய்த ரோதநத்வனியால் காவலாளிகளும் மற்றேரும் விழித்துக் கம்ஸனிடம் ஓடினர். நாரதர் சொற்படி நம்மைக் கொல்ல ஓர் புதல்வன் பிறவாது புத்ரி பிறந்துளது. இஃதென்ன தேவமாயையோ? இதைக்கொல்வதே நியாயமெனக்கருதி கம்ஸன் அதன் கால்களைக் கரத்தால் பிடித்து கல்மீது அடிக்க ஆரம்பித்தான். அது அஷ்டபுஜங்களுடன் ஆகாயத்தில் கிளம்பி, மூடா! உன்னைக் கொல்ல ஓர் குழந்தை பிறந்து வளர்கிறது என்று கூறி மறைந்தது.

பூதனை முதலிய அரக்கர் வதம். கம்ஸன் வஸுதேவனையும் தேவகியையும் விடுவித்துத் தான் செய்த குற்றங்களை மறந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினுன். பூதனை முதலிய தனது மித்ரகணங்களை அழைத்துத் தன் சத்ருவைத் தேடிக் கொன்றுவரும்படி கட்டளையிட்டான். பூதனை எனுமரக்கி பல பாலர்களைப் பாலுடன் விஷத்தை அளித்துக் கொன்ருள். கண்ணனைக் கரத்தாலெடுத்து மடிமீது வைத்துத் தன்ஸ்தநத்தை அளித்தாள். பாலுடன் அவள் ப்ராணவாயுவையும் அச்யுதனருந்திஞர். பயங்கரமான அவள் பிணத்தைக்கண்டு எல்லோருமஞ்சி பாலகனை எடுத்து ரக்ஷைகூறினர். மற்ருேர் ஸமயம், பலகாலமாக நந்தனது சகடத்தில் புகுந்து குழந்தையைக் கொல்லக் கருதிய சகடாஸுரனைக் காலாலுதைத்துக் கொன்ருர் கண்ணன். பலராமனுடன் சேர்ந்து பகவான் பல பால லீலைகளைச்செய்தார். மாட்டுக் கொட்டகைகளுள் புகுந்து கன்றுகளின் வாலை இழுத்துப் பற்பல சேஷ்டைகளைச் செய்துவந்தார். இதைக்கண்டு ஸஹியாத யசோதை கண்

ணனை ஓர் உரலில் கட்டினாள். உரலுடன் சென்று தோட்டத்தில் யமளா அர்ஜுநமெனும் இருமரங்களையும் முறித்தார். இங்ஙனம் இங்கு பலதுன்பங்கள் தோன்றியதால் கோகுலத்தைவிட்டு யாதவரனைவரும் பிருந்தாவநஞ் சென்றார்கள். ஆங்கும் தாமோதரன் காலீயனெனும் கொடியஸர்ப்பத்தின் தலைமீது தன் காலைவைத்துத் தாண்டவமாடி அவனை யமுனையிலிருந்து அப்புறப் படுத்தினார். கழுதை வேடம்பூண்டு தாலவநத்தில் வஸித்த தேனுகனெனும் அரக்கனைக் கொன்று ஆங்குள்ள கனிகளைக் கோபாலர்களுக்களித்தார். ப்ரலம்பனெனும் அசுரன் கோபால வடிவமெடுத்து விளையாட்டு வ்யாஜமாக பலராமனைத் தூக்கிச்சென்றான். அவர் க்ருஷ்ணா க்ருஷ்ணா என்று கதரி அழ, பகவான் அவ்வரக்கனைக் கொல்லும்படி கட்டளையிட்டார். பலராமன் முஷ்டியால்சிரத்திலடித்து அவனைமாய்த்தார்.

கோவிந்த பட்டாபிஷேகம். ஒரு ஸமயம் நந்தன் முதலிய கோபர்கள் இந்த்ரனைக் குறித்து ஓர் உத்ஸவஞ் செய்ய வேண்டிய வஸ்துக்களைச் சேர்த்துக் கொண்டிருந்தனர். கண்ணனவர்களை நோக்கி யாரை நாடி இதைச் செய்கிறீர்கள்? இதனாலுண்டாகும் பயன் யாதென வினவினார். நந்தன் மைந்தனைப்பார்த்து, குழந்தாய்! வான் சுரந்து வையகத்தைக் 'காக்கும் தேவேந்த்ரனைக் குறித்து இவ்வேள்வி செய்யப்படுகின்றதென்றார். இதைக்கேட்ட க்ருஷ்ணன் பசுபாலர்களான நமக்கு இந்த்ரனாலல்லது அவனளிக்கும் மழையால்தான் யாதுபயன்? பசுக்களுக்கு வேண்டிய புற்களை அளிக்கும் இந்த கோவர்த்தன மலையையும் பசுக்களையும் பூஜைசெய்வோம். விதிவழுவாது நடத்தும் வேள்விகளால் மண்ணுலகையும் விண்ணுலகையும் காக்கும் வேதியருக்கு வேண்டிய அளவு அன்னமளிப்போம் என்று கூறினர். அவர் மாயையால் மயங்காதவருண்டோ? உடனே

இந்திர வேள்வி நின்றது. கிரியாகம் துவக்கப்பட்டது. இடையர்களுடன்கூடி இறைவனும் மலைக்குப் பூஜைசெய்தார். மலைக்குள் புகுந்து பக்தரளித்த பக்ஷ்யங்களைச் சிரக்கம்பத்துடன் புஜித்தார். இவ்வரிய செயலைக்கண்டு அச்யுதன் பெருமையை எல்லோரும் போற்றிப் பாடினர். இடையர் செயலைக்கண்டு இந்த்ரன் சிநங்கொண்டான். ஸம்வர்த்தகமெனும் மேகத்தை அழைத்து விடாமழை பொழியும்படி கட்டளையிட்டான். காற்றுடன் கலந்த கனத்த மழையினால் மாடுகள்பல மாண்டன. வெள்ளத்தினால் வீடுகள் பல வீழ்ந்தன. சேரியிலுள்ளோரனைவரும் சேர்ந்து கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று கதறினர். கருணைக்கடலான கண்ணன் கோவர்த்தன மலையைக் கரத்தாலேந்தி அதன் கீழே அனைவரும் வந்து வஸிக்கும்படி கூறினார். அச்யுதனளித்த அரிய குடையின் கீழுள்ள யாதவர் ஏழுநாள் அஹோராத்ரம் பெய்த பெருமழையால் யாதொரு கஷ்டமுமில்லாது சுகமாக வாழ்ந்தனர். மேக பலமும் தன்முயற்சியும் வீணானதைக்கண்டு வெட்கமடைந்த தேவேந்த்ரன் காமதேனுவின் கட்டளைக்கிணங்கி அவனியில் வந்து கண்ணனது திருவடிகளை வணங்கினான். தான் செய்த குற்றத்தை மன்னித்து திவ்ய ஸிம்ஹாஸனத்திலமரும்படி வேண்டினான். ஸகல தேவகணங்களும் முநிகணங்களும் சூழ கோக்களைக் காத்தருளிய கோபாலனுக்குப் பட்டாபிஷேகம் செய்து கோவிந்தனெனும் பட்டம் சூட்டினான். அச்சமயம் பசுக்களெல்லாம் பாலைச்சுறந்து பாரினை நனைத்தன. அமராதிபன் பகவானைப் பணிந்து தன் புதல்வனான அர்ஜுனனைத் துணையாகக்கொண்டு பூபாரத்தை அகற்றவேண்டும்; என் புதல்வனுக்கு யாதொரு தீங்கும் வாராமல் காத்தருளவேண்டும் என்றும் பிரார்த்தித்தான். பகவான் அங்ஙனமே செய்வதாகவும் அர்ஜுனனை மட்டுமல்லாமல் அவனுக்

-காக தர்மாதிகளையும் ரக்ஷிப்பதாகக்கூறி அவனுக்கு விடையளித்தார். கோவர்த்தநத்தைத் தாங்கிய கோவிந்தனை ஸாக்ஷாத் வைகுண்ட நாதனென எல்லோரும் புகழ்ந்தனர். தனது மாயா விலாஸத்தால் மாதவன் அரைக்கணத்தில் அவ்வெண்ணத்தை அகற்றினர்.

கேசவ சப்தார்த்தம். ஓரிரவு சரத்கால சந்த்ரன் ஒளி வீச பக்ஷிகள் இனிமையாகப்பாட ரஸிகசிகாமணியான கோபாலன் குழலூதினன். அது, ரஸானுபவத்திற்கென அவனியில் கோபிகைகளாக வந்த அப்ஸரஸ்ஸுகளையும் முநிவர்களையும் வாவா என்றழைத்தது. அவர்கள் மெய்மறந்து பதியையும் பிதாவையும் மதியாது ரஸரூபனை கண்ணனருகே ஓடிவந்தனர். கண்ணன் திருமேனியைக் கண்ணாரக் கண்டும் இனியகுரலைக்கேட்டும் அழகிய உடலை ஆலிங்கனம் செய்தும் மற்றும் பலவகையாலும் அவர்கள் ஆநந்தத்தை அநுபவித்தனர். இதனிடையே அரிஷ்டனன் எனுமரக்கன் காளை உருவமெடுத்து கோபிகைகளை ஹிம்ஸித்தான். துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காக அவனியிற் தோன்றிய அச்யுதன் அரிஷ்டனைக் கொன்ருர். இதனிடையில் நாரதர் கம்ஸனிடஞ் சென்று அங்கு பிறந்த கிருஷ்ணன் நந்தனிடம் வளர்ந்து பூதனை முதலியவர்களை மாய்த்ததையும் கூறிச் சென்ருர். கம்ஸன், வஸுதேவர் நந்தன் உக்ரஸேநன் முதலியவர்களை நிந்தித்து ராமகிருஷ்ணர்களைக் கொன்றபின் இவர்களையும் கொன்று அகண்டமாக அவனியை ஆள்வதாகத் தீர்மானித்தான். அக்ரூரரை அழைத்து தநுர்யாகமொன்று நடப்பதாகவும் அதற்குக் காணிக்கையாக பால் தயிர்களை எடுத்துக்கொண்டு நந்தன் முதலிய கோபர்கள் வரவேண்டுமென்றும் ராம கிருஷ்ணர்களை உடனே அழைத்து வரும்படியும் அவர்களைக் குவலயாபீடம் சாணூரன் முதலியவர்கள் மூலம் கொல்வதாகவுங்கூறி கேசியெனுமரக்கனைப் பிருந்

தாவநத்திற்கனுப்பி க்ருஷ்ணனைக் கொல்லும்படி கட்டளை யிட்டான். குதிரை ரூபமெடுத்துக் கேசி கோபர்களை உதைத்துத் தள்ளி பகவானுடன் போருக்கு வந்தான். அவன் வாயைத்திறந்து வைகுண்ட நாதனை விழுங்கக்கருதியபோது பகவான் அவனது வாயில் தன் கையைவிட்டார். அவன் மூச்சு விட முடியாமல் முழி வெளியில்வர உடலைவிட்டான். உடனே வீணாபாணியான நாரதர் நாராணன் முன்னே தோன்றி, நீர் இந்த்ரனாலும் வெல்லமுடியாத கேசியைக் கொன்று அவனுக்கு ஸ்வர்க்கமளித்தீர். கேசியைக் கொன்றதால் இன்றுமுதல் தங்களைக் கேசவனென்று எல்லோருமழைப்பர். இரண்டு நாட்கள் சென்றபின் கம்ஸனைக் கொல்லும்போதும் சில நாட்கள் சென்றபின் பாரதப் போரை நடத்தும்போதும் தங்களது பெருமையைத் தரிசிக்கிறேனென்று கூறி பணிந்து விடை பெற்றுச் சென்றார்.

அக்ரூர பக்தி. கம்ஸனது தூண்டுதலால் கண்ணனை மதுரைக்கழைத்துவர அக்ரூரர் கிளம்பினார். பக்த சிகாமணியான அவர் உள்ளம் தனக்குக் கிடைக்கும் பகவத்தர்சனத்தை நினைத்து ஸந்தோஷமடைந்ததெனினும் கம்ஸனழைத்த காரியம் கடுமையானதென்ற எண்ணம் அவர் மனதைத் துன்புறுத்தியது. பல நாட்களாக ப்ரார்த்தித்திருந்த பகவத்தர்சநம் கிட்டப்போகிறதென்ற பெருமையில் அதை அவர் மறந்தார். கம்ஸனளித்த ரதத்தின்மீதேறி பிருந்தாவநத்திற்குப் புறப்பட்டார். கண்ணனைக் காணும் விஷயமான எண்ணமே அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. 'நான் தன்யனானேன். இன்றே என்பிறவி பயனுள்ளதாயிற்று! என் கண்ணனை இன்று காண்பேன்! அடியேனுக்கவர் எத்தகைய காக்ஷியளிப்பாரோ? எங்கு என்பாக்கியத்தைக் காண்பேன் இம்மாலை வேளையில் மந்தையிலிருப்பாரோ? கோக்களின் பின்னே கோதூளி

யைத் தாங்கி வருவாரோ? இடைச்சிறுவர்களுடன் ஆடி வரு வரோ?' என எண்ணி எண்ணி ஊரினருகே வந்தார். என தழியாச்செல்வத்தின் பொன்னடிபட்டுப் பவித்ரமான பூமி மீது தேரில் செல்வதழகல்லஎன்று கீழே இறங்கினார். இங்கு பகவானது பாதம் பட்டிருக்குமெனப் பூமிமீது விழுந்து பணிவார். ஆநந்தவாரிதியே! பக்த கல்பதருவே! மெய் ஞான ஒளியே! புருஷோத்தம! புண்டரீகாக்ஷ! நின்னடி சரணம்! என்னைக் காத்தருள்வாய். எவனை நினைத்தவுடன் ஸகல கல்யாணங்களுமுண்டாகின்றனவோ அந்த ஹரியைச் சரணமடைகிறேன். (சாந்திபாடத்தில் இந்தச்லோகம் கூறப் படுகிறது.) என்றார். நந்தனது வீட்டருகே கன்றுகளுக் கிடையே முழங்காலில் பாத்ரத்தை வைத்துக்கொண்டு இரண்டு கரங்களாலும் பால்கறக்கும் பரமனைப் பார்த்தார். கண்டேன்! கண்டேன்! எனக் கீழேவிழுந்தார். தானே எழுந்தார் தாண்டவமாடினார்! எனது பாக்கியமே பாக்கி யம்! எனது கண்கள் இப்போதே கண்களாயின! காணக் கிடைக்காத கருமேகத் திருமேனியைக் கண்டேன்! புன்ன கையும் மலர்ந்த முகமும் சுருண்டமயிரும் விசால நெற்றி யும் தீர்க்க திருஷ்டியும் சிவந்த உதடும் வெளுத்த பற்களும் அகண்ட மார்பும் ஆஜாநுபாகுவும் அழகிய இடையும் சங்க சக்ர ரேகாங்கிதமான பொற்பாத கமலங்களும் எனக்குக் கிடைத்தன! கண்ணே! என் உயிரே! சுடரே! ஆநந்த ஸாகரமே! என சிரத்தின்மேல் கரங்குவித்து மரம் வீழ்ந் ததுபோல் கண்ணன் பொன்னடிகளில் வீழ்ந்தார். ராம னும் கிருஷ்ணனும் அக்ரூரரை அன்புடன் வரவேற்று அவரடி பணிந்து அன்னமளித்து உபசரித்து வந்த வேலை யாதென வினவினார்கள். கம்ஸன், வஸுதேவன் தேவகி உக்ரஸேநன் முதலியவர்களை நிந்திப்பதையும், நாரதர் சொல் லைக்கேட்டு தங்கள் திருமேனிக்கும் தீங்கிழைக்கவே தநுர்

யாகம் நடத்துவதையும் வேள்விக்குப் பரிசளிக்கும் வ்யாஜமாகத் தங்களை அழைத்தானென்பதையும் கூறினார். கம்ஸனைக் கணப்பொழுதில் கொன்று பெற்றோரையும் மற்றோரையும் மகிழ்விப்பதாகக்கூறி மறுநாட்காலையில் மன்னன் தேர்மீதேறி மதுஸூதநன் மதுரைக்குக் கிளம்பினார். பாமனை ஓர் கணமேனும் விட்டுப் பிரிய மனமில்லாத கோபிகைகள் அக்ரூரரை நிந்தித்துக் கண்கொட்டாது கண்ணனையே பார்த்திருக்க பலராமனுடன் பகவான் வெகுதூரஞ் சென்றுவிட்டார். அக்ரூரர் காளிந்தியின் கரைமீது கண்ணனை ராமனுடன் நிறுத்திவிட்டு கர்மானுஷ்டானஞ்செய்ய நீரில் முழுகினார். கருணைக்கடலான கண்ணனங்கு பக்தருக்குத் திவ்விய தர்சநம் தந்தார். தரையிலிருந்த இவர்கள் தண்ணீரில் தென்பட்டதெங்ஙனமென்று வியந்து கரைமீது வந்து கண்ணனைக்கண்டு பேச ஆரம்பித்தார் அக்ரூரர். ஸர்வ வல்லமைவாய்ந்த பகவான் அவர் பேசமுடியாதபடி வாயை மூடிவிட்டார். மறுபடியும் அவர் நீராட நீருண்ட கார்நிறமும் கௌஸ்துபமும் பீதாம்பரமும் சங்க சக்ர கதைகளும் அணிந்த புருஷோத்தமனைப் பார்த்துத் துதித்து மாநஸிக பூஜைசெய்து பேரானந்தம் பெற்றார். வியப்புடன் வெளியில்வரும் விஷ்ணுபக்தரைக்கண்டு கண்ணன், ஐயா! நீர் நீரில் கண்ட விந்தையாதென வினவினார். லீலையால் மாயாமாநுஷவடிவனாக வந்த மாதவன் செயலை உணர்ந்த அக்ரூரர் இங்கு காணும் அத்புதத்தையே அங்கும் கண்டேனென்றார்.

கம்ஸவதம். ரதம் மதுரைக்கு வந்தபின் அக்ரூரர் ராமகிருஷ்ணர்களைக் கம்ஸ பயத்தால் காலால் நடந்து வரும்படியும் வஸுதேவர் வீடு செல்லாதிருக்கும்படியும் கூறி ராஜனரண்மனைக்குச் சென்றார். காணக்கிடைக்காத கண்காக்ஷி வருகிறதென மதுராவாஸிகளனைவரும் சூழ்ந்து

தாகவிடாய் கொண்டவன் தண்ணீரைக் கண்டது போல் இருகண்களாலும் கண்ணனை ஆவலுடன் கண்டு ஆநந்தித்தனர். கம்ஸனது வஸ்திரங்களை வெளுத்துவரும் வண்ணான் வழிவசமாக வர பீதாம்பரதாரியானபகவான் தனக்கோர் வஸ்த்ரமளிக்கும்படி அவனைவேண்டினார். அவன் வஸ்த்ரமளிக்காததோடு வேதவேத்யனை நிந்தித்தான். கரதலத்தால் கண்ணனவன் கன்னத்திலறைந்து யமலோகமனுப்பினான். வண்டியிலுள்ள வஸ்த்ரங்களைத் தானுமணிந்து வந்தவரெல்லோருக்குமளித்துப் புஷ்பம் கொடுப்பவனிடம் சென்று மாலைகேட்டார். திவ்யவடிவத்துடன் தேவர்களே தன்னைக் கேட்பதாக எண்ணி அழகியமாலைகளால் ராம கிருஷ்ணர்களை அவன் அலங்கரித்தான். பின்னர் திவ்விய பரிமள சந்தனத்தை ஸ்வர்ணபாத்ரத்தில் ஏந்திச்செல்லும் த்ரிவக்ரை எனும் கிழவியைக் கண்ட கண்ணன் தங்களுக்கு அதை அளிக்கும்படி கேட்டார். அவள் அன்புடன் அளிக்க அவளது கூனை நிமர்த்தி அழகியயுவதியாக்கிப் பின்னர் அவளிஷ்டத்தைப் பூர்த்திசெய்வதாகக் கூறி சென்றார். இரவில் கம்ஸன் வேள்விக்காக வைத்திருந்த வில்லைக் கண்ணன் முறித்தார். அந்தத்வனி மதுரையில் பரவி காலையில் நடக்கும் கம்ஸவதத்தைக் காணவாருங்கள் என நகரவாஸிகளை வருந்தி அழைத்ததுபோலிருந்தது.

கம்ஸனுக்கு அந்தராத்ரி காளராத்ரியாக இருந்தது. காலையிலெழுந்தான்; சாணூரன் முஷ்டிகன் முதலிய மல்லர்களை அழைத்தான். ராமகிருஷ்ணர்களைக் கொன்றால் பாதி ராஜ்யமளிப்பேனென்றான். யுத்தரங்கத்திலே வஸுதேவான் உக்ரஸேநன் நந்தன் அக்ரூரர் முதலியவர்களைகிருஷ்ணவதத்தைக்காண அமர்த்தினான். கடைசி காலத்திலேனும் கண்ணன் முகத்தைக்காண்பேனு எனக் கதறிக்கொண்டே தேவகியும் அங்குவந்தாள். ரங்கவாயிர்படியில் குவலயா

பீடமெனும் மதகரியை நிறுத்தி மாதவனைக் கொல்லும்படி ஏவினான். க்ருஷ்ணன் அக்கரியுடன் பாகனையும் விண்ணு லகிற்கனுப்பி அதன் தந்தங்களைத் தோளிமேலேந்தி உள்ளே நுழைந்தார். மல்லர் மநம் திடுக்கிட்டது. ஸபையோர் கோமளாங்கனான குழந்தைக்கும் முரடர்களான மல்லருக் கும் போர் ஏற்றதல்ல என்றனர். காலன் கம்ஸனைத்தூண்ட கம்ஸன் மல்லர்களைத் தூண்டினான். யுத்தவாத்தியம் முழங்க சாணூரனும் கிருஷ்ணனும் முஷ்டிகனும் பலராமனும் இட சாரி வலசாரி வந்து மல்லயுத்தந் துவக்கினார்கள். தனது மல்லர் தோல்வியைக் கண்ட கம்ஸன் வாத்ய கோஷங்களை நிறுத்தும்படி கூறினான். வானவர் வானில் மறைந்து நின்று வாத்யகோஷம் செய்து ஜயகிருஷ்ண என்று போற்றினர். ராமகிருஷ்ணரிருவரும் முஷ்டிசாணூரர்களைக் கொன்று வீழ்த்தினர். சினங்கொண்ட கம்ஸன் இந்த இடையச் சிறு வர்களைச் சபையைவிட்டு விரட்டுங்கள். நந்தனுக்கு விலங்கிடு கள், வஸுதேவனை வதைசெய்யுங்கள். உக்ரஸேனனை ஒழி யுங்கள் என்றான். இதைக்கேட்ட பக்தவத்ஸலன் பக்த ருக்குத் தீங்குநேராவண்ணம் சிங்காஸனத்திலிருந்து ஸிம் ஹம் புலியை யிழுப்பதுபோல் கம்ஸனை வீழ்த்துத்தள்ளி ஒரே நிமிஷத்தில் கரகரவென்று பூமியில் இழுத்து கால னுக்குப் பலியளித்தார். இதைக்கண்டு ஸுநாமா எனும் கம்ஸ ஸஹோதரன் போருக்கு வந்தான். பலராமன் அவனை அடித்துக் கொன்றார். வஸுதேவன் முதலியவர்கள் கண் ணனைக் கட்டியணைத்துப் போற்றினர். பூபாரத்தை அகற்ற வந்த பன்னகசயநனே அவன்என் எல்லோரும் கூற மாத வன் மாயையால் அவ்வெண்ணத்தை அகற்றி தந்தையின் திருவடியை வணங்கினார். நந்தனைப் பந்தத்திலிருந்து விடு வித்து உக்ரஸேநனுக்குப் பட்டஞ் சூட்டினார். யயாதியின் சாபத்தால் யாதவருக்கு ராஜ்யாபிஷேகம் இல்லை என்று

னும் எனதாணையால் இனி யாதவர் அரசராவர் என்றுகூறி கண்ணன் வாயுவை அழைத்து இந்த்ரனிடமிருந்து ஸுதர்மா எனும் தேவஸபையைக் கொண்டுவரும்படி செய்து மதுரையில் அமர்த்தினார்.

க்ருஷ்ணனது குரு பக்தி. ஸர்வக்ஞனை பகவானுக்கு விதிவழுவாது உபநயநம் செய்யப்பட்டது. ஸாந்தீபினி எனும் முனிவரைக் குருவாகக்கொண்டு அறுபத்து நான்கு நாட்களில் அறுபத்திநான்கு கலைகளையும் ராம கிருஷ்ணர்கள் கற்றுணர்ந்தனர். குரு தன் சீடர்களது அமானுஷ சக்தியைக் கண்டு முன்னம் ப்ரபாஸத்தில் உப்புக்கடலில் உயிர்துறந்த தனது தநயனைப்பிழைப்பித்துத் தனக்குத் தந்தருளவேண்டுமென்றார். இருவரும் கரங்களில் வில்லேந்திக் கடற்கரைக்குச் சென்றனர். இவர்களது கருத்தை உணர்ந்த ஸமுத்ரதேவன் அச்யுதனை அர்க்ய பாத்யங்களால் அர்ச்சித்து, தேவ! தங்கள் குருபுத்ரனை அடியேன் அபஹரிக்கவில்லை. சங்க வடிவனை பஞ்சஜநனெனும் அரக்கனே அவனை எடுத்துச் சென்றவன் என்றார். பின்னர் பகவான் பஞ்சஜநனைக் கொன்று பாஞ்சஜன்யமெனும் சங்கத்தைக் கையிலேந்தினார். அச்சங்கத்தின் நாதம் ஸுரருக்குப் பலத்தையும் அஸுரருக்குப் பயத்தையுமளிக்கவல்லது. யமபுரஞ்சென்று குருகுமாரனை மீட்டு வந்தார். முன்பு இறந்தகாலத்திலிருந்தது போலவே சிறுவனுயுள்ள தம் மகனைத் தந்த தாமோதரனைக் கட்டியணைந்து குருகுலத்திலிருந்து மனைக்குச் சென்று மனையாளை மணந்து இல்லறத்திலே ஈடுபடும்படி கூறி அனுப்பினார்.

காலயவந வதம். கம்ஸனது மனைவிகள் தங்கள் பிதாவான ஜராஸந்தனிடம் சென்று கிருஷ்ணன் செய்த பர்த்ருவதையைக் கூறி வருந்தினர். இயற்கையாகவே ஸாதுக்களிடம் த்வேஷம் கொண்ட ஜராஸந்தன் பன்மடங்கு ஆக்ரஹத்

துடன் இருபத்துமூன்று அக்ஷௌஹிணீ ஸேனைகளுடன் மதுரா புரியைத் தகைத்தான். சங்கம் சக்ரம் கதை கலப்பை முஸலம் முதலிய திவ்யாயுதங்கள் ஆகாசத்திலிருந்துவர ராம க்ருஷ்ணர்கள் அவைகளைக் கொண்டு ஜராஸந்தனுடன் போர்செய்தார்கள். இச்சாமாத்ரத்தால் எல்லாம் செய்ய வல்லவராயினும் மானிட வேடத்திற்கேற்றபடி யுத்தம் செய்து அச்யுதன் அச்சேனைகளை மாய்த்து ஜராஸந்தனைக்கொல்லாமல் விட்டார். இங்ஙனம் பதினெட்டுமுறை அவனுடன் போர்புரிந்து அவனைக் கொல்லாமலேயே விட்டார். ஓர் ஸமயம் ச்யாலரென்பவர் யாதவர்களது முன்னிலையிலே அவர்கள் புரோஹிதரான கார்க்யரை அவர் நபும்ஸகர் என ஏளனம் செய்தார். ஸபையிலுள்ளோர் நகைக்க கார்க்யருக்குக் கடுஞ்சினந்தோன்றிற்று. தென் திக்கில் சென்று மாதேவனை நாடித் தனக்கு யாதவரை வெல்லும் ஓர் வீர புதல்வன் பிறக்கவேண்டும். அதைக்கண்டு தான் நபும்ஸகனல்லவென உலகமறியவேண்டுமெனக் கடுந்தவம் புரிந்தார். அதுகாலை அயச்சூர்ணத்தையே அன்னமாகக்கொண்டார். பனிரண்டாண்டுகள் சென்றபின் பரமசிவன் ப்ரத்யக்ஷமாகி புத்ரனில்லாமல் வருந்தும் யவநேசன் மனைவியை அடைந்து புதல்வனைப் பெறுவாயெனக் கூறி மறைந்தார். அங்ஙனமே கார்க்யருக்குக் காலயவனனெனும் ஸுதன் பிறந்தான். அவனுக்குப்பட்டஞ்சூட்டி யவநேசன் வநஞ் சென்றான். காலயவநன் போர்வெறிகொண்டு வீரர்களை வென்றான். தற்செயலாக வந்த நாரதரைப் பாரினில் தன்னுடன் போர் புரியத்தக்க வீரரெவரேனுமுண்டோ என்று வினவினன். அவர் உன்போன்றவர்களுடன் சண்டைக்கெனவே யாதவர் தோன்றி யிருக்கின்றனர் என்றார். காலயவநன் கோடிக்கணக்கான மிலேச்ச சேனைகளுடன் மதுராபுரஞ் சென்றான். அதனிடையில் யாதவருக்கு எவ்வகையான தீங்கும் நேர

லாகாதெனக்கருதி கண்ணன் கடலினிடையே பனிரண்டு பெரிய பட்டணங்களுடன்கூடிய துவாரகையைப் படைத்து மதுரையிலுள்ளோரை ஆங்கு தங்கும்படி செய்து தான் மட்டிலும் தனியே மதுரையில் தங்கினர். காலயவநநங்கு போர் முழக்கத்துடன் சென்று கண்ணனை எதிர்க்க, அவர் நிராயுதபாணியாக பயந்தவர்போல் காலால் நடந்து ஓடினர். அவரைப் பின்பற்றி யவநன் அவர் முன்னே நுழைந்த குகையில் தானும் நுழைந்து நீண்ட உடலுடன் ஒருவர் படுத்திருக்கக் கண்டான். மாயாவியான மாதவனை அவர் எனக்கருதி காலால் அவர்மார்பில் உதைத்தான். படுத்திருந்தவர் பன்னகசாயியல்ல. முசுகுந்தனெனும் மகாராஜன். இந்த்ரனுக்குச்சகாயமாக அரக்கருடன் போர்செய்து வெற்றிபெற்று களைப்பாறத் தான் குகையில் உறங்கும்போது எவரேனும் தன்னை எழுப்பினால் அவர் அக்நிவாய்ப்பட்டுச் சாம்பலாகவேண்டுமென வரம்பெற்றான். அவனைக் காலயவநன் காலாலுதைத்துச் சாம்பலானன். முசுகுந்தன் எழுந்து முகுந்தனைக்கண்டு துதித்து அவரடி பணிந்து கலியுகம் வருவதைக்கண்டு பயந்து கந்தமாதநம் சென்று தவத்தால் உத்தமலோகமடைந்தான்.

யமுநாகர்ஷணம். பிருந்தாவநத்திலுள்ள கோபிகைகள் கண்ணனைவிட்டுப் பிறிந்தநாள்முதல் அவரையே நினைத்து நினைத்து ஓர்க்ஷணத்தை ஓர்யுகமாகக் கழித்துவந்தனர். அவர்களை ஆச்வாஸப்படுத்த அச்யுதன் பலராமனை அங்கு அனுப்பினர். பலராமனங்கு சென்று கோபிகளைச் சந்தோஷப்படுத்தினர். வருணராஜன் வாருணீ எனும் மதுவை அழைத்துப் பலராமனிடமனுப்பினர். அவர் அதை அருந்தி பற்பல பரிஹாஸக் கதைகளைக்கூறி கோபிகைகளது துயரத்தை ஆற்றினர். க்ரீடையால் களைத்துப் பின்னர் ஜலக்ரீடை செய்யக்கருதி யமுனையைத் தன்னருகே வரும்

படி அழைத்தார். உடனே அது வாராததைக்கண்டு சினந்து கலப்பையால் யமுனையைப் பிடித்திழுத்து அதில் நீராடினார். வருணனளித்த வாடாத மாலையையும் இருநீலவஸ்த்ரங்களையுமணிந்து பலராமன் இரண்டுமாதங்கள் பிருந்தாவனத்திலே தங்கினார். ரைவதனெனும் நரபதி தன்ஸுதையான ரேவதியை யளிக்கப் பலராமன் அவளை மணந்தார்.

ருக்மிணீபரிணயம். விதர்ப்பநாட்டிலே குண்டிநமெனும் நகரிலே பீஷ்மகனெனும் ஓர் அரசனிருந்தான். அவனது மூத்த புதல்வன் ருக்மி எனப்படுவான். அவனது ஸஹோதரி ருக்மிணீ என்பவள். அவள் ஸ்ரீ கிருஷ்ணனது அழகையும் ஆண்மையையும் கீர்த்தியையும் குணத்தையும் கேட்டு அவர்பாலன்புகொண்டாள். அவரும் ருக்மிணியின்மீது இச்சைகொண்டார். கண்ணன் ருக்மிணியைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டும் ஜராஸந்தனது தூண்டுதலால் அவளைச் சிசுபாலனுக் களிப்பதாக ருக்மி தீர்மானித்தான். அவ்விவாஹத்திற்குத் தந்தவக்த்ரன் பௌண்ட்ரகன் ஜராஸந்தன் முதலியவர்களழைக்கப்பட்டு வந்தனர். க்ருஷ்ணனும் பலராமனுடனழைக்கப்படாமலே அங்கு வந்தார். தன்னிடம் பேரன்புபூண்ட ருக்மிணியை எல்லோர் எதிரிலும் தூக்கித் தேர்மீதேற்றி த்வாரகைக்குப் பகவான் புறப்பட்டார். அரக்கர் அம்சமான ருக்மி முதலியோர் கோவிந்தனுடன் போர்புரிய, எல்லோரையு மவர் அடித்துப் பாரின்மீது வீழ்த்தினார். ருக்மிணீதேவியின் தாக்ஷிண்யத்திற்காக ருக்மியைக் கொல்லாது விட்டார். அவன் கிருஷ்ணனைக் கொல்லாமல் குண்டிநபுரம் திரும்புவதில்லை எனக்கூறியபடி அவரை ஜயிக்காததால் ஊருக்கு வெளியிலேயே தங்கினான். த்வாரகை சென்று பகவான் ருக்மிணியை விதிப்படி விவாஹம் செய்துகொண்டார்.

சம்பரவதம். ருக்மிணிதேவிக்கு ஸ்ரீக்ருஷ்ணனம்சத்தால்ஓர் குழந்தை தோன்றஅதற்கு ப்ரத்யும்நனெனப் பெயரிடப்பட்டது. சம்பரனெனுமரக்கன் இக்குழந்தை மூலமாகத் தனக்கு மரணமென்றறிந்து குழந்தைப்பிறந்த ஆறும் நாளிலே ஒருவருமறியாதபடி தூக்கிச் சென்றான். அதைக் கொல்லக்கருதிய அசுரன் நடுக்கடலிலெறிந்து தன் மனைக்குச் சென்றான். விதிவலியால் அந்த சிசு ஓர் மத்ஸ்யத்தினால் விழுங்கப்பட்டு இறவாமலிருந்தது. அம்மீனைச் செம்படவர்கள் பிடித்து அது மிகப் பெரியதாயுமழகாயு மிருந்ததால் சம்பரனிடம் ஸமர்ப்பித்தனர். அவன் மாயாவதி எனும் பாகசாலைத் தலைவியினிடமளிக்க அவள் அதைப் பாகம் செய்யக் கத்தியால் பிளந்தாள். அதன் குக்ஷியில் தைவச் செயலால் யாதொரு கஷ்டமுமின்றி விளையாடிக்கொண்டிருக்கும் அழகிய குழவியைக் கண்டு வியந்தாள். அத்தருணத்திலே திடீரென்று நாரதர்தோன்றி இவன் உன் பதி. இவனை வளர்த்து இவன் மூலமாகச் சம்பரனைக் கொன்று பின்னர் ப்ரத்யும்நனை நீ மணப்பாய் என்று கூறிச்சென்றார். அங்ஙனமே வளர்ந்த ப்ரத்யும்நன் மாயாவதியினிடம் மாயைகளைப் பயின்று சம்பரனோடு ஸமர் செய்து அவனைக் கொன்றான். பின்னர் தன்னிடம் காதல்கொண்ட மாயாவதியை நோக்கி மாதாவைப்போலில்லாது மனைவியைப் போல் நடக்கும் காரணம் யாதென வினவினான். அவள் நடந்த கதையை விளக்கத் தன்னைவிட்டுப் புத்ரசோகத்தால் வருந்தும் அன்னையைக்காண மாயாவதியுடன் த்வாரகைக்கு அவன் புறப்பட்டான். ருக்மிணீதேவியின் அந்தப்புரத்தில் இச்சிறு தம்பதிகள் நுழைந்தவுடன் ப்ரத்யும்நனிடம் கிருஷ்ணன் சாயை இருக்கக்கண்டு உண்மையறியாது மநம் நொந்து ருக்மிணி என்மகனுயிருடனிருந்தால் இந்த சுந்தரனைப்போலிருப்பான். இவன்யாரோ? என்று சிந்தித்தாள்.

அச்சமயம் நாரதர் கிருஷ்ணனுடனங்கு தோன்றி நடந்த விருத்தாந்தத்தை விளக்கினார். ருக்மிணியும் அந்தகரத்தி லுள்ளோரும் இதைக்கேட்டு வியந்து ப்ரத்யும்நனிடம் ப்ரீதி செலுத்தினர்.

ருக்மிவதம். ப்ரத்யும்நன் தனது மாமனான ருக்மியின் ஸுதையை ஸ்வயம்வரத்தில் தூக்கிவந்து மணந்தான். அவனுக்கு அநிருத்தனென்றோர் புதல்வனுண்டானான். அவன் ருக்மியின் தௌஹித்ரியை விவாஹம் செய்துக் கொண்டான். அச்சமயம் காலிங்கராஜனால் தூண்டபட்ட ருக்மி பலராமனை ஜயிக்கக்கருதி அவரைப் பாச்சைக்காய் ஆட அழைத்தான். ஆயிரக்கணக்கானதநத்தைப் பந்தயம் வைத்து இருவரும் ஆடினர். இருமுறை ருக்மி ஜயிக்க அவன் நண்பனான கலிங்கன் பலராமனைப் பரிஹஸித்தான். அடுத்த ஆட்டத்தில் பலராமன் ஜயம்பெற்றார். ருக்மி தானே ஜயித்ததாகக்கூற இருவருக்கும் வாதம் நடந்தது. கோபம் பலத்தது. ஓர் அசரீரிவாக்கானது பலராமனே ஜயித்தார் என்று கூறிற்று. கடுஞ்சினங்கொண்ட ராமன் கலப்பையால் ருக்மியைக்கொன்று பல்லைக்காட்டி பரிஹா ஸம்செய்த காலிங்கனது பற்களை உடைத்து அவனது பரி வாரங்களையுமழித்தார். க்ருஷ்ணன் இதில் ஸம்பந்தப் படாதவர்போலிருந்து புதியதம்பதிகளுடன் த்வாரகைக்குச் சென்றார். க்ருஷ்ணனுக்கு ருக்மிணியுடன் எட்டு பட்ட மஹிஷிகள் மூலமாகவும் பதினாறுஆயிரம் ஸாதாரண மனைவி கள் மூலமாகவும் பற்பல புத்ரபௌத்ரர்கள் உண்டாயினர்.

நரகவதம். ஓர்ஸமயம் தேவராஜன் முநிகணங்களுடன் கூடி த்வாரகைவந்து த்வாரகாதிபனை வணங்கி வேண்டினான். தேவ! என்தாய் அதிதியின் அம்ருத குண்டலங்களையும் வருணனது வெண்குடையையும் மந்தரமலையின் மஹிமை வாய்ந்த கொடிமுடியையும் கொள்ளைகொண்ட நரகனெனு

மரக்கன் தங்களது தாஸர்களான தேவர்களையும் தபஸ்விகளை யும் துன்புறுத்துகிறான். எங்கள்பொருட்டு ஏனைய அஸுரர் களை அழித்ததுபோல் இக்கொடியவனையும் சிக்ஷிக்க வேண் டும் என்றான். தயாமூர்த்தியான தாமோதரன் தத்க்ஷணமே அருகில் நின்ற பக்ஷி ராஜன் மீதேறி பாமையுடன் ப்ராக்ஜ்யோதிஷ மெனும் நரகனின் நகரை நாடிச்சென்றார். அந்நக ரைச்சுற்றி நூறு யோஜனை தூரம் பல பாசங்கள் சூழ்ந்து பகைவர் ப்ரவேசிக்காதபடிக்குப் பாதுகாத்து வந்தன. அவைகளைச் சக்ரபாணி சக்ரத்தாலறுத்துத் தள்ளினார். தனதுபாசங்கள் பாழாயினதைப் பார்த்து பரப்பரப்புடன் முரனென்பான் போருக்கு வந்தான். சக்ராயுதத்திற்கு முரனையும் அவனது ஏழாயிரம் புதல்வர்களையும் ஹயக்ரீவனை யும் இறைவன் இரையாக்கினார். பின்னர் ப்ராக்ஜ்யோதிஷஞ் சென்று பகவான் பூமியின் புதல்வனான நரகனுடன் யுத்தஞ் செய்தார். சக்ரத்தால் இரண்டாகப் பிளக்கப்பட்டு நரகன் நிலத்திலே வீழ்ந்து ஆவியைத் துறந்தான். பூதேவி பகவானை அணுகி, வணங்கி தேவ! வராஹாவதாரத்தில் தாங் கள் அடியாளுக்களித்த தநயனைத் தாங்களே கொன்றீர்கள். அவனது ஸந்ததியை யேனும் காத்தருள வேண்டு மென் றாள். முராரியும் நரகனால் சிறைப்படுத்தப்பட்ட நாரீ மணி களை அவர்கள் கோரியபடி த்வாரகைக் கனுப்பினார். மந்தரத் தின் சிகரத்தையும் அதிதியின் குண்டலங்களையும் வருண னது சத்ரத்தையும் கருடன் மீதேற்றித் தானும் அதன் மீதமர்ந்து பாமையுடனே ஸ்வர்க்கஞ் சென்றார். ஆங்கு ளோர் ஆவலுடன் அச்யுதனை அர்ச்சிக்கத்தான் கொண்டு வந்த குண்டலங்களை அதிதிக்கும் குடையை வருணனுக்கும் அளித்துச் சிகரத்தை மந்தரமலைமீதெறிந்தார்.

பாரிஜாதாபஹரணம். தாயின் சொற்படி தேவேந் த்ரன் புருஷோத்தமனுக்குப் பூஜை செய்தனுப்ப நந்த

வநத்தின் சிறப்பைப்பார்த்துக் கொண்டே சென்ற ஸத்ய பாமையின் கண் பாரிஜாத மரத்தின் மீது சென்றது. உடனே நாதனை நாடி, காந்த! ருக்மிணி ஜாம்பவதி முதலிய வர்களைவிட பாமையினிடமே எனக்கு ஆசை அதிகம் என்று தாங்கள் கூறியது ஸத்யமானால் இவ்வழகிய பாரி ஜாததருவை என் மனையிலே வைத்து வளர்க்க வேண்டும். இத்திவ்ய புஷ்பத்தையணிந்த யான் சக்களத்திகளுக் கிடையே ஒப்புயர்வற்றவளாக விளங்க வேண்டும் என் றாள். இதைக்கேட்ட கண்ணன் அந்த திவ்யதருவைத் தூக்கிக்கருடன் மீது வைத்து விண்ணுலகை விட்டுமண் ணுலகிற்குக் கிளம்பினார். நந்தவநகாவலாளிகள் ஐயா! இது இந்த்ராணியின் இன்பத்தின் பொருட்டு வளர்க்கப் படும் விருக்ஷம். இதை எடுப்போர் கூறியவஜ்ரத்தை ஏற்க வேண்டு மென்றார்கள். ஸத்யபாமை அவர்களை நோக்கி பாற்கடலிலிருந்து கிளம்பிய சந்த்ரன் ஸுரை லக்ஷ்மி ஆகிய இவைகளைப் போல் பாரிஜாதமும் எல்லோருக்கும் பொது வாகும். இதைப்பாமையின் ப்ரீதியின் பொருட்டு மாதவன் மாநிலம் கொண்டு செல்கிறார். சக்தியிருப்பின் சண்டை செய்து இதை மீட்டுச் செல்லலாம் என்று சசியினிடம் கூறென்றாள். இந்த்ராணியின் தூண்டுதலா லிந்த்ரன் தேவஸேனையுடன் கூடி தேவதேவனைத் தாக்கி னான். கருடன் தனது கூறிய நகங்களாலு மலகுகளாலும் பல தேவர்களைக்கொன்று பக்ஷித்தது. ஐராவதத்தையும் கீழே தள்ளியது. யமனது தண்டமும் வருணனது பாச மும் அக்நியின் அஸ்த்ரமும் இந்த்ரனது வஜ்ரமும் பகவா னிடஞ் சென்று ஸ்வரூபம் தெரியாது மறைந்தன. சாரங் கபாணியினது சரவர்ஷங்களைச் சஹியாமல் அமராதிபன் உள்பட ஸகலதேவரும் பயந்து புறங்காட்டி ஓடினர். பாமை, தேவேந்த்ரன் மானிடரிடம் பயந்து ஓடுவது

அழகோ என்று நகைக்க அமரரனைவரும் அச்யுதனடி பணிந்து துதித்துப் பாரிஜாதம் தாங்கள் பாரினிலுள்ளவரை இருக்கட்டு மென்று அதை அர்ப்பணம் செய்தனர். த்வாரகை வந்த வைகுண்டநாதன் நரகனிடமிருந்து வந்து நரகாரியையே நாதனுகக்கோரிய நாரீமணிகளில் பதினுறுயிரம் பேரை மணந்து தனித்தனியே உருவெடுத்து அவர்களுடன் ரமித்திருந்தார்.

உஷாபரிணயம். பாணனெனும் அஸுரன் பக்தியால் பரமசிவனை வசமாக்கித் தனது அரண்மனையிலேயே அவரை வஸிக்கும்படிச் செய்தான். ஓர் ஸமயம் உமையுடன் உமாபதி உத்யானத்தில் உலாவிவர உஷையெனும் பாணனது மகள் அதைக்கண்டு அம்பிகையினருகே சென்று வாய்திறவாது நின்ருள். உஷையின் உள்ளத்தை உணர்ந்த உமாதேவி, குழந்தாய் வைசாக சுத்த த்வாதசியன்று எவனை நீ கனவில் காண்பாயோ அவனே உன் பதியாவன். அவனுடன் நீயும் ரமிப்பாய் என்ருள். அங்ஙனமே அன்றிரவு கனவில் கண்ட கணவனை விழித்தெழுந்தவுடன் காணுது லஜ்ஜையை விட்டு உஷை ஹா! நாதா! எங்கு சென்ருய்; என வாய் விட்டலறினுள். கும்பாண்டன் என்ற பாணனது மந்த்ரியின் புதல்வி சித்ரலேகை என்பாள் உஷையினருகே சென்று சித்திரப்படம் வரைந்து நீ கனவில் கண்டவன் இவனு என்று உலகிலுள்ள அரசர்களையெல்லாம் காட்டினுள். அநிருத்தனைக்கண்டு உஷை நாணினுள். உடனே சித்ரலேகை மாயாசக்தியால் த்வாரகை சென்று கண்ணனரண்மனை புகுந்து படுக்கையுடன் அநிருத்தனைத் தூக்கி வந்தாள். உஷை உள்ளங்குளிர்ந்துமனதிற்கிசைந்த மணுளனுடன் ஒருவருமறியாது ஏகாந்தமாக ரமித்திருந்தாள். ஒரு நாள் பாணன் பரமசிவனிடஞ் சென்று தனது தினவு அடங்க யுத்தஞ் செய்ய வரவேண்டு

மென்றான். சிவன் உனது கொடி தானே விழும் தினத்தில் உன்னோடு போர்புரிய ஓர் வீரன் வருவானென்றார். சில நாட்கள் சென்றபின் பாணன் உஷையுடன் அநிருத்தனைச் சிறைப்படுத்தி கொடிவிழும் நாளை எதிர்பார்த்திருந்தான். இதனிடையில் த்வாரகையில் அநிருத்தனைக் காணாது எல்லோரும் வருந்த நாரதர், சோணிதபுரத்திலே பாணனது சிறையிலே அநிருத்தன் கட்டுண்டு கிடக்கிறான் என்று கூறினார். உடனே கருடன் மீதேறி கருடத்வஜனும் பலராமனும் நால்வகைச் சேனையுடன் சோணிதபுரம் சென்று பாணனது கோட்டையைத் தாக்கினார்கள். அன்று பாணன் கொடி தானே அறுந்து வீழ்ந்தது. பக்தனுக்குப் பரிந்து பரமசிவன் பன்னகசாயியுடன் போர் செய்தார். சிவனிடமிருந்து கிளம்பிய சிவஜ்வரத்தை அடக்க விஷ்ணு விஷ்ணுஜ்வரத்தைக் கிளப்பினார். இவ்விரு ஜ்வரங்களாலும் பதினான்கு லோகங்களும் பாதகமடைய பிரும்மன் இரு மூர்த்திகளையும் வணங்கி இருஜ்வரங்களையும் சாந்தமாக்கினார். இக்கதையை நினைத்தோர் ஜ்வரபாதைக்காளாகார். கிருஷ்ணன் ப்ரயோகித்த ஜ்ரும்பாஸ்த்ரத்தால் சிவனும் குஹனும் தோல்வியுற்றனர். அச்சமயம் பாணன் தானே முன் வந்து பகவானுடன் யுத்தஞ் செய்தான். சக்ராயுதத்தால் அவனது கரங்களைச் சக்ரபாணி அறுத்துத் தள்ளினார். பாணனது தோல்வியைக்கண்டு பரமசிவன் கண்ணனருகே வந்து தன்னை அர்ச்சித்த ஹஸ்தங்களையும் தன் பக்தனையும் காக்கவேண்டுமென்றார். அச்யுதனும் அவனைக்கொல்லாமல் விட அவன் பகவானைப் பணிந்து துதித்துப் பற்பல ரத்நங்களுடன் தன் கன்யாரத்நத்தையும் பகவானுக் கர்ப்பணம் செய்தான். அநிருத்தனை விடுவித்து அவனுக்கு விதிப்படி உஷையை மணம் செய்வித்து கிருஷ்ணன் பரிவாரத்துடன் த்வாரகை சென்றார்.

பௌண்ட்ரகவதம். காசி ராஜனது நண்பனான பௌண்ட்ரக வாஸுதேவன் என்பான் புண்டரீகாக்ஷனிடம் ஓர் தூதனை அனுப்பித் தானே அவதாரமான வாஸுதேவனென்றும் வீணே அப்பெயரைப் பூண்டு சங்கசக்ரகதைகளைத்தரித்த நீ அவைகளை விட்டு என்னைப்பணி அல்லது என்னுடன் போருக்கு வா என்றழைத்தான். இதைக் கேட்ட பகவான் நகைத்து நீ கோரியபடி ஆயுதங்களை விடுகிறேன் வா என்று சொல்லியனுப்பிச் சேனையுடன் அவனிருப்பிடத்தை நாடிச்சென்றார். பௌண்ட்ரகனும் காசி ராஜனுடன் த்வாரகையை நாடி வந்தான். பகவான் சக்ரத்தினால் அவ்விருவர்களையும் அவர்களது சேனையையும் கணப்பொழுதில் கொன்று குவித்தார். காசிராஜனது குமாரன் சிவனருளால் வந்த ஓர் பூதத்தை த்வாரகையை அழித்து வரும்படி ஏவினான். அது த்வாரகையை அணுக ஆங்குளோர் அதைக்கண்டு பயந்து கிருஷ்ணா! கிருஷ்ணா! எனக்கதறினர். கண்ணன் உடனே சக்ரத்தை அனுப்ப அது அப்பூதத்தைத் துறத்திக்கொண்டே பின் சென்று அதையும் காசியையும் எரித்து த்வாரகைக்குத் திரும்பிற்று.

பலதேவ வீர்யம். ஓர் ஸமயம் துர்யோதனனது புதல்விக்கு ஸ்வயம் வரம் நடந்தது. அங்கு ஜாம்பவதியின் புதல்வனான ஸாம்பனென்பான் அவளைப் பலாத்காரமாகத் தூக்கிச் சென்றான். துர்யோதநன் முதலிய கௌரவ வீரர்கள் ஸாம்பனைப்பிடித்துச் சிறையிலடைத்தனர். இதையறிந்த பலராமன் ஆத்திரத்துடன் அஸ்திந புரம்சென்றார். அவர் குருவாதலின் துர்யோதநன் விதிப்படி அவரை அர்ச்சித்தான். பலதேவர் ஸாம்பனை விடும்படி உக்ரஸேந மஹாராஜன் ஆக்ஞையிடுகிறார் என்று கூற, கௌரவரனைவரும் நகைத்து, ஜாதியில் குறைந்த யாதவரோ நமக்குக் கட்டளையிடுவது? நாமவர்களுடன் ஸம்பந்தம் செய்ததா

லன்றே அவர்கள் இங்ஙனம் செறுக்கடைந்தனர் என்று கூறி ஸாம்பனை விடமறுத்தனர். அதைக்கண்டு சினங் கொண்ட பலதேவர் கௌரவர் கர்வத்தை அடக்க கலப் பையால் அஸ்திநபுரத்தையே இழுத்தார். அனைவரும் அதைக்கண்டு அஞ்சி அக்கன்னிகையுடன் ஸாம்பனையும் அவரிடமளித்து அவரடிபணிந்து மன்னிக்கும்படி வேண்டி னர். ராமன் கோபத்தை அடக்கி அவர்களுடன் த்வாரகை சென்றார். அங்கு நரகாஸுரனது நண்பனான த்விவித னெனும் மர்க்கடன் த்வாரகையைத் தாக்கினான். அதைக் கண்ட பலராமன் அவன் தலையில் முஷ்டியால் அடித்துக் கொன்றார்.

ஸ்வர்க்கம் செல்லுதல். ஒரு நாள் இந்த்ர தூதன் ஒரு வன் பகவானிடம் வந்து பணிந்து புருஷோத்தம! பூபார மகன்றது. துஷ்டர்கள் சிக்ஷிக்கப்பட்டனர். சிஷ்டர்கள் நன்கு ரக்ஷிக்கப்பட்டனர். திருவுள்ள மிருந்தால் மண்ணு லகைவிட்டு விண்ணுலகிற்கு வாருங்கள் என்றான். அங் ஙனமே ஆகுக என்று கூறி இறைவன் தன் ஸந்ததி மூல மாகத் தோன்றிய பூபாரத்தையுமகற்றிச் செல்லக்கருதினார். அச்சமயம் கண்ணனது புதல்வர் சிலர் ஸாம்பனுக்குப் பெண்வேடமமைத்து பிண்டாரக தீர்த்தத்தினருகே வஸிக் கும் விச்வாமித்ரர் முதலிய தவஸிகளிடம்சென்று இப் பெண்ணுக்கு என்ன குழந்தை உண்டாகுமென்று கேட் டார்கள். மஹர்ஷிகள் தங்கள் ஞானக்கண்ணால் இவர்களது தீயச்செயலை உணர்ந்து சாந்த மூர்த்திகளாக இருந்தும் தைவஸங்கல்பத்தினாலே சினந்து உங்கள் குலத்தை அழிக் கும் உலக்கை பிறக்குமென்றார்கள். அங்ஙனமே பிறந்த முஸலத்தை உக்ரஸேநரிடமளித்து நடந்ததை அவர்கள் கூறினார்கள். உக்ரஸேநன் உத்திரவுபடி உலக்கை பொடி

யாக்கிக் கடலில் எறியப்பட்டது. அதில் பொடிக்க முடியாத ஓர் துண்டை மீனென்று விழுங்க அம்மத்ஸ்யத்தின் வயிற்றிலிருந்து எடுத்து ஜரா எனும் ஓர் வேடன் அதை அம்பின் நுனியிலமைத்தான். அப்பொடிகள் கோரைப்புற்களாக முளைத்தன. பின்னர் த்வாரகையில் தோன்றிய உத்பாதங்களைக்கண்டு கண்ணன் தனது மக்களுடன் ப்ரபாஸம் சென்றார். ஆங்கு அனைவரும் அபரிமிதமாக மதுவை அருந்தி தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக்கொண்டனர். பகவான் போரை நிறுத்தும்படிக் கூறியுமவர்கள் கேளாததால் சினங்கொண்டவர்போல் கோரையைக்கொண்டு அவர்களை அடித்தார். பின்னரனைவரும் அவர்காட்டிய வழியைப் பின்பற்றி அக்கோரையைக் கொண்டே அடித்து மாண்டனர். இதற்குமுன்னமே உத்தவரைப் பதரிகாச்ரமம் செல்லும்படி முகுந்தனனுப்பியதால் தாருகன் பலராமன் க்ருஷ்ணன் ஆகிய மூவரே அங்குமிருந்தனர். கண்ணன் களைத்தவரைப்போல் ஓர் மரத்தினடியே உட்கார ஜைத்ரமெனும் அவர் தேரும் கதையும் சக்ரமும் அவரை வலம் வந்து வானில்மறைந்து சென்றன. பகவான் தாருகனை வஸுதேவரிடமனுப்பி நடந்தவைகளைக்கூறி அர்ஜுநன் வரும்வரை த்வாரகையிலிருக்கும்படியும், பின்னர் த்வாரகையைக் கடல் விழுங்குமெனவும்கூறினார். அர்ஜுநனிடமிவைகளைக்கூறி தன் மனைவிகளைக் காக்கும்படியும் கூறச்சொன்னார். பலராமனது முகத்திலிருந்து மிகப்பெரிய ஸர்ப்பமொன்று கிளம்பிக் கடலில் புகுந்தது. ஜரா எனும் வேடன் யோகாஸனத்தில் அமர்ந்துள்ள கண்ணன் பொற்பாத கமலத்தைக்கண்டு மானெனக் கருதி முற்கூறிய அம்பை அதன்மீதெய்தினன். பின்னர் அருகே சென்று பகவானென்றுணர்ந்து அவன் தன்னை மன்னிக்கும்படி வேண்ட அவனை விமானத்திலேற்றி பகவான் ஸ்வர்க்கத்திற்கனுப்பி

ணர். தானும் யோகத்தினால் மானிட உடலைவிடுத்துத் தன் னுருவுடன் தேவலோகம் சென்றார்.

அர்ஜுந சோகம். தாருகனால் இவ்விஷயத்தை அறிந்த அர்ஜுநன் ஸஹிக்க முடியாத சோகத்துடன் த்வாரகைக்கு விரைவாகவந்தான். பகவானது மஹிஷிகளும் வஸுதேவ தேவகிகளும் பின்தொடர பரமனது பூத உடலைத்தேடி அர்ஜுநன் அதற்குரிய கர்மங்களைச் செய்வித்தான். பதிவியோகத்தைப் பொறுக்காத பத்நிகளும் புத்ர சோகத்தைப் பொறாத பெற்றோரும் பகவானது உடலுடன் அக்நியில் நுழைந்து அழியா உலகைப் பெற்றனர். அன்றே அவனியில் கலி பிறந்தது. பாரிஜாதம் ஸுதர்மா முதலியவைகள் தத்தமிடம்சென்றன. கண்ணனிருந்த மாளிகையைவிட்டு மற்ற த்வாரகையைக் கடல் விழுங்கிற்று. மற்ற மாதவன் மனைவிகளை அழைத்துக்கொண்டு பார்த்தன் அஸ்திநபுரத்தை நாடிக்கிளம்பினான். நடுவழியே இடைச்சேரியிலுள்ள துஷ்டர்கள் அவனை மதியாது அப்பெண்களைத் துன்புறுத்தித் தூக்கிச்சென்றனர். அர்ஜுநன் சினந்து காண்டீவத்தை வளைக்க ஆரம்பித்தான். ஆனால் அவனாலதை வளைக்க முடியாமல்போக காண்டீவத் தண்டினாலேயே அவர்களை அடிக்க ஆரம்பித்தான். இடையர்கள் இதை மதித்தாரில்லை. அழியாத அவனம்புகளுமழிந்தன. தனது சக்தியெலாம் பாழானதைக்கண்டு பரிதபித்த பார்த்தனைப் பார்த்து வேதவ்யாஸர், குழந்தாய்! நீ வருந்தாதே. எவனது முன்னிலையில் நீ சக்திபெற்றனையோ அவ்வச்யுதன் இந்நாட்டைவிடுத்துப் பொன்னாடு சென்றனன். இங்கு கோபிகைகளாக வந்தவர் அப்ஸரஸ்ஸுகளாவர். முன்னமவர்கள் கழுத்தளவு ஜலத்திலேநின்று கடுந்தவம்புரியும் அஷ்டாவக்ரரை அடுத்துப் புருஷோத்தமனை தங்களுக்குப் பதியாகும்படி வரங்கேட்டனர். அவருமங்ஙனமே ஆருக

என்றுகூறி கரையேற அவரது உடல் எட்டுகோணலாக இருக்கக்கண்டு அவர்கள் எள்ளி நகைத்தனர். நன்றியில்லா நாரிகளை முடிவில் கள்வர் வசமாகும்படி அவர் சபித்தார். ஆதலால்தான் அவர்கள் தீயரிடம் சிக்குண்டனர். உலகை உபஸம்ஹாரம்செய்த லோகநாதன் விரைவில் உங்களையும் உபஸம்ஹாரம் செய்வர். ஆதலின் உனது தேஜஸ் அபகரிக்கப்பட்டதென்றார். இதைக்கேட்ட தநஞ்ஜயன் தர்மருடன் கலந்து பரீக்ஷித்துக்குப் பட்டாபிஷேகஞ்செய்து பாரினை விட்டு ஸ்வர்க்கஞ்சென்றான்.

பகவதவதாரங்கள். பகவத் கதாமிருதத்தைப் பருகிய தவஸிகள் மேன்மேலுமதில் பேரவாகொண்டு ஏனைய அவதாரங்களையுங் கேட்க, வ்யாஸர் கூறுகிறார். பகவதவதாரம் பற்பல உண்டு. அவை கூறமுடியா. ஓர் ப்ரளய காலத்தில் உலகெலாம் ஒடுங்கியபின் நெடுநாள் செல்ல ஜலத்திலே படுத்திருக்கும் பத்மநாபனிடமிருந்து பற்பல தேவர்ஷிகணங்கள் தோன்றின. அந்த அவதாரம் பௌஷ்கராவதாரமெனப்படும். நீரில் மூழ்கிய பூதேவியை மீட்க யஜ்ஞவராஹராகத் தோன்றினர். ஹிரண்யகசிபுவெனும் கொடிய அரக்கனைச் சிக்ஷிக்க நரஸிம்ஹாவதாரம் செய்தார். பலியினது கர்வத்தை யகற்ற வாமனராக வந்தார். பலிக்குப் பரிந்துவந்த பல்லாயிரம் அஸுரர்களை வெல்ல த்ரிவிக்ரம ரூபத்தை ஏற்றார். லோபமடைந்த வேத புராண ஸதாசாரங்களைச் சிறப்புடன் விருத்திசெய்ய தத்தாத்ரேயராகத் தோன்றி கார்த்தவீர்யார்ஜுனனுக்கு ஆயிரங்கைகளையும் அரிய பலசக்திகளையும் தந்தார். பலச்செருக்கால் பாருக்குப் பல தீங்குகளைச்செய்த கார்த்த வீர்யனைப்போன்ற பார்த்திவர்களை இருபத்தோரு தலைமுறை வேருடனறுக்க வீர பரசுராமனாக அவதரித்தார். தசமுகன் கரதூஷணன் முதலிய லோககண்டகர்களை அகற்றி தர்மத்தைக்காக்க ஸ்ரீ ராமனாக ஜநித்தார். கம்ஸன்,

சிசுபாலன், தந்தவக்த்ரன் முதலிய ராக்ஷஸர்களைச் சிக்ஷித்துப் பூமியின் சுமையை அகற்ற ஸ்ரீ கிருஷ்ணனாகத் தோன்றினார். கலியின் முடிவில் சம்பளக்ராமத்திலே உலக நன்மைக்காக விஷ்ணுயசஸ்ஸனும் கல்கியாகப் பிறக்கப்போகிறார். கிருதாஞ்ஜலிபுடனாக பகவததவதாரத்தைக் கேட்பின் ஸகல பாபங்களுமகலும்.

புண்யம் பாவம் ஸ்வர்க்கம் நரகம். இறைவனது ஆணையே ஆகமம். ஆங்கு கூறப்பட்டது தர்மம். அதைக் கைப்பற்றின் இஹபர இன்பமுண்டாம். அதைக் கைவிடின் துன்பமுண்டாகும். துன்பத்தை அளிக்குமிடம் நரகமெனப்படும். ரௌரவம் ரௌத்ரம் ஸூகரம் தாலம் கும்பீபாகம் மஹாகோரம் சால்மலம் முதலிய இருபத்திரண்டு முக்ய நரகங்களிருக்கின்றன. இங்கிருந்து எண்பத்தாறு ஆயிரம் யோஜனை தூரத்திலவைகளிருக்கின்றன. ஆயுள் முடிந்தவுடன் நீர் நெருப்பு நோய் முதலிய நிமித்தங்களைக் காட்டிக் காலனது கிங்கரர்கள் ஜீவராசிகளைத் தூக்கிச் செல்கின்றனர். உடலைவிட்டு ஆவி போகும்போது ஓர் உக்ரமான காற்றினால் உடலிலுள்ள தீ தீவ்ரவேகத்துடன் மர்மஸ்தானங்களைப் பேதிக்கிறது. உதானன் எனும் வாயு உடலினுள்ளே ஒன்றையும் நுழையவிடாமல் பிராணவாயுவை மேலே கிளப்பிவிடுகிறது. மறித்தவுடன் வாயுவடிவமளித்து ஓர் முகூர்த்தத்திற்குள் அஜ்ஜீவனை இவன்தான் இறக்க வேண்டியவனா என்று எமனது முன்னே காண்பிக்கப்பட்டுத் திரும்பவும் தரணிக்குக் கொண்டுவிடப்படுகிறது. அப்பால் யாதனா சரீரமளிக்கப்படும். அநேக ஸுகதுக்கங்களை ஆங்கு அனுபவிப்பதற்கேற்றது. பாபிகள் இறக்கும்போது பற்பல பயங்கர வாஹநங்கள் மீதேறி யமகிங்கரர் க்ரூரவடிவுடன் எதிரே தோன்றி சொல்லொணாத் துன்பத்தை அளிப்பார்கள். தர்மசீலர்களது மரணம் அவர்களுக்கு அதிகத் துன்

பத்தைத்தரா. அவனியில் அன்னம் பாநம் வஸ்த்ரம் பாது கை முதலியவைகளைத் தானம் செய்வோர் பசிதாகம், குளிர் வெய்யில் முதலிய துன்பங்களை அங்கு பெறுர். ஸ்வதர்மத் தைவிட்டவர் பரதார பரத்ரவ்யங்களை அபஹரித்தவர் பெற் றேரைக் கைவிட்டவர் பரஹிம்ஸை செய்வோர் முதலிய பாபிகளை யமதூதர்கள் கூறிய ஆயுதங்களால் அடித்து இருட்டான வழியில் இழுத்துச்செல்வர். யமபுரம் லக்ஷ யோஜனை தூரம் சதுரமாக உளது. தேவர்களும் ரிஷி களும் போகிகளும் மிக்க அலங்காரமான கிழக்கு வாயிற்படி வழியாகச் செல்வார்கள். வடக்கு வாயிற்படியில் சத்ரசாம ராதி உபசாரங்கள் செய்யப்படும். தரணியிலிருந்து வரும் தர்மசீலர்கள் அவ்வழியாக உள்ளே செல்வர். மேற்கு வாயிற் படியும் மிக அழகானது. காலஞ்ஜரகிரியில் உயிர் துறந்தோர் மஹாப்ரஸ்தாநம் ப்ராயோபவேசம் முதலியவைகளைச்செய்து ஆவியைவிட்டவர்கள் அல்லது பிராமணரைக்காக்க ப்ரா ணனை த்யாகம் செய்தவர் அவ்வழியாக அழைக்கப்படுவர். பாபிகளுக்கு மிகப்பயங்கரமான தென்திசை வாயிற்படியே வழியாம். அவர்களது முன்னே பதினெட்டு புஜங்களாலும் பற்பல கூரிய ஆயுதங்களை ஏந்தி கோரப்பல்லும் செம்பட் டைமயிரும் கறுத்தமேனியும் சிவந்தமாலையுமாக மிக மிக க்ரூர வடிவுடன் காலன்தோன்றுவான். இறந்த ஜீவனது பாபத்திற்கேற்ப சிக்ஷைவிதிக்கப்படும். கிங்கரர்களது அடி யால் அடிக்கடி மூர்ச்சை உண்டாகுமேயல்லாது யாதனு சரீரமழிவதில்லை.

பசுவைக் கொல்பவன் வஜ்ரகண்ட நரகத்திலே லக்ஷ மாண்டுகள் தள்ளப்படுவன். பிரும்மஹத்தி செய்தவன் பிறர் பூமியையும் நிக்ஷேபத்தையுமபகரித்தவன் தாம்ரகும் பத்தில் ஓர் ப்ரளயம்வரை தள்ளப்படுவான். பொய் ஸாக்ஷி கூறியவர் கரும்புபோல் கசக்கிப் பிழியப்படுவர். பிராமண

ஹிம்ஸை செய்வோர் அப்ரதிஷ்டமெனும் மலஜலம் நிறைந்த நரகத்தே தலைகீழாகத் தள்ளப்படுவர். மதுபாநிகள் உருகிய அரக்கில் தள்ளப்படுவர். பரஸ்த்ரீ அல்லது பர புருஷகமநம் செய்வோர் தப்ததாம்ரத்திலே கட்டப்பட்டு சூலத்தால் குத்தப்படுவர். பொய் கூறுவோர் நாக்கு பிளக்கப்படும். காமனையுடன் பிறர்மனைவியைக் காண்போர் கண் பிடுங்கப்படும். ஸ்த்ரீபாலவிருத்தர்களைக் கொன்றவர் ஜ்வாலாமாலா நரகத்தை அடைவர். புரம் வீடு ஆலயம் முதலியவைகளில் தீ வைத்தோர் தாமிஸ்ரத்தில் தள்ளப்படுவர். பித்ரு மாத்ரு மித்ரத்ரோஹிகள் மஹாதாமிஸ்ரத்தில் வீழ்வர். தனியே உண்பவன் காகோலியில் கிடப்பான். பஞ்சயக்ஞமற்றவர் உண்ணத்தகாததை உண்பவர் க்ரிமி கீட நரகத்தைப் பெறுவர். கன்யகையை விற்போர் திலபாகத்தில் எள்ளைப்போல் செக்கில்வைத்து ஆட்டப்படுவர். பால் விற்பவர் (இடையரைத்தவிர) வஜ்ரகபாடத்தில் சங்கிலியால் கட்டப்பட்டு நன்றாக அடிக்கப்படுவர். தானம் செய்பவரை வேண்டாமெனத் தடுப்பவர் நிருச்வாஸமெனும் நரகத்தில் மூச்சுவிட முடியாமல் ஹிம்ஸிக்கப்படுவர். ஸ்வஜாதியைவிட்டு அன்ய ஜாதியில் மணப்பது முதலிய வர்ணஸாங்கர்யம் செய்வோர் உருகிய வெல்லம் நிறைந்த குடபாகத்தில் வீழ்த்தப்படுவர். ஸுவர்ணத்தைத் திருடியவர் அம்பரீஷநரகத்தில் நூறுகோடி கல்பம் அக்னிஜ்வாலையால் வருந்துவர். மதுமாம்ஸமருந்துவோர் மூத்ரகபச்லேஷ்மம் நிறைந்த கச்மல நரகத்தில் வீழ்வர். பித்ருக்களுக்குப் பிண்டமளிக்காதவர் லாலா மூத்ரத்தில் வீழ்ந்து வருந்துவர். மாம்ஸம் புஜிக்க ப்ராணிகளை வதைப்போரது உடல் துண்டு துண்டாக்கப்பட்டு அதையே அவர் உண்ணும்படி கூறப்படும். தம்பதிகளைக் கலைத்தவர் மஹாப்ரேதத்தில் தள்ளப்படுவர். ஸஹோதரி சிற்றன்னை குருபத்நீ முதலிய

தகாதவரைப் புணர்ந்தவர் அங்காரராசியில் வீழ்வர். பரஸ்த்ரீ பரத்ரவ்யங்களில் பேராசைகொண்டவரது மார்பை சூலத்தால் கிங்கரர் பிளப்பர். நரகத்தை யார் கண்டவனென்க் கூறி பாபம் செய்வோர் பலகாலம் நரகயாதனைகளை அனுபவிப்பர்.

தர்மமும் ஸ்வர்க்கமும். குருபணிவிடை, தேவப்ராஹ்மணபூஜை, பரிவுடன் அன்னதாநம், வேதமறிந்த வேதியருக் கன்னதாநம், கோ, க்ஷீரம், தயிர், நெய் வெல்லம் தேன் பழம் புஷ்பம் தாம்பூலம் திலம் திலதேநு க்ருததேநு தீர்த்தம் தீர்த்தபாத்ரம் பாதுகை குடை ஆஸநம் சயநம் ஸுவர்ணம் ரஜதம் பவழம் முத்து தீபம் பூமி கன்யகை அப்யங்கம் வீடு முதலியவைகளை ஸத்காலத்திலே ஸத்பாத்ரத்திலே முக்கரண சுத்தியுடனளித்தல் முதலியவைகள் உயர்ந்த தர்மங்களாம். இவைகளைச் செய்தோர் யமபுரியில் அஞ்சாது சென்று தர்மராஜனளிக்கும் விருந்தைப் பெறுவர். அவர்களுக்குத் திவ்ய விமாந மளிக்கப்படும். திவ்ய தேஹம் பெற்று தேவலோகமெலாம் சுற்றுவர். சிவவிஷ்ணுகோ ஸேவை புரிதல் அஷ்டமி ஏகாதசி முதலிய விருத தினங்களில் உபவாஸமிருத்தல் டம்பம் அஹங்காரம் காமம் க்ரோதம் லோபம் மதமாத்ஸர்யம் முதலியவைகளை விட்டிருத்தலும் சிறந்த தர்மமாம். கோப்ராஹ்மணர்களைக்காக்க உயிரைவிடுவோர் கிருத கிருத்யர்களாகி அக்நிப்ரவேசம் செய்வோர், உயிருடன் தன்னுடலைக் கழுகு முதலிய ப்ராணிகளுக்குப் பலியளிப்போர் ஆகியவர்கள் மிக அழகிய திவ்ய விமாநத்தின் மீதேறி தேவகந்தர்வர்களால் வரவேற்கப் படுவர். பூர்ண தக்ஷிணையுடன் கூடிய யக்ஞம் பொருமை பர பீடை இல்லாமை சிவன் விஷ்ணு பிரும்மா இம்மும்மூர்த்திகளையும் ஒரேமூர்த்தி எனப் பேதம்பாராமல் பூஜிப்பது மாம்ஸமுண்ணாமை முதலியவைகளை அனுஷ்டிப்போர்

ஸ்வர்க்க ஸுகத்தைப் பெறுவர். பலகோடிப் பிறவிகளுக் குப் பிறகே பெரும் புண்யத்தால் அரிய மானிடப் பிறவி கிட்டுகிறது. அதில் தர்மத்தைச் செய்யாவிடின் அவன் தன்னைத்தானே வஞ்சித்தவனுவன். ஏழ்மை அற்ப ஆயுள் மடைமை குரூபம் முதலியன பாபிகளின் சின்னங்களாம். தீர்க்காயுள் ஆரோக்கியம் ஐச்வர்யம் ஸுரூபம் அறிவு முத லியவைகள் புண்யத்தின் அடையாளங்களாம். கபடமாகவாவது கமலக்கண்ணனை நினைத்தல் பெரும் புண்யமாகும்.

பாபபலன். மானிடர் செய்த பாபத்தை அதன் பய னை துக்க அநுபவத்தால் அகற்றவேண்டும். நரகத்தில் கிடைக்கும் சிக்ஷையைத்தவிர பூமியிலும் பற்பல திர்யக் ஜந்துக்களாகவும் நோயாளிகளாகவும் பிறந்து அந்த பாப சேஷத்தையு மனுபவிக்க வேண்டும். பஞ்சபூதங்களும் நமது மநம் புத்தி ஆத்மா ஆகிய இவைகளும் நாம் செய் யும் புண்ய பாபங்களுக்கு ஸாக்ஷிகளாயிருக்கின்றன. வேத முணர்ந்தும் ஸ்வதர்மத்தை விடாது அநுஷ்டித்திருந்தும் பதிதரிடம் தாநம் பெறின் கழுதை காளை பிருஹ்மராக்ஷஸ் முதலிய பிறவிகளைப் பெறுவர். பதிதனுக்குப் புரோஹி தராயிருப்பவர் புழு கழுதை பன்றி கோழி நரி நாய் முதலிய ஜன்மங்களைப் பெறுவர். நம்பினவரை மோசம் செய்தவர் மீன் மான் ஆடு புழு முதலியவைகளாகப் பிறப் பர். தான்யங்களைத் திருடுவோர் மூஷிகம் பன்றி நாய் முதலியவைகளாவார். பரஸ்த்ரீ கமநம் செய்தோர் நரி நாய் கழுகு பாம்பு கொக்கு முதலிய ஜன்மங்களை எடுப்பர். ப்ராதாவின் பார்யையைப் புணர்ந்தவன் கோகிலமாக ஜநிப் பான். ஒரே கன்யகையை இரண்டுமுறை தானம் செய்வோர் நாய் புலி கழுதை முதலிய பிறவிகளைப்பெறுவர். குற்ற மற்ற சிடனைச் சிக்ஷிக்கும் குரு க்ரூர மிருகமாவர். பெற் றோரை அவமதித்தவர் கழுதையாகவும் முதலையாகவும்

பிறப்பார். பெற்றோரை நிந்தித்தவர் கிளியாகவும் பூனை யாகவும் பிறப்பர். அவர்களை அடித்தவர் ஆமையாகவும் புலியாகவும் பிறப்பர். யஜமாநத்துரோஹி வாநரமாகவும் எலியாகவும் நாயாகவும் பிறப்பர். தேவபித்ரு பூஜைகளைச் செய்யாமல் உண்போர் காக்கையாகவும் கோழியாகவும் பிறப்பர். செய்தநன்றியை மறந்தவர் அஸிபத்ரவநம் முத லிய மிக க்ரூரமான நரகங்களை அனுபவித்துப் புழு கழுதை ஆமை முதலிய ஜன்மங்களை எடுப்பர். பால் தயிரைத் திருடு பவர் கொக்காகப் பிறப்பர். பழத்தையும் மூலங்களையும் திருடியவர் எறும்பாவர். வெள்ளியைத் திருடியவர் புறா வாவார். வஸ்த்ராபஹாரம் செய்தவர் கிளியாவார். பட்டு வஸ்த்ரத்தை அபஹரித்தவர் ஹம்ஸமாகவும் மாவு முதலிய பொடியான பதார்த்தங்களை அபஹரிப்பவர் மயிலாகவும் தைலத்தைத் திருடுபவர் வௌவாலாகவும் பிறப்பர். ஆயுத மில்லாதவனை ஆயுதங்கொண்டு கொல்பவன் கழுதை மான் மீன் புலி முதலிய பற்பல பிறவிகளை எடுப்பான். பாபங் களை அகற்றவல்லது தாநம். எல்லாதாநங்களிலும் அன்னதா நமே மிகச்சிறந்ததாகும். புஜிப்பவர் பசி ஆறி சந்தோஷப் படும்வரையில் கபடமில்லாமல் நல்லபொருள்களைப் பரி வுடனளிக்கவேண்டும். பத்தாயிரம் வேதியர்களுக்கு விதிப் படி அன்னமிட்டால் ஸகல பாபங்களும் நீங்கும்.

ச்ராத்தம். த்ரேதாயுக த்வாபரயுகங்களின் ஸந்தியில் முன்னம் மேருமலையில் விச்வேதேவர்களுடன் பித்ரு தேவர்களும் வீற்றிருந்தனர். ஆங்கு ஸோமனது கன்ய கையான ஊர்ஜா என்பவள் வந்தாள். அவளது அழகைக் கண்டு பித்ருக்கள் மோஹமடைந்தனர். அவளை நோக்கி கோகா! உன் ப்ரபு யார்? நீ யார்? என்று வினவினர். அவள் சந்த்ரனது புத்ரியான ஊர்ஜா என்பது முதல் பெயர் என்றும் ஸ்வதா என்பது இரண்டாவது பெயர் என்றும்

நீங்கள் கோகா என்றழைத்ததால் கோகா என்பது மூன்றும் பெயராக உண்டாயிற்றென்றும் கூறினாள். அவள் பால் ஆசைகொண்டமையால் யோகத்தைப் பித்ருக்களிழந்தனர். யோக ப்ரஷ்டர்களான பித்ருக்களைவிட்டு விச்வேதேவர்கள் வானுலகம்சென்றனர். இதனிடையே சந்த்ரன் தன் கன்யகையைத் தேடிவந்து தன் உத்திரவின்றி அவளை மனைவியாகக் கருதிய பித்ருக்களைக் கண்டு சினம்கொண்டார். தன் தநயையை நதியாகும்படியும் பித்ருக்களைப் பாரினில் விழும்படியும் சாபங்கொடுத்துச் சென்றார். இமய மலையினடியே இவர்கள் விழுந்தனர். கோகையும் ஆங்கு நதியாகத் தோன்றினாள். பசிதாஹங்களால் வருந்தும் பித்ருக்களிடம் கருணைகொண்ட மலை அரசன் பதரி எனும் தேனுவை அனுப்பி அவர்களுக்கு வேண்டிய உணவை அளிக்கும்படிச் செய்தார். இங்ஙனம் பத்தாயிரமாண்டுகள் மலைச் சாரலில் மஹிமையை இழந்து பித்ருக்கள் வஸித்தனர். விச்வேதேவர்களையும் யோக சக்தியையும் இழந்து துர்ப்பலர்களாயுள்ள அவர்களை ராக்ஷஸர்கள் துரத்தி ஹிம்ஸைசெய்ய ஆரம்பித்தனர். பயந்தோடிய பித்ருக்கள் ஓர் கற்பாறையின்கீழ் தங்கினார்கள். அவர்களிடமன்புகொண்ட கோகாநதி அஸுரர் அங்குவராதபடி தன் ப்ரவாஹத்தால் அப்பாறையை மூடிக்கொண்டாள். பித்ருக்கள் தங்கள் துயரை அகற்றும்படி தாமோதரனைத் துதித்துப் பணிந்தனர். வைகுண்ட நாதனும் வராஹவடிவமெடுத்து அவர்கள் மேலுள்ள சிலையையகற்றி பித்ரு தேவர்களைக் கரையேற்றினார். அவர்கள் திரும்பவும் யோக மஹிமையைப்பெற பகவானே ஓர் ச்ராத்தம் செய்தார். வராஹாவதாரம் செய்தபோது தனது ரோமத்திலிருந்து பிறந்த தர்ப்பையையும் தனது வேர்வையாலுண்டான திலத்தையுமதில் உபயோகித்தார். எவராலும் எவ்வகையான துன்பமும் வராதிருக்க விச்வேதே

களையும் ச்ராத்தத்தில் வரித்து அக்ஷதையைக்கொண்டு அவர்களை ஆராதித்தார். விதிப்படி அக்நியில் ஹோமமும் அந்தணருக்கு அன்னமுமளித்துப் பிண்டப்ரதாநமும் செய்தார். பித்ருக்களதனால் இழந்த சக்தியை மீண்டுமடைந்து விஷ்ணுவைப் பணிந்து பித்ரு லோகம்சென்றனர். ஊர்ஜையும் சாபமகன்று தக்ஷப்ரஹ்மனுக்கு ஸ்வதாஎனும் கன்யகையாகத் தோன்றி பித்ரு தேவர்களை மணந்தாள்.

இங்ஙனம் வராஹ மூர்த்தியால் துவக்கப்பட்ட ச்ராத்தம். நித்யம் நைமித்திகம் காம்யம் என மூவ்வகைப்படும். நமது பித்ருக்கள் தன் வம்சத்தில் பல புத்ரர்கள் பிறக்க மாட்டார்களா? அதில் ஒருவனாவது கயைசென்று ச்ராத்தம் செய்யமாட்டானா? ஒருவனாவது எட்டு வயதுள்ள கன்யகையை மணக்கமாட்டானா? என்று தைவத்தை வேண்டுகின்றனர். ஒவ்வோர் ஆண்டிலும் ஸூர்யன் கன்யாராசியிலிருக்கும்போது (மஹாளயபக்ஷம்) யமன் நரகத்திலுள்ளோரை விடுவிக்கிறான். அச்சமயமவர்கள் பூலோகம் வந்து தன் ஸந்ததியார் அளிக்கும் ச்ராத்தத்தால் ஸந்தோஷமடைந்து ஆசீர்வதித்துச் செல்கின்றனர். ச்ராத்தம் செய்யாதவரைச் சபித்துச் செல்கின்றனர். அஷ்டகை அன்வஷ்டகை வ்யதீபாதம் க்ரஹணம் மன்வந்தரம் ஜந்மநக்ஷத்ரம் இரு அயநாரம்பதிநம் விஷுவம் மாஸஸங்க்ரமணம் முதலிய காலங்களில் பிண்டமில்லாமல் ச்ராத்தம் செய்யவேண்டும். ஒருவன் இறந்தவுடன் அவனது ப்ரேதத்வம் நீங்கி அவன் பித்ருக்களுடன் சேருவதற்காகப் பத்து தினங்கள்வரை பிண்டமும் தர்ப்பணமுமளித்து பதினோராம் நாள் ஏகோத்திஷ்டமும் பின்னர் த்ரிபக்ஷம் ப்ரதிமாஸமும் இறந்த திதி ஆகிய காலங்களில் ச்ராத்தமும்செய்து பின்னர் ஸபிண்டீகரணமும் செய்யவேண்டும். அதன்பின் ஆண்டுதோறும் இறந்த திதியில் செய்யும் ச்ராத்தம் பார்வணமெனப்படும். விவாஹம்-

முதலிய சுபகாலங்களில் செய்யப்படும் ச்ராத்தத்தை ஏற்கும் நாந்திமுக பித்ருக்கள் உருவில்லாதவர். ஏகோத்திஷ்டம் வரை செய்யப்படும் ச்ராத்தத்தை ஏற்பவர் ப்ரேதர் எனப்படுவர். பார்வணுதி ச்ராத்தத்தை ஏற்கும் பித்ருக்களுக்கும் ப்ரேதருக்கும் உடலுண்டு. இறந்தவருக்கும் ப்ரேதத்வம் நீங்குவதற்காக புத்ரன் முதலிய அதிகாரிகள் உத்தர கருமத்தைச் செய்யவேண்டும். எவருமில்லாவிடின் அரசன் அக்கருமத்தைச் செய்யவேண்டும். ச்ராத்தத்தினல் ஸந்தோஷிக்கும் பித்ருக்களைத் தவிர ஆங்கு செய்யும் விகிரான்னத்தால் பைசாசஉருவை அடைந்தோரும், வஸ்த்ர ஜலத்தினல் கரு உருவெடுத்தோரும், கந்த ஜலத்தால் தேவசரீரம் பெற்றோரும் பிண்டத்தின்மீது விடும் ஜலம் பூமியில் சிந்துவதால் மிருக ஜன்மமெடுத்தோரும், தர்ப்பையை அலம்பிவிடும் ஜலத்தால் பல் முளைப்பதற்குமுன் இறந்து ஸம்ஸ்காரமில்லா திருப்போரும் ஸந்தோஷமடைகின்றனர். ச்ராத்தார்ஹமான பதார்த்தங்களைக்கொண்டு நல்ல யோக்யதை உள்ளோரை வரித்து விதிவழுவாமல் ச்ராத்தம் செய்தால் பித்ருக்கள் மிக ஸந்தோஷமடைந்து ஆயுஸ் ஸந்ததி செல்வம் முதலியவைகளைத் தருகின்றனர். ச்ராத்தத்தில் வஸ்த்ர தானம் செய்வது மிகச்சிறந்ததாகும். ஆயிரம் கோக்களிருந்தபோதிலும் கன்று தன் தாயைத் தேடி அடைவது போல் நாம கோத்ரங்களைக்கூறி விதிப்படி செய்யும் ச்ராத்தம் எப்பிறவிபெற்று எங்கிருப்பினும் அவனுக்கேற்ற உணவாகி ஆங்குசெல்கிறது. ஸந்ததியை விரும்புவோர் மத்ய பிண்டத்தை மனைவிக் களிக்கவேண்டும். தேஜஸ்ஸை விரும்புவோர் கோவுக்கும் நீண்டஆயுளை விரும்புவோர் காக்கைக்கு மளிக்கவேண்டும்.

ஸதாசாரம். ஸாதுக்கள் அநுஷ்டித்த தர்மமே ஸதாசாரமெனப்படும். ஆசாரம் ஆயுளையும் கீர்த்தியையுமளிக்க

வல்லது. ஆசாரத்தைவிட்டு எந்த தர்மத்தைச் செய்தாலும் அது பயனைத்தராது. நமக்கு வரும்வருவாயில் இரண்டு பங்கைக் குடும்பத்திற் கெடுத்துக்கொண்டு மிகுதியில் தர்மத்திற்கோர் பங்கும் மூலதநத்திற்கு ஓர் பங்குமளிக்கவேண்டும். அதிகாலையில் படுக்கையை விட்டெழ வேண்டும். தைவம் தர்மம் அர்த்தம் இவைகளைச் சிந்திக்கவேண்டும். குறிப்பிட்ட இடத்தில் ஜலமலங்களைக் கழித்து விதிப்படி சௌசம்செய்து ப்ராதஸ்நாநம் செய்யவேண்டும். நக்ஷத்ரம் மறையாதிருக்கும்போது ப்ராதஸ்ஸந்த்யயும் ஸூர்யனுள்ள போதே ஸாயம் ஸந்த்யையையும் அனுஷ்டிப்பது உத்தமம். அஸத்துக்களுடன் பேசுதல், பொய், கடுமையாகப் பேசுதல் முதலியவைகளை விட்டு அடக்கமாகப் பேச வேண்டும். இரண்டு வேளையும் அக்நி பூஜை செய்யவேண்டும். ஸூர்யனை உதயமாகும்போதும் அஸ்தமனமாகும்போதும் பார்க்கலாகாது. தலைவாருதல் கண்ணாடி பார்த்தல் பல் துலக்கல் மையிடல் தேவபூஜை ஆகியவைகளைக் காலையிலேயே செய்ய வேண்டும். வீடு தீர்த்தம் ஆலயம் உழுத பூமி கோசாலை வழி முதலிய இடங்களில் ஜலமலங்களைக் கழிக்கலாகாது. வஸ்த்ரமில்லாதவர் மலம் பஹிஷ்டையான ஸ்த்ரீ இவைகளைப் பார்க்கலாகாது. தூரஸ்த்ரீயுடன் பேசுவதும் அவளைத் தீண்டுதலும்கூடாது. உமி கரி கயிறு வஸ்த்ரம் இவைகளின்மேல் நிற்கக்கூடாது. மேற்கு முகமாகக் காலலம்பி ஆசமநம்செய்து பின்னர் கிழக்குமுகமாக உட்கார்ந்து பேசாமல் புஜிக்கவேண்டும். உப்பை ப்ரத்யக்ஷமாக போஜநத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடாது. எச்சில் கையுடன் பேசுவதும் சந்த்ர ஸூர்ய நக்ஷத்ரங்களைப் பார்ப்பதும் பாபமாம். உடைந்ததான ஆஸநம் படுக்கை பாத்ரம் முதலியவைகளை உபயோகிக்கக்கூடாது. பெரியோர் குரு முதலியவர்கள் வந்தவுடன் எழுந்து நமஸ்காரம்செய்து ஆஸநமளித்து

அவர் போகும்போது கொஞ்சதூரம் கூடவே செல்ல வேண்டும். ஒரு வஸ்த்ரத்துடன் எந்த சுபகர்மாவையும் செய்யக்கூடாது. வஸ்த்ரமில்லாமல் ஸ்நாநம் செய்யக் கூடாது. இரண்டு கைகளாலும் தலைசொறிதல், அடிக்கடி சிரஸ்நாநம் செய்தல், தலையில் தேய்த்த எண்ணையை உடலில் தடவிக்கொள்ளுதல், பெரியோரை அவமதித்தல், குரு தூஷணை பிறர் பாபத்தைக் கூறுதல் முதலியவைகள் பாப மாம். பகலில் வடக்கு முகமாகவும் இரவில் தெற்குமுகமாக வும் உட்கார்ந்து ஜலமலங்களைக் கழிக்கவேண்டும். பிரா மணன் ராஜா துன்பப்படுபவர் கல்விமான் கர்ப்பிணி ரோகி அங்கஹீநன் முதலியவர்களுக்கு வழிவிட்டு விலகவேண்டும். ஆலயம் அந்தணன் ஸுமங்கலி குரு கோ அச்வத்த விருக்ஷம் முதலியவைகளை ப்ரதக்ஷிணமாகச் செல்லவேண்டும். ஒரு வர் உபயோகம்செய்த வஸ்த்ரம் பாதுகை புஷ்பம் ஆஸநம் முதலியவைகளை மற்றவர் உபயோகிக்கக்கூடாது. அஷ்டமி சதுர்த்தசி ஏகாதசி பர்வா ஆகிய இக்காலங்களில் எண்ணை ஸ்த்ரீபோகம் வபநம் முதலியவைகளைச் செய்யக்கூடாது. கை கால்களைக் கார்யமில்லாதபோது மேலே தூக்கலாகாது. காலால் காலைத் தேய்த்தலம்பக்கூடாது. கோள் சொல்லல், க்ரூரமாகப் பேசல், அங்கஹீநர்களைப் பரிஹஸித்தல், தம்பம் அஹங்காரம், தேவ பூஜைக்கில்லாமல் தனக்காக பக்ஷயங் களைச் செய்வது, காலால் ஆஸநத்தை இழுத்து அதில் உட்காருதல், வடக்கு மேற்கு திக்குகளில் தலைவைத்துப் படுப்பது, வஸ்த்ரத்தால் உடலைத் தேய்ப்பது, கறுப்பு சிவப்பு வஸ்த்ரங்களை அணிவது, மேல் வஸ்த்ரத்தை அடி யிலும் அடி வஸ்த்ரத்தை மேலேயும் தரித்துக்கொள்வது, புழுவுள்ளதும் மயிருள்ளதும் நாய் பார்த்ததும் பழயது மான உணவை உட்கொள்ளுதல் முதலியன பாபமாம். உத யாஸ்தமந காலங்களில் படுப்பதும் பகலில் உறங்குதல்

புணருதல் முதலியவைகளும் கூடாது. பரஸ்த்ரீ கமநத்தால் ஆயுள் குறையும். உப்பு முதலிய ரஸம், உஷ்ணம் நுரை முதலியவை கலந்த ஜலத்தால் ஆசமநம் செய்யக்கூடாது. இரண்டு முழங்கால்களுக்குள்ளே கைகளை வைத்துக் கொண்டு உட்கார்ந்து ஆசமநம் செய்யவேண்டும். ஜலத்தி லிருந்து ஆசமநம் செய்வதாயின் முழங்கால் மறையும் ஜலத் தில் நின்று செய்யவேண்டும். தும்பல் காறித் துப்புதல் நக்குதல் ஜலமலவிஸர்ஜநம் வஸ்த்ரதாரணம் காலலம்பல் தூக்கம் முதலிய கார்யங்களுக்குப் பிறகு ஆசமநம் செய்ய வேண்டும். ஆசமநம்செய்ய முடியாத காலத்தில் ப்ரணவத் தைக்கூறி வலதுகாதைத்தொட்டால்போதும். காரணமின்றி பல்லைக் கடித்தல், சரீரத்தில் அடித்துக்கொள்ளல், ஸந்த்யா காலத்தில் ப்ரயாணம், உண்ணும்போது வேதமோதல், முதலியன செய்யத்தக்கதல்ல. சிரஸ்நாநம் செய்யாமல் தேவ பித்ரு அக்நி கார்யங்களைச் செய்யக்கூடாது. வடக்கு அல்லது கிழக்குமுகமாக உட்கார்ந்து வபநம் செய்துகொள்ள வேண்டும். நற்குலத்தில் பிறந்து நற்குணமுள்ள கன்ய கையை மணக்கவேண்டும். பெண்கள் ருதுஸ்நாநம் செய்த நாளிலிருந்து பதினாறு நாள்வரைதான் போகார்ஹமான காலம். ஒத்தைப்பட்ட தினங்களில் புத்ரனும் இரட்டைப் பட்ட தினங்களில் பெண்ணும் பிறக்கும். முதல் ஐந்து நாட்களிலும் ஸங்கமம் கூடாது. வாந்தி வபநம் ஸ்த்ரீபோ கம் ஆசௌசம் முதலிய காலங்களில் கட்டியவஸ்த்ரத்துடன் ஸ்நாநம் செய்யவேண்டும். யோக்யர்களுக்கு உயர்ந்த ஆஸ நம் அளிக்கவேண்டும். யோக்யதை இல்லாதவருக்கு யோக் யதை உள்ளவருடன் ஸமமாக பூஜைசெய்யலாகாது. அழுக் கில்லாததும் கிழியாததுமான வஸ்த்ரம் வெள்ளைப் புஷ்பம் ஆபரணம் முதலியவைகளைக் க்ருஹஸ்தர் தரிக்கவேண்டும். அமங்களங்களை விடவேண்டும். ஜலத்தையும் அக்நியையும்

ஒன்றாகவைத்துக் கொள்ளக்கூடாது. குரு தேவர் பெரியோர்கள் இவர்களுக்கு எதிராக காலைநீட்டக்கூடாது. கன்று பசுவை ஊட்டும்போது யஜமானனிடம் சொல்லக்கூடாது. வாயால் அக்நியை ஊதக்கூடாது. எதிலும் தாமதம்கூடாது. கடனளிப்பவன் வைத்யன் வேதமறிந்தவன் ஜலமுள்ள நதி இவைகளில்லாத விடத்தில் வஸிக்கக்கூடாது. இத்தகைய ஸதாசாரத்தால் கிட்டாததொன்றுமில்லை.

பாத்ரசுத்தி. சங்கம் கல் ஸ்வர்ணம் வெள்ளி பவழம் வஸ்த்ரம் ஆகியவைகள் அசுத்தமானால் ஜலத்தினலைம்பி அவைகளைச் சுத்திசெய்யவேண்டும். எண்ணை பாத்ரம் அசுத்தமானால் உஷ்ண ஜலத்தால் சுத்திசெய்யவேண்டும். முறம் உரல் உலக்கை தோல் வஸ்தரமூட்டை இவைகள் அசுத்தமானால் ஜலத்தினால் ப்ரோக்ஷிக்கவேண்டும். மரஉருவி ஆட்டுத்தோல் கம்பளி ஆகியவைகளை மண்கலந்த ஜலத்தால் சுத்திசெய்யவேண்டும். மரம் தந்தம் கொம்பு முதலியவைகளாலாகிய பாத்ரங்கள் அசுத்தமானால் அவைகளைக் கொஞ்சம் உளியினால்செதுக்கவேண்டும். மட்பாத்ரங்கள்அசுத்தமானால் அக்நியில் போடவேண்டும். வண்ணான்கை, பிக்ஷாந்நம், குழந்தை, விலைக்குவாங்கிய பொருள் ஸ்த்ரீகள்ஸ்தநம் முகம் ஆகிய இவைகள் எப்போதும்சுத்தமானவை. அசுத்தமானபூமியைத் தீயினாலும் பசுவினது பாத ஸ்பர்சத்தாலும் பசுவின்சாணத்தால் மெழுகுவதாலும் கொஞ்சம் மண்ணை வெட்டுவதாலும் சுத்திசெய்யவேண்டும். மயிருள்ளதும் புழு உள்ளதும் பசுவினால் முகரப்பட்டதும் ஈ விழுந்ததுமான அன்னத்தை ஸ்வல்ப மிருத்திகையினாலும் பஸ்மாவாலும் ஜலத்தாலும் சுத்திசெய்யவேண்டும். பித்தளை பாத்ரத்தைப் புளியாலும் ஈய அரக்கு பாத்ரங்களை ஜலத்தாலும் வெங்கல பாத்ரத்தைச் சாம்பலாலும் ஜலத்தாலும் சுத்தி செய்யவேண்டும். பசு அருந்தத்தக்க அளவு நீர் பூமியில் தேங்கினால் அதுசுத்த

மாகும். ரஜஸ் அக்நி அச்வம் பசு நிழல் ஸூர்யரச்மி வாயு பூமி ஜலத்திவலைகள் ஈ ஆகியவைகள் அசுத்த வஸ்துக்களுடன் சேர்ந்ததால் அசுத்தமாவதில்லை. ஆடும் அச்வமும் முகத்தில் சுத்தமானவை. பசுவின் முகமும் கன்றின் முகமும் அசுத்தமானவை. தாய்ப்பாலும் பக்ஷிகொத்திய பழமும் பவித்ரமானவை. ஆஸநம் சயநம் வாஹநம் நதிக்கரைகள் முதலியவைகள் சந்த்ர ஸூர்ய கிரணங்களாலும் வாயுவாலும் சுத்தியாகின்றன. வழிநடத்தல் ஸ்நாநம் போஜநம் வஸ்த்ரதாரணம் முதலியவைகள் முடிந்தபின் ஆசமநம் செய்தால்தான் சுத்தி உண்டாகும். பூமியில் வீழ்ந்த ஜலம் அசுத்தமானவர்களால் தீண்டப்பட்டு அசுத்தமானாலும் வாயு அதைச் சுத்திசெய்துவிடுகிறது. ஓடு பானை முதலியவைகளும் வாயுவினால் சுத்தமாகின்றன. மிக அதிகமான அன்னராசி அசுத்தமானால் அசுத்தமான இடத்தில் கொஞ்சம் அப்புறப்படுத்திவிட்டு மிகுதியை ப்ரோக்ஷித்தால் அது சுத்தமாகும். ரஜஸ்வலை ப்ரஸவித்தவள் சண்டாளன் காக்கை சவந்தூக்குபவன் மநுஷ்யனது எலும்பு ஆகியவைகளைத் தீண்டினால் உடுத்திய வஸ்த்ரத்துடன் மூழ்கவேண்டும்.

வர்ணாச்ரமாதி தர்மம். தயை தபஸ் தாநம் தேவயக்ஞம் அத்யயநம் ஸதாதீர்த்தபாத்ரத்துடனிருத்தல் அஹிம்ஸை எல்லோரிடத்தும் அன்பு சமம் ஸத்யம் ஞாநம் முதலியவைகள் பிராமண தர்மமாகும். ஜீவநத்திற்காக வேள்வி செய்து வைத்தல் வேதமோதி வைத்தல் தாநம் வாங்குதல் ஆகிய இவைகளை ப்ராமணன் கைகொள்ளலாம். இவை கிட்டாதகாலத்தே வேண்டாமென்று விலக்கப்பட்டதைத் தவிர மற்றவர் தொழிலைக் கைகொள்ளலாம். பூமியையும் ப்ரஜைகளையும் பரிபாலித்து துஷ்டர்களைச் சிக்ஷிப்பதும் அத்யயநம் வேள்வி தாநம் முதலியவைகளைச் செய்வதும்

அரசர் தர்மமாம். வ்யாபாரம் பசுரக்ஷணம் உழுது பயிரிடல் அத்யயநம் வேள்வி தாநம் முதலியவைகள் வைச்ய தர்மமாம். மூன்று வர்ணத்தாருக்கும் அவரவருக்கேற்ற தொண்டு புரிவதும் ஸத்யம் அஹிம்ஸை முதலிய பொதுவான தர்மங்களைக் கைகொள்வதுடன் மந்த்ர மில்லாமல் மற்றவர் செய்யும் பஞ்சமஹாயக்ஞம் முதலிய கர்மாநுஷ்டாநத்தைச் செய்வதும் தாநமும் சூத்ரர் தர்மமாம். ருது காலத்தில் தன் மனைவியினிடம் செல்லுதல் எல்லோரிடமும் தயை பொறுமை கர்வமில்லாமை ஸத்யம் சௌசம் ஆயாஸப்படாமை மங்களமாயிருத்தல் பிரியமாகப் பேசுதல் பேராசை இல்லாமை மைத்ரீ கார்ப்பண்யமில்லாமை பொறாமை யில்லாமை என்பன நான்கு வர்ணத்தார்களுக்கும் ஸாமான்ய தர்மமாகும். குருகுலம் சென்று சுசியாயிருந்து பிக்ஷான்னத்தால் வயிறு வளர்த்து குரு பணிவிடை செய்து கல்விகற்பது பிரும்மசாரி தர்மமாகும். வேத விரதங்களைச் செய்து ஸத்குலத்தில் பிறந்து நல்ல லக்ஷணமுள்ள கன்யகையை மணந்து ஸ்நாநம் ஸந்த்யா ஜபம் ஹோமம் தேவ பூஜை ஆதித்யம் வைச்வதேவம் முதலிய கர்மாக்களைச் செய்வது க்ருஹஸ்தாச்ரம தர்மமாம். தனக்கென வீடும் ஆஹாரமுமில்லாமல் ஸாதுக்கள் பூப்ரதக்ஷிணம் செய்து வருவார்கள். அத்தகைய விருந்தினருக்கு அன்னமளிப்பது சிறந்த தர்மமாம். வநம் சென்று காய் கிழங்குகளை ஆஹாரமாகக்கொண்டு அக்நிபூஜை அதிதிபூஜைகளைச் செய்து வருவது வாநப்ரஸ்த தர்மமாம். விதிப்படி அக்நிக்கு ஸமாதாநம்செய்து தண்டகமண்டலங்களை யேந்திக் கிராமத்திற்கோர் நாளாகச் சென்று வேதாந்த விசாரம் செய்வது ஸந்யாஸ ஆச்ரமமாகும். தனது ஆச்ரம தர்மத்தைக் கைவிடுபவனும் அன்யதர்மத்தைக் கைகொள்பவனும் ஆபத்தில்லாத காலத்தில் தன் வர்ண தர்மத்தைவிட்டு அன்யவர்ண தர்மத்தைக்

கைகொள்பவனும் பதிதனுவான். ஸ்வதர்மத்தைச்செய்வனே செய்பவன் மறுபிறப்பில் உயர்ந்த வர்ணத்தில் பிறந்து முடிவில் பிரும்மலோகம் செல்வான். ஸ்வதர்மத்தை விடாதவன் ஜிதேந்த்ரியன் பொய்கூருதவன் எவரிடத்தும் அடக்கமாகவும் பிரியமாகவும் பேசுபவன் பரத்துரோஹம் செய்யாதவன் அரண்யத்தில் இருந்தாலும் அன்யர் பொருளைக் கண்டெடுத்தும் காணுதவன் சத்ருவையும் மித்ரனையும் சமமாகக் கருதுபவன் எல்லோரிடமும் தயையுள்ளவன் ஆகியோர் ஸ்வர்க்கம் செல்வது திண்ணம். ப்ராணி ஹிம்ஸை செய்பவர் அற்பாயுளாகப் பிறப்பர். அஹிம்ஸை தைவ பக்தி பெரியோரிடமன்பு ஸதாசாரம் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷம் பெரியோர்வந்தவுடன் எழுந்து ஆஸநமளித்து நமஸ்காரம்செய்தல் முதலியவைகளைச் செய்பவர் தீர்க்காயுளாகப் பிறப்பர். பொருளிருந்தும் தாநம் செய்யாதவர் சக்தியிருந்தும் பரோபகாரம் புரியாதவர் அறிவிருந்தும் கர்வங்கொள்பவர் விவேகமிருந்தும் வித்வானை ஆஸநாதிகளால் அர்ச்சிக்காதவர் முதலியவர்கள் க்ரூரவடிவமுள்ள யமனுல் உத்திரவிடப்பட்டு நரகத்தில் தள்ளப்படுவர். தனக்குத் தெரியாவிடினும் தர்மமறிந்த பெரியோரிடம் சென்று பணிந்து தர்மத்தைக் கேட்டறிந்து அதைக்கபடமின்றி அநுஷ்டிப்போர் தேவலோகம் செலவர்.

பக்த சண்டாளன். ஓர் ஸமயம் பல ப்ரும்மரிஷிகள் ஒன்றுகூடி கைலாஸநாதனிடம் சென்று அவரை வணங்கித் துதித்து ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்து மோக்ஷமடைய ஓர் உபாயத்தைக் கூறும்படி வேண்டினர்கள். பரமசிவனும் புன்னகைபுரிந்து, முனிவர்களே! மநுவின் புதல்வனை அம்சன் என்பவனது வம்சத்திலே வைகுண்டநாதன் ஸ்ரீ கிருஷ்ணனுக அவதரிக்கப்போகிருர். அவதாரங்களுக்குள் அரியதான

அவ்வவதாரத்தைக் கைவிடாதீர்கள். நானும் பிரும்மனும் அவரை அன்றன்றும் பணிகிறோம்; ஆதலின் அவரிடம் அன்பு பூண்டு அவரருளால் மாயையைவென்று பிறவிக்கடலைக்கடந்து பேரானந்தம் பெறுவீர் என்றார். ஸ்வதர்மத்தைக் கைவிடாமல் ஸ்ரீ கிருஷ்ணனிடம் பக்தி செய்தால் விரைவில் அவனருள் கிட்டும். இரண்டுபக்ஷ ஏகாதசிகளிலும் உபவாஸமிருந்து இரவில் அவனது லீலா விசேஷங்களைப் பாடி கண்விழித்து த்வாதசியன்று அவரை அர்ச்சித்து அதிதிக்கு அன்னமிட்டுப் பாரணைசெய்வோர் வைகுண்டம் செல்வர்.

அவந்திபுரியில் விஷ்ணுபக்தியுள்ள சண்டாளனொருவனிருந்தான். அவன் ஏகாதசியன்று உபவாஸமிருப்பான். இனிய [illegible]ந்தவனாதலால் பகவானது குணகணங்களைப் பாட்டாக அமைத்துப் பாடி விஷ்ணுவின் ஆலயத்தருகே நின்று ஏகாதசி இரவெலாம் கண்விழிப்பான். த்வாதசியன்று காலை புனலாடி மனைவந்து மருமகன்முதலிய பந்துக்கள் புஜித்தபின் உண்பான். இங்ஙனமே இடைவிடாது செய்துவரும் காலத்திலே சைத்ர கிருஷ்ண ஏகாதசி யன்றிரவு இறைவனருகே காணிக்கையின்றிச் செல்லலாகாதெனக் கருதி மலர் கொய்ய க்ஷிப்ராநதி தீரம் சென்றான். ஆங்கோர் பிரும்மரக்ஷஸ் பக்தனைப்பிடித்துப் புஜிக்க ஆரம்பித்தது. பக்தன் அதைப்பார்த்து அஞ்சாது, ஐயா! இன்றிரவு என்னை விட்டுவிடு; எனது கார்யத்தை முடித்துவிட்டுக் காலையிலே வந்து உனக்கிரையாவேன் என்றான். அந்த ராக்ஷஸன் அப்பா! உன்னை ஓர் நிமிஷமும் விடமுடியாது. எனது கடும்பசிக்கு இந்தக்ஷணமே உன்னை உண்ணப்போகிறேன் என்றான். ராக்ஷஸ! சற்றுப் பசியைப்பொறு; யான் காலையில் தவறாது வந்துவிடுகிறேன்; பின்னர் என்னைப் புசித்துப் பசியாறுவாய். யான் உயிர்தப்பி ஓட இங்ஙனம் கூறுவதாக எண்ணாதே.

மனிதன்செய்யும் பாபங்களைச் சந்த்ரஸூர்யர் அக்னிவாயு பூமி ஆகாசம் ஜலம் மனஸ் பகலிரவு இருஸந்த்யைகள் ஆகியவைகள் ஸாக்ஷிகளாக இருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றன. பரஸ்த்ரீகமநமும் ப்ருஹ்மஹத்தியும் செய்தவன், மலடி புருஷன், பணம்பெற்று பூஜை செய்தவன், நன்றி கெட்டவன், மித்ர த்ரோஹி, க்ருபணன், ஏகாதசி த்வாதசி அமாவாஸை பௌர்ணமி முதலிய தினங்களில் ஸ்த்ரீஸங்கமம் செய்தவன், கொடுக்கிறேனென்று கூறி கொடாதவன், கன்யகையைவிற்றவன், ஸ்த்ரீஸங்கமம் செய்த ப்ருமசாரி, ஸன்யாஸிகள் முதலியவர்களுக்கு எந்த நரகம் உண்டோ அது நான் திரும்பி நாளைகாலை உனக்கு உணவாக வராவிடில் எனக்குண்டாகட்டுமென்று சண்டாளன் கூறினன். இதைக்கேட்டு ஆச்சர்யமடைந்த ராக்ஷஸன் போய்வா என்றுஅவனை அனுப்பினன். பக்தன் பரம ஸந்தோஷத்துடன் மலையைக் கொண்டு திருமாலை நினைத்துக் கோயிலுக்கு வெகுதூரத்தே நின்று இரவெலாம் பக்தியுடன் பாடி கண் விழித்தான். காலையிலெழுந்து கடவுளை அர்ச்சித்துச் சொன்னபடி ப்ருமராக்ஷஸை நாடிக்கிளம்பினன். நடுவழியே வந்த நண்பனொருவன் பக்தனைப்பார்த்து, மித்ர! தன்னுடல் பசு பிராமணன் ஸ்த்ரீ இவர்களைக் காக்கவும் விவாஹத்திற்காகவும் க்ரீடையிலும் கூறும் பொய் பொய்யாகாது. நீ உயிருடனிருப்பின் பல தர்மங்களைச் செய்யலாம். ஆதலின் ராக்ஷஸனிடம் போகவேண்டாமென போதித்தான். பக்தனே ஸத்யத்தைவிடச் சிறந்த தர்மம் வேறில்லை எனக்கூறி விரைவாக ராக்ஷஸனிடம் சென்றுன். இவனது ஸத்யத்தையும் மரணத்திற்கஞ்சாத தீரகுணத்தையும் கண்டு ராக்ஷஸன் வியந்து, சண்டாளா! உனது குணத்தைக் காணும்போது நீ ஓர் பிராமணனென்றே எண்ணுகிறேன். அஃதிருக்கட்டும்; நீ என்னிடம் விடைபெற்று இரவில் என்னசெய்தாய்

கூறினான். அவன் நடந்ததைக்கூற, எத்தனை காலமாக நீ ஏகாதசி இரவு நாமஸங்கீர்த்தனம் செய்கிறாய் என்றான் ராக்ஷஸன். இருபதாண்டுகளாக இங்ஙனம் நடப்பதாகபக்த னுரைக்க ஒருஏகாதசி இரவு ஸங்கீர்த்தநபயனைத் தனக்களித் தால் பக்தனை விடுவதாக அவன் கூறினான். பிராணனைவிட புண்யம் சிறந்ததெனக்கருதி பக்தன் யான்உனக்கு ஸந்தோ ஷமாக அளித்த உடலைச் சாப்பிடு; புண்யத்தைக்கேளாதே என்றான். ராக்ஷஸன் மறுபடியும் பக்தனை நோக்கி இரண்டு யாம ஸங்கீர்த்தந பலனை எனக்களித்துவிட்டு நீ ஸுகமாக மனைசென்று மனைவிமக்களுடன் வாழலாமென்றான். பக்தன் அதற்கும் ஸம்மதிக்கவில்லை. பின்னர் அரக்கன் பக்தனைப் பார்த்து நண்ப! ஓர் யாம பலனையாவது கொடு என்றான். அதற்கும் பக்தன் ஸம்மதித்தானில்லை. அதன்பின், பக்த! விடியற்காலையில் செய்த கார பயனையேனும் எனக்களித்துப் பாபத்திலிருந்து என்னைக்காக்கலாகாதோ என்று ராக்ஷஸன் வேண்டினான். இதைக்கேட்ட பக்தன், நீ யார்? என்ன பாபம் செய்தாய்? எதனால் இப்பிறவி பெற்றாய் என்றான். ராக்ஷஸன் தான் ஸோமசர்மா எனும் அந்தணனென்றும் தனக்கு நன்கு வேதம் வராவிடினும் ஓர் அரசனுக்கு ஆக்நீ த்ரனாக இருந்து வேள்வி செய்வித்ததாகவும் அதனால் கிடைத்த பொருளைக்கொண்டு டம்பமாக பனிரண்டு நாள் செய்யத்தக்க ஓர் யாகத்தைத் தான் செய்ய ஆரம்பித்த தாகவும் அது பூர்த்தியாவதற்குள் பத்தாம்நாள் சூலநோ யால் தான்இறந்ததாகவும், மந்த்ர மந்த்ரார்த்தங்களை நன்கு ணராமலும் ஸ்வரப்பிழையுடன் வேள்வி செய்வித்ததாலும் செய்ததாலும் பிரும்மராக்ஷஸ் ஜந்மம் கிட்டியதென்றும் தானிறக்கும்போது விரூபாக்ஷனுக்கு ஹவிர்ப்பாக மளிக்கப் பட்டதால் ராக்ஷஸப்பிறவி கிடைத்ததென்றும் ஆதலால் தனக்கந்த புண்யத்தை அளித்துக் காக்கவேண்டுமென்

றும் ப்ரார்த்தித்தான். பக்தன் இனி ப்ராணிவதை செய்வதில்லையென வாக்களித்தால் அவன் கோரிய புண்யத்தை அளிப்பதாகக் கூறினான். ராக்ஷஸனும் ஜீவஹிம்ஸை செய்வதில்லைஎன ப்ரதிக்ஞைசெய்ய பக்தன் அரைமுகூர்த்த காந பலனை அவனுக்கு அளித்தான். அதனால் ராக்ஷஸனது பாபமகன்றது. பக்தனைப் பணிந்து விடைபெற்று ப்ருதூதக மெனும் தீர்த்தத்தில் புனலாடி அரக்கன் அநசந வ்ரதம் பூண்டு ப்ராணனைவிட்டான். ஆதலின் ப்ரம்மலோகம் சென்று பதினாயிரமாண்டுகள் ஆங்குதங்கி பின்னர் பிராமண குலத்திலுதித்தான்.

பக்த சண்டாளனது முற்பிறவி. பாபமகன்று அரக்கன் சென்றபின் பக்தன் மனைவியைப் புதல்வரிடமளித்து விட்டுத் தீர்த்தயாத்ரைக்குச்சென்றான். விந்த்ய மலையிலுள்ள பாபமோசந தீர்த்தத்தில் மூழ்கியவுடன் அவனது பாபங்களெல்லாம் நிச்சேஷமாய் அகன்றன. பூர்வஜன்ம விருத்தமும் நினைவுக்கு வந்தது. இவர் முன் பிறவியில் வேத வேதாங்கமுணர்ந்து ஓர் துறவியாயிருந்தார். ஓர் ஆச்ரமத்திலிவர் வீற்றிருந்தபோது கள்வர் கோக்களை அபஹரித்துச் சென்றனர். அப்பசுக்களின் பாததூளி இவர் வைத்திருந்த பிக்ஷான்னத்தில் வீழ்ந்தது. அதைக்கண்டு அவர் அது அசுத்தமெனக்கருதி அதை உண்ணாது கீழே எரிந்தார். மிகப் பவித்ரமான கோபாததூளியை அவமதித்ததால் அவர் சண்டாளனானார். முற்பிறவியில் செய்த புண்யத்தின் வாஸனையால் சண்டாளனாகப் பிறந்தும் அந்த ஜாதி தர்மத்தை விடாமல் பக்திசெய்தார். பாபமோசந தீர்த்தத்தாலவர் பாபமகன்றபின் நர்மதா தீரம் சென்று அவ்வுடலைக் களைந்தார். அதன்பின் காசியில் ஓர் மூர்க்கபிராமணனாகப் பிறந்தார். ஆங்கு முப்பதாண்டுகள் சென்றபின் ஓர் நாளங்கு விகார வேஷத்துடன் வந்த ஒரு புருஷரை நோக்கிப் பரிஹாஸமாக

ஓ! ஸித்தபுருஷரே! எங்கிருந்து வருகிறீர் என்றார். உண்மையாகவே ஸித்தரான அவர் தன்னை இவன் அறிந்து கொண்டான்போலிருக்கிறது. ஆதலின் அவனிடம் தன்னை மறைத்துக் கூறலாகாதென எண்ணித் தான் ஸ்வர்க்கத்திலிருந்து வருவதாக உண்மையைக் கூறினார். அந்த மூர்க்கன் விளையாட்டாகவே அவரை நோக்கி நீர் மறுமடியும் ஸ்வர்க்கம் செல்லும்போது எனக்கோர் உதவிபுரியவேண்டும். ஊர்வசியினிடம் எனக்கும் என்னிடமவளுக்கும் அதிக காதலுண்டு. ஆதலின் நான் கூறும் ரஹஸ்யத்தை அவளிடம் கூறி அவளளிக்கும் விடையை எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்றான். லோகோபகாரத்தையே சிறந்த தர்மமாகக்கொண்டு அந்த ஸித்தர் வானுலகம் சென்று ஊர்வசியினிடம் இதைக் கூறினார். அவள் ஸ்வாமி! அங்ஙனம் அவனியில் ஒருவனுமில்லையே என்றாள். ஸித்தர் விரைவாக வந்து அம்மூர்க்கனிடம் இதைக்கூறினார். மறுபடியும் அவன் ஸித்தரே! எக்காரியம் செய்தால் அவள் என்னிடம் காதல் கொள்வாள்; அதைச் சற்று விசாரித்து வாரும் என்றான். ஸித்தர் அங்ஙனமே ஊர்வசியை வினவ, அவள் ஏதேனும் ஓர் நியமத்தைக் கைகொண்டால் அவனிடம் அன்புகொள்வதாகக் கூறினாள். அதைக்கேட்டு மூர்க்கன் இன்றுமுதல் யான் வண்டியைப் புஜிப்பதில்லை என்ற நியமத்தைக் கைகொண்டான். இதைச் சித்தர் ஊர்வசியினிடம் கூறினார். அவள் இந்த அபூர்வ நியமத்தைக் கேட்டு வியந்து அவ்வரிய புருஷனைக்காண காசிக்குச் சென்றாள். ஆங்கு கங்கையில் நீராடும் அந்த தேவமாதைக்கண்டு அம்மூர்க்கன் காமவசனாகி அவளைப்பணிந்து என்னை ஏற்றருள்வாயென வேண்டினான். ஸித்தர் கூறிய மூர்க்கன் இவனே என்று உணர்ந்து ஐயா! இதோவருகிறேன்; இங்கேயேஇரும்என்று கூறி ஸ்வர்க்கம் சென்றாள். அவனும் அவ்விடத்தைவிட்டு

அசையாமல் ஊர்வசியையே நினைத்துக் காத்திருந்தான். ஓர் மாதம் சென்றபின் அத்தேவதாசி ஓர் கிழவியாகவந்து, ஐயா! இன்று யான் ஓர் விருதமநுஷ்டித்தேன். அதன் அங்கமாக உமக்குத் தக்ஷிணையுடன் வாயநம் தந்தபின் யான் உணவு உட்கொள்ள வேண்டுமென்றுகூறி, சர்க்கரையால் செய்த ஓர் வண்டியை அவரிடமளித்து அதை உட்கொள்ளு மென்றாள். அவர் தான் வண்டியைப் புசிப்பதில்லையென நியமம் பூண்டதாகக் கூறினார். ஊர்வசி, ஐயா! நீர் மர வண்டியையன்றோ உண்பதில்லை. இஃது சர்க்கரை வண்டி யல்லவா? இதை உண்டால் நியமபங்கம் வாராதென்றாள். வேதியர் சர்க்கரையாயினும் வண்டி உருவுடனிருப்பதால் இதை உண்ணமாட்டேனென்றார். ஆனால் உமது மனை சென்று மனைவி மக்களுக்கேனுமிதை அளித்துவாரும் என்றாளவள். ஊர்வசி வரும்வரை யான் இவ்விடத்தைவிட் டகலமாட்டேனென்றுஅவர்கூற, அவரது உறுதியைக்கண்டு வியந்து ஊர்வசி, நிஜஉருவைக்காட்டி ஐயா! நீர் ரூப தீர்த்த மெனும் உயர்ந்த க்ஷேத்ரம் சென்று தவம்செய்யும்; என்னை அடையலாமென்றுகூறி ஸ்வர்க்கம் சென்றாள். அவ்வந்தணர் ஆங்குசென்று பலநாட்கள் தவம்செய்து கந்தர்வலோகம் சென்றார். நூறு மந்வந்தரகாலம்வரை ஆங்குள்ள சுகத்தை அநுபவித்தார். பின்னர் பாரினில் பார்த்திவனாகப் பிறந்து சிறிதுகாலம் ராஜ்யபாரம்செய்து புத்ரனிடம் ராஜ்யத்தை அளித்து ரூபதீர்த்தக்கரைக்குச் சென்றான். ஆங்கு உடலை விட்டபின் இந்த்ரலோகம் சென்று பலகாலம் அச்சுகத்தை அநுபவித்துப் பின்னர் பூமியில் புதனது புத்ரனான புரூர வஸ்ஸாகப்பிறந்து ஊர்வசியுடன் பலகாலம் ரமித்திருந்தார். இங்ஙனம் பகவத் பக்தியால் ஸ்வர்க்காதி ஸுகங்களைப் பெறலாம். அவரது மாயையால் மதிமயங்கி மானிடர் அவர் திருவடியைச்சேராது சிறிய இன்பத்திலே சிந்தை

கொள்வர். அவரது அருளிருந்தாலன்றி ஸர்வசக்திவாய்ந்த மாயையை வெல்வதரிது.

காமதமனனது மாயா தர்சனம்· முன்னோர் சமயம் ஆக்நீத்ரன் என்றோரரசனிருந்தான். அவனுக்குக் காமதமநன் என ஓர் புதல்வன் பிறந்தான். அவனுக்குக் காளைப்பருவம் வந்தபோது மணம் செய்வித்து அவனுக்கோர் மகன் பிறந்த பின் தன் மகனிடம் தரணியைத் தந்து தபோவநம்செல்ல வேண்டுமென்பது வேந்தனது விருப்பம். ஆனால் அதற்கு மாறாக காமத்தில் கருத்தில்லாக் காமதமநன் தன் பெயருக்கேற்ப மணத்தை விரும்பாதிருந்தான். இதை அறிந்து சிந்தை நொந்த தந்தை. மைந்தனை அழைத்துக் குழந்தாய்! இச்சிறுபிராயத்திலேயே மன்னர்குலத்துதித்த நீ துறவிகளைப்போல் இல்லற வாழ்க்கையை வெறுப்பது தகுமோ? உனக்கிது தருமந்தானோ என்றான். பணிவுடன் பார்த்திபனைப்பார்த்துக் குமாரன், மன்னா! யான்பல பிறவிகளைப் பெற்றேன்; பற்பல புத்ரர்களையும் பெற்றெடுத்தேன். இல்லறமார்க்கத்திலீடுபட்டால் இன்னும் எத்தனை பிறவி எடுப்பேனோ அறியேன். துன்பம் நிறைந்த இப்பிறவிக்கடலைக் கடக்க கண்ணனது பொற்பாதமன்றோ தோணி. ஸம்ஸாரத்திலீடுபட்டோர் மறுபடியும் புண்ய பாபங்களின் பயனான ஸுகதுக்கங்களை அனுபவிக்க உடலெடுக்கவேண்டுமன்றோ? இதற்குமுன் மூன்றாம் பிறவியில் வித்யாதர வம்சத்திலே ஸுதபஸ் என்ற தவஸியாகப் பிறந்தேன். அச்சமயம் இடைவிடாது வ்ரத உபவாஸாதிகளால் பரந்தாமனை அர்ச்சித்தேன். கருணைக்கடலான கமலாக்ஷன் கருடன்மீதேறி வந்து எனக்குத் திவ்ய தர்சநம்தந்தார். மெய்மறந்து ஆநந்தப் பரவசனாகி அவரடி பணிந்தெழுந்து கரங்குவித்துத் துதித்தேன். இதைக்கேட்டுப் பகவான் புன்னகையுடனும், கம்பீரத்வனியுடனும், பக்த! உனது

அவ்யாஜபக்தியைக்கண்டு அகமகிழ்ந்தனம்; வேண்டிய வரத்தைக்கேள் என்றார்.

தேவ தேவ! உமது மாயையால் மதியிழந்த மஹர்ஷிகளுங்கூட ஏதேனும் சிறியவரத்தைப் பெற்று ஏமாந்து செல்கின்றனர். ஆகலின் அத்தகைய உமதுமாயையை யான் கண்ணால்கண்டு களிக்க வரம்தரல் வேண்டுமென்றேன். இதைக்கேட்டு மாதவன் கூறினார். பக்தா! மாயையைப் பார்ப்பதரிது; அதை எவரும் கண்டாரில்லை. முன்பு ஓர் ஸமயம் எனது பக்தனான நாரதன் நீ கேட்டபடியே வரங் கேட்டான். அதுவேண்டாம் மற்றவரம்கேள் எனயான் பல முறைகூறியும் அவன் நிர்ப்பந்தம் செய்தான். ஆனால் இந்த தீர்த்தத்தில் முழுகு; மாயைக்காண்பாய் என்றேன். அங்ஙனம் அவன் மூழ்கியபின் காசிராஜனுக்கு ஸுசீலா என்ற பெண்ணாகப் பிறந்தான். தக்கவயது வந்தபின் விதர்ப்ப ராஜனான ஸுதர்மனை மணந்தாள். பின்னர் பல புத்ரர்களும் புத்ரிகளும் அவர்களுக்கும் பல தநயரும் தநயையுமாகப் பிறந்தனர். ஒருஸமயம் காசிராஜனுக்கும் ஸுதாமனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. அதில் ஸுசீலையின் தந்தையும் அவனது கணவனும் புத்ர பௌத்ரர்களுடன் மாண்டனர். இருவகையான துன்பத்திற்குமாளான ஸுசீலை பிதாவையும் பர்த்தாவையும் ஏனைய உறவினரையும் பெரியதோர் சிதையில்வைத்துத் தீயிட்டாள். புத்ரசோகம் பித்ருசோகம் பர்த்ருசோகம் முதலியவைகளைப் பொறுக்கமுடியாமல் துன்பமடைந்த அவள், ஹாபர்த்தா! ஹாபுத்ர! என்று கதறிக்கொண்டே தீயில் நுழைந்தாள். அந்த சுடுகாடு அழகிய ஓர் நகரமாயிற்று. அக்நியும் ஓர் தடாகமாயிற்று. ஸுசீலையும் நாரதரானாள். எதிரிலே சங்கசக்ர கதாபாணியாக யான் தோன்றி நின்றேன். யார் உன் பதி? யார் உன் பர்த்தா? யார் உன் ப்ராதா என்று யான் வினவ, நாரதர்

வெட்கமடைந்து வாய்திறவாது நின்றார். அவ்விடமே காசி க்ஷேத்ரமாயிற்று. பரமசிவனும் பரம ஸந்தோஷத்துடன் அறைக்கணமேனும் காசியைவிட்டு அகலாததால் அது அவி முக்த க்ஷேத்ரமெனப்படும். ஆங்கு யானும் பிரும்மாவும் எப்போதும் பரமசிவத்துடனிருந்து ஆங்கு உடலைவிடு வோருக்குத் தாரகமந்த்ரத்தைக்கூறி மோக்ஷமளிக்கிறோம் என்றுகூறி, பகவான் அத்தகைய மாயையைத் தர்சிக்க வேண்டுமானால் கோகா எனும் தீர்த்தத்தில் என்னை முழு கும்படி கூறினார். மாதவன் மாயா தர்சநத்தினாலுண்டா கும் தீமையை விளக்கியும் அதில் எனக்குண்டான ஆவலை அடக்கமுடியவில்லை. கோகா தீர்த்தத்தில் முழுகினேன். உடனே அழகிய ஓர் சண்டாள கன்யகையானேன். அந்த மில்லாத ஓர் சண்டாளனை மணந்தேன். அந்தர்களான இருபுதல்வர்களும் செவிடான ஓர் கன்யகையும் எனக்குப் பிறந்தார்கள். தரித்ரனும் குரூபியுமான கணவனையும் கண் ணும் காதுமில்லாத குழந்தைகளையும் கண்டு மநம் நொந்து திநந்தோறும் தலைவிதியை நினைத்து நினைத்து அழுதேன். ஓர் நாள் இடுப்பில் குடத்தை எடுத்துவந்து ஓர் நதிக்கரை யில் வைத்துவிட்டு நீரில்மூழ்கினேன். உடனே பகவானது அருளால் பழைய ஸுசீலரெனும் அந்தணரானேன். சண் டாளன் நெடுநேரமாகியும் தன் மனைவி மனைக்குவராததால் ஆற்றினருகே அவளைத் தேடிவந்தான். குடம்மட்டிலும் கரையில் காணப்பட்டது. அரிய மனைவி ஆற்றிலிறங்கி இறந் திருப்பாளென்றெண்ணி அவன் கதறினான். அதைக்கண்டு அவன் மக்களும் அழ ஆரம்பித்தனர். இறைவனருளால் இச்சண்டாளனது மனைவியாக தானிருந்ததை உணர்ந் தேன். அவர்களிடம் எனக்கு அளவில்லாக் கருணை உதித் தது. ஆதலின் நடந்த விருத்தாந்தத்தை அவர்களுக்கறிவித் தேன். எனது விரஹத்தைத் தாளாமல் அவர்களும் அந்த

நதியில் வீழ்ந்து உடலைவிட்டனர். சிறுகுழந்தைகளும் அவர்கள் தந்தையை நினைத்துக் கதறிக்கொண்டே இறந்த தால் நானும் பொறுக்க முடியாத விரஹ துன்பத்தால் அந் நதியிலேயே வீழ்ந்து உடலைவிட்டேன். பின்னர் ஓர் வைச்யகுலத்தில் பிறந்து பூர்வ ஜன்மவாஸனையால் கோகா நதியிலேயே உடலைவிட்டேன். இச்சமயம் தங்களுக்குப் புத்ரனுகப் பிறந்தேன். இப்பிறவியிலும் மாயையைவென்று மாதவனைஅடைய மார்க்கம்தேடாது மனைவியைமணந்து இல் லறத்திலீடுபட்டால் இன்னும் எத்தனைபிறவி எடுக்கவேண் டுமோ? யாரறிவர். ஆதலின் எனக்கு மணம்வேண்டாம். வநம் செல்வேன். கோகாநதியடைந்து வராஹமூர்த்தியைப் பூஜித்துப் பிறவிக்கடலைக் கடப்பேனென்றுகூறி அங் ஙனமே காம தமநன் மோக்ஷமெய்தினன்.

கலியின் தோஷமும் குணமும். ப்ரளயத்தைப் பற்றிக் கூறும்படி முநிவர்கள் வேண்ட வ்யாஸர் அதைக்கூற ஆரம் பித்து இடையே கலியைப்பற்றியுமுரைத்தார். நமது ஓர் மாதம் பித்ருக்களுக்கு ஓர் திநமாகும். நமது ஓராண்டு தேவர்கட்கு ஓர்நாளாம். இரண்டாயிரம் சதுர்யுகங்கள் பிரும்மாவிற்கோர் திவஸமாகும். க்ருத த்ரேதா த்வாபர கலி என்பன நான்கு யுகங்கள். கலியுகத்திலே கால்பங்கு தான் தர்மமிருக்கும். வர்ணாச்ரமதர்மம் வேதமோதல் கற்பு பித்ருபக்தி குருபக்தி விவாஹதர்மம் முதலியவைகள் மிகக் குறையும். தனிகனே அரசனுவான். அவரவரிஷ்டமே சாஸ்த்ரமாகும். கலியிலுள்ளோர் சாஸ்திர விதியைமீறி இஷ்டமான தேவதையை அர்ச்சிப்பார். இஷ்டமானபடி உபவாஸமிருப்பர். பணமில்லாப் புருஷனைப் பெண்கள் கை விடுவர். அழகும் தனமுமே வரனுக்குவேண்டிய யோக்ய தையாகும். தனக்கென்றே தநம் தேடப்படும். தநம்தேடவே புத்தி பயன்படும். பெண் மக்கள் அடக்கமின்றி ஸ்வேச்

சையாகத் திரிவர். அநியாயமார்க்கமாகவே அர்த்தார்ஜநம் செய்வர். மழையில்லாது துர்ப்பிக்ஷம்தோன்றும். உணவின்றி பலர் உயிர் துறப்பர். ஸ்நாடாமலும் தேவ பித்ரு அதிதி பூஜைசெய்யாமலும் உண்பர். ச்ராத்தம் செய்யார். இரண்டு கரங்களாலும் சிரஸைச் சொறிவார்கள். பொய்யும் க்ரூரப் பேச்சுமதிகமாகும். ஸ்வ வர்ண ஆச்ரம தர்மத்தைவிட்டு அன்யதர்மத்தைக் கைக்கொள்வர், சூத்ரர்கள் காஷாயமணிந்து ஸந்யாஸாச்ரமிகள்போல் திரிவர். வேத தர்மத்தை விடுவதால் அற்பாயுளாகப் பிறந்திறப்பர். ஐந்தாறு வயதில் பெண்கள் ப்ரஸவிப்பார்கள். இருபது வயதிற்குமேல் எவரும் பிழைத்திரார். ஸாதுக்களும் ஸதாசாரமும் குன்றி, துஷ்டர்களும் துராசாரமும் துர்மதமும் விருத்தியாகும்போது கலி செழித்துளதென்றறியலாம். முதல் மூன்று வர்ணங்களும் சீர்குலைந்து நான்காவது வர்ணப்ராயமாகவே உலகிருக்கும். பூமி நிஸ்ஸாரமாக இருக்கும். புருஷர்களது மூக்கு உள்ளடங்கி இருக்கும். தலையில் சிகைதரிக்க மாட்டார்கள். அன்னவிக்ரயம்செய்ய அஞ்சார். ஆலயங்களிலும் பக்தி குன்றி ஸேவை வ்யாபாரமாக நடைபெறும். பெண்மக்கள் தலைமயிரைவிற்று ஜீவிப்பார்கள். எல்லோரும் வேதாந்தம் பேசுவர். தாழ்ந்தவர் மேலானவரது தர்மத்தைக் கைக்கொண்டு தர்மோபதேசம் செய்வர். இரண்டு வயதான காளைகளை ஏரில் கட்டுவர். தானம் செய்வோர் குறைவர். யாசகர் அதிகமாவர். புருஷர் குறைவர். பெண்கள் அதிகமாவார்கள். ஓர் ஸ்த்ரீ பல புருஷர்களைமணப்பாள். எல்லோரும்கவிகளாக விளங்குவார்கள்.

இவ்வளவு தோஷங்களிருப்பினும் ஓர் வகையில் கலி மிகச்சிறந்ததேயாகும். இதில் பதிக்குச்செய்யும் பணிவிடையால் பெண்களும், சூத்ரர்களும் எளிதில் நற்கதிபெறலாம். க்ருத யுகத்தில் பத்தாண்டுகளிலும் த்ரேதையில் ஓராண்டி-

னும் த்வாபரத்தில் ஓர் மாஸத்திலும் ஸாதிக்கத்தக்க புண்யத்தைக் கலியில் ஒரே நாளில் ஸம்பாதிக்கலாம். த்யானத்தினால் கிருதயுகத்திலும் யக்ஞத்தால் த்ரேதையிலும் பகவதாராதநத்தால் த்வாபரத்திலும்எந்தப்பலன்கிட்டுமோஅதை கலியில் "கேசவ" என்று பகவந் நாமாவைக் கூறுவதால் அடையலாம். ஆயாஸமதிகமில்லாமல் அபரிமிதமான பயனை அளிப்பதால் கலி மிக ச்லாக்யமானதாகும். ஆதலின் கலியில் உண்டாகும் தோஷங்களைப் பக்தியினாலும் ஸ்வல்ப தபஸ் ஜபம் தாநம் ஸ்வதர்மாசரணம் முதலியவைகளாலும் அகற்றி விரைவில் நற்கதிபெற முயலவேண்டும்.

ப்ரளயம். ஒரு பொருள் தன்னுடைய காரண வஸ்துவினுடன் ஒன்றாகச்சேர்வது ப்ரளயமெனப்படும். அது ப்ராகிருதகம் நைமித்திகம் ஆத்யந்திகமென மூவ்வகைப்படும். இரண்டு பரார்த்தம்வரை. ஜீவித்திருக்கும் பிரும்மாவின் ஆயுள்முடிந்தபின் உண்டாகும் ப்ரளயம் நைமித்திகமெனப்படும். ஆயிரம் சதுர்யுகங்கள் சென்றபின் நூறாண்டு மழையில்லாமல் உலகம் துன்பமடையும். அதன் பின்உலகை ஒடுக்க கிருஷ்ணன் காலருத்ரனாக மாறுகிறார். ஸூர்யனது ஏழுகிரணங்களில் அவர் புகுந்து பாரிலுள்ள ஜலத்தைஉலர்த்துகிறார். பின்னர் ஏழு ஸூர்யர்கள் ஒன்றாகத்தோன்றி பூமியில் ஒருபொருளுமில்லாதபடி எரிக்கின்றனர். பூமி ஆமை ஓடுபோல் ஆனபின் பாதாளத்தையும் அவர்கள் எரிக்கின்றனர். பாதாளமும் மேலே உள்ள உலகங்களும் காலாக்நிருத்ரனால் பஸ்மமாகச் செய்யப்படுகின்றன. பின்னர் ஸம்வர்த்தகமெனும் மேகங்கள் ஜலவர்ஷத்தினால் உலகங்களை ஒரேஸமுத்ரமாகச் செய்கின்றன. அதன்பின் பிரும்மனாக இருந்து பத்மநாபன் முன்போல் உலகைப் படைக்கிறார்.

பலகாலம் சென்றபின் பஞ்சபூதங்களின் குணங்கள்

மழுங்கி அததுவும் தன்தன் காரணத்தில் லயமாகின்றன. பதினுன்கு உலகங்களும் ஒடுங்கி சுத்த ஆகாசமாகி நின்று ப்ரகிருதியினிடம் லயமாகின்றன. ஆதலின் அது ப்ராக்ருத லயமெனப் படுகிறது. பலகோடி பிறவிகளில் செய்த புண்யவிசேஷத்தால் நித்யா நித்ய வஸ்துவின் பகுத்தறிவு, இஹபரலோகத்தில் வெறுப்பு, சமதமாதிகள், தீவ்ர மோக்ஷேச்சை ஆகிய ஸாதந சதுஷ்டயங்களைப் பெற்று ஸத்குருவின் அருளால் மஹாவாக்ய உபதேசம் பெற்று ச்ரவண மநந நிதித்யாஸனாதிகளால் பரப்ரஹ்மத்தினிடம் இரண்டற ஒன்ருகக் கலந்து ஜநந மரணங்களுக்குக் காரணமான மாயையை ஜயிப்பது ஆத்யந்திக ப்ரளயமெனப்படும்.

ஜ்ஞாந ஸாதநங்கள். ஜ்ஞாநமுண்டாவதற்கு வைராக்யம் காரணமாகும். வைராக்யமுண்டாக ஸம்ஸாரம் நிஸ்ஸாரம், பிறப்பிறப்பென்பது பொறுக்கொணுத் துன்பத்தையளிப்பது, தாபத்ரயம் ஸஹிக்க முடியாதது என்ற ஞாநம் காரணமாகும். ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் எனத் தாபம் மூவ்வகைப்படும். ஆத்யாத்மிக துக்கம் சாரீரகம் மாநஸிகமென இருவகையாம். தலைவலி ஜ்வரம் சூலை குல்மம்முதலியன சரீரதுன்பங்கள். காமம்குரோதம் அஸூயைரோகம் முதலியன மாநஸிகங்கள். சீதோஷ்ணம் இடிமின்னல் முதலியவைகளாலுண்டாகும் தாபம் ஆதிதைவிகமெனப்படும். மிருகம் பக்ஷி பேய் ராக்ஷஸன் பாம்பு தேள் முதலியவைகளாலுண்டாகும் துன்பம் ஆதிபௌதிகமாகும். மலமூத்ர மத்தியில் ஓர்புறம் ஜாடராக்நி எரிக்க மற்ருேர்புறம் புழுக்கள் பிடுங்க கால் கைகளை அசைக்கவோ நீட்டிமடக்கவோ முடியாமல் பத்துமாதங்கள் தாயின் கருவில் நாம் பட்டதுன்பம் சொல்ல முடியாதது. ப்ராஜாபத்யவாயுவினுல் தலைகீழாகத் தள்ளப்பட்டு மிகச் சிறியத்வாரத்தின் வழியாக வெளியில் வரும்போது அங்கங்

களெல்லாம் நொறுங்கி மூச்சுவிடமுடியாமல் ப்ரக்ஞையற்று ஆயாஸத்துடன் ஆபாஸநிலையில் அவனியில் விழும் துன்பத்தை நினைத்தால் இப்பிறவியில் எவருக்குத்தான் வெறுப்புத் தோன்றாது? பசிதாஹமென்றுகூற வாயில்லாமலும் தினவைச்சொறிய ஸ்வாதீநமில்லாமலும் பற்பல நோய்களுக்குப் பாத்திரமாகும் பால்யதசையும், சதை சுறுங்கி மயிர்நரைத்து அங்கம்தளர்ந்து உடல்குன்றி புலன்கள் மெலிந்து பல் விழுந்து சொள்ளுபெருக கை கால் தலைகள் ஆட எல்லோரும் எள்ளி நகைக்கத்தக்க மூப்பினாலுண்டாகும் துன்பத்தையும் ஊன்றிப்பார்த்தால் உடல் வேண்டாமென நினைக்காதவருண்டோ? இவைகளை அடிக்கடி சிந்திப்பதுடன் சிறிது யோகாப்யாஸமும் செய்யவேண்டும். நல்ல குருவைநாடி யோகமுறைகளை நன்குகேட்டு அதற்குரிய ஆஹாரம் ஆஸநம் முதலியவைகளையும் தெரிந்துகொள்ளவேண்டும். மாவுகஞ்சி மோர் பழம் பால் ஆகியவைகள் யோகஸாதநங்களான உணவுகளாம். ஸதாசார்யனில்லாமலும் ஸதாசாரமில்லாமலும் யோகாப்யாஸம் செய்தால் ஊமை செவிடு குருடு உன்மத்தன் முதலிய நிலைமைநேரிடும். இந்த்ரியங்களை அடக்கி ஸமமாயும் சுத்தமாயுமுள்ள இடத்தில் கிழக்குமுகமாக உட்கார்ந்து காலை இராவின்முற்பகுதி முதலிய சாந்தமான காலங்களில் யோகம்செய்ய முயற்சிக்கவேண்டும். ஆமை தன்னுடலில் அவயவங்களைச் சுறுக்கிக்கொள்வதுபோல் ஸகல இந்திரியங்களையும் மனதில் ஒடுக்கி மனதை ஹ்ருதய கமலத்திலுள்ள புருஷோத்தமனிடம் செலுத்தவேண்டும். இதுவே யோகமெனப்படும். இந்தயோகத்தைக் கெடுக்கக் காமம் கோபம் லோபம் பயம் ஸ்வப்நம் என ஐந்து ப்ரதிபந்தகங்களுண்டு. அடக்கத்தால் கோபத்தையும் ஸங்கல்பம் செய்யாமல் காமத்தையும் ஸத்வகுணத்தால் நித்ரையையும் ஏமாராமலிருப்பதால் பயத்தையும் ஸத்ஸங்கத்தால் லோபத்

தையும் ஜபிக்கவேண்டும். இவைகளை ஜயித்தபின் விதி வழுவாமல் யோகம் செய்திடின் ஆறுமாதத்தில் சப்தப்ரஹ்மத்தைத் தர்சிக்கலாம். ப்ரஹ்மஸாக்ஷாத்காரத்தைப் பெற முடியாதபடி அணிமாதி அற்பஸித்திகள் தடைசெய்யும். விவேகி அவைகளை மதியாது மோக்ஷேச்சைகொண்டு யோகம் செய்திடின் முக்தியைப் பெறலாம். கராலஜநகர் வஸிஷ்டரிடம் சென்று யோகம் கர்ம ஞாநம் இவைகளின் சிறப்பைக் கேட்டறிந்து ஞாந மார்க்கத்தினால் மோக்ஷமெய்தினர். அந்த ஞாநமுண்டாக ஸ்வதர்மாசரணத்துடன் புராணச்ரவணம் செய்யவேண்டும். அதனால் ஆயுஸ் கீர்த்தி ஸந்ததி தர்மம் முதலியவைகளுமுண்டாகும். தர்மத்தினால் மோக்ஷத்தை அடையலாம் என்று கூறிய ஸூதரை மஹர்ஷிகள் தக்க மரியாதையுடன் பூஜித்தனர். அவர் முநிவர்களிடம் விடைபெற்றுச் சென்றார்.

கௌதமீ மாஹாத்ம்யம்.

நால்வகைத் தீர்த்தங்கள். தர்சந மாத்ரத்தினாலும் ஸ்நாநத்தினாலும் மஹாபாபங்களை அகற்றி ஸத்கதியை யளிக்கவல்ல ஜலத்திற்குப் புண்யதீர்த்தமென்று பெயர். அது மாநுஷம் ஆர்ஷம் ஆஸுரம் தைவமென நால்வகைப்படும். அம்பரீஷன் ஹரிச்சந்த்ரன் முதலிய மனிதர்கள் தனது ச்ரேயஸ்ஸிற்காகவோ கீர்த்திக்காகவோ அல்லது தேவ பூஜைக்காகவோ நிர்மாணம் செய்த நதிகள் மாநுஷதீர்த்தமெனப்படும். இதைவிட வஸிஷ்டர் ப்ருகு முதலியவர்களால் உண்டுபண்ணப்பட்ட ஆர்ஷதீர்த்தங்கள் சிறந்தன. அவைகளைவிட கயன் விருத்ரன் முதலிய அஸுரர்களால் படைக்கப்பட்ட ஆஸுர தீர்த்தங்கள் மிகச் சிறந்தனவாம். இவை

களையும்விட தேவர்களிருப்பிடமான பர்வதங்களிலிருந்து தேவர்களால் படைக்கப்பட்ட தேவதீர்த்தங்கள் மிகமிகச் சிறந்ததெனலாம். ஹிமவானுக்கும் விந்த்யமலைக்கு மிடையே ஆறுதேவநதிகளுண்டு. தென்கடலுக்கும் விந்த்ய த்திற்கும் இடையே ஆறுநதிகளிருக்கின்றன. இப்பனிரண்டு தேவதீர்த்தங்களே எல்லாவற்றையும்விட மிக உயர்ந்த உத்தம புண்ய தீர்த்தங்களாகும். கோதாவரீ, பீமரதீ, துங்கபத்ரா, வேணிகா, தாபீ, பயோஷ்ணீ, பாகீரதீ, நர்மதா, யமுநா, ஸரஸ்வதி, விசோகா, விதஸ்தா ஆகிய இவைகள் பனிரண்டு புண்யதீர்த்தங்களின் நாமங்களாம். இவைகளுக்குள்ளும் மூன்று தேவர்களால் படைக்கப்பட்ட கங்கையே மிகச்சிறந்தவளாம். அவளது அவதாரத்தைக் கேளுங்கள்.

கங்காவதாரம். முன்பு ஓர்ஸமயம் தாரகனெனுமரக்கன் பல்லாண்டு தவம் புரிந்து, பிறந்த பத்துத் திநங்களுள்ள ஓர்குழந்தைதான் தன்னைக்கொல்லலாம். மற்றவரால் தனக்கு மரணமில்லையென பிரும்மனிடம் வரம் பெற்றான். ஆதலால் அவன் ஆணவங்கொண்டு அமரரையும் அவர்களைப்போற்றிப் பணியும் அந்தணர்களையும் ஹிம்ஸித்து வந்தான். தேவராஜ்யத்தையும் பிடுங்கிக்கொண்டு தேவர்களை அரக்கருக்குத் தொண்டுபுரியும்படி செய்தான். ஆதலால் அமரரனைவரும் சதுர்முகனுடன் வைகுண்டநாதனைப் பணிந்து துதித்துத் தாரகனைக் கொல்லும்படி வேண்டினர். துறவி வேடம் பூண்டுத் தவம்புரியும் பரமசிவம் பார்வதியை மணக்கும்படிச் செய்து அந்த ஆதிதம்பதிகளுக்கு ஜநிக்கும் அரியகுழந்தையின் மூலம் அரக்கனைவென்று ஸுகம்பெறுவீர் என்று திருமால் திருவாய்மலர்ந்தருளினார். பின்னர் இந்த்ரன் காமனை அழைத்துக் கடுந்தவம் புரியும் கைலாஸநாதனை உமையவளிடம் காதல் கொள்ளும்படிச் செய்தான் பரம

சிவத்திற்குப் பெண்கேட்க வஸிஷ்டர் அருந்ததியுடன் இமவானிடம் சென்றார். மலையரசனும் மாதேவனுக்கு மகளை அளிக்க மனமுவந்து விச்வகர்மனை அழைத்து விவாஹ மண்டபம் அமைக்கும்படிக் கூறினான். முப்பத்துமுக் கோடி தேவர்களும் தத்தமக்கேற்ற தொண்டுசெய்து மாதேவன் மணத்தைச் சிறப்பித்தனர். வேதியின் அருகே உட்கார்ந்து சதுர்முகன் வைதிக கார்யத்தைச் செய்வித்தார். சிவன் சிவையின் திருவடியை அம்மியின்மீது வைக்கும்போது அன்னையின்பாத அழகைக்கண்ட பிரும்மாவின் இந்த்ரியம் ஸ்கலநமாயிற்று. அதை அவர் ஒருவருமறியாதபடி காலால்தேய்க்க அதிலிருந்து வாலகில்யர் எனும் முனிகணம் தோன்றிற்று. இதைக்கண்டு எல்லோரும் வியந்து வாய்திறவாதிருக்க வெட்கத்தால் தலைகுனிந்து சதுர்முகன் பயந்து வெளியிற் சென்றார். அதைக்கண்டு கருணைக்கடலான ஸதாசிவன் அக்குற்றத்தை மன்னித்து அவாது பாபமகல பூமியை ஓர் பாத்ரமாக்கி அதில் அதிபவித்ரமான ஜலத்தைவிட்டு பவமாந ஸூக்தங்களாலதை ஜபித்துத் தனது சக்தியை அங்குத் தங்கும்படி ஆணையிட்டார். அதே கங்கை எனப்படும். அக்கமண்டலுவைச் சதுர்முகனிடமளித்து இதை நினைத்தால் மாநஸிக பாபமும் நமஸ்கரித்தால் வாசிக பாபமும் இதில் செய்யும் ஸ்நாந பாநாதிகளால் சாரீர பாபங்களும் அகலும்என அதன் பெருமையைப் பரமசிவன்கூறினார். அதை ஸத்யலோகத்திற்கெடுத்துவந்து சதுர்முகன் ப்ரதிதிநம் பூஜித்துவந்தார். ஓர்ஸமயம் மஹாபலியை அடக்கும் பொருட்டு த்ரிவிக்ரமாவதாரம் செய்த திருமாலின் திருவடி ஆங்கு காணப்பட்டது. விதிப்படி அதைப் பூஜிக்கக் கருதி பரமசிவன் தனக்களித்த பவித்ரமான கங்காஜலத்தால் அபிஷேகம் செய்தார். அந்த ஜலம் மேருமலையின்மீது விழுந்து நான்குதிக்குக்களிலும் சென்றது. தென்புறமாக

வந்த ஜலத்தைக் கங்காதரன் தனது ஜடையில் தரித்தார். மேற்குப்புறமாகச் சென்றது மறுபடியும் ப்ரம்மனது கமண்டலுவால் ஏந்தப்பட்டது. வடதிசையிற் சென்றதை வைகுண்டநாதன் ஏற்றுக்கொண்டார். கீழ்த்திசையில் சென்ற ப்ரவாஹத்தைத் தேவர்களும் முநிவர்களும் பித்ருக்களும் க்ரஹித்துக் கொண்டனர். பரமசிவன் ஜடையிலிருந்த கங்கையில் பகிரதன் ஓர் பாதியையும் கௌதமர் மற்றை பாதியையும் பூமிக்குக் கொண்டு சென்றனர்.

கௌதமர் கங்கை கொண்டுவந்தது. பரமசிவன் தனது ஜடாமண்டலத்திலே ரஸரூபிணியான கங்கையைமறைத்து வைத்திருப்பதும் அவளிடம் அதிகம் அன்பு பாராட்டுவதும் உமாதேவியின் உள்ளத்தை உறுத்திற்று. ஓர் நாள் அன்னை கங்காதரனைப்பணிந்து, நாத! அடியாள் பல்லாண்டு தவம்புரிந்து தவப்பயனாகத்தங்களை மாலையிட்டேன். எனது பாக்யமான என்நாதன் தலைமீது வேறொருத்தியிருப்பது தருமமோ? அவளை அவனியில் விட்டுவிடுங்கள் எனறாள். ரஸிகரான பகவான் ரஸரூபிணியான கங்கையைவிட மனமில்லாது பேசாமலிருந்தார். தேவி கோபங்கொண்டு ஸ்கந்தன் விநாயகன் தோழியான ஜயை ஆகியவர்கள் முன்னிலையில் என் நாதன் என்னிடம் அன்பில்லாது அன்யஸ்த்ரீயினிடம் ஆசைகொண்டிருப்பதால் முன்போல் இமயமலை சென்று தவம் செய்கிறேனென்றாள். அன்னையின் துன்பத்தை யகற்ற விநாயகன் ஓர் யுக்திசெய்தார். சிவனிடமுள்ள கங்கையைத் தரணியில்கொண்டுபோகும்படிச்செய்ய வேறெந்த வழியிலும் வேறெவராலும் முடியாது. தவஸிகளது தவத்தினும் துதியினாலும் அகமகிழ்ந்து பரமசிவன் கங்கை மாத்ரமல்ல வேறெதை வேண்டினுமளிப்பரென்று கண்டு கஜாநநன் அன்னையைநோக்கித் தாயே! நீ வருந்தவேண்டாம். விரைவில் கங்கை பூமிக்குச் செல்லும்படிச் செய்கிறேனென்று

விடைபெற்று ஜயையையும் குஹனையுமழைத்துக் கொண்டு பூமிக்குச் சென்றார். அச்சமயம் இருபத்திரண்டு வருஷங்களாக மழைபொழியாது துர்ப்பிக்ஷம் தோன்றியதால் உணவில்லாது உலகம் துன்புற்றது. அச்சமயம் பிரும்மகிரி என்ற மலைமீதுள்ள கௌதமர் தன் தவவலிமையால் தானியங்கள் விளையும்படிச்செய்து விருந்தினருக்கு அறுசுவை அன்னமிட்டுவந்தார். இதைக்கேட்ட மஹர்ஷிகளெல்லோரும் உருண்டு திரண்டு கௌதமாச்ரமத்திற்குச் சென்றனர். அவர் எல்லோரையும் வரவேற்று அவரவருக்கும் தக்க உணவளித்துத் தந்தைபோல் காப்பாற்றிவந்தார். விநாயகரும் மற்றவர்களுடன் வேதியர் வடிவம்தாங்கி சில காலம் மஹர்ஷிகளுடன் கூடியிருந்தார். ஓர் நாள் இவர் முனிவர்களைப்பார்த்து நாம் எல்லோரும் கௌதமர் உணவை உட்கொண்டு அவருக்கு அடிமைகளாகிவிட்டோம். துர்ப்பிக்ஷமகன்று ஸுபிக்ஷமான காலத்திலும் இவர் அன்னத்தைப் புசிப்பது நீதியல்ல என்றார். எல்லோரும் இதை ஆமோதித்துக் கௌதமரை அணுகி தங்களாச்ரமம்செல்ல விடை கேட்டனர். மஹர்ஷி அவர்களைவிட்டுப்பிரிய மனமில்லாமல் யான் தங்களுக்கேதேனும்அபசாரம் செய்தேனோ? ஏன் இவ்விடத்தைவிட்டுச் செல்லவேண்டும்? என் பிரார்த்தனைக்கிணங்கி இன்னும்சிறிதுகாலம் இங்குத்தங்கிப் பின்னர் செல்லலாம் என்றார். இதைக்கேட்ட கஜாநநர் முனிவர்களை நோக்கி ரஹஸ்யமாக, இவர் நமக்கு நல்வழியில் வீடுசெல்லவிடைதரார். ஆதலின் யான் ஓர் யுக்திசெய்கிறேன். அதன் பின் எல்லோரும் தம்தம் ஆச்ரமம் செல்லலாமென்றுகூறி ஜயையைஅழைத்து ஓர் பசுவாக்கிக் கௌதமர் நிலத்தில்விளைந்திருக்கும் பயிர்களைமேயும்படியும் அவர் அதைஓட்ட ஓர் புல்லால் தீண்டியபோது பாரினில்வீழ்ந்து பிராணனைவிடாமலும் விடுவதுபோலும் நடிக்கும்படிக்கூறினார். அங்ஙனமே ஆவுரு

தாங்கிய ஜயை பயிரை அழிக்கும்போது கௌதமர் ஓர் புல்லையெடுத்து அதை ஒட்டினார். புல் தன்மேல் பட்டவுடன் அப்பசு பூமியில்விழுந்து துடித்தது. இதைக்கண்ட தவஸிகளெல்லோரும் ஹா! ஹா! இதென்ன? இவரோ இந்தக் கார்யம்செய்தார்! எனக்கூக்குறலிட்டார்கள். இனி ஓர் க்ஷணமேனும் இங்கு தங்கலாகாது. இந்தப் பாபம் இவர் அன்னத்தை உட்கொள்பவர்களுக்கும் வருமெனக்கூறி எல்லோரும் புறப்பட்டனர். கௌதமர் மஹர்ஷிகளைப்பணிந்து இந்தப் பாபத்திலிருந்து தன்னை விடுவிக்கத்தக்க ப்ராயச்சித்தம் ஒன்றை விதிக்கும்படி வேண்டினார். மற்ற முநிவரனைவரும் விநாயக வேதியரை பிராயச்சித்தம் கூறும்படியும் அவர் சொல்வதைத் தாங்கள் ஏற்பதாகவும் கூறினார்கள். விநாயகரும் தான்வந்த வேலை ஸித்தித்ததெனக் கருதி பரமசிவத்தின் ஜடாமண்டலத்திலுள்ள கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்து இந்தப் பசுவின்மீதுவிடின் பாபமகலும். பசுவும் பிழைக்கும். அதன்பின் நாங்களும் தங்கள் ஆச்ரமத்தில் வஸிப்போமென்றார். கௌதமர் அங்ஙனமே செய்வதாக வாக்களித்தபின் முநிவர்களும் விநாயகரும் தம் தம் இருப்பிடம்சென்றனர். கௌதமர் ஏன் இங்ஙனம் நாம் பசுவைக் கொல்லத்தக்க நிலைநேர்ந்ததெனஞானக்கண்கொண்டு நோக்கினார். உண்மை விளங்கிற்று. உமையவள் உள்ளங்குளிரவும் உமாஸுதன் புத்ரர் கடமையைச் செய்யவும் பாரிலுள்ளோர் பாபமகலவும் பூமிக்குக் கங்கையைக் கொண்டுவருவோம். கைலாஸநாதனை உபாஸிக்க பிரும்மகிரியே ஏற்ற இடமென்று எண்ணி ஆங்குச்சென்று கௌதமர் பரமசிவத்தையும் அம்பிகையையும் துதித்தார். சம்புவும் உமையாளுடன் அங்குத்தோன்றி, பக்த! யாதுவரம் வேண்டுமென்றார். கௌதமர் தங்கள் ஜடையிலுள்ள கங்கையைப் பூமிக்குச் செல்லும்படி அருள்புரிய வேண்டுமென்றார். பகவான் அங்

னமே அருள்புரிந்து இந்தவரம் மூவ்வுலகிற்கும் பயன்தரத் தக்கதாதலின் உனக்குவேண்டிய வரத்தைக் கேளென்றார். தான்கூறிய ஸ்துதியைப்பாடுவோரது பாபம் அகலவேண்டு மென்றும் கங்கையை நினைத்தாலும் ப்ரும்மஹத்யாதிபாபங் களும்அகலவேண்டுமென்றும் அவர் வரம்கேட்டார். அதையு மளித்துப் பகவான் அந்தர்த்தானமானார். பின்னர் சிவ ஜடை யிலிருந்து பிரும்மகிரியின்மீது வீழ்ந்த கங்கா ப்ரவாஹம் கௌதமரைப் பின்பற்றி பூமிக்குச்சென்றது. அச்சமயம் தேவர்கள் வாத்யகோஷத்துடன் ஜயகோஷம்செய்து புஷ்ப மாரி பொழிந்தனர். கௌதமரால் அவனிக்குக்கொண்டு வரப்பட்டதாதலின் கங்கைக்குக் கௌதமீ என்றோர் பெயர் வழங்கிற்று. முனிவர் அப்பசுவை எழுப்பியபின் கங்கை சிவனிடம்செல்ல உத்திரவு கேட்டாள். மஹர்ஷி மூவ்வுல கும் க்ஷேமமடையவே நீ இங்கு அழைக்கப்பட்டாயாதலால் அங்குச் செல்லலாகாதென்றார். அவளும் அவனியிற்றங்கி னாள்.

பகீரதன் கங்கை கொண்டுவந்தது. இங்ஙனம் கங்கை யின் ஓர் பகுதியைக் கௌதமர் கொண்டுவரப் பகீரதன் மற் றோர் பகுதியைக் கொண்டுவந்தான். அதைக்கேளுங்கள். ஸூர்யவம்சத்திலே ஸகரன் என்றோர் சக்ரவர்த்தி இருந் தான். அவனுக்கு ஸந்ததி உண்டாகவில்லை. ஆதலால் வஸிஷ்டரிடம்சென்று ஸந்ததி உண்டாகும்படி அநுக்ரஹம் செய்ய ப்ரார்த்தித்தான். அவர் அரசன் மனைவி இருவர் களில் ஒருத்திக்கு ஸந்ததியை விருத்திசெய்யக்கூடிய ஓர் புதல்வனும் மற்றொருத்திக்கு மிக்க பலசாலிகளும் அற்பாயு ளுள்ளவர்களுமான அறுபதினாயிரம் புத்ரர்களும் பிறப்பர் என ஆசிர்வதித்தார். அங்ஙனமே அரசனுக்கு ஸந்ததி உண்டானபின் அவர் ஓர் அச்வமேதயாகம் செய்யக்கருதி னார். அதன்பொருட்டு ஓர் குதிரையைப் பூப்ரதக்ஷிணம்

செய்ய அனுப்பினார். அதன்பின் அறுபதினாயிரம் புத்ரர்களும் அதைக்காக்கச்சென்றனர். இந்த்ரன் அச்சமயம் ஆகாயத்தில் மறைந்திருந்து அக்குதிரையைத் தூக்கிச்சென்றான். அரக்கர்கள் பாதாளத்தில் படுத்துறங்கும் கபிலமுநிவரது தலையினருகே அவ்வச்வத்தைக் கட்டிவிட்டார்கள். பரியைத்தேடிப் பாதாளம்சென்ற ஸகர புத்ரர்கள் அச்வத்தினருகே படுத்துறங்கும் கபிலரை இவரே இதைத்திருடியவரெனக் கருதி காலால்உதைத்தனர். அவர் கண்விழித்துப் பார்த்தவுடன் அனைவரும் பற்றிஎரிந்து சாம்பலாயினர். அவர் தேவர்களுக்குப் போரில் ஸஹாயம்செய்து பலநாட்கள் தூங்காமலிருந்ததால் பாதாளத்தில் தான் யாதொரு விக்நமுமின்றி உறங்கவேண்டுமென்றும் தனது நித்ரையைக் கலைப்போர் சாம்பலாகவேண்டுமென்றும் வரம் வாங்கிவந்தார். ஆதலால் ஸகர புத்ரரனைவருமிறந்தனர். இதை நாரதர் ஸகரனுக் கறிவிக்க அவர் அஸமஞ்ஜஸனது புதல்வனான அம்சுமானை அச்வத்தைமீட்டுவர அனுப்பினார். அவர் பாதாளம்சென்று பணிவுடன் கபிலரை வணங்கி அச்வத்தைக் கொண்டுவந்தார். அச்வமேதமும் முடிந்தது. ஸகரனும் அம்சுமானை அரசனாக்கினான். அம்சுமானுக்குத் திலீபனெனும் புதல்வனும் அவனுக்குப் பகீரதனெனும் புதல்வனும் பிறந்தனர். பகீரதன் தனது மூதாதைகள் கபில சாபத்தாலிறந்ததைக்கேட்டு மநவருத்தமடைந்தான். ஸகரரை அணுகி அவர்கள் நற்கதிபெற யாது வழியென வினவினான். அவர் கபிலரையே கேட்டுவாஎன்றுகூற, பகீரதன் பாதாளம் சென்று கபிலரைப்பணிந்து ஸாகரர் நற்கதிபெற வழிகூறுமாறு வேண்டினான். அவர் சிறிதுநேரம் த்யாநம் செய்து சிவனது ஜடாமண்டலத்திலுள்ள கங்கையைப் பாதாளத்திற்குக்கொண்டுபோய் அச்சாம்பலைநனைத்தால் அவர்கள் ஸத்கதி அடைவரென்றார். பகீரதன் பரமசிவத்தையும் கங்

கையையும் நாடித்தவம்செய்து கங்கையைப் பாதாளத்திற் கழைத்துவந்தான். ஆதலின் கங்கைக்குப் பாகிரதி என்றும் ஓர் பெயர் வழங்குகிறது. விந்த்யமலைக்கு வடக்கேயுள்ள கங்கைக்குக் கௌதமி என்றும் வடக்கே உள்ளதற்குப் பாகிரதி என்றும் பெயர்வழங்குகிறது.

வராஹகுண்டம். மற்றும் பற்பல புண்யதீர்த்தங்களுள. எல்லாவற்றையும் கூறுவதரிது. சிலவற்றின் பெருமையைக் கூறுகிறேன். ஓர் ஸமயம் ஸிந்துஸேநன் எனுமஸுரன் யக்ஞத்தை அபஹரித்துக்கொண்டு ரஸாதலம் சென்றான். யக்ஞமில்லாமல் போனவுடன் தேவர்கள் உணவின்றியும் மாநிடர் மழையின்றியும் வருந்தினர். பிரும்மா முதலிய ஸகலதேவர்களும் மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து அவ்வரக்கனைக் கொன்று வேள்வியை மீட்டு வரும்படி வேண்டினர். கருணைக்கடலான கருடத்வஜனும் வராஹ உருவெடுத்துப் பூமியைப் பிளந்துகொண்டு பாதாளம் சென்றார். ஆங்குப் பதுங்கிநின்ற அவ்வரக்கனைக் கொன்று யக்ஞத்தை மீட்டுவந்தார். அவ்வஸுரனுடன் போர்புரிந்த காலத்திலே தன்னுடலில் ஒட்டிக்கொண்டிருந்த ரத்த மாம்ஸங்களைப் பிரும்மகிரியிலுள்ள கௌதமீ ஜலத்தால் அலம்பினர். அந்த இடமே வராஹகுண்டமெனப்படும். பகவானது அங்கஸங்கத்தால் மிகப்பவித்ரமான வராஹ குண்டத்தில் புனலாடின் ஸகலபாபங்களும் அகலும்.

கபோததீர்த்தம். பிரும்மகிரியில் மிகக்ரூரனான வேடனொருவனிருந்தான். அவன் அன்றன்றும் எண்ணிறந்த பசுபக்ஷிகளைக் கொன்று தனது குடும்பத்தை ரக்ஷித்து வந்தான். ஒருநாள் அவன் சிலபக்ஷிகளைக் கொன்றும் சில பக்ஷிகளை உயிருடனும் தனது வலையில்போட்டுக் கொண்டு தன்மனைக்குப் புறப்பட்டான். நடுவழியே கனமான காற்றும் மழையும் தோன்றின. வேடனது கண்கள் புழுதி

யால் மூடப்பட்டன. அன்றியும் ஸூர்யனும் மறைந்து ஸாயங்காலமாய்விட்டது. எங்கும் ஜலப்ரவாஹமாயிருந்தது. காற்றினால் முறிந்துவிழுந்த கிளைகள் வழியை மறைத்தன. பொறுக்கமுடியாத குளிரால் வேடன் இனி தான் பிழைப்பது அரிது என்று தீர்மானித்தான். மெதுவாக வழிதெரியாமல் தடமாடிக்கொண்டு நாலடி சென்றான். தற்செயலாக ஓர் பெரியமரம் அங்குக் காணப்பட்டது. அதனடியிற் சென்று குளிரால் மெலிந்து ப்ரக்ஞையற்றுக் கீழேவிழுந்தான். சிறிது நேரம்சென்றபின் அம்மரத்தில் வஸிக்கும் ஓர் புறா தன் கூட்டினருகே சென்றது. ஆங்குத் தன் அருமைமனைவியைக் காணாது குழந்தைகளைமாத்ரம் கண்டு வருத்தங் கொண்டு கதறிற்று. வழக்கம்போல் யானும் என்மனைவியும் இரை தேடச் சென்றோமே! ஏன் என்மனைவி இன்னும் வரவில்லை? காற்றுமழையில் அகப்பட்டு உயிர் துறந்தனளோ? அல்லது கொடிய வேடர்வலையில்தான் சிக்கினளோ? அவள் உயிருடனிருந்தால் எனக்குமுன் மனைக்குவந்து குஞ்சுகளுக்கு உணவளித்து என்னை மலர்ந்தமுகத்துடன் வாயிற்படியில் நின்று வரவேற்பாளே! எனக்குத் தொண்டு புரிவதைத் தவிர அவள் வேறொரு விருதமும் செய்யாளே! முக்கரணத்தினும் என்னையின்றி வேறெவரையும் விரும்பாளே! அவ்வுத்தமியை விட்டு யான் எங்ஙனம் பிழைத்திருப்பேன்? என்னைவிட்டு அரைக்கணமும் விலகாத அவள் எங்குச் சென்றனளோ! என்று புறா கூறுவதை அம்மரத்தடியில் படுத்திருக்கும் வேடனது வலையில் சிக்கி உயிருடனிருக்கும் பெண்புறா கேட்டது. நாதா! நான் பிழைத்திருக்கிறேன்; வருந்தவேண்டாம்! எனது கணவன் கூறும் புகழைக்கேட்டபின் நான் தன்யை ஆனேன். இதுவே பெண்மக்களுக்கு வேண்டிய பூஷணம்! கணவன் பணியின்றி பதிவ்ரதைக்கு வேறு தவமுண்டோ? என்று

பெண்புறா கூறிற்று. அதைக்கேட்டு ஆவலுடன் ஓடிவந்து ஆண்புறா, வேடன் பிணம்போலிருப்பதைக்கண்டு தன் மனைவியை விடுவிக்க ஆரம்பித்தது. அதைக்கண்டு மனைவி, நாதா! நமது மனைக்கு வந்தவர் அதிதியன்றோ? அவரைப் பூஜிப்பதன்றோ இல்லற தர்மத்திலுள்ளோர்கடமை? குளிரால் மெலிந்து தவிக்குமவருக்கு அருகில் அக்நியைமூட்டி குளிரை முதலில் அகற்றுங்கள் என்று மனையாள்கூற ஆண்புறா, ஆஹா! மனையாளிடமுள்ள அன்பினால் தர்மத்தை மறந்தேன். இச்சமயத்தில் அதிதிதர்மத்தை நினைவுஊட்டிய உத்தமிக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும் என்று எண்ணிக்கொண்டே தன் மூக்கினால் உலர்ந்த சுள்ளிகளைக் கொண்டு தீமூட்டி வேடனது குளிரை அகற்றிற்று. அன்னமளித்துப் பசியை யகற்றுவதே அடுத்தவேலை. அது என்னைச்சார்ந்தவேலை. என்னை வலையிலிருந்து விடுவியுங்கள். அதிதிக்கு உணவளிக்கிறேன் என்று பெண்புறா சொல்லிற்று. அங்ஙனமே புருஷன்அதை விடுவித்தவுடன் வேடனும் கண்ணைத்திறந்தான். பெண்புறா ஆகாயத்தில் பறந்து சென்று புருஷனையும் அக்நியையும் வலம்வந்து நாதா! எனக்கு விடைகொடுங்கள். அக்நியில் இவ்வுடலை விடுகிறேன். அதைக்கொண்டு அதிதிபூஜை செய்து மக்களைக் காத்து தாங்கள் ஸுகமாகவஸியுங்கள் என்றது. கபோதன் அதைக்கேட்டு மனம்தாளாமல் எங்குத் தன் அருமைமனைவி தனக்குமுன் உயிர் துறந்து விடுவளோஎன்றஞ்சி வேறொன்றும் பதில்கூறாது விரைவாக வானிற்சென்று அக்நிக்கு நேராக நின்று தன் இறக்கைகளை மூடிக்கொண்டு வீழ்ந்தது. இதைக்கண்ட கபோதி! நாதா! என்னைவருத்தலாமோ? இதோவந்தேன்! கணவனைத்தழுவி அக்நிப்ரவேசம் செய்யும் பத்நி தன்னுடலில் எவ்வளவு ரோமங்களிருக்கின்றனவோ அவ்வளவு மூன்றுகோடி வருஷங்கள் பர்த்ரு

லோகத்தில் போகத்தைப் பெறுவாளன்றோ? என்றுகூறி வேட அதிதியைத் தங்கள் மாம்ஸத்தை உண்ணும்படி வேண்டிக்கொண்டு தீயில் வீழ்ந்தது. உடனே அவ்விரு வரும் திவ்யதேஹம் பெற்று அழகிய விமாநத்தின்மீதேறி பொன்னுடு செல்வதைக்கண்டவேடன் வியந்தான். அந்தோ! நம்பொருட்டு சிறுகுழந்தைகளையும்விட்டு பக்ஷிகள் உயிரைத் துறந்தன. நம்கண்முன்னே நற்கதியும் பெற்றன. ஆறறிவு படைத்த நான் என் மாம்ஸத்தை வளர்க்க எத்தனை ஜீவ ராசிகளைக் கொன்றேன்! என்று வருந்தி அப்பக்ஷிகளை நோக்கி, பறவைகளே! அதிதியை ஆராதிக்காமல் செல் வது தர்மமாமோ? என்றான். அவைகள் நின்று உமக் கென்ன உணவுதானே வேண்டும்? அதோ எங்களது மாம் ஸம் அக்நியில் பாகமாகி இருக்கின்றது. அதைப் புஜித்துச் செல்லுங்கள் என்றன. வேடன் நான் வேண்டுவது உண வல்ல; இதுவரையான் செய்த ஜீவஹத்திகள் எங்ஙனம் அக லும்? உங்களைப்போல் யானும் எப்படி நற்கதி பெறுவது? இதற்கு உபாயம் கூறுங்கள் என்றான். அவைகள் வேடனைக் கங்கையில் ஓர்பக்ஷம்வரை விடாமல் ஸ்நாநம் செய்து அந்த பாபங்களை அகற்றி அதன்பின் செய்யும் ஸ்நாநத்தால் அச்வ மேதபலனைப் பெற்று கங்கையில் உடலை விட்டால் தங்களைப் போல் விமாநத்திலேறி பொன்னுடு செல்லலாமென்று கூறின. வேடனும் வில்லம்புகளை எறிந்து கங்கையால் நற்கதி பெற்றான். அவன் புனலாடிய இடமே கபோத தீர்த்தமாம்.

கார்த்திகேயதீர்த்தம். ஸுப்ரமண்யன் தாரகனை வதம் செய்து வெற்றியுடன் வந்தபோது பார்வதீதேவி அவரை ஆசீர்வதித்து ஸமஸ்ததேவபோகங்களையும் அனுபவிக்கும் படி கூறினள். கார்த்திகேயன் அங்ஙனம் செய்ததோடு நிற்காமல் ஸமஸ்ததேவர்களது மனைவிகளையும் பலாத்கார

மாக போகம்செய்ய ஆரம்பித்தார். இதைக்கண்ட தேவர்கள் வருந்தி உமையினிடம் இதைத் தெரிவித்தனர். அம்பிகை ஆறுமுகனை அழைத்து அங்ஙனம் செய்யலாகாது என ஆக்ஞைசெய்தாள். அன்னை முன்னிலையில் அப்படியே ஆகட்டுமென்றுகூறி பின்னர் குஹன் முன்போலவே தேவ ஸ்த்ரீகளைப் பலாத்காரம் செய்தான். இதையறிந்த கௌரீ கற்பரசிகளால் கார்த்திகேயனுக்குச் சாபம் வந்திடுமோவென அஞ்சி அவன் எந்த கன்யகையைத் தீண்டினும் அவள் தன்னைப்போல் பார்வதியாக அவனுக்குத் தோன்றும்படிசெய்தாள். சரவணபவன் வழக்கம்போல் ஓர் ஸ்த்ரீயைத்தீண்ட அவள் பர்வதராஜ குமாரியாகக்காணப் பட்டாள். ஓ நமது அன்னைவடிவமான இவளையோ தீண்டுவதென நினைத்து அவளைவிட்டு வேறொருவளிடம் சென்றார். அங்குமங்ஙனமே தோன்றிற்று. அங்ஙனமே அவர்கண்ட பெண்களெல்லாம் மாத்ரு மயமாயிருப்பதைக்கண்டு ஸ்கந்தன் இனி பிறர் மனைவியை மாதாவாக எண்ணுவேன். அவர்களைக் கண்ணெடுத்தும் காணேனென்றார். இதைக் கேட்டு ஸந்தோஷமடைந்த பார்வதீ பரமேச்வரர்கள் தன் புதல்வனைநோக்கி, ஸ்கந்தா! உனக்கு யாதுவரம் வேண்டுமென்றார்கள். குருதாரகமநம் முதலிய மஹாபாதகம் செய்தோரும், தாங்கள் எனக்கு வரமளித்த இங்கு கங்கையில் ஸ்நாநம்செய்தால் அப்பாபமகன்று அவர்கள் நற்கதிபெறுமாறு வரமளியுங்கள் என்று குஹன்கூறினன். அவர்களும் அங்ஙனமே அருள்புரிய அன்றுமுதல் அந்த கட்டம் கௌமாரமல்லது கார்த்திகேய தீர்த்தமென வழங்கப்படுகிறது.

கிருத்திகா தீர்த்தம். ஸ்கந்தன் தாரகனை அழிக்க அவதரிக்கவேண்டுமென தேவர் விரும்பியபோது பரமசிவத்தின் முகத்தினின்று வீர்யம் வெளிப்பட்டது. அதை அக்நிபகவான் ஏற்றுக்கொண்டு கங்கைக்கு வந்தார். ஆங்கு

ருதுஸ்நாநம் செய்திருந்த ஸப்தர்ஷிகளின் மனைவிகளில் அருந்ததியைத் தவிர மற்ற ஆறுபேரும் அந்த ரேதஸ்ஸைக் கண்டு காமனைகொண்டனர். ஆதலால் அது இவர்கள் வயிற்றில் கருவாகத்தோற்றிற்று. அதைக்கண்டு அஞ்சி அவர்கள் பலாத்காரமாக அதை நறைவடிவமாகக் கங்கை யிலேயேவிட்டு வீடுசென்றூர்கள். இதை ஞானதிருஷ்டியா லறிந்த அவர்களது புருஷர்கள் அவர்களைப் பதிவிருதைக ளல்லவென்றுகூறி வீட்டைவிட்டு அப்புறப்படுத்திவிட்டார் கள். அவர்கள் தங்களது நிலைமைநினைத்து வருந்தும்போது தற்செயலாக நாரதர்அங்குதோன்றி நீங்கள் சுப்ரமண்யனைச் சரணமடைந்து போற்றுங்கள். அவர் உங்களுக்கு நற்கதி அளிப்பாரெனக் கூறிச்சென்றூர். அங்ஙனமே முநிபத்நி கள் குஹனைப்பணிந்துப் போற்றிஞர்கள். கார்த்திகேயன் அவர்கள் எதிரேதோன்றி கங்கையில் புனலாடும்படிசெய்து அவர்களைத் தேவலோகமழைத்துச் சென்றூர். அவர்களுக் குக் கிருத்திகா என்றுபெயர். கிருத்திகைகள் புனலாடி நற்கதி பெற்றஇடம் கிருத்திகா தீர்த்தமாகும். அங்கு விதிப்படி ஸ்நாநம்செய்வோரது ஸகல பாபங்களுமகலும். மறுபிறப்பில் தார்மிக அரசனக அவர் பிறப்பர்.

தசாச்வமேத தீர்த்தம். விச்வகர்மாவின் புதல்வன் விச்வரூபன். அவனது புதல்வன் ப்ரமதி. அவனது புத் ரன் பௌவநன் என்பவன். இவன் ஓர் ஸமயம் பத்து அச்வமேத யாகங்களை ஏககாலத்தில் செய்யவேண்டுமென்று தன் குருவான கச்யபரைவேண்டிஞன். அவரும் அதற்கு இணங்கி பத்து யாகங்களைப் பல ருத்விக்குகளைக்கொண்டு ஆரம்பித்தார். இரண்டுமுறை அவ்வேள்விகள் பூர்த்தியாகா மல் போயின. பௌவநனும் காச்யபரும் பிருஹஸ்பதியின் ஸகோதரரான ஸம்வர்த்தகரை அடுத்து, ஏனிது தடைபட் டது? எங்குசெய்தால் இது பூர்ணமாகுமென்று வினவினர்.

அவர் பிரும்மாவைக்கேட்கும்படி கூறினர். பிரும் மாவினிடம் சென்று அவர்கள் கேட்க, கங்கையில் ஸ்நாநம் செய்து அங்கு வேள்வியைச் செய்யும்படிகூறினர். அங் ஙனமே கங்கையில் மூழ்கி ஆங்கு வேள்வியைமுடித்து குரு வான கச்யபருக்குப்பூமியைத்தாநம்செய்ய பௌவநன் ஆரம் பித்தான். இச்சமயம் ஓர் அசரீரிணியானவாக்கு, "அரசே! அன்னதாநம் செய்" என்றது. வேந்தன் அதைமதியாது பூதாநம் செய்ய ஆரம்பித்தான். பூதேவி அரசனெதிரே தோன்றி என்னை இங்கு தாநம்செய்தால் யான் கங்கையில் மூழ்கிவிடுவேன் என்றாள். அரசன் அவ்ளியைப்பணிந்து வேறென்ன தாநம்செய்வதென்றான். திலதேநு தநம் தான் யம் அன்னம் முதலியவைகளைக் கங்காதீரத்திலே தாநம்செய் தால் அவை அழியாப் பயனையளிக்குமென பூமி கூறினள். வேந்தன் வேள்வியை யதோக்த தக்ஷிணையுடன் பூர்த்தி செய்த இடமே தசாச்வமேத தீர்த்தமெனப்படும். அங்கு, செய்யும் ஸ்நாநம் பத்து அச்வமேத யாக பயனை அளிக்கும்.

வைசாச தீர்த்தம். தேவேந்த்ரனளித்த சாபத்தால் அஞ்ஜனையெனும அப்ஸரஸ் குரங்குமுகமானள். அத்ரிகை என்பவள் பூனை முகம்பெற்றாள். இவ்விருவர்களும் அஞ்ஜந மெனும் மலையின்மீது தங்கி ஆங்குள்ள கேஸரி எனும் வாநர ராஜனை மணந்தார்கள். ஓர் ஸமயம் கேஸரி தென்கடலுக் குச்சென்றான். அச்சமயம் அஞ்ஜனமலைக்கு அகஸ்த்யர் வந் தார். இவ்விரு அப்ஸரஸுகளும் அவரை நன்கு வரவேற்று பூஜைசெய்தனர். அதைக்கண்டு அகமகிழ்ந்த முநிவர் உங் களுக்குவேண்டிய வரத்தைக்கேளுங்கள் என்றார். இரு வரும் மிக்க பலமுள்ள புதல்வனை வரித்தனர். அங்ஙனமே ஆகுக என்று கூறி முநிவர் சென்றார். இவ்விருவர்களும் மலைமீது ஆடிப்பாடி விளையாடிக்கொண்டிருந்தனர். அதை வாயுவும் நிருருதியும் கண்டு களித்து அவர்களிடம் ஆசை

கொண்டனர். வாயுவினிடமிருந்து அஞ்ஜனை ஆஞ்ஜநேய னைப் பெற்றாள். அத்ரிகை நிருருதியினிடமிருந்து பிசாச ராஜனைப் பெற்றாள். அப்ஸரஸ்ஸுகள் தங்கள் சாபமகன்று விகாரரூபமற்று ஸ்வரூபத்தை அடைவதற்கேற்ற உபாயத் தைக் கூறும்படி தேவர்களை வேண்டினர். கங்காஸ்நாநத் தால் சாபமகலுமென்றுகூறி அமரர் சென்றனர். பிசாச ராஜன் தன் ஸஹோதரனைச் சந்தோஷப்படுத்த அஞ்ஜனை யைத் தூக்கிச்சென்று கங்கையில் ஸ்நாநம் செய்வித்தான். அவள் நிஜஸ்வரூபத்தைப் பெற்றாள். ஆஞ்ஜநேயர் அப் படியே அத்ரிகையின் சாபத்தை அகற்றினார். அவ்விடம் அன்றுமுதல் பைசாசதீர்த்தமென வழங்கப்படுகிறது.

க்ஷுதா தீர்த்தம். ஓர்ஸமயம் பசியால் வருந்திய கண் வரிஷி கௌதமாச்ரமம் சென்றார். கௌதமரது ஆச்ரமம் ஸுபிக்ஷமாக இருப்பதையும் அவர் அதிதிபூஜைசெய் வதையும் கண்டார். என்னைப்போல் அவரும் ஓர்ரிஷி. அவர் மட்டிலும் எல்லோருக்கும் அன்னதாதாவாக இருக்க யான் அவரிடம் பிக்ஷைவாங்குவது என்ன நீதி? அவரது அன்னத் தை ஏற்பதில்லை என்று தீர்மானித்து கங்காதேவியையும் க்ஷுத் எனும் பசிதேவதையையும் துதித்தார். இருவரும் ப்ரத்யக்ஷமானார்கள். கங்கையினிடம் ஆயுஸ் அகண்டசெல் வம் முக்தி முதலியவைகளைப் பெற்று பசியினிடம் தன்னை யும் தன் வம்சத்தவரையும் பீடிக்காமலிருக்கும்படி வரம் பெற்றார். அந்த இடமே க்ஷுதா தீர்த்தமாகும்.

அஹல்யா ஸங்கமம். பிரும்மாவுக்கு ஓர்ஸமயம் எவ் வகையான தோஷமுமில்லாத ஓர் கன்யகையைப் படைக்க வேண்டுமென்று குதூஹலமுண்டாயிற்று. அங்ஙனமே ஓர் பெண்குழந்தையைப் படைத்தார். அதற்கு அஹல்யைஎனப் பெயரிட்டார். அதைவளர்க்க கௌதமரெனும் பிரும்மநிஷ் டரே தக்கவரெனக் கருதினார். உடனே அவரை அழைத்து

இக்கன்யாரத்தினத்தை வளர்த்து யௌவநம் வந்தபின் என்னிடமழைத்துவா என்றார். கௌதமரும் அங்ஙனமே வளர்த்து அழகிய யுவதியானபின்பும் அவளைக்கண்டு காமமுறாமல் கூறியபடி பிரும்மனிடம் அழைத்துச்சென்றார். அச்சுந்தரியைக் கண்டதேவர் எல்லோரும் எனக்கு, எனக்கு என பிரும்மனை வேண்டினார்கள். கௌதமரே தக்க பாத்ரமென பிரும்மா கருதினார். இந்த்ரன் அவளிடம் விசேஷபற்றுகொண்டு அவளையாசித்தான். அவனை நிராகரித்து கௌதமருக்கு அளிப்பது சதுர்முகனுக்கு ஸங்கடமாயிருந்தது. ஆதலால் பொதுவாக அவர் பூப்ரதக்ஷிணம் செய்து முதலில் வருபவருக்கு அஹல்யையை அளிப்பதாகக் கூறினார். ஸகல தேவர்களும் விரைந்து அவநியை வலம் வரச்சென்றனர். கௌதமரும் பூப்ரதக்ஷிணம் செய்து அஹல்யையைப்பெற ஆவல் கொண்டார். ஆனால் தேவரைப்போல் விமாநத்திலேறி விரைவாக பூமியை வலம் வர முடியாதென்றெண்ணினார். அச்சமயம் அருகில் பசு ப்ரஸவித்துக்கொண்டிருப்பதைக் கண்டார். இரண்டு புறமும் முகமுள்ள கோவை வலம் வருதல் பூப்ரதக்ஷிணத்திற்குச் சமமென்ற தர்மஸூக்ஷ்மத்தை நினைத்து அங்ஙனமே அதை வலம் வந்தார். அன்றியும் ஆங்குள்ள சிவலிங்கத்தையும் ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு பிரும்மாவினிடம் வந்து நின்றார். இருமுறை ப்ரதக்ஷிணமானதால் தடையொன்றும் கூறாது அவளை மணக்கக் கௌதமருக்கு பிரும்மா விடையளித்தார். விதிப்படி விவாஹம் நடந்தது. பூமியை வலம்வந்த வானவரனைவரும் விஷயத்தை அறிந்து வியந்து முநிவரைப் போற்றிச் சென்றனர். கௌதமரும் பிரும்மனளித்த பிரும்மகிரிமீதிருந்து இல்லறம் நடத்தி வந்தார். அழகிய தம்பதியையும் அவர் அனுஷ்டிக்கும் அறத்தையும் கண்டு எல்லோரும் போற்றிப் புகழ்ந்தனர். கௌதமர் நற்கீர்த்தி வானளா

விச்சென்றது. வேதியர் வடிவம் தாங்கி தேவேந்த்ரன் அங்கு சென்றான். அஹல்யையின் அழகே அவனுள்ளத்தைக் கொள்ளை கொண்டது. எப்போது நற்சமயம் வாய்க்குமெனக் காத்திருந்தான். முனிவர் அக்னிஹோத்ரம் செய்து முடித்துச் சீடர்களுடன் தான்யங்களைப் பார்க்க வயலுக்குச் சென்றார். இதே தக்க ஸமயமென்றெண்ணி இந்த்ரன் கௌதமர் வேடம் பூண்டு ஆச்ரமத்தில் நுழைந்தான். காவலாளிகளும் அஹல்யையும் கௌதமர் என்றே எண்ணினார்கள். இந்த்ரன் ஏகாந்தமாக உள்ளேசென்று அவளுடன் ரமித்துக் கொண்டிருந்தான். கௌதமர் தன்வேலைகளை முடித்துக் கொண்டு ஆச்ரமத்திற்குத் திரும்பினார். வழக்கம்போல் அகல்யை வாயிற்படியில் நின்று தன்னை வரவேற்காத காரணம் யாதென வியந்து நின்றார். அதற்குள் காவலாளிகள் அவரைப்பணிந்து, மஹர்ஷே! என்னதபஸ்! என்னவிந்தை! ஓருருவத்துடன் உள்ளே சென்றீர்கள்; மற்றோர் உருவுடன் வெளியில் நிற்கிறீர்கள் என்றார்கள். இதைக்கேட்டு திடுக்கிட்டு அஹல்யை இந்த்ரனை ஜாரனெனக்கருதி நீயார்? என்றாள். பயந்த இந்த்ரன் பூனைவடிவந்தாங்கி வெளியிற் சென்றான். பணியாளர்களது சொல்லால் தன்னுருவைத்தாங்கி யாரோ ஒருவன் உட்சென்றிருக்கிறனென்று உணர்ந்த முனிவர் பூனை வெளிவருவதைக்கண்டு அடே துஷ்ட! நீயார்? உண்மையைச்சொல். இல்லையேல் உன்னைச்சாம்பலாக்கி விடுவேனென்றார். இந்த்ரன் உண்மையை உரைத்துத் தன்னை மன்னிக்கும்படிவேண்டினன். மஹர்ஷி அவனை எந்த அவயவத்தில் ஆசைகொண்டு இத்தீய காரியத்தைச் செய்தாயோ அந்த பகம் உனது உடலெல்லாம் தோன்றுமென்று சபித்தார். அஹல்யையை உலர்ந்த நதியாகும்படி சபித்தார். அவள் முக்கரணங்களால் தன் பதியைத் தவிர மற்றவரை எண்ணியதில்லையாதலால் தன்னை மன்னிக்கவேண்டுமென்று

பிரார்த்தித்தாள். கௌதமர் அவ்விருவரையும் கௌதமீ ஸங்கத்தால் சாபத்திலிருந்து விடுபடும்படி அருள் புரிந்தார். ஆதலின் அவ்விடம் அப்பெயர் பெற்றது.

ஜநஸ்தாந தீர்த்தம். ஸூர்ய வம்சத்தில் ஜநகர் என்று ஓர் அரசனிருந்தார். அவர் வருணராஜனது புதல்வியை மணந்தார். இவர்களது குரு யாக்ஞவல்க்யர். ஜநகர் குருவை அடுத்து அதிக ஆயாஸமின்றி புக்தி முக்திகளைப் பெற ஓர் மார்க்கம் கூறும்படி வேண்டினார். அவர் அரசனையுமழைத்துக் கொண்டு வருணனிடம் சென்று இந்த கேள்வியைக் கேட்டார். வருணராஜன் வேதோக்தமான கர்மானுஷ்டானத்தைத் தவிர வேறு ஸுலப மார்க்கமில்லை என்றார். ஜநகர், பூமியில் எது உயர்ந்த க்ஷேத்ரம்? எது உயர்ந்த தீர்த்தம் என்று கேட்டார். வருணன் பாரதவர்ஷமே சிறந்த புண்ய பூமி. அதிலும் தண்டகாரண்யம் மிகச்சிறந்த க்ஷேத்ரம். கங்கை மிக உயர்ந்த தீர்த்தம் என்றார். அவரிடம் விடை பெற்று அரசன் தண்டகாரண்யத்தில் கங்காதீரத்தில் அச்வமேதயாகம் செய்து முக்தியடைந்தார். ஐந்நூறு யோஜனை தூரமுள்ள அவ்வரசனது யாகவேதிக்கு ஜநஸ்தானமென்று பெயர். அதனருகே உள்ள தீர்த்தம் ஜநஸ்தாந தீர்த்தமெனப்படுகிறது.

சக்ர தீர்த்தம். முன்பு ஓர் ஸமயம் விச்வதரனென்று ஓர் வைச்யனிருந்தான். அவன் அபரிமிதமானசெல்வத்தைப் பெற்றிருந்தும் புத்ரபாக்யமில்லாமல் வருந்தினான். இனி புத்ரன் ஜனிக்கமாட்டான்என்று அவன்எண்ணினான். பிறகு வயது முதிர்ந்தகாலத்திலே ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதை அந்த வைச்யதம்பதிகள் தங்கள் பிராணனைவிட மிக அருமையாக வளர்த்து வந்தனர். சிசுவினது விளையாட்டைக் கண்டு மகிழ்ந்தனர். அதற்கு அநேக ஆபரணங்களைப் பூட்டி கண்ணாரக்கண்டு களித்தனர். குழந்தை யுவாவாக

வளர்ந்த காலத்தில் திடீரென அவன் இறந்தான். அந்த மரணமடைந்த மகனை மடிமீது வைத்து அக்கிழ தம்பதிகள் பார்ப்பவர் மனமுறுகும்படிக் கதறினார்கள். அச்சவத்தைத் தீயிலிட்டுத் தாங்களும் அவ்வக்னியில் விழத் தீர்மானித்தனர். இந்த யமன் இக்கிழங்களைக் கொண்டு செல்லலாகாதா? அவனுள்ளத்தில் தயை கிடையாதா? யமனும் குழந்தைகளைப் பெற்றவனன்றோ என்று கதறினர். அதைக் கேட்டு காலனது மனமும் கரைந்தது. இப்பாபத்தொழில் தனக்கு வேண்டாமெனக்கருதி யமபுரியைவிட்டு கோதாவரீ தீரம்சென்று தவம் செய்ய ஆரம்பித்தான். யமனது தொழில் நடவாததால் பூமியில் பாரம் அதிகமாயிற்று. அதைச் சஹியாத பூமிதேவி இந்திரனிடம் சென்று முறையிட்டாள். உடனே அவன் காலனை அழைத்து வரும்படி தூதனை அனுப்பினார். யமபுரியில் யமனில்லை என்று தூதன் கூற, யமனது தந்தையான பானுவை நோக்கி உன் மைந்தன் எங்கே என்று வினவினான். கோதாவரீதீரத்தில் அவன் தவம் செய்வதாகபானு கூறினார். சக்ரன் அப்ஸரஸ்ஸுகளை அழைத்து அவன் தவத்தைக் கலைக்கும்படி கட்டளையிட்டார். அவர்கள் காலனருகே செல்ல அஞ்சினர். இந்த்ரன் தனது தேவஸேனையைச் சித்தம்செய்து காலனுடன் போருக்குக்கிளம்பினான். அச்சமயம் கருணாமூர்த்தியான கருடத்வஜன் தனது சக்ராயுதத்தை அனுப்பிப் பக்தனைக்காக்கும்படி கூறினார். ஆதலால் அவ்விடம் சக்ரதீர்த்தமெனப்படுகிறது. இந்த்ர கோபத்தைக் கண்டு தங்களிடமும் சினமுண்டாகுமோ எனச் சங்கைகொண்டு கணிகா எனும் தேவதாஸி காலன் தவத்தைக் கலைக்கச் சென்றாள். அங்கு சென்று அவள் அழகாக கானம் செய்தாள். காலனும் தவத்தைவிட்டுப் பாடியபெண்ணைத் தேடக் கிளம்பினான். கணிகை தவத்தைக் கலைத்த பாபத்தை அகற்றக் கருதி

கங்கையில் புனலாடி விமானத்தின் மீதேறிச் சென்றாள். காலன் அவளை நினைத்துக்கொண்டு தன் தவத்தையும் பதவியையும் விட்டுத் தபிப்பதைக்கண்டு அவர் தந்தை சூரியன் அங்கே வந்தார். அவரைக் கண்டவுடன் தன் செயலை நினைத்து யமன் வெட்கமடைந்து வருந்தினான். அவனைத் தேற்றி முன்போல் யமபுரம் சென்று அவன் பணியைச் செய்யும்படி கூறினார். அது மிகப் பாபகரமானதென்று காலன்கூற ஸூர்யன் ஸ்வதர்மம் எத்தகையதாயினும் சுத்தமானதே. அன்றியும் தவத்தைக் கலைத்த கணிகையே கங்காஸ்நானத்தினால் ஸ்வர்க்கம் சென்றாளெனில், நீ கங்கையால் சுத்தமாவதைக் கேட்கவேண்டுமோ ? என்று கூறி தன்னிருப்பிடம் சென்றார். காலனும் கடமையைச் செய்து வந்தான்.

பாநுதீர்த்தம் அல்லது அச்வதீர்த்தம். கச்யபமுனிவரது மூத்த புதல்வர் பாநு எனப்படுவர். அவர் த்வஷ்டாவின் புத்ரியான உஷையை மணந்துகொண்டார். இவர்களுக்கு வைவஸ்வதமநு யமன் என இருபுதல்வர்களும் யமுனை எனும் புத்திரியும் பிறந்தனர். ஸூர்யனது உஷ்ணத்தைச் சஹிக்கமுடியாமல் வருந்திய உஷை தனது நிழலை ஓர் பெண்ணாக்கித் தன் குழந்தைகளைக் கவனிக்கும்படியும் தன் கணவனிடம் தன்னைப்போலவே இருக்கும்படியும் கூறி பிறந்தவீடு சென்றாள். பிதா தனது பெண்ணை அன்புடன் வரவேற்காமல் பதியை விட்டு அனுமதியின்றி ஏனும் நீ இங்கு தங்கலாகாது ; எப்படி இருந்தாலும் கற்புள்ளவளுக்குக் கணவனே கதி என்று கூறி ஆங்கு செல்லும்படி வற்புறுத்தினார். உஷை அங்கு செல்ல மனமில்லாமல் உத்தரகுரு க்ஷேத்திரத்திலே பெண்குதிரை வடிவமெடுத்து வஸித்து வந்தாள். அவளது சாயையான சாயாதேவி ஸாவர்ணி சனைச்சரன் என்ற இருபுத்திரர்களையும் விஷ்டி

எனும் புதல்வியையும் பெற்ருள். சாயை தன் புத்ரர்களை மிக்க அன்புடனும் உஷையின் புத்ரர்களை அன்பில்லாமலும் விஷமமாகவும் நடத்தினுள். இதைக்கண்டு சினம்கொண்ட யமன் அவளைத் தாயல்ல எனக்கருதி காலால் உதைத்தார். அவனது கால் அழுகிக் கீழேவிழும்படி அவள் சபித்தாள். இதைக்கண்டு உண்மையை உணர்ந்த பாநு இவர்களைச் சமாதானப்படுத்திவிட்டு அச்வரூபங்கொண்டு உஷையினிடம் சென்ருன். அவள் அதைச் சூர்யனென்றறியாமல் வேறு குதிரைத் தன் கற்பை அழிக்க வருகிறதென்றெண்ணி ஓடினுள். சூர்யனும் அவளைப் பின்தொடர்ந்தோட உஷை சிஷ்யர்களோடு உள்ள மஹர்ஷிகளைக் கண்டு சரணமடைந்தாள். ஐந்து மாணவர்கள் அந்த ஆண் குதிரையைத் தடுத்தனர். அவஸரப்பட்டு உண்மையை உணராது தன்னைத் தடுத்த அச்சிறுவர்களை வடவிருக்ஷமாகும்படி சூர்யன் சபித்தான். இது ஸாதாரண அச்வமல்ல. இவன் சூர்யன் என உணர்ந்த முநிவர்கள் அவரைத்துதித்தனர். பின்பு காமனை கொண்டுவரும் அச்வம் தன்கணவனே என்று உணர்ந்த உஷை தன் பதியின் முகத்திலிருந்து வரும் வீர்யத்தைக் கண்டு தன் முகத்திலிருந்தும் வீர்யத்தைப் பெறுக்கினுள். ஆங்கிருந்து அச்விநீ தேவர்கள் தோன்றினர். ஸகலதேவர்களும் நதிகளும் அங்குகூடி வாரணு அஸி என்ற இருநதிகள் கங்கையுடன் கூடும் அவ்விடத்தைப் பாநு தீர்த்தமல்லது அச்வதீர்த்தமெனக் கொண்டாடினுர்கள். ஆங்கு பன்னீராயிரம் தீர்த்தங்கள் இருக்கின்றன. பஞ்சவடாச்ரமமும் உளது. த்வஷ்டா ஸூர்யனது அபிப்ராயத்திற்கிணங்க ஸோமநாத க்ஷேத்ரத்திற்கருகே அவனைச் சாணை பிடித்தார். அவ்விடம் ப்ரபாஸமெனப்படும்.

கருட தீர்த்தம். ஆதிசேஷனுக்கு மணிநாகன் என்ருேர் புத்ரனிருந்தான். அவன் பல்லாண்டுகள் பரமசிவனை

நாடித்தவம்புரிந்தான். அவனெதிரே தோன்றிய பரம சிவன் யாது வரம் வேண்டுமென்றார். நாகன் தனக்குக் கருடனிடம் பயமில்லாதிருக்க வரம் கேட்டான். அங் ஙனமே அவரும் அருள்புரிய நாகன் நிர்ப்பயமாக எங்கும் திரிந்தான். கருடன் எதிரிலும் அடிக்கடி இவன் சுற்றும் போது கருடன் இவனது செயலைக்கண்டு சினந்தான். கருட பாசத்தால் நாகனைக்கட்டித் தனது மனையில் ஓர் மூலையில் பக்ஷி ராஜன்வைத்தான். இதை நந்தி கைலாஸநாதனிடம் கூற, அவர் விஷ்ணுவினிடம்சென்று தனது பக்தனை விடுவித்துவாஎன்றார். நந்தி அச்யுதனை வணங்கி இதைக்கூற, அவர் கருடனை அழைத்து நாகனை விடும்படி கூறினார். கரு டன் செறுக்குடன், பணியாளனைக்காப்பது யஜமானன் கடமை யன்றோ? சிவன் தன் பக்தனுக்குப் பரிந்துபேச, நீர் என்னை மதிக்கவில்லை. யான் உம்மைத் தூக்கிச்செல்லாவிடில் நீர் எப்படி அரக்கர்களைவென்று கீர்த்தி பெறமுடியுமென் றான். பகவான் புன்னகைசெய்து, கருடா! நீ கூறுவது உண் மையே. ஆயினும் எனது சுண்டு விரலைச்சற்று தூக்கு பார்ப் போமென்று அதன் தலைமீது விரலைவைத்தார். கருடனது தலை அந்த பாரத்தால் உள்ளே அழுந்தி காலுடன் சேர்ந்தது. மிக்க விகாரரூபத்தை அடைந்த பக்ஷிராஜனது செறுக்கு சிதைந்தது. அவனுக்கு அறிவும் வந்தது. ப்ரபுவினிடம் செல்ல வெட்கத்தால் அன்னையடிபணிந்து குற்றத்தை மன் னிக்கும்படி அவருக்குச் சொல்ல வேண்டினான். தாயும் அங்ஙனமே வேண்ட அச்யுதன் நந்தியை நோக்கி மணிநாக னுடன் கருடனைச் சிவனிடமழைத்துச்செல். அவரருளால் கருடன் நிஜஉருவைப் பெறுவான் என்றார். மூவரும் கை லாஸம்செல்ல, நந்தி நடந்ததைக்கூற, கங்காதரன் கருடனைக் கங்கையில் ஸ்நாநம்செய்யும்படி கட்டளையிட்டார். கருடன் மூழ்கி நிஜரூபம் பெற்றவிடமே கருட தீர்த்தமாம்.

கோவர்த்தந தீர்த்தம். முன்னம் ஜாபாலி எனும் ஓர் அந்தணன் உழுது பயிர்ஜீவனம் செய்துவந்தான். ஒரு நாள் அவன் உக்ரமான வெய்யிலிலும் காளைகளை ஏரில் கட்டி அடித்து ஹிம்ஸை செய்தான். இதைக்கண்டு ஸுரபி எனும் தேவபசு கண்ணீர்விட்டுக் கதறி நந்தியினிடம் இதைக் கூறிற்று. நந்தி சிவமூர்த்தியினிடம்கூற அவர் விரைவில் அவைகள் சுகம் பெறுமாறு நீயே உபாயம் செய் என்றார். நந்தி உலகிலுள்ள ஸகல பசுக்களும் காளைகளும் எவர் கண்களிலும் காணாதபடி செய்துவிட்டார். கோவினாலுண்டாகும் பால் ஆஜ்யம் கவ்யம் முதலியவைகளில்லாமல் ஓர் க்ஷணம்கூட ஜீவிக்கமுடியாமல் முநிவரும் தேவரும் பரமசிவனைச் சரணமடைந்து கோக்களை அளிக்கும்படி வேண்டினார்கள். பகவான் நந்தியினிடம் செல்லும்படி அவர்களைக் கூறினார். அவர்கள் சிவன் சொற்படி நந்தியைச் சரணமடைந்தனர். அவர் கங்கைக் கரைமீது கோஸவமெனும் வேள்வியைச்செய்து பசுக்களைப் பெறுமாறு கட்டளையிட்டார். அங்ஙனமே அனைவரும் கோஸவத்தால் கோக்களைப் பெற்றனர். கோஸவம் நடந்த இடமே கோவர்த்தன தீர்த்தமாம்.

பாபப்ரணாசநம். முன்பு ஓர் ஸமயம் த்ருதவ்ரதர் என்று ஓர் அந்தணர் இருந்தார். அவர் மஹீ எனும் மனைவியை மணந்து விதிவழுவாமல் இல்லற கர்மாக்களைச் செவ்வனே செய்துவந்தார். அவர்களுக்கு யுக்த வயதிலேயே ஸநாஜ்ஜாதன் என்று ஓர் குழந்தை பிறந்தது. த்ருதவ்ரதர் குழந்தை பிறந்த சிறிது காலத்திற்கெல்லாம் யமலோகம் சென்றார். பாலவிதவையான மஹீ இளங்குழந்தையை எங்ஙனம் காப்பதென வகையறியாது காலவாச்ரமம் சென்றாள். கருணாமூர்த்தியான காலவர் அச்சிசுவை வளர்த்து வயதுவந்தபின் கல்வி பயில்விக்கவும் ஏற்றுக்கொண்டார். மஹீ பாபபுத்தி

யினால், முனிவருக்குத்தொண்டுபுரிந்து கற்புடன் காலத்தைக் கழிக்காமல் ஸ்வேச்சையாகத் திரிந்தாள். தனியாகத் திரியும் இவளைச் சில விடபுருஷர்கள் பின்தொடர்ந்து பொருளைக் காட்டிக் கற்பையழித்தனர். இதில் ருசிகண்ட மஹீ ஜநஸ்தாநமெனும் இடத்திலே வேசித்தொழில்செய்து ஜீவித்து வந்தாள். ஸநாஜ்ஜாதனும் காலவரிடம் கல்விபயின்று குருதக்ஷிணையளித்துட்டு வெளிக்கிளம்பினான். தற்செயலாக அவனும் ஜநஸ்தாநம்சென்று வேசித் தொழில் புரியும் மஹியின் வலையில் சிக்கினான். அவனும் அவளைத் தாயென்று அறியான். மஹியும் அவனை மகனென்றுஅறியாள். கல்வித் திறமையால் பொருள்தேடி அவன் இரவில் மஹியினிடமதையளித்து, விடனும் வேசியுமாகி ரமித்திருந்தார்கள். ப்ரதிதிநம் காலையில் கங்கையில் புனலாடி கர்மாநுஷ்டானம் செய்துவருவான் ஸநாஜ்ஜாதன். ஒருநாள்அங்கு சென்ற காலவர் ஸ்நாநம்செய்வதற்குமுன் இவன் உடல் குஷ்டரோகத்துடனிருப்பதையும் ஸ்நானத்திற்குப் பின்பு சுத்தமாக இருப்பதையுங்கண்டு வியந்தார். அதேபோல் பலநாள் பார்த்தபின் அவனருகே சென்று, நீ யார்? எங்கு தங்குகிறாய்? உன் மனைவியின் பெயரென்ன? அவள் எக்குலத்திலுதித்தவள் என்றுகேட்டார். ஸநாஜ்ஜாதன் மறுநாள் காலையில் கூறுவதாகச்சொல்லி வழக்கப்படி இரவில் மஹியின் மனைசென்று இதைக்கேட்டான். அவள் தான் த்ருதவ்ரதன் மனைவியென்றும் கணவனையிழந்தபின் காலவரிடம் தன் மகனான ஸநாஜ்ஜாதனை விட்டுவிட்டுப் பாபவாஸனையால் வேசித்தொழில் புரிவதாகவும் கூறினாள். உடனே அவன் திடுக்கிட்டுக் கீழேவிழுந்து மூர்ச்சையானான். மஹி அவனைக் களை நீங்கும்படிசெய்து களைக்குக் காரணம் யாதென்றாள். அவன் உள்ளதைக்கூற அவளும் தனது மிக்கக்கொடிய தீய செயலைஎண்ணித் தரணியில்வீழ்ந்தாள். உடனே ஸநாஜ்ஜா

தன் ஓடி காலவரைப்பணிந்து இந்த வ்ருத்தாந்தத்தைக்கூறினன். இந்த மஹாபாபத்தை யகற்றி தங்களுக்கு நற்கதி அளிக்கவேண்டுமென்று அவர் பாதத்தில் வீழ்ந்து வேண்டினன். அவர் இருவரையும் கங்கையில் விதிப்படி ஸ்நாநம் செய்யும்படிகூற, அங்ஙனமே அவர்கள் கங்காஸ்நானத்தால் பாபமகன்று நற்கதிபெற்றனர். ஆதலால் அவ்விடம் பாப மோசனம் தௌதபாபம் காலவம் என்ற பெயர்களைப்பெற்றது. ஸ்ரீராமன் ஸீதாதேவியுடன் ஸ்நாநம்செய்து பித்ரு தர்ப்பணம்செய்தவிடம் பித்ரு தீர்த்தமாம்.

விச்வாமித்ர தீர்த்தம். முன்னோர் ஸமயம் பூமியில் நெடுநாள் மழையில்லாமல் துர்ப்பிக்ஷம் தோன்றிற்று. அச்சமயம் விச்வாமித்ரரும் தனது புத்ரகளத்ர சிஷ்யர்களுடன் உணவின்றிவருந்தினர். கங்கா தீரம் சென்று ஓர் சிஷ்யனை அழைத்து எங்கு எத்தகைய உணவுப்பொருள்கிடைத்தாலும் கொண்டுவா. விதிப்படி அதைப் பாகம்செய்து தேவபித்ரு ஹோமம்செய்து அதிதிக்குமளித்து மிகுதியை நாம் புஜிக்கலாமென்றார். அங்ஙனமே சீடன் அலைந்துதிரிந்து ஓர் இறந்த நாயைக் கொண்டு வந்தான். முநிவரது மனைவி அதை அடுப்புமீதுவைத்துப் பாகம்செய்தாள். விச்வாமித்ரர் அதை விதிப்படி தேவதைகளுக்கும் பித்ருக்களுக்கும் ஹோமம் செய்யக்கருதினர். அக்னி பகவான் இதைத் தேவேந்த்ரனிடம் அறிவித்தார். உடனே சக்ரன் கழுகு உருவமெடுத்து வந்து அதைப் பாத்ரத்துடன் தூக்கிச்சென்றான். ஞானதிருஷ்டியால் அதை அறிந்த விச்வாமித்ரர் இந்த்ரனைச் சபிக்கஆரம்பித்தார். அதற்குள் அவன் அம்மாம்ஸத்தை அகற்றி அந்த பாத்ரம் நிரைய அமிருதத்தைவைத்து முநிவரிடம் அளித்தான். அவர் அதைக்கண்டு ஸந்தோஷப்படாமல் எனது மாம்ஸத்தை அளிக்கிறாயா, அல்லது உன்னைச் சாம்பலாக்கட்டுமா என்றார். ஸ்வாமிந்! இறந்த நாய் மாம்ஸமெதற்கு? இம்

மதுவை அருந்துங்கள் என இந்த்ரனுரைத்தான். முனிவர் உலகிலெல்லோரும் உணவின்றி வருந்த யான்மட்டிலும் அமிருதமுண்பது அநீதியல்லவா என்ருர். இதைக்கேட்ட இந்த்ரன் மேகங்களை அழைத்து அமிருதத்தை வர்ஷிக்கும்படி கூறினர். அங்ஙனம் அமிருத மழை பெய்த இடம் விச்வாமித்ரதீர்த்தம் மதுதீர்த்தம் பர்ஜன்யதீர்த்தம் இந்த்ர தீர்த்தம் ச்யேனதீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

ச்வேத தீர்த்தம். கௌதமருக்குப் பிரிய நண்பரான ச்வேதர் என்ருேர் முனிவரிருந்தார். அவர் சிறந்த சிவபக்தர். கங்கைக் கரைமீது தங்கி, அவர் வந்த அதிதிகளுக்குச் சிவார்ப்பணமென்று வயிருர அறுசுவை அன்னமளித்துவந்தார். அவரது ஆயுட்காலம் முடிந்தபோது வழக்கப்படி யமனது உத்திரவைப்பெற்று அவரைக்கொண்டுசெல்ல யமதூதர்கள் அவரருகே வந்தார்கள். அவரது பக்திவிசேஷத்தால் அவர்கள் ச்வேதர் மனைக்குள் நுழையமுடியாமல் வெளியிலேயே வெகுநேரம் நின்றிருந்தனர். சிலகாலமாகியும் சென்றவர் திரும்பாததால் யமதர்மராஜன் மஹிஷத்தின் மீதேறி பாசத்துடன் அங்குவந்தார். ச்வேதர் சிவபூஜையிலீடுபட்டிருந்ததால் நந்தி குஹன் விநாயகன் முதலிய பரிவார தேவதைகளும் அங்குவந்து பக்தனளிக்கும் பூஜையை ஏற்றுக்கொண்டிருந்தனர். த்வாரத்திலுள்ள நந்தி யமனைநோக்கி எங்குவந்தாய்? என்ருர். அவன் ச்வேதனது ஆயுள் முடிந்ததால் அவனைக்கொண்டுசெல்ல வந்தோமென்ருன். சிவபக்தனருகே வராதே, செல் என நந்திகூற, அடங்காக்கோபத்துடன் யமன், ஆதிவ்யாதி முதலிய ரோககணங்களுடன் சேனையை அழைத்துவந்து போருக்காரம்பித்தான். விநாயகனும் குஹனும் ஓர் நிமிஷத்திற்குள்ளாக அவ்வெல்லோரையும் அடித்து அவனியில் வீழ்த்தினர். இதையறிந்த பிரும்மாதிதேவர்கள் விரைந்துவந்து கரம்குவித்து கைலாஸ

நாதனைத் துதித்தனர். பகவான் அவர்கள் முன்னே தோன்றி யாது வரம் வேண்டுமென்றார். தேவர்கள் சிவனைப்பணிந்து இறந்த யமன் முதலியவர்களை எழுப்பி வழக்கப்படி ச்வேதன் முதலிய விதிமுடிந்தோரை அழைத்துச்செல்ல அவர்களுக்கு அதிகாரத்தை அளிக்கவேண்டுமென்றார்கள். பரமசிவன் அவர்களைநோக்கி சில விஷ்ணுபக்தர்களுக்கு நாங்களே அதிகாரிகளாதலால் நீங்களவர்களைப்பணிந்து தூரே செல்ல வேண்டும். இறந்தவர்களைக் கங்காஜலத்தால் ஸ்நாநம் செய்வித்தால்அவர்கள் எழுந்திருப்பார்கள் என்றுகூறிச்சென்றார். அங்ஙனம் அவர்கள் கங்கா ஜலத்தால் உயிர் பெற்றெழுந்தனர். அவ்விடத்திற்கு யம தீர்த்தமல்லது ச்வேத தீர்த்தமெனப் பெயருண்டாயிற்று.

சுக்ர தீர்த்தம். அங்கிரஸ் ப்ருகு என இருமஹர்ஷிகள் இருந்தனர். இவ்விருவரும் ஸஹோதரர்கள். அங்கிரஸருக்கு பிருஹஸ்பதியும் ப்ருகுவுக்குச் சுக்ரரும் பிறந்தனர். வயது வந்தபின் இருவரும் ஒரு குருவினிடமே வேதமோதுவதாகக் கூறினர். அங்கிரஸ் இருவருக்கும் கல்வி கற்பிப்பதாகக் கூறினார். அங்ஙனமே இருவரும் சேர்ந்து அவரிடம் வித்யாப்பியாஸம் செய்து வந்தனர். அங்கிரஸ் தன் தனயனை பிருஹஸ்பதிக்கு நன்றாகக் கற்பித்து சுக்ரரைக் கவனியாதிருந்தார். இதைக்கண்டு சுக்ரர் தன் குருவைப் பணிந்து இங்ஙனம் பக்ஷபாதத்துடன் கற்பிக்கும் தங்களை விட்டு வேறு குருவினிடம் செல்ல உத்திரவு கொடுக்கும்படி வேண்டினார். அவரும் அதை ஆக்ஷேபிக்காமல் விடையளித்துவிட்டார். எல்லோரையும்விட உயர்ந்த குருவை அடைந்து எவருமறியாத அரிய கலையைக் கற்கவேண்டுமென்று சுக்ரர் ஆசைகொண்டார். அவர் கௌதமரை வணங்கி உலகில் உத்தம குரு யார் என்று கேட்டார். அவர் பரமசிவமே உயர்ந்த குரு. கங்கைக்கரையிலே தங்கி அவ

ரைத் துதித்து அவரருளால் நீ கோறியபடி கலைகளைக் கற்கலாமென்றார். சுக்ரரும் கங்கையில் புனலாடி கைலாஸநாதனைத் துதித்துச் சரணமடைந்தார். சிவனும் ப்ரத்யக்ஷமாகிச் சுக்ரர் கோரியபடி இறந்தவர்களைப் பிழைப்பிக்கும் மிருதஸஞ்ஜீவினீ என்ற அபூர்வ வித்யையையும் ஏனைய கலைகளையும் ஒரே நிமிஷத்தில் ஓதி மறைந்தார். சுக்ரர் வரம் பெற்ற அந்த இடம் சுக்ரதீர்த்தமல்லது மிருதஸஞ்ஜீவினீ தீர்த்தமெனப்படுகிறது.

இந்த்ர தீர்த்தம். தேவேந்த்ரன் விருத்ரனைக் கொன்று பிரும்மஹத்தியினால் பீடிக்கப்பட்டு வருந்தினான். பிரும்மாவின் உத்திரவுபடி தேவர்களும் பிருஹஸ்பதியும் இந்திரனைப்போருக்கு அழைத்துவந்து கங்காபிஷேகம் செய்ய முயற்சித்தனர். அபிஷேகம் செய்த இடத்திலே அந்த பாபம் தங்கி நிற்கும். அதனால் ஆங்கு துர்ப்பிக்ஷ முண்டாகும். இதை அறிந்து ஆங்குள்ள மாண்டவ்யமுநி அவனுக்கு அபிஷேகம் செய்யவிடாமல் தடுத்தார். அமரரனைவரும் முநிவரை வணங்கி இந்த்ரனது பாபமகலுமிடத்தை மிகப் புண்யக்ஷேத்ரமாகவும் ஸுபிக்ஷமுள்ளதாகவும் செய்வதாகக் கூறி எங்கேனும் அபிஷேகம் செய்ய இடம் கேட்டனர். மாண்டவ்யர் மாடவ்யதேசத்தில் சக்ரருக்கு அபிஷேகம் செய்யும்படி கூறினார். அங்கு மலமகன்றதால் அவ்விடம் அன்றுமுதல் மாலவதேசமென்று அழைக்கப்படுகிறது. அங்கிருந்து அபிஷேக ஜலம் ஆறாகப் பெருகி கங்கையில் கலந்தது. அவ்விடமே இந்த்ர தீர்த்தம். முன்பு ராவணன் குபேரனுக்குச் சொந்தமான புஷ்பக விமானத்தையும் லங்காபுரியையும் அபஹரித்துக்கொண்டு அவருக்கு இடமளிப்பவரையும் சிக்ஷிப்பதாகக் கூறினான். குபேரன் கங்காதீரம் சென்று தவம் செய்து உத்திர திக்பாலனானான். அந்த இடம் தநதீர்த்தம் எனப்படும்.

அக்நி தீர்த்தம். மஹர்ஷிகள் முன்னமோர் ஸமயம் ஸத்ர மெனும் வேள்வியைச் செய்து கொண்டிருந்தனர். யாகத்தில் ஹோமம் செய்யும் பொருள்களை அந்தந்த தேவர்களுக்கு மளித்து வந்தார் ஜாதவேதஸ் எனும் பெயருள்ளவர். அவர் அக்நியின் ஸஹோதரராவர். முநிவர்கள் பார்த்துக்கொண் டிருக்கும்போதே மது எனும் அரக்கன் ஜாதவேதஸைக் கொன்றான். அவர் ஸோதரரான அக்நி இதைப்பார்த் துப் பயந்து கங்காஜலத்தில் மூழ்கிவிட்டார். தேவர்கள் ஹவிஸ்ஸைத் தங்களுக்குக் கொண்டு கொடுக்கும்படி அவரை வேண்டினார்கள். அக்நி தனக்கு அத்தகைய சக் தியையும் ஹவிஸ்ஸை எடுத்துச்செல்வதற்காக ஓர் ஸம்மான மும் செய்யும்படி வேண்டினார். தேவர்கள் அந்த சக்தியை யளித்தனர். முனிவர் ப்ரயாஜ அநூயாஜமெனும் ஹோமங் களை அக்நிக்கு அளிப்பதாகக் கூறினார்கள். அங்கு அக்னி ஓர் சிவலிங்க பிரதிஷ்டை செய்தார். அந்த இடம் அக்நி தீர்த்தமெனப்படும்.

ருணமோசந தீர்த்தம். கக்ஷீவான் என்பவருக்கு ப்ருதுச்ரவஸ் எனும் ஓர்புதல்வர் இருந்தார். அவர் உலக விஷயத்தில் வைராக்யம் கொண்டு மோக்ஷத்தை நாடிச் சென்றார். அவர் விவாஹம் செய்துகொள்ளாதிருக்கும் போது தான் இல்லறத்திலீடுபடுவது பாபமெனக்கருதி அவரது கனிஷ்டரும் மணம் புரிந்துகொள்ளாமலிருந்தார். ஆதலின் அவர்களது பித்ருக்கள் அவர்களிடம் வந்து மணம் செய்துகொண்டு வேள்விகள் பல செய்து ஸத்புத் ரனைப் பெற்று தேவபித்ருருணங்களை அகற்றினாலன்றி அவர் களுக்கு நற்கதி இல்லை என்றார்கள். இருஸோதரர்களும் மணமும்வேண்டாம், மக்களும் வேண்டாம்; நாங்கள் வேண் டுவது மோக்ஷமே. இதற்குத் தடையாக அவை இருக்குமா னால் தேவபித்ருக்களது கடனை அகற்ற வேறு வழிகூறு

மென்றார்கள். இவர்களது சிறந்த வைராக்கியத்தைக் கண்டு மகிழ்ந்த பித்ருக்கள், கங்காஸ்னானம் செய்யும்படிக் கூறினார்கள். இவர்கள் புனலாடி கடனை அகற்றிய இடமே ருணமோசன தீர்த்தமாம்.

ஸுபர்ண கத்ரூ ஸங்கம தீர்த்தம். வாலகில்யர் எனும் முநிவர்கள் நமது கட்டைவிரலளவு உயரமுள்ளவர்கள். அவர்களைப் பார்த்து ஓர்ஸமயம் தேவேந்த்ரன் பரிஹாஸம் செய்தான். அதனால் சினந்த ரிஷிகள் இந்த்ரனைச் சபிக்க ஆரம்பித்தனர். இந்த்ரனது தந்தையான கச்யபர் அவர்களைச் சமாதானப்படுத்தித் தனது தபஸில் பாதியை அவர்களுக்களித்தார். அவர்கள் அத்தபஸினால் இந்த்ரன் செறுக்கை அடக்கத் தக்க ஓர் புதல்வனைப்பெற்றுக் கொள்ளும்படி கூறினார்கள். அங்ஙனமே கச்யபர், ஸுபர்ணை கத்ரூ என்ற இருமனைவிகளிடமும் அத்தகைய புத்ரனை நாடிக் கர்ப்பாதானம் செய்தார். அவர்கள் கற்பிணிகளாக இருந்தபோது கச்யபர் வேறிடம் செல்லும்படி நேர்ந்தது. ஆதலின் இருவர்களையும் ஆச்ரமத்தைவிட்டு வெளியில் போகாதிருக்கும்படியும் பெரியோருக்கு அபசாரம் செய்யாதிருக்கும்படியும் நன்மதி கூறிச்சென்றார். இருவர்களும் அவர் சொல்லை அலக்ஷ்யம் செய்து ஆச்ரமத்தைவிட்டுப் பல மஹர்ஷிகள் கூடி வேள்விசெய்யுமிடத்திற்குச் சென்றனர். ஆங்கும் மஹர்ஷிகள் சொல்லை மதியாமல் ஆங்குள்ள ஹவிஸ்ஸைத் தீண்டிக் கெடுத்தனர். ஆதலால் அவர்கள் இப்பெண்களை நதிகளாகும்படி சாபமளித்தார்கள். இதையறிந்து வருந்தி கச்யபர் தவஸிகளருகே சென்று தன் மனைவிகள் செய்த குற்றத்தை மன்னித்துச் சாபத்தை அகற்றும்படி வேண்டினார். அவர்கள் கங்கையில் புனலாடி அவளைத் துதித்துச் சாபத்தை அகற்றிக்கொள் என்றனர். அங்ஙனமே கங்காதேவியினருளால் சாபமகன்றது. ஆங்கு இருவர்களுக்கும்

கச்யபர் ஸீமந்தமெனும் சடங்கைச் செய்தார். அச்சமய மங்கு வந்த வேதியர்களைப் பார்த்து கத்ரு கண்ணைக்காட்டி பரிஹாஸம் செய்தாள். அவர்கள் கத்ருவைக் கண்ணை யிழக் கும்படிச் சபித்தனர். கச்யபரது துதியைக் கேட்டு மகிழ்ந்த கங்கை கத்ருவுக்குக் கண்ணையளித்தாள். அந்த இடம் மேற்கூறிய தீர்த்தமாம்.

புரூரவஸ் தீர்த்தம். ஓர் ஸமயம் புரூரவஸ் எனும் சக்ரவர்த்தி ஊர்வசியுடன் பிரும்மலோகம்சென்றான். ஆங்கு அதிரூபலாவண்யம் வாய்ந்த ஓர் பெண்ணைக்கண்டு மோ ஹித்து இவள் யார் என ஊர்வசியைக்கேட்டான். அவள் பிருஹ்மாவின் புத்திரியான ஸரஸ்வதி எனும் நதி என்றாள். அரசன் அவளிடம் காமனைகொண்டதால் ஊர்வசி, ஸரஸ்வதி யை அவரிடமழைத்துச் சென்றாள். அவ்விருவர்களும் அந்த நதிக்கரைமீதிருந்து பலநாள் சிற்றின்பத்தை அனுபவித்து வந்தனர். ஸரஸ்வான் எனும் ஓர் புதல்வனும் அவர்களுக்குப் பிறந்தான். அதைக்கண்டு பிரும்மா சினம்கொண்டு அவளைப் பெண்ணுருவை இழந்து நதி வடிவமாகவே இருக்கும்படி சபித்தார். புரூரவஸ் கங்கா ஸரஸ்வதி ஸங்கமத்தில் நின்று தவம் செய்து கங்கையினருளால் அச்சாபத்தை அகற்றினார். ஆதலின் அது அப்பெயர்பெற்றது.

ஸாவித்ரிமுதலிய பஞ்ச தீர்த்தங்கள். ஸாவித்ரீ காயத்ரீ ச்ரத்தா மேதா ஸரஸ்வதி என ப்ருஹ்மனுக்குப் பஞ்சகன்ய கைகள் பிறந்தனர். இவர்களைவிட மிக அழகிய மற்றோர் கன்யகையை அவர் மனதினால் படைத்தார். அவ்வழகிய ஸௌந்தரியைக் கண்டவுடன் பிரும்மாவினது மனம் சஞ் சலித்தது. இதை உணர்ந்த அம்மாது மானுருக்கொண்டு ஓடினாள். அவரும் ஆண்மானாகி அவள் பின் சென்றார். இதைக்கண்ட பரமசிவன் வேடனாக வந்து காத்தில் அம் பேந்தி அவர்கள் எதிரில் தோன்றினார். பிரும்மா உடனே

தனது குற்றத்தை உணர்ந்து பரமசிவனை வணங்கினார். சிவன் மறைந்த பின் பிரும்மா அப்பெண்ணைச் சூர்யனுக்களித்தார். அப்பெண்ணினிடம் காதல் கொண்டதுபோல் தந்தை தங்களையும்கண்டு காமனைகொள்வரோஎன அஞ்சி ஸாவித்ரி முதலியவர்கள் நதிகளாகிக் கங்கையில் சேர்ந்தனர். அவ்விடம் மிக பவித்ரமானதால் ஆங்கு ஸ்நாந தாநாதிகளைச் செய்வோர் நற்கதி பெறுவர். ப்ரியவ்ரதன் எனும் அரசன் ஓர் ஸமயம் கங்கா தீரத்தில் ஓர் அச்வமேத யாகம் செய்தான். வஸிஷ்டர் புரோஹிதராக இருந்து அதை நடத்திவைத்தார். இவர்களது வேண்டுகோளுக்கிணங்கி ஸகல தேவர்களும் ப்ரத்யக்ஷமாக அங்கு வந்திருந்தனர். அச்சமயம் ஹிரண்யகனெனும் அரக்கனும் அங்குவந்தான். அவனைக்கண்டு அஞ்சிய அமரர் அனைவரும் ஓடி ஒளிந்தனர். அக்னி சமீமரத்திலும் விஷ்ணு அச்வத்தத்திலும் சிவன் வடவிருக்ஷத்திலும் சூரியன் அர்க்கத்திலும் சந்த்ரன் பலாசத்திலும் அச்விநிகள் அச்வத்திலும் யமன் காக்கையிலும் புகுந்தனர். வஸிஷ்டர் தனது தவவலிமையால் அவ்வரக்கனை அகற்றி வேள்வியைப் பூர்த்திசெய்தார். அமரரும் ஆனந்தமாக ஹவிஸ்ஸை உண்டு சென்றனர். தேவர்கள் தங்கிநின்ற விருக்ஷங்கள் பெயரால் அங்கு புண்ய தீர்த்தங்கள் தோன்றின. ஆங்கு செய்யும் ஸ்நாந தாநாதிகள் அச்வமேத பலனை அளிக்கவல்லவை.

ஹரிச்சந்த்ர தீர்த்தம். இக்ஷ்வாகு வம்சத்திலே ஹரிச்சந்த்ரன் என்றோர் அரசனிருந்தான். அவன் மநுநீதி தவறாது அவனியை ஆண்டு வந்தான். ஓர் நாள் நாரதரும் பர்வதரும் அவன் அரண்மனைக்குச் சென்றனர். மன்னன் விதிப்படி முநிவர்களைப்பூஜித்து, புத்ரனில்லாவிடில் நரனுக்கு நற்கதி இல்லை என்னும் சொல் உண்மைதானோ? என்று வினவினன். முநிவர்கள், புத்ரனால் இம்மை மறுமைச் சுகங்கள் உண்டாம். புத்ரன் பிறந்தான் எனக்கேட்டவுடன்

ஸ்னனம் செய்தால் அச்வமேத யாகத்தின் பயனைப் பெறுவர் என்றும் கூறினார்கள். அதைக்கேட்ட அரசன் தனக்குப் புத்ரபாக்யம் உண்டாகத்தக்க உபாயத்தைக் கூறும்படி அவர்களையே வேண்டினான். அவர்கள் வேந்தனைக் கங்கா தீரம் சென்று வருணனைத் துதித்து மகனைப் பெறும்படி கூறிச்சென்றனர். ஹரிச்சந்த்ரன் மனைவியுடன் வாராணஸி சென்று வருணனை வேண்டினான். வேந்தன்முன்னே வருணன் தோன்றி, மன்னா! இப்பிறவியில் உனக்கு மக்கட்பேறு கிடையாது. பிறந்த புதல்வனைப் பசுவாக்கி என்னை நாடி ஓர் வேள்வி புரிவதாயின் புத்ரன் உனக்குப் பிறப்பான் என்றார். மலடாக இறப்பதைவிட இறந்த குழந்தைக்கேனும் தந்தையாகி இறப்பது சிறந்ததென்று மன்னன் கருதி அங்ஙனமே ஆகட்டுமென்றான். சில நாட்கள் சென்றபின் ரோஹிதன் எனும் மகனும்பிறந்தான். வருணனும் வந்தான். சிசுவைக்கொண்டு வேள்வியைச் செய் என்றான். அரசனோ குழந்தையைப் பலியிட மனமில்லாமல் தீட்டுச்சென்றபின் ஆகட்டுமென்றான். தீட்டுச்சென்றபின் தவறாது வருணன் வந்துகேட்க பல் முளைக்கட்டுமென்றான். பார்த்திவன் பல் முளைத்தபின் அது விழுந்து மறுமடியும் முளைத்தபின் ஆகட்டுமென்றான். விழுந்த பல் முளைத்தபின் வருணன் வந்து கேட்க, உபநயநமாகட்டும் என்றான். அதன்பின் வருணன் வந்துகேட்க வேறுவகையில்லாமல் வேந்தன் மைந்தனை அழைத்து அவனைப் பசுவாக்கி வேள்வி செய்வதாகக் கூறினான். அதைக்கேட்ட மகன் இவ்வருணனைப் பசுவாக்கி விஷ்ணுவை நாடித் தான் ஓர் வேள்வி முதலில் செய்யப்போவதாகக் கூறினான். இதைக்கேட்டு சினந்த வருணன், மன்னனுக்கு நீர்ரோகம் வரும்படி செய்துச்சென்றார். ரோஹிதனும் தந்தையைவிட்டு வனம் சென்றான். ஐந்தாண்டுகள் கழிந்தபின் ரோஹிதன் காசிமாநகரம் சென்று தன்

தந்தை நோய்வாய்ப்பட்டுத் தவிப்பதைகேட்டு வருந்தினுன். அதை அகற்ற வழியாதென அவன் யோசித்துக்கொண்டிருக்கும்போது அஜீகர்த்தரெனும் எளிய வேதியர் அவன் கண்முன் தோன்றினர். அவர் மூன்று புதல்வர்களுடனும் மனைவியுடனும் கூடி உணவிற்கு வழியின்றி வருந்தினர். ரோஹிதன் தந்த்ரமாக அவருடன்பேசி அவர் வாக்கிலிருந்தே ஓர் புதல்வனை விற்பதாகக்கூறும்படிச் செய்தான். எண்ணிறந்த பொருட்களைஅளித்து சுநச்சேபனெனும் மத்யம புத்ரனை வாங்கி வந்தான். தனக்குப் பதிலாக இவனைக் கொண்டு வருணயாகம் செய்யும்படி ரோஹிதன் தந்தையிடம் கூறினுன். ஹரிச்சந்த்ரன் வியாதியால் தானிறப்பதே சிறந்தது என்றும், விஷ்ணுவைத் துதிக்கும் வேதியனைக் கொண்டு வேள்விசெய்வது பாபமென்றும் கூறி அங்ஙனம் செய்ய மறுத்தான். அச்சமயத்தில் ஆகாசத்திலிருந்து ஓர் சொல் கிளம்பிற்று. அது அரசனைக் கங்கா தீரம் சென்று ரோஹிதனைக்கொல்லாமல் வேள்வியைப் பூர்த்திசெய்யும்படி ஆணையிட்டது. அரசனும் அங்ஙனமேசென்று யாகத்தைத் துவக்கினுன். ஆங்கு யூப மரத்தில் பசுவாகக் கட்டப்பட்டிருக்கும் சுநச்சேபனைக்கண்ட விச்வாமித்ராது மனம் இளகியது. முனிவர்களைக் கங்கா நதியில் மூழ்கி தேவதைகளைத் துதித்து அவர்களருளால் இவனை உயிருடன் விடும்படி வேண்டினர். அங்ஙனமே முனிவர்கள் துதிக்க தேவர்கள் ஸந்தோஷமடைந்து சுநச்சேபனைக் கொல்லாமலே தாங்கள் த்ருப்தியடைந்ததாகவும் யாகம் பூர்த்தியானதாகவும் கூறிச்சென்றனர். அந்த இடம் ஹரிச்சந்த்ரன் ரோஹிதன் சுநச்சேபன் வருணன் விச்வாமித்ரர் ஆகியவர்கள் பெயரால் அழைக்கப்படுகிறது.

ஸோம தீர்த்தம். அமிருதமயமான ஸோமராஜன் என்ற கொடியை முன்னர் கந்தர்வர்கள் தேவர்களிடமிருந்து

பிடுங்கிச் சென்றனர். அதைத் தாங்கள் அடையவேண்டுமென அமரர் ஆசைகொண்டனர். பிருமனிடம் வந்து தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டனர். இதற்கு என்ன செய்வதென்று அவர் யோசித்துக் கொண்டிருக்கும்போது ஸரஸ்வதிதேவி, தேவரனைவரும் கங்காதிரம்சென்று அங்கு ஓர் யாகம்செய்வதாகக்கூறி எல்லோரையுமழையுங்கள்; கந்தர்வருமங்குவருவர்; அவர்கள் காமுகர்களாதலின் என்னைக்கண்டு மயங்குவர்; ஸோமராஜனை அளித்தால் அவர்களிடம் என்னைக்கொடுப்பதாகக் கூறுங்கள் என்றுரைத்தாள். அதைக்கேட்டு தேவர்கள் அவளை இழக்கமனமில்லாதவர்களாக வருந்தினர். ஸரஸ்வதி அவர்களை வஞ்சித்து அமரரிடம்வருவதாக வாக்களித்தாள். அங்ஙனமே கங்காதீரத்தில் கந்தர்வர்கள் ஸரஸ்வதியைப் பெற்றுக்கொண்டு அதற்குப்பதிலாக ஸோமராஜனைத் தேவர்க்குத் தந்தனர். ஸரஸ்வதியும் கந்தர்வரிடமிருப்பதாகக் கூறி அவர்களை வஞ்சித்து ஏகாந்தமாக அன்றன்றும் அமரரிடம் வந்து வேண்டிய உதவியைச்செய்தாள். கந்தர்வர் ஸோமனை அமரரிடமளித்த இடம் ஸோம தீர்த்தமாம்.

ப்ரவராஸங்கமம். தேவரும் தைத்யரும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து அமிருதத்தை எடுத்தனர். அஸுரர் கடைந்த இளைப்பால் தங்களது நண்பர்களான தேவர்கள் தங்களது பாகத்தைக்கொண்டு கொடுப்பரெனக் கருதி வீடுசென்று களைப்பாறினர். அமரர் இதே தக்க ஸமயமெனக்கருதி மேருமலைமீது அமர்ந்து அமிருதத்தை உண்டனர். இதை உணர்ந்த ராகு எனும் அரக்கன் தேவவேடம் பூண்டு அவர்களிடையே அமர்ந்து அமிருதமுண்டான். இதைச் சந்த்ரனும் சூர்யனும் கண்டு விஷ்ணுவினிடம் விக்ஞாபித்தனர். அவர் சக்ரத்தால் ராகுவின் தலையை அறுத்தெறிந்தார். தேவர்கள் ராகுவிற்கு உடலில்லாது

செய்துவிட வேண்டுமெனக் கருதி காளியை அழைத்து அவ்வுடலை மாத்ரம் புசிக்கும்படி கூறினர். அவ்வுடல் காளி தேவியுடன் கடும்போர்செய்தது. காளியாலதைப் புசிக்க முடியவில்லை. அதைக்கண்டு தேவர் வருந்தும்போது ராகு அவ்வுடலிலுள்ள அமிருதத்தை அகற்றினாலன்றி வெல்ல முடியாதென்று கூறினான். காளி அவ்வுடலைப் பிளந்து அமிருதத்தை வெளிப்படுத்தி அவ்வுடலைப் புஜித்தாள். அவ்வமிருதம் நதியாகஓடி கங்கையில் கலந்தது. அவ்விடமே ப்ரவராஸங்கமமாகும். ராகு தங்களுக்குச்செய்த உதவிக்குக் கைம்மாருக ஸுரர்கள் அவனை ஓர் க்ரஹமாக ஏற்று பட்டாபிஷேகம் செய்தனர்.

விருத்தா ஸங்கமம். கௌதம முனிவருக்கு மூக்கில்லாமல் ஓர் மகன் பிறந்தான். தந்தையின் பெயரால் அவனும் கௌதமனென்றே அழைக்கப்பட்டான். அவன் வெட்கத்தினால் ஏனைய மாணவருடன் சேர்ந்து கல்வி பயிலாதிருந்தான். தக்க வயது வந்தபின் அவனுக்குத் தந்தை உபநயநம் செய்வித்தார். அவன் காயத்ரியையும் அக்னி பூஜையையும் மாத்ரம் விடாது செய்துவந்தான். தன் தந்தை ஆச்ரமத்திலே பல மாணவர்கள் வேதமோத தான்மட்டிலும் கல்வியில்லாதிருப்பது கௌதமன் மனதை வருத்தியது. அவ்வாச்ரமத்தைவிட்டு அவன் தேசாடனம் செய்தான். தற்செயலாக இமயமலைச் சாரலில் ஓர் குஹையில் நுழைந்தான். அங்கு அங்கமெல்லாம் மலிந்த ஓர் கிழவியைக்கண்டான். அவள் வயது சென்றவளாயினும் கன்யகையாகவே இருந்து தவம்செய்கின்றாள் என அவனறிந்து, அவளை நமஸ்காரம் செய்ய ஆரம்பித்தான். அவள் ஐயா! வேண்டாம் நில்! நானல்லவோ உம்மைப்பணிந்து நமஸ்கரிக்கவேண்டும் என்றாள். வயதினாலும் தவத்தினாலும் மிகச்சிறந்த நீ என்னைப் பணிவது நீதியாமோ என்று கௌதமன் கேட்டான்.

விருத்தை தனது ஸமாசாரத்தை விரிவாக உரைத்தாள்: முனிவரே! ரிதத்வஜனெனும் அரசன் ஓர் ஸமயம் வேட்டையாடிக் களைத்து இக்குகையில் படுத்திருந்தான். தற்செயலாக ஸுசர்யாமா எனும் கந்தர்வப்பெண் ஆங்குவந்தனள். இருவரும் அழகிற்சிறந்தவர்கள், ஆதலின் ஒருவரையொருவர் கண்டு காதல்கொண்டனர். இருவருங்கூடி சில காலம் சிற்றின்பத்தைப் பெற்றனர். அதன் பயனாக யான் பிறந்தேன். இக்குகையில் நுழைபவனே உனக்குக் கணவன் என்றுகூறி என் தாய் சென்றாள். எண்பதாயிரமாண்டுகள் ராஜ்யத்தை ஆண்டு என் தந்தையும் ஸ்வர்க்கம் சென்றார். எனது ஸஹோதரனும் பத்தாயிரமாண்டுகள் பாரினை ஆண்டு பால்யத்திலேயே பரமபதமெய்தினான். அன்று முதல் இன்றுவரை யான் தங்கள் வரவை எதிர்பார்த்தவண்ணமாகவே இருக்கிறேனென்றாள். இதைக்கேட்ட கௌதமன், அம்மா! நீயோ விருத்தை, நானோ கல்வியில்லாத அங்கஹீனனான சிறுவன், இருவருக்கும் மணம் எப்படி ஏற்றதாகுமென்றார். உடனே விருத்தை ஸரஸ்வதியினருளால் கௌதமனை ஸகலகலா வல்லபனாகவும் அக்நியின் அருளால் நல்ல ரூபமுள்ளவனாகவும் செய்தாள். இருவருங்கூடி அக்குகையில் தம்பதிகளாக வஸித்துவந்தனர். சில நாட்களானபின் வஸிஷ்டர் முதலிய முனிவர்கள் அங்கு வந்தனர். இத்தம்பதிகள் விதிப்படி விருந்தினரைப் பூஜித்தனர். அவர்களில் சிலர் இத்தம்பதியைக் கொண்டாடினர். சிலர் இக்கிழவி தனக்குப்பேரனாக இருக்கத்தக்க இவனோடு ரமிப்பதைக்கண்டு நகைத்தனர். விருந்தினர் சென்றபின் கௌதமர் வெட்கத்தினால் சற்று வருந்தினார். இதை அறிந்த அகஸ்தியமுனி அவரருகே வந்து, கௌதம! கங்காதீரம் சென்று தவம்செய்; உனது குறை அகலுமென்றார். கௌதமர் அக்கிழவியுடன் காசி சென்று கங்கையில் புனலாடி

சிவனை நாடித் தவம் செய்தார். கங்கை ப்ரத்யக்ஷமாகி என் ஜலத்தால் அவளுக்கு விதிப்படி அபிஷேகம் செய். அவள் யுவதியாவாள். அவள் உனக்கு அபிஷேகம் செய்யட்டும். உனது மூக்கும் வளருமென்றாள். அங்ஙனமே செய்து இருவரும் மிக சுந்தர தம்பதியாக ஆயினர். அவ்விடம் விருத்தா ஸங்கமமென்றும் அவர் விருத்த கௌதமரென்றும் அழைக்கப்படுகின்றனர்.

இலா தீர்த்தம். இக்ஷ்வாகு வம்சத்திலே இலன் என்றோர் வேந்தனிருந்தான். அவன் வேட்டையாடுவதில் மிக்க ஆசையுடையவன். ஒரு நாள் அவன் வேட்டையாடிக்கொண்டே ஹிமயமலைக்குச் சென்றான். ஆங்கு அழகிய ஓர் குஹையைக்கண்டு தன் பரிவாரத்துடன் இலன் அதில் தங்கினான். அது ஸமன்யு எனும் ஓர் யக்ஷராஜனது வீடு. அவன் தன் மனைவியுடன் மானுருக்கொண்டு விளையாட வெளிச்சென்றிருந்தான். திரும்பி வந்து தன்னிடத்தில் அரசனிருக்கக் கண்டான். தன்னிடத்தை விட்டுவிடும்படி யக்ஷன் வேந்தனை வேண்டினான். அரசன் அதை யக்ஷனுக்களிக்க மறுத்தான். பலாத்காரமாக உள்ளே புகுந்த யக்ஷ கிங்கரர்களையும் அவன் கொன்றான். யக்ஷராஜன் உபாயத்தினாலே வேந்தனை வெல்வதென்று தீர்மானித்தான். மானுருவம்தாங்கிய தன் மனைவியை மன்னனருகே செல்லும்படியும் அவளைத் துரத்திக்கொண்டு அவன் பின்னால்வரும் வேந்தனை உமாவநத்திற்கு அழைத்துச் செல்லும்படியும் கூறினான். அவளும் அங்ஙனமே அரசனை உமாவனத்திற்குக் கொண்டு சென்றாள். உடனே அவள் நிஜ உருவெடுத்து இவனை நோக்கி குதிரை மீதேறி புருஷனைப் போல் கையில் வில்லேந்தி வநாந்தரத்தில் தனியே வந்த நீ யாரம்மா என்றாள். இதைக்கேட்டு வியந்த வேந்தன் தன்னுடல் பெண்ணுருவாக மாறியிருப்பதைப் பார்த்தான்.

ஆச்சரியமடைந்து எனிங்ஙனம் நேர்ந்ததெனை அந்த யக்ஷி ணியையே வினவினான். இது உமாவநமென்றும் சிவன் குஹன் விநாயகன் இவர்களைத்தவிர வேறெந்த புருஷன் இங்கு நுழைந்தாலும் அவன் பெண்ணாவான் என்பது பார்வதீதேவியின் ஆணை என்றும் தங்கள் குறையைப் பிடித்துக்கொண்டு அதைவிட மறுத்ததால் தன் கணவன் உத்திரவுபடி தானிங்ஙனம் செய்ததாகவும் அவள் கூறினாள். இதைக்கேட்டு இவன் மிக்க வருந்தி தான் புருஷனாகும் உபாயத்தைக் கூறும்படி வேண்டினான். சந்த்ரனது புதல்வனான புதன் உன்னை மணப்பான்; இருவருக்கும் ஓர் குழந்தைபிறக்கும்; அது உன்னை ஆணாக்க உபாயம் கூறுமென்றாள். அங்ஙனமே சிலகாலம் சென்றபின் புதன் இலையைக்கண்டு இச்சை கொண்டான். இருவருங்கூடி புரூரவஸ் எனும் புதல்வனை உண்டு பண்ணினார்கள். புரூரவஸ் தன்தாய் ஸந்தோஷமாக இராமல் அவள் முகம் வாடி யிருப்பதைக் கண்டு என் அருமைத்தாயே! சிறந்த பதியையும் பக்தனான புத்ரனையும் பெற்றும் நீ வருந்துவதேன்? என்று வினவினான். அவள் தனது பூர்வ விருத்தாந்தத்தைக்கூறி தான் புருஷனாகும் உபாயத்தைத் தேடவேண்டுவது அவன் கடன் என்றாள். புரூரவஸ் தன் தந்தையினிடம் கூற, அவர் கங்காஸ்நாநஞ்செய்து பார்வதீ பரமேச்வரர்களது அருளால் ஆண்மையை அடையும்படி கூறினார். அங்ஙனமவள் ஸ்நாநம் செய்த இடமே இலாதீர்த்தமாகும்.

சக்ர தீர்த்தம். தக்ஷப்ரஹ்மாவுக்குப் பல பெண்களுண்டு. ஒருவளைப் பரமசிவத்திற்களித்தார். அவள் பெயர் ஸதி அல்லது தாக்ஷாயணியாம். ஓர்ஸமயம் தக்ஷன் சிவனிடமுண்டான சினத்தினால் அவரை அழைக்காமல் ஓர் வேள்வி செய்தான். பித்ரு வாத்ஸல்யத்தினால் தாக்ஷாயணி தக்ஷயக்ஞத்திற்குச் சென்றாள். அவன் தேவியை வரவேற்காததுடன்

சிவனையும் தூஷித்தான். இதைக்கேட்ட ஸதி ஈசனுயிருப்பினும் தன்பதி நிந்திக்கப்படுவதைக் கற்புள்ளவள் கேட்கலாகாது. மாதேவனை என்பதியை ஒருவர் நிந்திக்க அதையான் கேட்கத் தகுமோ? என்று ஸதி தக்ஷன் யாகம் அழியட்டுமெனச் சபித்தாள். சிவநிந்தை புரியும் தக்ஷனது புதல்வியாகத் தான் இருக்க விரும்பாமல் யோகாக்நியால் அவ்வுடலை எரித்தாள். இதைக்கேட்ட சிவனும் தனது பூதப்ரேதகணங்களுடன் தக்ஷனது யாகசாலைக்குச் சென்றார். வீரபத்ரனும் காளியும் வேள்வியை அழித்தனர். இவர்களது அட்டஹாஸத்தைக் கண்டு முநிவரும் தேவரும் அஞ்சி ஓடினர். பலர் பூதகணங்களால் கொல்லப்பட்டனர். மிகுதியுள்ளோர் அபயம்! அபயம்! என அச்யுதனைச் சரணமடைந்தனர். அமரரைக் காக்க எண்ணி மஹாவிஷ்ணுவும் மஹாதேவன்மீது தனது சக்ராயுதத்தைப் பிரயோகித்தார். அது ஈசனுடலிலே சென்றவிடம் தெரியாமல் லயித்துவிட்டது. விஷ்ணுவின் சக்ரமே பாழாயினபின் நம்மை யார் காப்பார்? என அஞ்சி சிலர் சிவனையே சரணமடைந்தனர். சிலர் உயிருக்கஞ்சி ஓடி ஒளிந்தனர். இதைக் கண்ட தக்ஷன் சிவன் பெருமையை உணர்ந்து அபயமென அவரடி பணிந்து போற்றினன். கருணாநிதியான கைலாஸநாதன் ப்ரஸன்னமாகி வேண்டிய வரத்தைக்கேளென்றார். தக்ஷன் அவ்வேள்வி பூர்த்தியாக வேண்டுமென்று வரம் வாங்கி அதை முடித்தான். சிலகாலம் சென்றபின் தேவர்க்கும் அஸுரர்க்கும் போர் நடந்தது. தேவர் வழக்கப்படி தைத்யாரியான விஷ்ணுவைச் சரணமடைந்தனர். அவர் சக்ரமில்லாவிடில் ஜயமில்லை. சக்ரமோ சிவனிடம்சென்று திரும்பவில்லை; என்செய்வதென்று யோசித்தார். கங்காதீரம் சென்று கங்காதரனைப் பூஜித்து சக்ரத்தை அடைவதெனத் தீர்மானித்தார். அங்கு சென்று அன்றன்றும்

ஆயிரம் தாமரை மலரெடுத்து புண்டரீகாக்ஷன் பரமசிவனை ஆராதித்து வந்தார். ஒருநாள் ஆயிரத்தில் ஒருமலர் குறைந்ததால் தன் தாமரைக் கண்ணைப்பிடுங்கி அர்ச்சித்தார். உடனே உமையவளுடன் சிவன் வந்து ஹரியை இருகத் தன் கரங்களால் தழுவிக் கண்ணையும் சக்ரத்தையுமளித்தார். அன்றுமுதல் அவ்விடம் சக்ரதீர்த்தமாயிற்று.

பிப்பல தீர்த்தம். ததீசி என்றோர் முனிவர் கபஸ்தினீ என்ற மனைவியுடன் கூடி கிருஹஸ்த தர்மத்தை ஒழுங்காக நடத்தி வந்தார். அகஸ்த்யரது மனைவியான லோபாமுத்ரைக்கு அவள் ஸஹோதரீ. ஒருஸமயம் இந்த்ரன் முதலிய ஸகலதேவர்களும் ததீசியைக் காணவந்தார்கள். முனிவர் தக்கபடி தேவரை உபசரித்து வந்த கார்யம் யாதென வினவினர். வானவர் தாங்கள் அஸுரரை ஜயித்து வெற்றி விழா கொண்டாடப் போவதாகவும் தாங்கள் வந்து கேட்கும்வரை தங்கள் ஆயுதங்களை வைத்திருக்கும்படியும் கூறினர். இதைக்கேட்டு கபஸ்தினீ தன்கணவனை வணங்கி, நாத! இவ்வாயுதங்களை நாம் வைத்திருக்கிறோமென்றறிந்தால் தைத்யர் நம்மை த்வேஷிப்பர். இவைகளை நன்கு காப்பாற்றி அளிக்காவிடில் அமரர் நம்மை வெறுப்பர். ஆதலின் இதை விடுத்து ஏனைய உபகாரங்களைத் தேவர்க்குச் செய்வது உசிதமன்றோ என்றாள். இது நியாயமாயினும் ஒருவர் கேட்கும் உபகாரத்தை முடியாதெனக் கூற மனம் வராமல் முனிவர், வானவர் விருப்பத்திற் கிணங்கினார். அமரர் தங்கள் கார்யம் கைகூடியதென்று மிக ஸந்தோஷத்துடன் ஆயுதங்களை அவ்வாச்ரமத்தில் வைத்துவிட்டுச் சென்றனர். ஆயிரமாண்டுகள் சென்றன. அமரர் வரவில்லை. அஸுரர்கள் இதை அறிந்து ததீசியினிடம் பகைமைகொண்டனர் என்றாலும் அவரது தபோமஹிமையால் அஸுரர் அவரை அணுகி எவ்வித தீமையுமிழைக்கமுடியவில்லை. ததீசி இனி அமரர்

வரும்வரை ஆயுதங்களை வெளியில் வைத்துக் காப்பதால் பல துன்பங்கள் உண்டாகுமெனக்கருதி அவைகளை மந்த்ர பலத்தால் ஜலத்தில் கரைத்து அருந்திவிட்டார். சிலகாலம் சென்றபின் தேவர் இதை அறிந்தனர். முன்னமே அவ் வாயுதங்களை ஏற்கவேண்டாமென்று கூறிய ததீசி மனைவியி னிடம் தேவர்களுக்கு அச்சமதிகம். ஆதலின் அவள் ஆச்ர மத்திலில்லாத ஸமயத்தில் அங்குவந்து முனிவரைத் தங்கள் அஸ்த்ரங்களைக் கொடுக்கும்படி வேண்டினார்கள். முனிவர் நடந்ததைக் கூறி தனது எலும்புகளுடன் அந்த அஸ்த்ரங் கள் சேர்ந்திருக்கின்றன என்றார். ஆயுதமில்லாமல் பெண் மக்களைப்போல் ஓர்க்ஷணநேரமும் தாங்கள் வஸிக்க முடியா தென்று தேவர் கூற, முனிவர் தனது எலும்புகளைக் கொண்டு ஆயுதத்தைச் செய்துகொள்ளுங்கள் என்று கூறி யோகத்தினால் ஆவியைத் துறந்தார். வானவர் த்வஷ்டாவை அழைத்து ஆயுதங்களைச் செய்து தரும்படி உத்திரவிட்ட னர். அவன் மஹர்ஷியினது உடலைத்தொட அஞ்சி எலும் புகளை மாத்ரம் எடுத்துக் கொடுத்தால் தான் ஆயுதம் அமைப்பதாகக் கூறினான். தேவர்கள் அருகிலுள்ள கோக் களை அழைத்து ததீசியின் எலும்பின்மேலுள்ள மாம்ஸங்களை அகற்றும்படி வேண்டினர். கோக்களுமங்ஙனம் செய்தன. தன் காரியத்தை முடித்துக்கொண்டு கபஸ்திநீ வருவதற் குள் வானவர் சென்றனர்.

வழக்கப்படி ஸ்நாநம்செய்து தீர்த்தத்துடன் திரும்பி னாள் கபஸ்திநீ. அவள் கழுத்திலிருந்து ஆபரணம் கீழே விழுந்தது. வலது கண் துடித்தது; ஆகாயத்திலிருந்து கொள்ளிக்கட்டை வீழ்ந்தது. இந்த அபசகுனங்களைக் கண்டு அஞ்சி என் நாதனுக்கு ஏதேனும் தீங்கு நேராதிருக்க வேண்டுமே என்று நடுநடுங்கி விரைவாக அவள் ஆச்ரமத் திற்கு வந்தாள்; கணவனைக் காணவில்லை. அக்னிஹோத்ர

சாலையில் புகுந்து அக்னியை நோக்கி என்பதி எங்கே? என்ருள். அவர் நடந்ததைக் கூறிஞர். உடனே கபஸ்திநீ வேரிழந்த மரம்போல் வீழ்ந்தாள், கதறிஞள், எழுந்தாள். இந்த்ராதிதேவரைச் சாம்பலாக்கிவிட எண்ணிஞள். தன் பதி தானே உடலைத் தேவர்க்குத் தானம் செய்திருக்க தான் சாபமளிப்பது கணவன் கருத்துக்கு மாருனதென கற்பரசி கருதிஞள். பர்த்தாவுடன் உடன்கட்டை ஏறுவதென நிச்சயித்தாள். தனது வயிற்றிலுள்ள கரு அதற்குத் தடையாக இருந்தது. ஆதலின் அதைத் தன் வயிற்றைக் கிழித்து வெளியிலெடுத்தாள். தனது ஆச்ரமத்திலுள்ள விருக்ஷங்களைப்பார்த்து இந்த தாய் தந்தையற்ற குழந்தையை ரக்ஷியுங்கள் என்று கூறி, பதியின் உடலைத் தீயிலிட்டுத் தானும் அதில் இறங்கிஞள். பிப்பலமெனும் அரசமரங்கள் அக்குழந்தையை எடுத்துக் காப்பாற்றின. ஓஷதிகளுக்கு அரசஞன சந்த்ரனிடமிருந்து சிறிது அமிருதத்தை வாங்கிவந்து அளித்து அதை வளர்த்தன. பிப்பலங்கள் வளர்த்ததால் அக்குழந்தைக்குப் பிப்பலாதன் எனப் பெயர் வழங்கியது. வயது வந்தபின் ஓர்நாள் பிப்பலாதன் மரங்களை நோக்கி மனிதருக்கு மனிதரன்ருே தந்தைதாய். நீங்கள் எங்ஙனம் எனக்குத் தந்தை தாய் ஆனீர்கள் என்று வினவிஞன். விருக்ஷங்கள் நடந்த விருத்தாந்தத்தைக் கூறின. தந்தை தாய் மரணத்திற்குக் காரணமான தேவரிடம் பிப்பலாதனுக்கு அடங்காச் சினமுண்டாயிற்று. அமரரைக் கொன்று பழிக்குப்பழி வாங்கக் கருதிஞன். சந்த்ரனை அடித்து எந்த மூர்த்தியை எங்கு எப்படி உபாஸித்துத் தன்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்யலாமென்று வினவிஞன். அவர் கங்கையில் கங்காதரனைப் பூஜி. உனதிஷ்டம் பூர்ணமாகும் என்ருர். அங்ஙனமே பிப்பலாதன் பரமசிவத்தைப் பூஜித்தான். அவரும் ப்ரத்யக்ஷமாகித் தனது மூன்ருவது கண்ணைத் தர்சித்

தால் உனது இஷ்டம் கைகூடுமென்றார். தேஜோமயமான மூன்றாங்கண்ணைக்காண அவனால் இயலவில்லை ஆதலின் மற்றும் பல ஆண்டு தவம் செய்தான். கைலாஸநாதன் ப்ரத்யக்ஷமாகி நெற்றிக்கண்ணைக் காட்டினார். தவவலிமையினால் ததீசி குமாரன் அதைத் தர்சித்தான். தீயில்வீழ்ந்த தன் தாயை நினைத்து வருந்தி தேவரைக் கொல்ல வரம்வேண்டுமென்றான். அத்தீயிலிருந்து பெண்வடிவமான கிருத்யா எனும் ஓர் பூதம் கிளம்பி யான் என்னசெய்யவேண்டுமென்று அவனைக்கேட்டது. பிப்பலாதன் தேவர்களைக் கொல் என்றான். உடனே அது இவனைக்கொல்ல ஆரம்பித்தது. பிப்பலாதன் பரமசிவனைச் சரணமடைந்து தன்னை அது ஏன் கொல்லவருகிறதென்றான். நீ அமிருதமுண்டு விருக்ஷ தேவதைகளால் காக்கப்பட்டாய்; ஆதலின் உன்னையும் தேவனாகக்கருதி உன் உத்திரவைச் செய்ய ஆரம்பித்ததென்று கூறி, சிவன் இக்காசியில் ஓர் யோஜனை தூரத்திற்குள் இருப்போரைக் கொல்லாதே என்று கட்டளையிட்டார். கிருத்யை உடனே தேவர்களைக் கொன்றது. அவர்கள் பரமசிவனைச் சரணமடைந்தனர். அவர் அனைவரையும் காசியிலேயே இருக்கும்படி கூறினார். பிப்பலாதனைப் பார்த்து மஹேசன் தேவரழிவதால் உன் பெற்றோர் திரும்பி வருவரோ? ஏன் வீணாகப் பாபத்தைத் தேடுகிறாய் என்று கூறினார். பிப்பலாதனது சினமும் சிவோபதேசத்தால் குறைந்தது. கிருத்யையைச் சமுத்திரத்திலிருந்து அந்த ஜலத்தை அருந்தும்படிக்கூறினான். தன் சொற்படிநடந்த ததீசியின் புத்ரனிடம் சிவனுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. யாதுவரம் வேண்டுமென அவனைக் கேட்டார். பிப்பலாதன் தான் தவம்செய்த இடத்திற்குத் தன்னை வளர்த்த பிப்பலங்களின் பெயரை இட்டு ஆங்கு ஸ்நாநதாநாதிகளைச் செய்வோருக்கு நற்கதி அளிக்க வேண்டுமென்றும் வேண்டினான். அங்ஙனமே வர

மளித்து அவனது பித்ருபக்தியைக்கண்டு ஸந்தோஷித்தார் பரமசிவன். அவனது விருப்பப்படி இறந்த அவனது பெற்றோரைப் பிப்பலாதன்முன் தோற்றிவைத்தார். அவன் அளவில்லாத ஸந்தோஷமடைந்து பெற்றோர் திருவடியைப் பலமுறைப் பணிந்து போற்றினான். அவர்களும் மகனைக் கண்டு மகிழ்ந்து ஆசீர்வதித்துச் சென்றனர். தேவர்களும் லோகங்களும் சிவனது ஆணையின்படி கங்காஸ்நாநம் செய்து ததீசி வதத்தினாலுண்டான பாபத்தை அகற்றிக்கொண்டனர். அந்த கங்கையில் இறந்தவரது எலும்பு எதுவரையில் இருக்கின்றதோ அதுவரை அவர் ஸ்வர்க்கத்தில் வஸிப்பர்.

நாக தீர்த்தம். ப்ரதிஷ்டா நகரத்திலே சூர்ய வம்சத்தைச்சார்ந்த சூரஸேநன் என்றோர் அரசன் இருந்தான். அவன் பல ஆண்டுகள் யாதொரு குறையுமின்றி அவனியை ஆண்டு வந்தான். ஆயினும் புத்ர பாக்யமில்லாக் குறை ஒன்று அரசனைத் துன்பத்திற்கு ஆளாக்கியது. வேந்தன் விதிப்படி பல காம்ய கர்மங்களைச்செய்து புத்ரனுண்டாகாமல் ப்ரதிபந்தகம் செய்யும் பாபங்களை அகற்றினான். ராஜபத்நீ கருதரித்தாள். அரசன் ஆவலுடன் குழந்தை பிறக்கும் தினத்தை எதிர்பார்த்திருந்தான். மன்னனது விருப்பத்திற்கு முற்றிலும் மாறாக அவர் மனைவி குழந்தையைப் பெறாது ஓர் அரவத்தை ஈன்றாள். மிகபுத்திசாலியான மன்னன் மனைவி ஒருவருக்குமிதை அறிவிக்காமல் ஏகாந்தமாக அரசனுக்கு மட்டிலும் தெரிவித்தாள். இவ்விருவரும் கூடி யோசித்து பல நாள் தவமிருந்து "பார்த்தன் பாம்பினைப் பெற்றான்" எனப் பிறர் பரிஹாஸம் செய்வரெனக்கருதி வேறெவரும் பாராவண்ணம் இப்பாம்புக் குழந்தையை வளர்த்தனர். எனினும் இதைப் பார்க்கும்போதெல்லாம் அவர்கள் மனம் நொந்து மிகக்கஷ்டப்பட்டனர். சில காலம் சென்றபின் அந்த ஸர்ப்பசிசு பெற்றோரை நோக்கி, வருந்துவதில்

பயனென்ன? எனக்கு நாகேச்வரனென்று பெயரிட்டு மனி தனுக்கேற்றபடி ஸகல ஸம்ஸ்காரங்களையும் செய்யுங்கள் என்றது. இதைக்கேட்டு வியந்தான் வேந்தன். அது கோரியபடி உபநயநமும் செய்வித்து வேதமும் கற்பித்தான். மற்றும் சிலநாட்கள் சென்றபின் நாகேச்வரன் தனக்கு மணம் செய்து வைக்கும்படி தந்தையிடம் கூறினன். அருமைக் குழந்தாய்! நீ விரும்பியபடி புத்ரவாஞ்சையால் உனக்கெல்லாம் செய்தேன். அழகிய ஆடை ஆபரணங்களையும் அளித்துப் பிறர் பார்க்காதபடி பாதுகாத்துவருகிறேன். உனக்கெப்படி விவாஹம் செய்விப்பது? பாம்பென்றால் படையும் நடுங்காதோ என்றான் பார்த்திவன். தந்தையே! என்ன! ஒன்றும் அறியாதவரைப்போல் பேசுகிறீர்? அரசர் குமாரர்கள் தாங்கள் நேரில் நில்லாது கத்திக்குப் பெண்களை மாலையிடும்படிசெய்து மணப்பதை மறந்தீரோ? என்றான் ஸர்ப்பகுமாரன். அரசனும் அங்ஙனமே செய்வதாகக் கூறி அமாத்யரை அழைத்து அவர்களிடமும் தன் புத்ரன் அரவமென்பதைக் கூறாமல் அவனுக்கு மணம்செய்ய பெண் பார்க்கும்படிக் கூறினன். அவர்கள் பூர்வ தேசத்திலே விஜயன் என்றோர் அரசன் இருப்பதாகவும் அவனுக்கு எட்டு புதல்வர்களும் போகவதி என்றோர் அழகிய புத்ரியும் இருக்கிறாளென்றும் அவ்வரசன் நமது ஸம்மந்தத்திற்கேற்றவனென்றும் கூறினார்கள். அதைக்கேட்ட அரசன் விஜயனிடம் தன் முதன் மந்திரியை அனுப்பித் தன் புத்ரனுக்குப் போகவதியைக் கொடுக்கும்படிவேண்டினன். அவ்வரசனும் அதற்கிசைந்து விவாஹத்திற்கு நாள்வைத்து ஊரை நன்கலங்கரித்து மாப்பிள்ளையான நாகேச்வரனையும் அவன் தந்தை சூரஸேநனையும் எதிர்பார்த்திருந்தான். சூரஸேநன் முன்னமே தன் புதல்வன் கூறியபடி தீர்மானித்து கத்தியை அனுப்பி அதற்கு விதிப்படி மாலையிட்டு மரு

மகளைத் தன் நாட்டிற்கு அழைத்துவரும்படியும் தாங்கள் நேரில்வர இதுஸமயம் அல்லவென்றும் கூறி மந்த்ரியை அனுப்பினான். இது அரசருக்குள் வழக்கமாதலின் வேறொன்றும் ஸந்தேஹப்படாமல் விஜயன் விவாஹத்தை முடித்து அபரிமிதமான சீருடன் போகவதியை ப்ரதிஷ்டா நகரத்திற்கனுப்பினான். சூரஸேநன் மருமகளுடன் வந்த மன்னனது பரிவாரங்களுக்குத் தக்க மரியாதை செய்தனுப்பினான். போகவதி மாமன் மாமிகளுக்குப் பணிவிடை செய்துகொண்டு கணவனைக் காணவேணுமென்ற ஆவலிருந்தாலும் அவர்கள் உத்திரவில்லாமல் அங்கு செல்லலாகாது என்றிருந்தாள். நாகேச்வரன் இத்தனை நாட்களாகியும் ஏன் என்மனைவி தன்னிடம் வரவில்லை என்று தாயைக்கேட்டான். அவள் ஓர் தாதிமூலம் போகவதிக்கு அவள் கணவன் புருஷனல்ல ஸர்ப்பமெனத் தெரிவித்தாள். இதைக் கேட்டு அவள் சிறிதேனும் வருந்தாமல் எனது பாக்யமது! மனிதருக்குத் தேவப்பிறவியைச் சார்ந்தவர் கிடைக்கத்தகுமோ என்றாள். இவ்வுத்தமியின் சொல்லைக்கேட்டு வியந்தாள் வேந்தன் மனைவி. ஓர் நன்னாளில் போகவதியை நாகேச்வரனிடம் அனுப்பினாள். போகவதி நாகனைக்கண்டு பணிந்து ஓர் யுவதி அழகிய யுவாவுடன் கூடிக்குலவுவது போல் அரவத்துடன் ரமித்தாள். அவளது ஸம்ஸர்க்கத்தால் நாகனுக்குத் தன் முற்பிறவி நினைவிற்கு வந்தது. உடனே மனைவியைப் பார்த்துக் கூறினான்! போகவதி! யான் முற்பிறவியில் சேஷனது குமாரன். பரமசிவத்தின் கரத்திலே கங்கணமாக இருந்தேன். அப்போதும் இப்பெயருடன் நீ எனக்கு மனைவியாக இருந்தாய். ஓரிரவு பார்வதிதேவி ச்ருங்காரமாகத் தன் பதியுடன்பேசிக்கொண்டிருந்தாள். அன்னைகூறிய அழகிய சொல்லைக்கேட்டு பரமசிவன் களுக்கென சிறித்தார். அதைக் கேட்டுக்கொண்

டிருந்த நானும் சிறித்துவிட்டேன். இதைக்கண்டு இமயவன் பெண் வெட்கமடைந்தாள். உடனே சிவனுக்குச் சினமுண் டாயிற்று. நீ மனிதனிடம் பாம்பாகப் பிறப்பாயென என்னைச் சபித்தார். உடனே நீ அவரது திருவடியை வணங்கி மன்னிக்கும்படி வேண்டினாய். இயற்கையில் சாந்தமூர்த்தியான இறைவன் கங்கையிற் சென்று புனலாடி தன்னைப் பூஜித்து முன்உருவைப் பெறலாமென்றார். ஆதலால்தான் நீ அரச குமாரியாக இருந்தும் அரவத்தினிடம் அஞ்சாது பழகுகிறாய். கங்காதீரம் சென்று கங்காதரனைப் பூஜிப் போம் வா என்றார். இவ்வாச்சரியத்தைக் கேட்ட பெற்றோர் வியந்து அவன் கோரியபடியே இருவரையும் காசிக் கனுப்பினார்கள். ஆங்கு இவர்கள் பலநாட்கள் பரமசிவனை ஆராதித்துச் சாபத்தை அகற்றிக்கொண்டனர். திவ்ய தேஹம்பெற்று அவர்கள் கைலாஸம் கிளம்பும்போது சூரஸேநன் அங்குசென்று புதல்வனைப் பார்த்துக் கூறினான். புத்ர! இதுதான் புத்ர தர்மமோ? நல்ல உருவம் பெற்றபின் பெற்றோரை மகிழ்விப்பது புதல்வன் கடமையன்றோ? எனது ராஜ்யத்தை ஏற்றுக்கொள். ஸத்புத்ரனைப்பெற்று என் ஸந்ததியை விருத்திசெய். பின்பு உன் விருப்பப்படி கைலாஸம் செல் என்றார். அங்ஙனமே நாகராஜனும் தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்தான். அவன் காசியில் தவம் செய்த இடம் நாக தீர்த்தமாம்.

மாத்ரு தீர்த்தம். அமிருதத்தை அஸுரர்களுக்களிக் காமல் தேவரே அருந்தினரல்லவா? அதைக்கண்டு அரக்கர் அடங்காச் சினங்கொண்டு தேவர்களைத் துன்புறுத்தினர். அச்சமயம் அவர்களை வெல்ல அமரராலும் அச்யுதனாலும் முடியாமற் போயிற்று. எல்லோரும் சிவனைச் சரணமடைந் தனர். அவர் தனது கோபத்தால் சில மாத்ரு கணங்களைப் படைத்து அரக்கரைக் கொன்று வரும்படி ஆக்ஞையிட்டார்.

அவர்கள் தோன்றிய இடம் மாத்ரு தீர்த்தமெனப் படும்.

பிரும்ம தீர்த்தம். அம்மாத்ரு கணங்களைக்கண்டு அஞ்சி அரக்கர் பாதாளம்சென்றனர். அச்சமயம் பிரும்மனது ஐந்தாம் முகம் கழுதை உருவம்கொண்டு அரக்கரை நோக்கி அஞ்சேல். ஸுரரை யான் புஜித்து உங்களைக் காக்கிறேன் என்றது. இதைக்கேட்டு அமரர் நடு நடுங்கிப் பரமசிவனைச் சரணமடைந்தனர். அவர் சினங்கொண்டு தனது கைவிரல்களால் அவரது தலையைக்கிள்ளிக் கீழே எரிய ஆரம்பித்தார். பூதேவி அவரை வணங்கி, தேவ! இத்தலை என்மேல் விழுந்தால் அவனியிலுள்ள அனைவரையும் அழிக்கும். ஆதலால் என்மேல் போடவேண்டாம் என்றாள். ஸமுத்ரத்தில் போடப்போனார். அதுவும் அங்ஙனமே கூறிற்று. பின்னர் பரமசிவன் சிறிது காலம் தன் கையிலேயே வைத்திருந்து பிறகு காசியில் ஓரிடத்தில் அதை வைத்தார். கங்கையின் மஹிமையால் அதன் ராக்ஷஸ குணம் அகன்றது. அவ்விடத்திற்கு பிரும்ம தீர்த்தமெனப் பெயருண்டாயிற்று.

அவிக்ன தீர்த்தம். முன்னொர் ஸமயம் தேவர்கள் காசிமாநகரிலே கங்கைக் கரையிலே ஓர் வேள்வியைச் செய்தனர். அது பல விக்நங்களால் தடைப்பட்டுப் பூர்த்தியாகாமல் இருந்தது. அமரர் இதற்குக் காரணம் என்ன? எப்படி அது பூர்த்தியாகும் என்று பிரும்மனை வினவினர். அவர் ஆதிதேவனான விநாயகனைத் தொழாது வேள்வி ஆரம்பித்தீர்கள். அதனால் அவர் தடைசெய்கிறார். அவரைத் துதித்துப் பூஜித்து யாகத்தைப் பூர்த்தி செய்யுங்கள் என்றார். அங்ஙனம் தேவர் விநாயகரைத் துதித்து வேள்வியைப் பூர்த்திசெய்த இடம் அவிக்னதீர்த்தமாகும்.

சேஷ தீர்த்தம். ஒரு சமயம் தைத்யர்கள் ஆதிசேஷனை ஜயித்துப் பாதாளத்தைப் பிடுங்கிக்கொண்டனர். சேஷன்

தங்க இடமில்லாமல் பிரும்மனைச் சரணமடைந்தார். அவர் சேஷனைக் கங்கையில் புனலாடி கைலாஸநாதனை ஆராதிக்கும்படி கூறினார். அங்ஙனமே சேஷன் ஆராதிக்கும் போது பரமசிவன் ப்ரத்யக்ஷமாகி அரக்கரை வெல்லும்படி ஓர் சூலாயுதத்தைத் தந்தார். அதைக்கொண்டு சேஷன் அஸுரரை வென்று பாதாளத்தை மீண்டும் ஆண்டுவந்தார். அவர் தவம்செய்த இடம் சேஷ தீர்த்தமாகும்.

மகாநாள தீர்த்தம். நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகள் ஓர் பெரிய யாகம்செய்தனர். அதில் பசுவினின்றும் ஹவிஸ்ஸை எடுத்துப் பாகம்செய்யும் சமிதர் என்ற உத்யோகத்தில் யமனை ஏவினர். அவர் அந்த வேலையிலீடுபட்டதால் ஜீவராசிகளது பிராணனைக் கொண்டுசெல்பவரில்லாததால் எவரும் இறக்கவில்லை. பூபாரம் அதிகமாயிற்று. உடனே அமரர்கள் அரக்கர்களை அழைத்து அவ்வேள்வியை அழித்து வரும்படி கூறினார்கள். அவர்கள் அதற்காக எங்களுக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றுகேட்க, அமரர், யாகத்தில் சிறிதளவு பாகம் அவர்களுக்கு அளிப்பதாகக் கூறினர். உடனே அஸுரர்கள் முனிவர்களது யாகத்தை அழிக்க ஆரம்பித்தனர். இதைக்கண்டு ரிஷிகள் யமனுடன் யோசனைசெய்து அக்னியை மாத்ரம் எடுத்துக்கொண்டு காசிமாநகரம் சென்றனர். விதிப்படி கங்கா ஸ்நாநம்செய்து விச்வநாதனைப் பணிந்து துதித்தனர். அவர் ப்ரத்யக்ஷமாகி மஹர்ஷிகள் வேண்டியபடி அவ்வேள்வியை ராக்ஷஸர் உபத்ரவமின்றி நடத்தி வைத்தார். ஹவிஸ்ஸைப் புஜிக்க அமரர் வந்தனர். ராக்ஷஸர்களை யக்ஞ விக்நம் செய்யும்படி தூண்டியதால் அமரருக்கு அஸுரர் பகைவராகும்படி முநிவர் சபித்தனர். யமனும் நைமிசாரண்ய முநிவர்களும் பூஜித்த மஹாநாளமெனும் லிங்கத்தின் அருகே உள்ள இடம் மஹாநாள தீர்த்தமெனப்படும்.

ஆத்ம தீர்த்தம். அத்ரியினது மகனும் தூர்வாஸரது ஸோதரனுமான தத்தாத்ரேயர் தன் தந்தையை வணங்கித் தனக்கு ஆத்மஞானத்தை உபதேசிக்கத்தக்க குருவைக் காட்டும்படி வேண்டினர். அவர் புதல்வனைக் காசிக்குச் சென்று கைலாஸ நாதனை ஆசார்யனுகக் கொள்ளும்படி கூறினர். தத்தர் அங்ஙனமே சிவனைப் பூஜித்து ஆத்மஞானம் பெற்றவிடம் ஆத்ம தீர்த்தமெனப்படுகிறது.

அச்வத்த தீர்த்தம். அகஸ்த்யர் கங்காதீரத்திலே ஓர் வேள்வி செய்தார். அதற்கு எண்ணிறந்த ஸாதுக்கள் சென்றனர். கைடபனெனும் அரக்கனுக்கு அச்வத்தன் பிப்பலன் என இருகுமாரர்களிருந்தனர். அச்வத்தன் அவ் வேள்வி நடக்குமிடத்திலே ஓர் அச்வத்த மரமாக நின்று ஆங்கு ப்ரதக்ஷிணம் செய்வோரை விழுங்கி வந்தான். பிப்பலன் ஸாமவேதியான பிராமண வடிவமெடுத்து அத்யயநம் செய்ய வரும் சீடர்களை விழுங்கி வந்தான். இதனுல் நாளுக்கு நாள் வேள்விக்கு வந்த வேதியர் குறைந்தனர். இதைக்கண்டு மஹர்ஷிகள் மனம்நொந்து அருகில் தவம்செய்யும் சனைச்சரனிடம் சென்று அவ்வரக்கர்களைக் கொல்லும்படி வேண்டினர். அவர் மஹர்ஷிகள் அளித்த தபோபலத்தைக் கொண்டு அவ்விருவர்களையும் கொன்ருர். அவ்விடம் அச்வத்தம் பிப்பலம் சனைச்சரம் அகஸ்த்யம் என்ற பெயர்களால் அழைக்கப் படுகிறது. சனிக்கிழமையன்று அச்வத்த ப்ரதக்ஷிணம் செய்தால் க்ரஹபீடை உண்டாகாது.

ஸோம தீர்த்தம். ஒருஸமயம் ஓஷதிகள் தங்களுக்குத் தகுந்த பதி வேண்டுமென்று கங்காதீரத்தில் தவம் புரிந்தன. கங்கை ஸோமனை அவைகளுக்குப் பதியாக்கி மணம் செய்வித்தாள். அந்த இடம் ஸோம தீர்த்தமாம்.

விதர்ப்பா ரேவதீ ஸங்கதீர்த்தம். பரத்வாஜர் என்ற முனிவருக்கு ரேவதி எனும் ஓர் ஸோதரி இருந்தாள். அவள்

மிகக் குரூபமுள்ளவள். அவளை எவரும் மணக்க விரும்பவில்லை. முனிவர் கவலைப் பட்டுகொண்டிருக்கும்போது கடர் எனும் ரிஷி தனக்குக் கல்வி கற்பிக்கவேண்டுமென்று பரத்வாஜரிடம் வந்தார். அவர் கடருக்கு ஸகல கலைகளையும் கற்பித்து விட்டிற்கனுப்பினார். கடர் குரு தக்ஷிணை கொடுக்க விரும்பி எத்தகைய கடினமான தக்ஷிணையாயினும் யோசிக்காமல் கேளுங்கள் தருகிறேனென்றார். பரத்வாஜர், ஆனால் எனது குரூபமுள்ள ஸோதரியை மணந்துக் கொள் என்றார். கடர் அப்படியே அவளை மணந்து கங்கைக் கழைத்துவந்து அவளுக்கு அபிஷேகம் செய்து தர்ப்பையால் நல்ல ரூபமுண்டாகும்படி ஜபித்தார். அங்கிருந்து ஜலம் பெருகி கங்கையில் கலந்தது. ஆதலின் அவ்விடத்திற்கு மேற்கூறிய பெயருண்டாயிற்று.

பூர்ண தீர்த்தம். கல்பத்தின் ஆதியில் ஆயுஸ் என்ற அரசனுக்கு தன்வந்தரி என்றோர் புத்ரன் பிறந்தான். அவன் மிகத் தர்மசீலன். தந்தை தந்த ராஜ்யத்தை மனு நீதி தவறாது பரிபாலித்து வந்தான். ஸாதுக்களை ரக்ஷிக்கும் பொருட்டு அவன் பல அரக்கருடன் போர்புரிந்து வெற்றி பெற்றான். அவன் சான்றோர் வழக்கப்படி தக்க வயது வந்த தநயனிடம் ராஜ்யத்தை அளித்தான். தான் தபோவனம் சென்று மறுமைக்குரிய காரியத்தில் கண்ணுயினான். இவனுக்கு எவ்வகையிலேனும் தீங்கிழைக்க வேண்டுமென ஓர் அரக்கன் ஸமயத்தைத் தேடிக் கொண்டிருந்தான். அவன் பெயர் தமஸ். அவனைத் தன்வந்தரி முன்னம் அடித்துப் பாதாளத்திற்குத் துறத்தியதே அவன் கோபத்திற்குக் காரணம். ஒரு நாள் மிக்க ரூபவதியான ஓர் யுவதிபோல் வேடம்பூண்டு தன்வந்தரி அருகில் வந்து ஆடிப்பாடி அரசன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டான். பார்த்திவன் தவத்தைவிட்டுத் தன்னைக் கண்டு மோஹித்ததைக்

கண்டு களித்து தமஸ் தன்னிருப்பிடம் சென்றான். மன்னன் தவத்தைவிட்டுத் தவிப்பதைக்கண்டு. கருணை கொண்ட பிரும்மா அவரருகே வந்து ஸமாதானப் படுத்தினார். தன் தவம் அழிந்ததை நினைத்து வருந்திய வேந்தன், பிரும்மனை வணங்கித் தனது இஷ்டம் பூர்த்தியாக ஓர் உபாயம் கூறும்படி கேட்டான். அவர் அரசனை ஹிமயமலை சென்று விஷ்ணுவைத் துதிக்கும்படி கூறினார். அரசன் அங்ஙனமே அச்யுதனைப் புகழ புண்டரீகாக்ஷன் பிரத்யக்ஷமானார். அவரை வணங்கி அரசன் தனக்கு இந்த்ர பதமளிக்கும்படி வேண்டினான். ஹரியும் ஆகட்டுமெனக் கூறி மறைந்தார். தன்வந்தரி இந்த்ரனானான். விருத்ரவதத்தினாலும் ஸிந்து ஸேநவதத்தினாலும் அஹல்யாகமனத்தினாலும் மும்முறை அவன் இந்த்ர பதவியை இழந்தான். இதற்கென்ன காரணமென்று அவன் பிரம்மனைக் கேட்டான். அவர் அதேசகாலத்தில் செய்யும் தர்மமும் அச்ரத்தையாகவும் அஸத்திரவ்யத்தைக் கொண்டும் விக்னத்துடன் செய்யும் தர்மமும் கண்ட தர்மமென்றும் கூறி அதனால் பதவி அல்லது சுகத்தை இழப்பர் என்றும் கங்காஸ்நாநத்தினாலும் ஹரிஹர பூஜையாலும் அத்தோஷத்தை அகற்றலாமென்றும் கூறினார். அங்ஙனம் செய்து இந்த்ரன் ஸ்திரமான பதவியை அடைந்த இடம் பூர்ண தீர்த்தமாம்.

ராம தீர்த்தம். தசரதசக்ரவர்த்தி சப்தவேதினீ எனும் பாணத்தினால் மிருகமெனக் கருதி ஓர் முநி குமாரனைக் கொன்றான். அதையறிந்த அந்தகர்களான அவனது தந்தை தாய்களு மிறந்தார்களல்லவா? அந்த மூன்று ஹத்திகளாலும் அவன் நரகத்தில் சொல்லொணாத் துக்கத்தை அனுபவித்தான். ஒருநாள் திடீரென அரசன் நரகத்திலிருந்து விடப்பட்டான். அதற்கென்ன காரணமென்று அவன் யமதூதனைக் கேட்டான். வநவாஸம்சென்ற உனது புதல்வன் ராமன்

கங்கைக்கருகே செல்கிறான். ஆதலின் நீ விடப்பட்டாய் என்றான் தூதன். உடனே அரசன் யாதனு சரீரத்துடன் ராமலக்ஷ்மணர்கள் முன் தோன்றினான். லக்ஷ்மணன் அண்ணனைக் காட்டிற்கனுப்பிய பாதகி என்று அவர்மேல் அம்பை விட ஆரம்பித்தான். மன்னன் ஸீதையினருகே சென்று மூன்று ஹத்திகள் தன்னை வாட்டுகின்றன என்று வருந்தினார். அவள் தாங்கள் மூவரும் அவைகளைப் பெற்றுக் கொண்டு கங்காஸ்நாநதாநாதிகளால் அவருக்கு ஸ்வர்க்கமளிப்பதாகக் கூறினாள். ஸ்ரீராமன் சிவஸ்துதி செய்து தந்தையையும் அவரால் இறந்த அம்மூவரையும் ஸ்வர்க்கத்திற் கனுப்பினார். தங்களையும் சுத்தமாக்கிக் கொண்டார். ஆதலின் அவ்விடம் ராமதீர்த்தமாயிற்று.

புத்ர தீர்த்தம். தேவேந்த்ரன் நமுசிஎனும் தைத்யனை உறவாடிக் கொன்றான். அதனால் திதி என்பாள் தன்கணவனை கச்யபரை அடுத்து இந்த்ரனைக் கொல்லத்தக்க ஓர் புதல்வன் உண்டாகும்படி வரமளிக்க வேண்டினாள். அவர் சில நியமங்களைக் கூறி அவைகளைத் தவறாதிருந்தால் அத்தகைய குழந்தைபிறப்பானென்றார். அவள்கர்ப்பமாகி நியமத்துடனிருந்தாள். அச்சமயம் இந்த்ரன் பிராமண வேடம் பூண்டு நமுசியின் ஸ்நேஹிதனான மயனிடம் சென்று தனக்கு யாசகமளிக்கவேண்டுமென்றான். அவன் அந்தணனெனக் கருதி வாக்களித்தான். பின்னர் தனது நட்பை விரும்பும் இந்த்ரனென்றறிந்து வேறுவகையின்றி நண்பனானான். திதியின் கருவிலுள்ள இந்த்ர சத்ருவைக் கொல்ல மயன் உபாயம் கூறினான். ஸமயம் பார்த்திருந்த இந்த்ரன் அவள் மாலை வேளையில் மேற்குமுகமாகப் படுத்திருப்பதைக்கண்டு அவள் வயிற்றில் புகுந்து கருவைச் சேதித்தான். அதைக்கண்டு வருந்திய திதி ஸ்த்ரீமூலமாக நீ அவமானமடைந்து ராஜ்யத்தை இழப்பாய் என்று சபித்தாள். தனது ஆச்ரமத்தில்

சிசுஹத்தி செய்ததால் சத்ருவிற்குப் புறங்காட்டி ஓடுவாய் என அகஸ்த்யரும் சாபமளித்தார். இதற்கஞ்சி இந்த்ரன் திதியின் குக்ஷியிலேயே இருந்தான். கச்யபர் வந்தபின் இருவரும் நடந்ததை அவரிடம் கூறி தங்கள் குறையை அகற்றும்படி வேண்டினார்கள். அவர் இந்த்ரனை விடுவித்து திதியைக் காசிக்குச் சென்று சிவனருளால் இஷ்டத்தை அடையும்படிக் கூறினர். அங்ஙனமே திதி சிவனருளால் சேதிக்கப்பட்ட கருவை ஸப்தமருத்துக்கள் எனும் குழந்தைகளாகப் பெற்றாள். ஆங்கு ஸ்நாநதாநம் செய்வோர் புத்ரபாக்யம் பெறுவர்.

யம தீர்த்தம். யமதர்மராஜனுக்குப் புருஜாதியில் அநுஹ்ராதன் என்றோர் பௌத்ரனிருந்தான். அவன் தனது அத்தைமகளும் யமனது தௌஹித்ரியுமான ஹேதி என்பவளை மணந்தான். இதேபோல் அக்னியினது பேரனை உலூகமொன்று இப்பறவையினருகே வஸித்து வந்தது. ஏதோ ஓர் காரணம் பற்றி இருபக்ஷிகளுக்கும் போர் நிகழ்ந்தது. பலநாள் சண்டையிட்டும் எவருக்கும் ஜயாபஜயம் உண்டாகவில்லை. உலூகம் அக்னியினிடமிருந்து பெற்ற ஆக்னேயாஸ்த்ரத்தை அநுஹ்ராதன்மீது விட்டது. அவன் யமனிடமிருந்து பெற்ற யமபாசத்தையும் தண்டத்தையும் உலூகத்தின்மீது விட்டான். அமோகமான இவ்விரு அஸ்த்ரங்களையும் கண்டு நடுங்கிய இருவர்களது மனைவிகளும் அவ்விருதேவர்களையும் போற்றி அவ்வஸ்த்ரங்கள் ஒருவரையும் கொல்லாதபடி செய்தனர். யமனும் அக்னியும் கங்காதீரம் வந்து அநுஹ்ராதனையும் உலூகனையும் நண்பர்களாக்கிச் சென்றனர். ஆதலின் அது யமதீர்த்தமெனப் பெயர் வழங்கிற்று.

தபஸ் தீர்த்தம். ஒருஸமயம் முனிவர்களுக்குள் அக்நி பெரிதா? ஜலம் பெரிதா என விவாதமுண்டாயிற்று. இதன்

நிச்சயத்தை யறிய அனைவரும் பிரும்மலோகம் சென்றனர். இதைக்கேட்டு பிரும்மா, இருவரும் ஸமமானவர் என்றார். அந்த தீர்ப்பில் வெறுப்புகொண்டு முநிவர் வாயுவைக் கேட்டனர். அவர் அக்நியே பெரியது என்றார். அதிலும் த்ருப்தி ஏற்படாமல் பூமியைக் கேட்டனர். அவள் ஜலமே பெரிதென்றாள். அதனாலும் வாதம் முடியவில்லை. பின்னர் மஹாவிஷ்ணுவைத் துதித்தனர். அவர் அசரீரியாக நின்று அக்நியையும் ஜலத்தையும் நீங்கள் உபாஸனை செய்யுங்கள். யார் முதலில் ஸித்தி பெறுகின்றீர்களோ அவர்கள் உபாஸித்த தேவதையே பெரியது என்றார். காசிக்குச் சென்று இருசாராரும் தவம் செய்தனர். அங்கு ஓர் அசரீரிவாக்கு தோன்றிற்று. ஜலமில்லாமல் அக்னிபூஜை செய்ய முடியாது. ஆதலின் அக்னியைவிட ஜலமே பெரிது என்று அது கூறிற்று. அங்கு தவம் செய்வோர் ஸித்திபெறுவர்.

தேவ தீர்த்தம். ஆர்ஷ்டிஷேணன் என்றோர் ராஜனிருந்தான். அவன் மிக்க தர்மசீலன். அவனுக்கேற்ற ஜயா எனும் மனைவியும் பரனெனும் புத்ரனும் உபமன்யு எனும் புரோஹிதருமிருந்தனர். அரசன் ஒருஸமயம் ஓர் அச்வமேதயாகம் செய்ய ஆரம்பித்தான். மிது எனும் அரக்கன் அவ்வேள்வியை யழித்து தேவர்களை விரட்டி மன்னனையும் அவன் மனைவியையும் புரோஹிதரையும் பாதாளத்தில் கொண்டு வைத்தான். அப்புரோஹிதருக்குத் தேவாபி எனும் ஓர் புதல்வனிருந்தான். அவன் தாயின் மூலம் இதை அறிந்து அரசகுமாரனிடம் விடைபெற்று அவர்களை மீட்டுவர முயற்சித்தான். அவ்வேள்வியை நடத்திய ரித்விக்குகளிடம் சென்று தன் தந்தையுடன் ராஜதம்பதிகளையும் மீட்டுவர யாது வழி என்றான். அவர்கள் அக்நிபகவானைக் கேட்கச் சொன்னார்கள். அக்னி தேவர்களிடமனுப்பியது. அவர்கள் வேதத்தினிடமனுப்பினர். அவை கங்கைக்குச்

சென்று சிவாராதனம் செய்யும்படி கூறின. தேவாபி அங்ஙனமே சிவனைப்பூஜித்தார். சிவனும் நந்தியினிடம் சூலத்தை அளித்து அதனால் மிதுவைக்கொன்று அவர்களை மீட்டுவரும் படி கட்டளையிட்டார். அங்ஙனமே நந்தியால் அழைத்து வரப்பட்ட அரசனும் புரோஹிதரும் ஸந்தோஷமடைந்து தேவாபியை ஆசீர்வதித்தனர். அவ்விடம் தேவ தீர்த்த மெனப்படுகிறது.

சார்த்தூல தீர்த்தம். ஓர்ஸமயம் அக்னியின் மனைவியான ஸ்வாஹாதேவி புத்ரபாக்யத்தை நாடித் தவம் புரிந்தாள். விரைவில் உனக்கு நற்புதல்வன் பிறப்பானெனக் கூறி அக்நி அவள் தபஸை நிறுத்தினார். அச்சமயம் தாரகாஸுரன் செய்யும் தீங்குகளைத் தாளாமல் அமரர் அக்நியினிடம் வந்து பார்வதி பரமேச்வரர்களிடம் இதைக்கூறும்படி வேண்டினர். அவ்விருவர்களும் ஏகாந்தமாகக்கூடி ரமித்துக்கொண்டிருப்பதால் அங்கு செல்வதும் அவர்களுடன் பேசுவதும் பாபமென்று கூறி அக்னி மறுத்தார். வேறு உருக்கொண்டாவது கட்டாயம் அங்கு செல்ல வேண்டுமென்று தேவர்கள் நிர்ப்பந்தம் செய்தனர். அக்னி கிளி உருவுடன் சென்று பகவான் வீற்றிருந்த கிருஹத்தின் ஜன்னலில் அமர்ந்தார். இதைக்கண்டவுடன் தேவி தேவனை விட்டு வெட்கத்தால் வெளியேறினாள். பரமசிவத்தினது வீர்யம் கீழே சிந்திற்று. அதைத் தேவகார்யத்தின் பொருட்டு எடுத்துச் செல்லும்படி பகவான் அக்னியைக் கூறினார். அவர் அங்ஙனமே செய்தார். ஆனால் அவர் அதைச் சுமக்க முடியாததால் கிருத்திகா தேவிகளிடம் அளித்துச் சென்றார். அதில் சிறிதளவு அக்னியினிடம் தங்கியதால் அதை அவர் தன் மனைவியின் கருவில் வைத்தார். அதனால் ஸ்வாஹாதேவிக்கு ஸுவர்ணன் ஸுவர்ணா என இரு குழந்தைகள் பிறந்தன. வயது வந்தபின் ஸுவர்ணையைத் தர்மருக்

களித்தார். ஸுவர்ணனுக்கு ஸங்கல்பா எனும் பெண்ணை மணம் செய்வித்தார். சிவனது வீர்யம் அக்நியின் மூலமாக அன்யக்ஷேத்ரம் சென்றதால் அவ்விரு குழந்தைகளும் வ்யபிசார தோஷமுள்ளவர்களானார்கள். ஸுவர்ணன், இந்த்ரன் வருணன் முதலிய தேவர்களது வேடத்தைப் பூண்டு அவரவர் ஸ்த்ரீகளைக் கெடுத்து வந்தான். ஸுவர்ணையும் அந்தந்த ஸ்த்ரீகள் வேடம்பூண்டு அவரவர் புருஷர்களிடம் சென்றாள். இதைச் சில நாட்கள் சென்றபின் தேவர்கள் உணர்ந்தனர். சினங்கொண்டு ஸுவர்ணையைத் தாஸியாகும்படியும், ஸுவர்ணனை எல்லாவித அசுத்த வஸ்துக்களையும் உண்பவனாகவும் சபித்தனர். இதையறிந்து அக்நி மிக்க வருந்தினார். பிரும்மனைச் சரணமடைந்து சாபவிமோசனத்திற்கு வழிகேட்டார். அவர் கங்காதீரம் சென்று சிவனருளைப் பெறும்படி கூறினார். அங்ஙனமே அக்நி தவம் செய்து சிவாநுக்ரஹத்தால் அச்சாபத்தை அகற்றினார். ஒரு ஸமயம் சார்த்தூலன் எனும் அரக்கன் ஸுவர்ணையைப் பாதாளத்திற்குத் தூக்கிச் சென்றான். தர்மனும் அக்னியும் மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து ஸுவர்ணையை மீட்டு வரும்படி வேண்டினார்கள். உடனே அவர் சக்ராயுதத்தால் அவனைக் கொன்று ஸுவர்ணையை அவர்களிடமளித்தார். ஆதலால் சார்த்தூல தீர்த்தம் சக்ர தீர்த்தம் விஷ்ணுதீர்த்தம் அக்னிதீர்த்தம் தர்மதீர்த்தம் எனப் பல பெயர்களால் அவ்விட மழைக்கப்படுகிறது.

இந்த்ர தீர்த்தம். ஹிரண்யன் எனும் அரக்கனுக்கு மஹாசனி என்றோர் புத்ரனிருந்தான். அவன் திக்விஜயம் செய்யக்கருதி இந்த்ரனைச் சண்டைக்கழைத்தான். இருவருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. வரதானத்தினாலும் பலத்தினாலும் அரக்கனே ஜயம் பெற்றான். தோல்வி அடைந்த இந்த்ரனை ஐராவதத்துடன் பாதாளத்தில் சிறைப்படுத்தி

ஞன். பின்னர் வருணனைப் போருக்கு அழைத்தான். இவன் பலத்தை அறிந்த வருணன் தன் கன்யகையை அவனுக்களித்து அவனிடம் நட்புகொண்டான். இந்த்ரனை இழந்த தேவர்கள் அவனை மீட்டுவரும்படி மகாவிஷ்ணுவை வேண்டினார்கள். அவன் தன்னிடமிருந்து மரணம் இல்லை என வரம் வாங்கியதால் தன்னால் கொல்ல முடியாதெனக் கூறி விஷ்ணுவும் வருணனிடம் சென்றார். சமாதான மூலமாகவே இந்த்ரனை விடும்படி வருணனுக்குக் கட்டளையிட்டார். அவரும் தனது மருமகனை மஹாசனியினிடம் சென்றார். அவன் வருணனை நன்கு வரவேற்று என்னவேண்டுமென்றான். தனக்கு நண்பனை இந்த்ரனை விடும்படி அவர் வேண்டினார். அஸுரனும் மாமனிடம் கொண்ட மதிப்பால் அவனை விடுவித்து தன் மாமனை வருணனுக்குத் தொண்டு செய்யும்படியும் இல்லையேல் மறுபடியும் சிறைப்படுத்துவதாகவும் கூறினான். விடுபட்டானெனினும் இந்த்ரன் தனக்கு உண்டான அவமானத்தை நினைத்து வருந்தி மனைவி சொற்படி சிவனை ஆராதிக்கக் காசிக்குச் சென்றான். பல்லாண்டு பரமசிவனைப் பூஜித்தான். அவர் ப்ரத்யக்ஷமாகி விஷ்ணுவையும் ஆராதிக்கும்படி கூறினார். இந்த்ரன் அவரையும் அர்ச்சித்தான். அவரும் ப்ரத்யக்ஷமாகி ஹரிஹர அம்சத்தினால் கங்கா ஜலத்தில் ஓர் வீரன் பிறக்கும்படிச் செய்தார். சிவ விஷ்ணு சின்னங்களைக்கொண்ட அந்த அப்ஜகன் பாதாளம்சென்று மஹாசனியைக் கொன்று வந்தான். இந்த்ரன் தவம் செய்த இடம் இந்த்ர தீர்த்தமாயிற்று.

ஆபஸ்தம்ப தீர்த்தம். ஆபஸ்தம்பரென்ற மஹர்ஷி அக்ஷஸூத்ரை எனும் தர்மபத்நியுடனும் கர்க்கி எனும் உத்தம புத்ரனுடனும் கூடி தனது ஆச்ரமத்திலே கிருஹஸ்த தர்மத்தை நன்கு நடத்திவந்தார். ஒருநாள்

இவ்வாச்ரமத்திற்கு அகஸ்த்ய மஹர்ஷி வந்தார். ஆபஸ்தம்பர் விருந்தினரை விதிப்படி பூஜித்தார். இருவரும் கூடி பற்பல தர்ம கதைகளைப் பேசிக்கொண்டிருந்தனர். ஆபஸ் தம்பர் அகஸ்த்யரை நோக்கி மும்மூர்த்திகளில் சிறந்தவர் யார் என வினவினார். அகஸ்த்யர் அதற்கு, 'ஒரேமூர்த்தி தான் உளது; அதே உலகைப் படைக்க பிரும்மா என நாமம் பூண்டது. பரிபாலநம் செய்யும்போது விஷ்ணு வென்றும் உலகை உபஸம்ஹாரம் செய்யும்போது ருத்ர னென்றும் அழைக்கப் படுகிறது. இம்மும்மூர்த்திகளில் வேற்றுமை பாராட்டுபவர் நரகமடைவர். ஆதலின் மும் மூர்த்திகளும் ஸமமானவர்கள். ஆயினும் விரைவில் ஸர்வ ஸித்தியையுமளிப்பவர் பரமசிவனே, என்று விடையளித் தார். இதைக் கேட்ட ஆபஸ்தம்பர் கங்கையில் புனலாடி சம்புவைத துதித்தார். உடனே அவர் ப்ரஸன்னமானார். ஆபஸ்தம்பர் கோரியபடி அவர் சிவதர்சநம் செய்தவிடம் ஆபஸ்தம்ப தீர்த்தமென்றும் ஆங்குசெய்யும் ஸ்நானதானா திகள் அபரிமிதமான பயனை அளிக்குமென்றும் வர மளித்தார்.

யம தீர்த்தம். தேவலோகத்திலுள்ள ஸரமா என்கிற நாய்க்குச் ச்யாம சபளர் என இருபுதல்வர்களுண்டு. அவர் கள் யமனது ஸபையிலிருந்து அவனிடம் பணியைச் செய் பவர்கள். அவைகளுக்கு வாயுவே ஆஹாரம். ஒவ்வொன் றிற்கும் நான்கு கண்களுண்டு. ஓர் ஸமயம் இந்த்ரன் தனது வேள்விக்காகச் சேர்க்கப்பட்ட பசுக்களைக் காக்கும்படி ஸர மைக்கு உத்திரவிட்டான். அவளங்ஙனமே செய்து வரும்போது ஒருநாள் அவள் ஓடிவந்து அப்பசுக்களை அஸுரர் கொண்டு சென்றனர் என்றாள். பிருஹஸ் பதி அதன் குறிகளைக்கண்டு இந்த்ரனை நோக்கி இவள் துஷ்டை. இவளே அவர்களுக்கு ஸஹாயம் செய்திருப்பாள்

என்றார். இதைக்கேட்டு சினம் கொண்ட இந்த்ரன் அவளைக் காலால் உதைத்தான். அவள் முகத்திலிருந்து பசும்பால் பெருகிற்று. அதைக்கண்டு அவன் அதிக கோபங்கொண்டான். பூமியிற் சென்று நாயாகப் பிறப்பாய் என்று சபித்தான். காணாமற்போன யாக பசுக்களை மீட்டு, அரக்கரை வென்று வேள்வியைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டுமென்று மஹாவிஷ்ணுவை இந்த்ரன் வேண்டினான். அவர் அங்ஙனமே அரக்கர்மேல் பாணம் விட்டார். அவ்விடம் பாண தீர்த்தமெனப்படும். அக்கோக்களைக் கங்கையின் ஓர் தீவில் வைத்து ரக்ஷித்தார். அது கோதீர்த்தமாயிற்று. ச்யாம சபளர்கள் தன் தாய் அவனியில் நாயாயிருப்பதைக் கண்டு வருந்தினர். யமனை அடுத்து தாயின் சாபத்தை அகற்ற வரம் கேட்டனர். அவர் தன் தந்தையான சூர்யன் சொன்னபடி கங்கையில் சிவப்ரதிஷ்டைசெய்து பூஜித்து அவரருளால் ஸரமையின் சாபத்தை அகற்றினர். அவ்விடமே யமதீர்த்தமாயிற்று. விச்வாஸு என்ற கந்தர்வனுக்குப் பிப்பலா என்றோர் தங்கை யிருந்தாள். அவள் கங்காதீரத்தில் யாகம் செய்து இளைத்திருக்கும் முநிவர்களைக் கண்டு பரிஹாஸம் செய்தாள். அன்றியும் அவர்கள் கூறுவதுபோல் ச்ரௌஷட் வௌஷட் என்று கூறி நகைத்தாள். சினங்கொண்ட ரிஷிகள் அவளை நதியாகும்படி சபித்தனர். இதையறிந்த விச்வாவசு கங்கையில் புனலாடி யக்ஷேச்வரமெனும் சிவனை அர்ச்சித்து அச்சாபத்தை அகற்றினர். அன்றுமுதல் அவ்விடம் யக்ஷேச்வர தீர்த்த மாயிற்று.

சுக்ல தீர்த்தம். பரத்வாஜமுநி பைடீனஸி எனும் தன் மனைவியுடன் கங்காதீரத்தில் ஓர் வேள்வியை நடத்தினர். ஆங்கு புரோடாச மெனும் ஹவிஸ்ஸைப் பாகம் செய்யும் பொழுது புகையிலிருந்து ஓர் அரக்கன் உண்டாகி ஹவிஸ்ஸைப் புசிக்க ஆரம்பித்தான். முநிவர் அவனை நோக்கி

யக்ஞ விக்நம் செய்பவன் யார் என்றார். அரக்கன் முநி வரை நோக்கி, யான் ஹவ்யக்நன் எனும் அஸுரன். எனது தந்தை ப்ராசிநபர்ஹிஸ் எனும் முநிவர். என் தாய் ஸந்த்யை யாவள். எனக்குக் கலி என்றோர் ஸஹோதரனுண்டு. தேவா ஸுரர்களது முன்னிலையில் என்னை யான் செய்த ஓர் குற்றத்திற்காகக் கருப்பான அரக்கனாகி யக்ஞத்தை அழிக் கும்படி பிரும்மா சபித்தார். யான் அவர் அடிவணங்கி குற்றத்தை மன்னித்துச் சாபத்தை அகற்றும்படி வேண்டி னேன். அவர் அமிருத ஸ்நாநத்தினால் சாபமகலும் என் றார். ஸோமரஸம் ஆஜ்யம் கோமூத்ரம் கங்காஜலம் இவைகள் அமிருதமெனப்படும். ஆதலின் கங்காஜலத்தை என்மீது அபிஷேகம் செய்து என்னையும் சாபத்திலிருந்து விடுவித்து உமது வேள்வியையும் பூர்த்தி செய்யும் என்றான். அங் ஙனமே அவர் செய்ய அரக்கனது கருப்புநிறமகன்று வெண்மை நிறமுள்ள முநி குமாரனானான். ஆதலால் அது சுக்ல தீர்த்தமாயிற்று. முநிவர் வேள்வியை முடித்து யூபத்தைக் கங்கையில் எறிந்தார். அது இன்றும் காணப் படுகிறது.

சக்ர தீர்த்தம். மிக பவித்ரமான கங்காதீரத்தில் வஸிஷ் டர் முதலிய ஸப்தர்ஷிகள் கூடி ஓர் யாகத்தைச் செய்தனர். அரக்கர் பலர் ஒன்று கூடி அவ்வேள்வியைக் கெடுத்தனர். மஹர்ஷிகள் பிரும்மாவைச் சரணமடைந்து வேள்வியைப் பூர்த்தி செய்யும்படி வேண்டினார்கள். பிரும்மா, முனிவ ருங் கண்டு மோஹிக்கும்படி மாயையால் முக்தகேசி எனும் பெண்ணைப் படைத்து அவ்வரக்கர்களது முன்னே அனுப்பினார். அதைக்கண்டு எல்லோரும் மதிமயங்கி ஆடிப்பாடி அவளருகே ஓடினார்கள். மஹா மாயாவியான சம்பராஸுரன் இது மாயை என்று உணர்ந்து அவளை விழுங்கிவிட்டான். பின்னர் முன்போலவே ராக்ஷஸர்கள்

ஒன்றுகூடி வேள்வியை நாசம் செய்தனர். ஸப்தர்ஷிகள் சக்ரபாணியைச் சரணமடைந்தனர். அவர் தனது சக்ரத்தை அனுப்பினார். அது அஸுரரை மாய்த்து ஸ்நாநம் செய்து விட்டு பகவானிடம் வந்துவிட்டது. அது ஸ்நாநம் செய்த இடம் சக்ர தீர்த்தமாயிற்று.

வாணீஸங்கம தீர்த்தம். ஓர் ஸமயம் ஹரியும் பிரும்மனும் நானே பெரியவன் நானே பெரியவன் என்று சண்டையிட்டுக் கொண்டனர். இவ்விருவர்களது அகந்தையையும் அகற்ற, பரமசிவன் ஓர் ஜ்யோதிர் லிங்கமாக நின்றார். ஆங்கு ஓர் அசரீரி தோன்றி லிங்கத்தின் அடி அல்லது முடியைக் கண்டவரே பெரியவர் என்றது. ஹரி லிங்கத்தின் அடியைத் தேடிச் சென்றார். பிரும்மா முடியைத் தேடிச் சென்றார். வெகுதூரம் சென்றும் அடியைக்காண முடியாததலால் விஷ்ணு லிங்கத்தினருகே வந்து உட்கார்ந்து விட்டார். பிரும்மனும் வெகுதூரம்சென்று தேடியும் முடியைக் காணமுடியாமல் திரும்பினார். வரும்போது அவருக்கு ஓர் கெட்ட எண்ணமுண்டாயிற்று. முடியைக் கண்டதாகக் கூறுவோம். ஆனால் ஸத்யரூபமான நான்கு வேதங்களைக் கூறும் இம்முகங்களால் அஸத்யம் கூறலாகாது என்று எண்ணி, ஊர்த்வ முகத்தைக் கழுதை முகமாக்கி அதனால் முடியைக் கண்டேனென பொய் கூறினார். அவர் எதிரில் ஹரியும் ஹரனும் ஒரே உருவாகி நின்று அவர் கூறிய பொய்யினால் சினங்கொண்டு பொய்கூற ஸஹாயம் செய்த வாணியை நதியாகும்படி சபித்தனர். பின்னர் பிரும்மனும் வாணியும் தங்கள் குற்றத்தை மன்னிக்கும்படி அவர்களைப் பணிந்துப் போற்றினர். கருணாமூர்த்திகளான அவ்விருவரும் கங்கையுடன் கலந்தபின் சாபமகலுமென்றனர். அங்ஙனம் சாபமகன்ற இடத்திற்கு இப்பெயருண்டாயிற்று.

மௌத்கல்ய தீர்த்தம். முத்கலர் என்ற மஹர்ஷிக்கு

அவரது தர்ம பத்நியான பாகீரதியினிடத்தில் மௌத்கல்யன் என்றோர் புத்ரன் பிறந்தான். அவனுக்குத் தக்க வயது வந்தபின் ஜாபாலா என்ற பெண்ணை மணம் செய்வித்தார். இவ்விருவரும் விதி வழுவாது இல்லறத்தை நடத்தி வந்தனர். கல்வி கேள்வி பக்தி ஞாநம் முதலியவைகளில் மிகச் சிறந்த மௌத்கல்யரை மதிக்காதவரில்லை. எனினும் அவர் நித்ய தரித்ரராகவே இருந்தார். அவர் செய்த தவத்தால் அன்றன்றும் மஹாவிஷ்ணு கருடவாஹநத்தின் மீதேறி வந்து கங்கைக் கரையில் பற்பல தர்மக் கதைகளை மௌத்கல்யருக்குச் சொல்வார். ஒருநாள் ஜாபாலா தன் கணவனை வணங்கி மஹாவிஷ்ணுவைத் தர்சித்த பின்னும் தங்களைத் தாரித்ரியம் விடாத காரணமென்ன என்று கேட்டாள். அவர் மறுநாள் திருமாலிடம் இதைக் கேட்டார். அவர், தவம் செய்ததால் என்னைத் தர்சித்தாய். வைகுண்டமும் செல்வாய். நீ தானம் செய்யாததால் தாரித்ரியம் உன்னை விட்டகலவில்லை. இப்போதாவது கங்கா தீரத்திலே பகவானுக் கர்ப்பணம் செய்து எதையேனும் தானம் செய் என்றார். மஹர்ஷி அவரைப் பணிந்து, பகவன்! என்னுடல்தான் எனது பொருள்; அதையும் உமக்களித்து விட்டேன். வேறொன்றுமில்லை என்றார். உடனே பகவான் கருடனை அழைத்து வயல்களில் சிந்திக்கிடக்கும் தான்யத்தைப் பொறுக்கி வரும்படி கூறினார். அங்ஙனமே அது கொண்டுவந்த தான்யத்தைத் தனக்கே தானம் செய்யச் சொன்னார். அதற்குப் பயனாக அஷ்ட லக்ஷ்மிகளும் தாண்டவமாடத்தக்க ஓர் அரண்மனையை அவருக்களித்தார். பகவானும் மௌத்கல்யரும் பேசிய இடத்திற்கு இருவர் பெயராலும் பெயருண்டாயிற்று.

லக்ஷ்மீ தீர்த்தம். முன்னொரு ஸமயம் தரித்ர தேவதைக்கும் லக்ஷ்மீதேவிக்கும் யார் பெரியவள் என்று வாத

முண்டாயிற்று. தான் முன்னே பிறந்தாலும் சூரர் பண்டிதர் ஸத்குலத்திலே பிறந்தவர் ஸதாசாரமுள்ளவர் மா முதலியவர்களிடம் தான் தங்குவதாலும் தானே சிறந்தவள் என்றும், லக்ஷ்மீ நீசர்களிடமும் அயோக்கியர்களிடமும் பாபிகளிடமும் வஸிப்பதாலும் நல்லாரிடத்தில் அதிகநாள் தங்காததாலும் அவள் யாரிடம் செல்கிறாளோ அவர் மதம் அஹங்காரம் கர்வம் காமக்ரோதம் லோபம் மாத்ஸர்யம் முதலிய தோஷங்களுக்கு ஆளாவதால் அவள் உயர்ந்தவளல்ல என்று வாதித்தாள். லக்ஷ்மீ தானுள்ள இடம் எல்லா வகையாலும் அழகானதென்றும், எல்லோராலும் பூஜிக்கப் படுமென்றும், தனமில்லாவிடில் சிவனுனும் மதிக்கப் படுவதில்லை என்றும், தேஹி என்று கேட்க ஆரம்பிக்கும் போது அவனிடமிருந்து அழகு புத்தி வெட்கம் கீர்த்தி சாந்தி முதலிய தேவதைகள் வெளிக் கிளம்புகின்றனவென்றும், லக்ஷ்மீ கடாக்ஷமில்லாதவன் பிணத்திற்குச் சமம் என்றும், ஆதலால் தானே சிறந்தவள் என்றும் லக்ஷ்மீ கூறினாள். இருவரும் கூடி பிரும்மாவினிடம் சென்று தீர்ப்பு கூறும்படி வேண்டினார்கள். அவர் பெண்கள் விஷயத்தைப் பெண்களே அறிவர். ஆதலால் கங்கையினிடம் செல்லுங்களென்றார். இருவரும் அங்கு சென்று தங்களது வாதத்தைக் கூறினர். கங்கை அலக்ஷ்மீயைப் பார்த்து லக்ஷ்மீயுடன் நீ வாதமிடுவதற்கே ஏற்றவளல்ல. அவள் வித்யாலக்ஷ்மி தனதான்யலக்ஷ்மி யோகலக்ஷ்மி முக்திலக்ஷ்மி புத்திலக்ஷ்மி என எல்லாவிடத்திலும் சக்திஸ்வரூபிணியாக இருப்பதால் அவளே சிறந்தவள் என்றாள். இதைக் கேட்டு மிக்க கோபமும் துக்கமும் கொண்ட அலக்ஷ்மீ கங்கையையும் கங்காஸ்நாநம் செய்தோரையும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை என்றாள். வாதம் தீர்க்கப்பட்ட இடம் லக்ஷ்மீ தீர்த்தம்.

பாநு தீர்த்தம். சர்யாதி என்ற அரசன் ஸ்தவிஷ்டா எனும் உத்தம பத்நியுடனும் மதுச்சந்தஸ் எனும் சிறந்த புரோஹிதருடனும் கூடி தர்மம் தவருமல் அவனியை ஆண்டு வந்தான். ஒருஸமயம் அரசன் புரோஹிதருடன் கூடி வநம் சென்று வேட்டையாடித் திரும்புகையில் மதுச்சந்தஸின் முகம் கவலையுடனிருப்பதைக் கண்டான். அவரை வணங்கி அதற்கென்ன காரணமென்று வினவினன். அவர் உத்தம பதிவிருதா சிகாமணியான தன் மனைவி தனது பிரிவினல் படுந்துன்பத்தை எண்ணி வருந்துவதாக உரைத்தார். மன்னன், குருவான தாங்களே நித்தியமில்லாத பெண்ஸுகத்தைக் கருதி வருந்துதல் தகுமோ என்றுன். அரசே! தர்மார்த்த காமங்களுக் கனுகூலமான ஓர் உத்தம பதிவ்ரதை மனைவியாகக் கிடைத்தால் மோக்ஷத்தை விட இல்லறமே சிறந்தது என்றுர் புரோஹிதர். அத்தகைய உத்தமியோ அவர் மனைவி என பரீக்ஷிக்கவேண்டுமென்று பார்த்திவன் கருதினன். அவருக்குத் தெரியாமல் வேட்டைக்குச் சென்ற வேந்தனும் வேதியரும் ஓர் அரக்கனல் கொல்லப்பட்டார்கள் என்று நகருக்குச் செய்தி அனுப்பினன். மன்னன் மனைவி இது உண்மைதானே என்று கண்டறிய தூதனை அனுப்பினள். அந்தணன் மனைவியோ அதைக்கேட்டவுடனே, நாதா! ஹா! என்று கூறி ஆவியைத் துறந்தாள். இதை அறிந்த மன்னன் புழுவாய்த் துடித்தான். விஷபரீக்ஷை செய்தோமே! மஹாபாபம் செய்து விட்டோம்! என்செய்வதென்று நீண்ட ஆலோசனை செய்தான். இறந்தவளது உடலைத் தான் வரும்வரை நாற்றமில்லாமல் வைத்திருக்கும்படி உத்திரவிட்டு அங்கிருந்தபடியே புரோஹிதருடன் கங்கைக்குச் சென்றுன். ஆங்கு பற்பல தானங்களைச் செய்து முடிவில் தான் இதுவரை மனமறிய யாதொரு பாபமும் செய்யாமல் பாரினை ஆண்டது

ஸத்யமாயின் தனது ஆயுளைக்கொண்டு புரோஹிதர் மனைவி பிழைக்கட்டு மென்று கூறி மன்னன் தீயில் இறங்கினன். இதை உணர்ந்த ராஜ பத்னியும் தீயிலிறங்கி ஆவியை விட்டாள். மதுச் சந்தலின் மனைவி பிழைத்தெழுந்து தன் புருஷனுக்கு இந்த விருத்தாந்தத்தைக் கூறினள். அவர் மன்னனது மரணத்திற்குத் தானே காரணமாக இருந்ததை எண்ணி வருந்தினர். பூஜித்துவரும் ஸூர்யனைத் துதித்தார். அவர் ப்ரத்யக்ஷமாகி புரோஹிதர் விரும்பியபடி ராஜ தம்பதிகளை எழுப்பினர். அவ்விடம் பானுதீர்த்தமாயிற்று.

கட்க தீர்த்தம். கவயர் என்கிற முனிவரது குமாரன் பைலூஷனெனப்படுவான். அவர் பெரிய குடும்பி. அவரது ஜாதிக்கேற்ற அத்யாபநம் யாஜந ப்ரதிக்ரஹங்களால் அவர் குடும்ப ரக்ஷணத்திற்குப் போதிய வருமானம் கிடைக்க வில்லை. ஸேவை முதலிய நீசதர்மங்களால் தநம் தேட அவர் விரும்பவில்லை? ஆதலின் அவர் ஸம்ஸாரத்தில் வெறுப்பு கொண்டார். தந்தையினிடம் சென்று முக்திபெற வழி கூறுமாறு வேண்டினர். அவர் ஞானமெனும் கத்தியால் கோபம் ஆசை ஸங்கம் மோஹம் முதலியவைகளை அறுத்து முக்தி பெறுவாய் என்றார். அங்ஙனம் பைலூஷர் ஞான கட்கத்தினால் சத்ருக்களைவென்ற இடம் கட்கதீர்த்தமெனப் படுகிறது.

ஆத்ரேய தீர்த்தம். அத்ரியினது புத்ரரான ஆத்ரேய ரிஷி கங்காதீரத்திலே அக்நியை ஹோதாவாகக்கொண்டு ஓர் வேள்வி செய்தார். அது முடிந்தபின் ஓர் மஹேச்வரயாகம் செய்து ஸகல லோகங்களுக்கும் செல்லும் சக்தியைப் பெற்றார். ஓர் ஸமயம் ஸ்வர்க்கலோகம்சென்று இந்த்ர ஸபையைப் பார்த்தார். ஆங்குள்ள சீரும் சிறப்பும் அவர் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டது. உடனே விண்ணுலகை விட்டு மண்ணுலகிற்கு வந்தார். த்வஷ்டா எனும் தேவ

தச்சனை நினைத்தார். இவரது தபோ மஹிமையால் நினைத்தவுடன் அவன் எதிரே வந்து வணங்கி யாது பணி என்றான். இந்த்ரபதவியைப் பெற பேரவா கொண்டேன். இந்த க்ஷணமே இங்ஙனமே இந்திரனுக்குரிய ஸகல போக வஸ்துக்களையும் படைத்துக் கொடு; இல்லையேல் உன்னைச் சாம்பலாக்கி விடுவேனென்றார். அதற்கஞ்சி த்வஷ்டா ஸுதர்மை கல்பவிருக்ஷம் காமதேனு சிந்தாமணி வஜ்ரம் அப்ஸரஸ் முதலியவைகளைப் படைத்தார். ஆத்ரேயர் தன்னை இந்த்ரன் போலாக்கித்தன் பத்னியை இந்த்ராணியாக்கி இந்த்ர போகத்தை அனுபவித்து வந்தார். இதைக்கண்டு அரக்கர் பூவுலகிலும் இந்த்ரன் தனது ஆக்ஞையை நடத்துகிறான் என்று கோபங் கொண்டனர். உடனே நால்வகைச் சேனையோடு ஆத்ரேயருடன் போருக்கு வந்தனர். மஹர்ஷி நடு நடுங்கித் தான் இந்த்ரனல்ல, ஆத்ரேயரிஷி என்றும் தன்னைக் கொல்லாமல் விட்டு விடும்படியும் வேண்டினார். அவ்வேஷத்தை அகற்றும்படிக் கூறி அரக்கர் சென்றனர். ஆத்ரேயர் மறுபடியும் த்வஷ்டாவை அழைத்து அவைகளை அகற்றி பழயபடி தனதாச்ரமத்தை அளிக்கும்படி வேண்டினார். த்வஷ்டாவும் அங்ஙனம் செய்தான். அவர் மறுமுறை ஓர் வேள்வி செய்தார். ஆங்கு வந்த தேவர்களைக்காண வெட்கங்கொண்டு தலை குனிந்து நின்ற முனிவரைக் கண்ட வானவர் அவருள்ள இடம் ஆத்ரேய தீர்த்தமென்றும் ஆங்கு ஸ்நாநதாநம் செய்வோர் இந்த்ரபோகத்தை அனுபவிப்பர் என்றும் கூறி அவரைச் சமாதானப்படுத்திச் சென்றனர்.

கபிலா ஸங்கமம். வேந மஹாராஜன் தன்னாட்டிலே வேள்வி முதலிய நற்கருமங்களை எவரும் செய்யலாகாதென உத்திரவிட்டான். ஆதலால் கோபங் கொண்ட முனிவர்கள் அவனைச் சாம்பலாக்கினர். கபிலமுனிவர் கூறியபடி அவ

னது துடையைக் கடைந்து ப்ருது சக்ரவர்த்தியை உண்டு பண்ணினார்கள். அவன் கபிலா ரூபங்கொண்டு கபில முனி வரருகே நிற்கும் பூமியினிடமிருந்து ஸகல ஔஷதிகளையும் கறந்தான். அங்கிருந்து பால் கிளம்பி கங்கையில் ஸங்கம மாயிற்று. அவ்விடம் மிக பவித்ரமானதாகும்.

தேவஸ்தாநம். கிருதயுக ஆரம்பத்திலே தேவரும் அஸுரரும் சேர்ந்து அமிருதத்தைக் கடைந்தெடுத்தனரல்லவா? மோஹினி வடிவங்கொண்ட பகவான் தேவர்களுக்கே அமிருத மளிப்பதைக் கண்டு ராகு தேவவேடம்பூண்டு சந்த்ரஸூர்யர்களது இடையே உட்கார்ந்து அமிருதத்தைப் புஜித்தான். உடனே பகவான் அவன் சிரஸை அறுத்தார். இதைக்கண்டு ராகுவின் புத்ரனை மேகஹாஸன் மிக வருத்தங்கொண்டான். தேவர்களை அழிக்க கங்காதீரத்திலேஅவன் கடுந்தவம் புரிந்தான் தேவர்கள் அவனருகே வந்து அவனைச் சமாதானப்படுத்தினர். ராகுவை நவக்ரஹத்தில் சேர்த்துப் பூஜிப்பதாகவும் மேகஹாஸனைத் தைத்யர்கள் அர்ச்சிக்கும்படியான நிருருதி ஸ்தாநத்திலமர்த்துவதாதவும் கூறினார்கள். தேவர்கள் தங்கி அவனை ஸமாதானப்படுத்திய இடம் தேவஸ்தானமாகும்.

ஸித்த தீர்த்தம். ராவணன் ஓர் ஸமயம் ஸகலதிக்தேவதைகளையும் ஜயித்து சந்திரனுடன் யுத்தம் செய்தான். அரக்கனது வீர்யத்தால் துன்புறும் ஸோமனைக்கண்டு பிரும்மா கருணைகொண்டார். உடனே அவர் ராவணனைச் சமாதாநப்படுத்திச் சிவனது நூற்றெட்டு நாமங்களை உபதேசித்தனுப்பினார். தசமுகன் கங்காதீரம்சென்று அந்த நாமங்களைக் கூறி பரமசிவனைப் பூஜித்து பல ஸித்திகளைப் பெற்றார். அவ்விடமே ஸித்த தீர்த்தமாம்.

ப்ருஷ்ணீ ஸங்கமம். அத்ரி மஹர்ஷி மும்மூர்த்திகளையுமாராதித்து அவர்களருளால் சந்த்ரன் தத்தன் தூர்வா

ஸன் என்ற மூன்று புத்ரர்களையும் ஆத்ரேயி எனும் ஓர் கன்யகையையும் பெற்றார். அக்நியினது புதல்வரான ஆங்கிரஸ் எனும் முநிவருக்கு அத்ரி ஆத்ரேயியை மணம் செய்வித்தார். ஆங்கிரஸ் தன் மனைவியினிடம் எப்போதும் கடுமையாகவே இருந்தார். அதைக்கண்டு வருந்தி அவள் தனது மாமனாரிடம் முறையிட்டாள். அவர் தனது அங்காரமெனும் கட்டைத்தணலிலிருந்து உண்டானதால் அவன் அங்ஙனம் எப்போதும் கடினமாகவே இருப்பான். நீ நதி வடிவங்கொண்டு அவனைப் பிரவாஹத்தினால் இழுத்துச் சென்றால் சாந்தமாவான் என்றார். ஆத்ரேயி அங்ஙனம் செய்வது கற்புள்ளவளுக்குத் தர்மமோ என ஸந்தேஹங் கொண்டாள். அக்னி அவளுக்குத் தக்க ஸமாதாநங் கூறி அவளை நதிவடிம் கொள்ளும்படிச் செய்தார். அவள் தனது ப்ரவாஹத்தால் புருஷனைச் சாந்தமாக்கி கங்கையில் கலந்த இடம் பருஷ்ணீ ஸங்கமமாயிற்று.

மார்க்கண்டேயர் தீர்த்தம். மார்க்கண்டேயர் பரத்வாஜர் வஸிஷ்டர் கௌதமர் யாக்ஞவல்க்யர் ஜாபாலி முதலிய மஹர்ஷிகள் ஒன்றுசேர்ந்து ஞாநம் பெரிதா கர்மம் பெரிதா என்று வாதம் செய்தனர். சிலர் ஞாநமென்றும் சிலர் கர்மம் என்றும் கூறியதால் அனைவரும் உண்மையைக் கண்டு பிடிக்கக் காசிமாநகரம் சென்றனர். கங்கையில் புனலாடி பரமசிவனைப் பக்தியுடன் பூஜித்தனர். உடனே பகவான் ப்ரத்யக்ஷமாகி கர்மாவினாலே ஞாநமும் ஸித்திப்பதால் கர்மாவே சிறந்ததெனக் கூறினார். அவ்விடம் மார்க்கண்டேயமெனப்படும்.

யாயாத தீர்த்தம். யயாதிமஹாராஜன் சுக்ராசார்யரது புதல்வியான தேவயானியை மணந்தார். விருஷபர்வா எனும் அஸுரராஜனது புதல்வியான சர்மிஷ்டை அவளுக்கு அடிமையாக வந்தாள். அரசன் சர்மிஷ்டையிடம்

நட்பு கொண்டு மூன்று புதல்வர்களையும் தேவயானியினிடம் இரண்டு புத்ரர்களையும் பெற்றார். தேவயானி அரசன் சர்மிஷ்டையிடம் நட்பு கொண்டதைக் கூறி அவனைச் சிக்ஷிக்கும்படி தன் தந்தையினிடம் கூறினாள். சினங்கொண்ட சுக்ரர் யயாதியைக் கிழவனாகும்படிச் சபித்தார். பின்னர் மன்னனது குணத்தையும் தன் புத்ரியின் துர்க்குணத்தையும் ஞானக்கண்ணால் கண்டார். சினமகன்றது. கிழத்தனத்தைப் புதல்வனிடமளித்து அவன் இளமையைப் பெற்றுக்கொள்ளும்படி சுக்ரர் அரசனைக் கூறினார். முதல் நான்கு புதல்வர்களும் அங்ஙனம் செய்ய ஸம்மதிக்காததால் யயாதி அவர்களைச் சபித்து பூருவைக் கேட்டார். அவன் ஸந்தோஷமாக இளமையை அளித்து மூப்பை ஏற்றுக்கொண்டான். ஆயிரமாண்டுகள் சென்றபின் யயாதி புதல்வனுக்கு இளமையையளித்துத் தனது கிழத்தன்மையைத் தரும்படிக் கூறினான். பூரு இளமையை ஏற்று சாபத்தினால் வந்த அந்த ஜரையை அழிக்கக்கருதி வாராணஸி சென்றான். விதிப்படி கங்கையில் ஸ்நாநம்செய்து பரமனை ஆராதித்து வந்தான். பகவான் ப்ரத்யக்ஷமாக வந்தார். யாயாதன் அவரிடம் முதலில் தன் ஸஹோதரருக்குத் தந்தையளித்த சாபமகலும்படியும் அந்த ஜரை அழியும்படியும் வரம் வாங்கினான். அந்த இடம் யாயாத தீர்த்தமாகும்.

அப்ஸராஸங்கம். வஸிஷ்டரிடமுண்டான கோபத்தினால் விச்வாமித்திரர் ப்ரும்மரிஷி யாவதற்காக கங்காத்வாரத்தில் கடுந்தவம் புரிந்தார். அதைக் கலைக்க இந்த்ரனது ஆணையின்படி மேநகை ஆங்கு சென்று அவருடன் கூடிக் குலாவிச் சகுந்தலை எனும் கன்யகையைப் பெற்று சென்றாள். விச்வாமித்ரர் வேறிடம் சென்று தவம் செய்தார். தேவேந்த்ரன் கம்பீரை அதிகம்பீரை என்ற இரு அப்ஸரஸ்களை அழைத்து அங்கு சென்று அவர் தவத்தைக் கலைக்கும்

படி கூறினன். அவர்கள் முனிவரருகே சென்று ஆடிப் பாடி தவத்தைக் கலைக்க முயற்சித்தினர், அதைக்கண்டு சினங்கொண்ட முனி அவர்களை நதிகளாகும்படிச் சபிந்தார். இந்திரன் முனிவரை வணங்கி அச்சாபத்தை அகற்றும்படி வேண்டினன். அவர் கங்காஸங்கமத்தால் சாபமகலுமென்ருர். அவ்விடம் இந்தப்பெயர் பெற்றது.

கோடி தீர்த்தம். கண்வரிஷிக்கு பாஹ்லீகன் என்ற ஓர் புத்ரனிருந்தார். அவர் கர்மாநுஷ்டானத்தில் மிக்கப் பற்றுடையவர். ஓர்ஸமயம் கங்காதீரத்தில் அவர் தீயை வளர்த்து ஹோமம் செய்யும்போது முதல் ஆஹுதி முடிந்து இரண்டாமாஹுதி செய்வதற்குள் அக்நி அணைந்துவிட்டது அவர் யாது செய்வதென்று வகையறியாது தவித்தார். அச்சமயம் ஆகாயத்திலிருந்து பாதி எரிந்து அணைந்த கட்டையில் ஹோமம் செய்யென்று ஓர் சொல் கூறிற்று. அவர் அது அக்நி அல்ல என்று அப்படிச் செய்ய ஸம்மதிக்கவில்லை. பின்னர் அக்நி புத்ரனை ஸுவர்ணத்தில் ஹோமம் செய்திடின் கோடிபங்கு பயன் கூடுமென்று ஆகாயவாணி கூறிற்று. அங்ஙனமே பாஹ்லீகர் பலனைப் பெற்றவிடம் கோடி தீர்த்தமாயிற்று.

நாரஸிம்ஹ தீர்த்தம். ஹிரண்யகசிபு எனுமரக்கன் ஹரிபக்தனை ப்ரஹ்லாதனைத் துன்புறுத்த, கருணைமூர்த்தியான பகவான் தூணிலிருந்து நருஸிம்ஹனாகத் தோன்றினார். ஹிரண்யனை மட்டிலுமல்லாமல் எவராலும் கொல்ல முடியாத அம்பர்யன் எனுமரக்கனையும் ஏனைய ராக்ஷஸர்களையும் கங்கையின் வடகரையில் கொன்ருர். அவ்விடம் நாரஸிம்ஹ தீர்த்தமெனப்படும்.

பைசாச தீர்த்தம். ஆஜீகர்த்தி என்ற முனிவர் துர்ப்பிக்ஷத்தால் வருந்தி தனது மூன்று புதல்வர்களையும் தன் மனைவியையும் காக்க வருமானமில்லால் துன்புற்ருர். தற்செயலாக

ஓர் அரசன் எண்ணிருந்த பொருளைக்காட்டி அதை ஏற்று நரபலியாக வர எவரேனும் ஸம்மதிப்பரோ என்று விசாரித்தான். ஏழ்மையால் மெலிந்த முனி சுநச்சேபனெனும் தனது மத்யகுமாரனை அரசனுக்களித்து தநத்தைப் பெற்று குடும்பத்தை ரக்ஷித்தார். இந்த பாபத்தினால் மஹர்ஷிக்குப் பெரும் நோயுண்டாயிற்று. அவர் இறந்த பின்னும் பல நரகங்களை அனுபவித்துப் பின்னர் பிசாசப்பிறவி பெற்றார். அகோரமான பசியினால் வருந்தி வநம் வநமாக அது திரிந்த போது தற்செயலாக சுநச்சேபனைக் கண்டது. அவனிடம் தனது துன்பத்தைக்கூறி அதை அகற்றும்படி வேண்டிக் கொண்டது. சுநச்சேபன் பாபங்களை அகற்ற கங்கையை விடச் சிறந்த ஸாதநமில்லை எனக்கருதி கங்கையில் புனலாடி தந்தையைநாடி தர்ப்பணம் செய்தார். உடனே அவர் பாபமகன்று ஸ்வர்க்கஞ் சென்றார். அவ்விடம் பைசாச தீர்த்தமெனப்படும்.

வாஸிஷ்டாதி தீர்த்தம். புரூரவஸ் என்ற ராஜன் ஊர்வசியினிடம் காதல்கொண்டான். அவள் அரசன் வஸ்த்ரமில்லாமல் தன் கண்முன் தோன்றும்போது தான் அவனை விட்டுவிடுவதாகக்கூறி அதுவரை அரசனுக்கு மனைவியாயிருக்க ஸம்மதித்தாள். ஓர் ஸமயம் அரசன் அவள் முன்னே வஸ்த்ரமின்றித் தோன்ற முற்கூறியபடி ஊர்வசி அரசனை விட்டு ஸ்வர்க்கம் சென்றாள். அன்று முதல் மன்னன் பித்தனைப்போல் தன் பணியைச் செய்யாது திரிந்தான். அதைக் கண்டு அவரது புரோஹிதரான வஸிஷ்டர் வருந்தினார். மன்னனைக் காசிமாநகரஞ்சென்று கங்கையில் ஸ்நாநம்செய்து வேள்வி செய்யும்படி கட்டளையிட்டார். மன்னன் வேதவித்துக்களைக்கொண்டு விதிவழுவாது வேள்வியைச் செய்தான். அவ்விடம் வஸிஷ்ட புரூரவ ஊர்வசீ வேதம் முதலியவர்கள் பெயரால் வழங்கப்படுகிறது. ஆங்கு இன்னும்

பௌர்ணமி யன்று ஊர்வசி வருகிறாள். அவ்விடத்தை வலம்வந்தால் பூப்ரதக்ஷிணம் செய்ததாகும்.

நந்திதட தீர்த்தம். இந்த்ரனது புரோஹிதரான ப்ருஹஸ்பதியினிடம் சந்த்ரன் கல்வி பயின்றான். வித்யாப்யாஸமானபின் வீடு செல்லும்போது மாணவன் குருவை வணங்கியாது குருதக்ஷிணை வேண்டுமென்றான். அவர் தன் மனைவியான தாரையைக் கேட்கும்படி கூறினார். வீட்டிற்குள் நுழைந்த சந்த்ரன் தாரையின் அழகைக் கண்டுமயங்கி குரு பக்தி என்பதையும் மறந்து அவளை பலாத்காரமாகத் தன் மனைக்கு அழைத்துச் சென்றான். இதைக்கண்டு சொல்லொணுத் துக்கமடைந்த குரு சக்ரரிடம் சென்று முறையிட்டார். அவர் சிவனை ஆராதித்து அவரளித்த வரபலத்தால் சந்த்ரனை குஷ்டரோய் பிடிக்கும்படிச் சபித்துத் தாரையை மீட்டுவந்தார். அன்றியும் அவர் சந்த்ரனால் அசுத்தமான தாரைக்குப் பிராயச்சித்தம் கூறும்படி ஸகல தேவர்களையும் வேதங்களையும் நதிநதங்களையும் அழைத்துக் கேட்டார். வேதங்கள் அவளுடன் ஸ்ரீ குரு கங்கா ஸ்நாநம் செய்யும்படி கூறின. அங்ஙனமே செய்து தாரை தன் அதர்மத்தை அகற்றினாள். தர்ம வடிவமான நந்தி நடமாடும் அவ்விடம் நந்திதடமாயிற்று.

பாவந் தீர்த்தம். சூர்ய வம்சத்திலே பிறந்த ப்ராசீநபர்ஹிஸ் என்ற அரசன் மநுநீதி வழுவாமல் பல்லாண்டு பாரினை ஆண்டுவந்தான். அவன் புத்ர பாக்யமில்லாமல் வருந்தி வாராணஸிக்குச் சென்று பரமசிவத்தைப் பூஜித்தான். பகவான் பார்த்திவன் எதிரிற்றோன்றி தனது மூன்றுவது கண்ணை நோக்கும்படிக் கூறினார். அரசன் அதைப் பார்க்குங்கால் மஹிமா என்றோர் புத்ரன் பிறந்தான். பவனெனும் பரமசிவன் அருள்புரிந்த இடம் பாவ தீர்த்தமாயிற்று.

ஸஹஸ்ர குண்டம். ராவணனைக் கொன்றபின் ராகவன் ஸீதா தேவிக்கு அக்நி சுத்தி செய்வித்துத் தன் மடிமீது ஏற்றிக்கொள்ள விரும்பினார். ஹநுமானும் அங்கதனும் அயோத்யை சென்று ஆங்குள்ளோர் முன்னிலையில் அக்நி சுத்தி செய்வித்தால் லோகாபவாதத்தை அகற்றலாமென்றார்கள். லக்ஷ்மணனும் விபீஷணனும் காலதாமதத்தைச் சஹிக்கவில்லை. ஆதலின் லங்கையிலேயே அக்நி சுத்தி செய்து தேவியை ராமன் அழைத்துக்கொண்டார். பட்டாபிஷேகமானபின் பல்லாண்டு ராமன் ராஜ்யத்தையாண்டு வந்தார். ஸீதா தேவி கர்ப்பிணியாக இருக்கும்போது ஒருவன் அவள்மீது அபவாதம் சொன்னான். ராகவன் உடனே ஸீதையை அரண்யத்தில் கொண்டு விடும்படி கட்டளையிட்டார். வால்மீகி ஆச்ரமத்தில் தேவி லவ குசர்களைப் பெற்றாள். வால்மீகி அச்சிறுவர்களுக்கு ராமாயணத்தையும் மற்ற கலைகளையும் கற்பித்தார். ராமன் ஓர் அச்வமேத யாகம்செய்ய, அவரது பழய நண்பர்களான அங்கதன் முதலியோர் அங்கு வந்தனர். ஆங்கு அழகாக ராமாயணத்தைப் பாடும் சிறுவர்களைக் கண்டு ஆச்சர்யமடைந்தனர். ஸீதா தேவியைத் தேடித் தேடி அகப்படாததால் மிக்க வருந்தினர். நடந்த விஷயத்தை அறிந்தபின் எல்லா வாநரர்களும் ஸீதா சோகத்தால் வருந்தி கங்கையில் பிராணனைவிடச் சென்றனர். ராகவனும் பரிவாரத்துடன் அவர்களைப் பின் தொடர்ந்து கங்கையில் மூழ்கினார். உடனே அவர்களது சோகமகன்றது. ஸீதா த்யாகத்தினாலுண்டான பாபத்தை அகற்ற அங்கு விதிப்படி அக்நி முகமாக பிராயச்சித்தம் செய்யப்பட்டது. அவ்விடமே ஸஹஸ்ர குண்டமாம்.

கபிலா தீர்த்தம். ஓர் ஸமயம் த்வாதசாதித்யர்கள் கங்கா தீரத்திலே ஆங்கிரஸ்ஸுகளைக் கொண்டு ஓர் வேள்வி செய்தனர். அதில் தக்ஷிணையாக பூமியைத் தந்துவிட்டு

தன்னிருப்பிடஞ்சென்றனர். ஆங்கிரஸ்ஸுகளிடஞ் சென்ற பூமி ஸைம்ஹிகி எனும் ராக்ஷஸ வேடம் பூண்டு குடிகளைக் கொன்றுவந்தாள். மஹர்ஷிகளிதைக் கண்டு ஆதித்யரிடம் ஓடி இந்த தக்ஷிணைத் தங்களுக்கு வேண்டாமென்று அதை எடுத்துக் கொள்ளும்படிக் கூறினர். அவர்கள் தந்த தநத்தைத் திரும்பப்பெறுவது தர்மமல்ல என்று அதற்கு பதிலாகக் கபிலைப் பசுவை அளித்து பூமியைப் பெற்றனர். அவ்விடம் கபிலா தீர்த்தமாம்.

சங்கஹ்ரதம். கிருத யுகத்தின் ஆரம்பத்தில் பிரும்மா ஸாமகாநம் செய்துக் கொண்டிருந்தார். அச்சமயம் எண்ணிறந்த ராக்ஷஸர்கள் தோன்றி பிரும்மாவையே கொல்ல ஆரம்பித்தார்கள். அவர் மஹா விஷ்ணுவைச் சரணமடைந்தார். அவர் சக்ராயுதத்தால் அரக்கர்களைக் கொன்று அவர்களது ரக்தத்தால் தனது சங்கத்தை நிறப்பினுர். அவ்விடம் மிக்க பவித்ரமான சங்கஹ்ரதமாயிற்று.

கிஷ்கிந்தா தீர்த்தம். ராகவன் ராவணனைவென்று தேவியுடனும் கிஷ்கிந்தாவாஸிகளுடனும் புஷ்பக விமாநத்தில் ஏறி அயோத்யைக்குச் சென்றார். இடையிலே கங்கைக் கரையிலிறங்கி ஆங்கு ஓர் லிங்க ப்ரதிஷ்டைசெய்து பூஜித்தார். கங்கையின் அருளால்தான் தனக்கு ஜயமுண்டாயிற்றென்று ஐந்து நாட்களங்கு தங்கி வாநரர்களுடன் கங்கா பூஜை செய்தார். அவ்விடமே கிஷ்கிந்தா தீர்த்தமாம். ஆங்கு அவர் ப்ரதிஷ்டை செய்த லிங்கத்தை உத்வாஸநம் செய்யும்படி ஹநுமானிடம் ராமர் கூறினுர். அவர் தன் கரங்களாலும் வாலாலும் அதை அகற்ற முயன்றார். அதை அசைக்கவும் முடியவில்லை.

வ்யாஸ தீர்த்தம். பிரும்மா மநதினுல் பத்து புத்ரர்களைப் படைத்து உலக ஸ்ருஷ்டி செய்யும்படி கூறினுர். அவர்கள் உலகைச்சுற்றிப் பார்த்துவரச் சென்றவர் திரும்

பாமலே சென்றார்கள். மறுமுறை பத்து புதல்வர்களைப் படைத்தார். அவர்களும் அங்ஙனமே சென்றனர். மூன்றாவது முறையாக ஆங்கிரஸர்களைப் படைத்தார். அவர்கள் தந்தையின் உத்திரவுபடி தவஞ்செய்யச் சென்றனர். தாயினிடம் வணங்கி உத்திரவு பெறாததால் அவர்கள் எங்கு சென்று தவம் செய்தாலும் ஏதேனும் விக்நம் நேர்ந்தவண்ணமாகவே இருந்தது. அகஸ்த்யரை வணங்கி அதை அகற்ற வழிகேட்டார்கள். அவர் கங்கைக் கரையில் தவம் செய்யும்படி கூறினார். அவர்கள் ஸித்தி அடைந்ததுடன் தர்மம் குறைந்து அதர்மம் அதிகமாகும்போது வ்யாஸராக அவதரிக்கும்படியும் பின்னர் பிரும்ம பதவி பெறும்படியும் சிவன் அருள் புரிந்தார். ஆதலின் அது வ்யாஸ தீர்த்தமெனப் படுகிறது.

வஞ்ஜரா ஸங்கமம். கத்ரு விநதா என்ற இருவர்களும் ஸஹோதரிகள். கச்யபரை மணந்து கத்ரு பாம்புகளையும் விநதை கருடனையும் பெற்றார்கள். ஓர் நாள் ஒரு பந்தயத்தில் ஏமாற்றி கத்ரு விநதையை அடிமையாக்கிக் கொண்டாள். கத்ருவின் விருப்பப்படி கருடன் ஸர்ப்பங்களைச் சூர்ய மண்டலத்திற்கு அழைத்துச் சென்றார். இடையிலே பாம்புகள் தாபத்தால் மெலிந்து கிழவர்கள் போலானார்கள். கத்ரு இதைக்கண்டு வருந்தி தம் மக்களது துன்பம்தீர பாதாளத்திலுள்ள கங்கா ஜலத்தைக் கொண்டுவரும்படி கருடனுக்குக் கட்டளையிட்டாள். அவர் அங்ஙனமே கங்கையைக் கொண்டு வந்து ஸர்ப்பங்களுக்கு அபிஷேகம் செய்தார். ஜரை அகன்றது. அந்த ஜலம் கங்கா ஜலத்துடன் ஸங்கமமான இடமே வஞ்ஜரா ஸங்கமமாம்.

தேவாகம தீர்த்தம். தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யார் எந்த இடத்தை ஆள்வதென விவாதமுண்டாயிற்று. தேவர் ஸ்வர்க்கத்தையும் அசுரர் அவனியையும் ஆள்வதெ

ஜைத்திர்மானித்து அதன்படி நடந்தனர். அரக்கர்கள் அவனி யில் தங்கி அவர்கள் வழக்கப்படி யக்ஞயாகாதிகளைக் கெடுத்தனர். அதனால் ஆஹாரமில்லாமல் வருந்தி வானவர் பிரும்மாவைச் சரணம் அடைந்தனர். அவர் பூலோகம் சென்று அசுரருடன் போர்புரிந்து அவர்களைக் கொல்லும் படிக் கூறினார். அங்ஙனமே தேவாஸுர யுத்தம் நிகழ்ந்தது. அங்கும் தேவர் அபஜயமடைந்து வருந்தினர். ஆங்கு ஓர் அசரீரி வாக்கு தோன்றி காசிமா நகரத்தில் ஹரிஹரர்களைப் பூஜித்து ஜயமடையுங்கள் என்றது. அங்ஙனமே தேவர் சிவ விஷ்ணுக்களின் அருளால் ஜயமடைந்தனர். அவ் விடமே தேவாகம தீர்த்தமெனப்படும்.

குச தர்ப்பணம். ஓர் பிரளயத்திற்குப் பின் கடவுள் உலகைப் படைக்கக் கருதி ஜலத்தைப் படைத்து அதில் தான் விராட் ரூபியாகப் படுத்திருந்தார். அவரது நாபிக் கமலத்திலிருந்து சதுர்முகன் தோன்றினார். அவர் தனி மையாக நின்று நான் யார்? எவரால் படைக்கப்பட்டேன்? யாது யான் செய்யும் வேலை? எனச் சிந்தித்தார். ஆகாயத் திலிருந்து கர்ம பூமியில் சென்று யாகம்செய்; பின்னர் உல கைப் படைக்கும் சக்தியைப் பெறுவாய் என்று ஓர் சப்தம் தோன்றிற்று. அவர் வேள்விசெய்து தர்ப்பையை அலம்பி விட்ட இடம் குசதர்ப்பணமாம்.

மன்யு தீர்த்தம். ஸுரர்களுக்கும் அஸுரர்கட்கும் மீளாத யுத்தமல்லவா? ஓர் ஸமயம் தோல்வியுற்றதேவர் பிரும்மா வைச் சரணமடைந்தனர். அவர் காசியிலுள்ள விச்வேசனை ஆராதிக்கும்படி கூறினார். அங்ஙனம் அமரர் அர்ச்சிக்க அமராதிபன் ப்ரத்யக்ஷமாகி வரம் யாது வேண்டுமென்றார். என்றைக்கும் தங்கள் ஸேநாதிபதியாயிருந்து ஜயமளிக் கும் ஓர் வீரனை வானவர் வேண்டினர். முக்கண்ணன்

தனது மூன்றாவது கண்ணிலிருந்து மன்யு எனும் தேவனைப் படைத்தனுப்பினார். அவ்விடம் மன்யு தீர்த்தமாம்.

ஸாரஸ்வத தீர்த்தம். சுப்ரமெனும் மலைமீது சாகல்யரென்ற முநிவர் தவம்செய்து வந்தார். அவரது தவ வலிமையால் எல்லோரும் அவரைப்போற்றிப் பணிவர். பாசு எனுமரக்கன் அவரைப் புசிக்கக் கருதி பற்பல உருவங்களெடுத்து அவரருகே செல்வான். ஆனால் அவரைப் புசிக்க முடியவில்லை. ஓர் நாளவர் அநுஷ்டானங்களை முடித்து அன்னமுட்கொள்ளப்போகும் ஸமயத்தில் பாசு விருந்தாளி வேடம்பூண்டு வீட்டில் நுழைந்தான். முநிவர், "விருந்தினர் ஸ்வர்க்கமளிப்பவர்; குற்றமில்லாதபோது நம்மை நிந்திப்பவர் நமது பாபத்தை அகற்றுபவர்" என்ற தத்துவத்தை அறிந்தவர். ஆதலின் அதிதி எதை விரும்பினாலும் அளிப்பதாகக் கூறினார். பாசு முநிவரையே புஜிக்கவேண்டுமென்றான். அவர் விஷ்ணு கவசமெனும் மந்திரத்தை ஜபித்துவிட்டுத் தன்னைப் புஜிக்கும்படிக் கூறினார். அரக்கன் அவரருகே செல்லும்போது முநிவர் சங்க சக்ரபாணியான விஷ்ணுவாகக் காணப்பட்டார். அஸுரன் அவரடிபணிந்து தனது பாபமகன்று நற்கதி அடைய ஓர் உபாயங் கூறும்படி வேண்டினான். முநிவர் ஸரஸ்வதி வடிவமான கங்கையே உன் பாபத்தை அகற்ற வல்லவளென்றார். அஸுரன் கங்காஸ்நாநத்தால் ஸ்வர்க்கம் சென்றான். அவ்விடம் ஸாரஸ்வத தீர்த்தமாம்.

சிச்சிகா தீர்த்தம். சுப்ரமலைமீது பேருண்டமெனும் பெயர்கொண்ட சிச்சிகா ஜாதியைச்சார்ந்த ஓர் பக்ஷி வஸித்து வந்தது. அது கழுகினத்தைப்போல் மாம்ஸபக்ஷிணீ. அது ஓர் மரத்தின்மீதமர்ந்தபோது தற்செயலாக பவமாநனெனும் அரசன் தன் புரோஹிதருடன்கூட அம்மரத்தின் அடியில் உட்கார்ந்தான். கிளையின்மீது இரண்டு முகங்களு

டன் வீற்றிருக்கும் பக்ஷியைப்பார்த்து நீ, யார்? என்றான். அது முற்பிறவியில் தான் ஓர் அந்தணனாக இருந்து பற்பல பாபங்களைச் செய்து இப்பிறவி பெற்றதாகவும் கங்காஸ்நானத்தினாலும் கங்காதர தர்சநத்தினாலும் தான் நற்கதி பெறலாமென்றும் தனக்கு அவை இருப்பிடம் தெரியாததால் மன்னனே தனக்கு உதவி புரியவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தது. அன்புடன் அரசன் அதற்கு கங்காஸ்நாநமும் கதாதர தர்சநமும் செய்வித்தான். அது உடனே ஸ்வர்க்கம் சென்றது. அவ்விடமே சிச்சிகா தீர்த்தமாயிற்று.

பத்ரதீர்த்தம். யமதர்மராஜனுக்கு விஷ்டி என்றோர் ஸஹோதரியிருந்தாள். அவள் மிகக் குரூபியாகவும் துர்க்குணமுள்ளவளாகவும் இருந்தாள். ஆதலின் அவளை எவரும் மணந்துகொள்ள விரும்பவில்லை. பெண்களுக்கு விவாஹம் மிக முக்கியமான ஸம்ஸ்காரமாதலின் விஷ்டி விருப்பத்திற்கிணங்க விச்வரூபனென்பவருக்கு அவளை அளித்து விவாஹம் செய்வித்தார். அவனோ மிக பயங்கரமான உருவமும் குணமுமுள்ளவன். இருவரும்கூடி இல்லறகார்யத்தை நடத்தினர். பெற்றோரைப்போலவே இவர்களுக்கும் ஏழு புத்திரர்கள் பிறந்தனர். ஆனால் கடைவன் மிக்க ஸுரூபமும் ஸுகுணமு முள்ளவன். ஒருநாளவன் மாமன் வீடுசென்று ஆங்கு சிலர் இன்பமடைவதையும் சிலர் துன்புறுவதையுங் கண்டான். மாமனை வணங்கி என் பெற்றோரும் ஸஹோதரர்களும் இங்ஙனம் கஷ்டப்படாமலிருக்க ஓர் உபாயம் சொல்லும்படி வேண்டினான். அவர் கங்கையே பத்ரத்தை (க்ஷேமத்தை) யளிக்க வல்லவளென்றார். உடனே அவன் கங்கையைத் துதித்து அவர்களை நல்லுருபமும் நற்குணமுமுள்ளவர்களாகச் செய்தான். அவ்விடம் பத்ரதீர்த்தமெனப்படும்.

பதத்ரி தீர்த்தம். ஜடாயுவும் ஸம்பாதியும் ஸூர்யமண்

டலத்தை நாடிச் சென்றனர். நடுவழியில் தாபம் தாளாமல் இறக்கை எரிந்து மூர்ச்சித்து வீழ்ந்தனர். இதைக் கண்டு ஸூர்ய ஸாரதியான அருணன் இவர்கள் மோஹத்தை அகற்ற ஸூர்யனை ஓர் வழி கூறும்படி கேட்டான். அவர் கங்கைக்குப் போகும்படிக்கூற கருடன் அவர்களைக் கங்கையில் ஸ்நாநம் செய்வித்தான். தாபமகன்று இறக்கை முளைத்தது. அந்த இடம் பதத்ரீ தீர்த்தமாயிற்று. அது விஷத்தை அகற்ற வல்லது.

விப்ரதீர்த்தம். அந்தர்வேதி எனும் நகரில் ஓர் பிராமணனிருந்தான். அவனுக்குப் பல புத்திரர்கள் பிறந்தனர். கடைசி புதல்வனை ஆஸந்திவனுக்குத் தந்தை மறுநாள் விவாஹம் செய்யத் தீர்மானித்திருந்தார். முதல் நாளிரவு அவன் தூங்கும்போது கங்காலி எனும் ராக்ஷஸி அவனைத் தூக்கிச் சென்றாள். கங்காதீரத்தில் அவனைக்கொண்டு விட்டுத் தான் அவனது தாயென்று கூறுவிடில் அவனைக் கொல்வதாகக் கூறினாள். அவன் அதற்கு அஞ்சி ஆங்குள்ளோரிடம் இவள் தனது தாயென்றே கூறிவந்தான். இச்சிறுவனது கல்வியையும் குணத்தையுங் கண்டு களித்து ஓர் அந்தணர் அவனுக்குத் தன் புதல்வியை யளித்து விவாஹம் செய்வித்தார். எந்த நிமிஷத்தில் தன்னையும் தன் மனைவியையும் அடித்து இவ்வரக்கி புஜிப்பளோ என்ற ஏக்கத்தால் அவன் ஸந்தோஷமில்லாதிருந்தான். இதையறிந்த மனைவி கங்கையையும் மாதவனையும் போற்றும்படி தன் பதியிடம் கூறினாள். அங்ஙனமே அவர் துதிக்க பகவான் சக்ராயுதத்தால் அரக்கியைக் கொன்று ஆஸந்திவனை மனைவியுடன் அவன் பெற்றோரிடம் கொண்டு சேர்த்தார். இவன் துதித்தவிடம் விப்ர தீர்த்தமாம்.

பாநு தீர்த்தம். அபிஷ்டுதன் எனும் அரசன் வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளைக் கொண்டு ஓர் அச்வமேதயாகம்

செய்ய ஆரம்பித்தான். அந்தணர் வேள்வி செய்வதாயின் அரசனிடம் யாகபூமியை யாசிக்கவேண்டும். அரசன் செய்யும்போது யாரைக் கேட்பதென ஸந்தேஹமுண்டாயிற்று. வஸிஷ்டர் ஆதித்யனிடம் கேட்கலாமென்றார். அப்படியே அவரை யாசித்து அரசன் வேள்வி செய்தான். அரக்கர்கள் ஸாமவேதிகளான வேதியர் வேடம்பூண்டு அந்த வேள்வியை நிந்தித்தார்கள். விச்வரூபனெனும் ஸூர்ய புத்ரன் இதைத் தந்தைக்கறிவித்தான். ஆதித்யன் தர்ப்பை ஜலத்தால் அரக்கர்களைச் சாம்பலாக்கி மற்ற ராக்ஷஸர்கள் உள்ளே நுழையாமற்படி அக்நியைச் சுற்றி தர்ப்பைகளைப்போட்டுப் பரிஷேசநமும் செய்யச் சொன்னார். வேள்வி நடந்தஇடம் பாநு தீர்த்தமாம்.

பில்ல தீர்த்தம். கங்கையின் தென்கரையில் ஆதிகேசமெனும் ஓர் லிங்கம் மஹர்ஷிகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. விந்துக்ஷீபமுநிவரின் ஸோதரரான வேதரிஷி அந்த லிங்கத்தை ப்ரதிதிநம் விதி வழுவாது நியமத்துடன் பூஜை செய்து வந்தார். பில்லன் எனும் ஓர் வேடன் ஓர் கையில் மாம்ஸத்தையும் மற்றோர் கையில் கிடைத்த புஷ்பத்தையும வாயில் கங்காஜலத்தையு மெடுத்து வந்து காலினால் வேதர் பூஜைசெய்த புஷ்பங்களை அகற்றி வாய்ஜலத்தால் அபிஷேகம் செய்து புஷ்பம் சூட்டி மாம்ஸத்தை நிவேதநம் செய்துவந்தான். வேதர் தானளித்த மலர் கீழே கிடப்பதையும் வேறு புஷ்பம் சிரஸிலிருப்பதையும் மாம்ஸம் அருகே இருப்பதையுங் கண்டார். முதல் நாள் சுத்தம்செய்து பூஜைசெய்தார். மறுநாளுமிங்ஙனமே இருக்க ரிஷி சிநங்கொண்டார். யார் இந்த அக்ரமம் செய்வதெனப் பதுங்கிநின்று பார்த்தார். பில்லன் வந்தவுடன் சிவலிங்கம், பக்த! இதுவரை எங்குசென்றாய்? நீ இல்லாத க்ஷணம் எனக்கு மிக்க துன்பத்தை அளிக்கிறதென்றார்.

இதைக்கேட்டுக்கொண்டிருந்த வேதருக்கு முன்னிலும் பன்மடங்கு சிவனிடமே கோபமுண்டாயிற்று. நீசனது பூஜையை ஏற்று அவனிடம் அன்பு கொண்ட சிவனைச் சிலையால் தாக்க ஆரம்பித்தார். பகவான் அவரைப் பார்த்து நாளைக்குப் பக்தன் பூஜையைப் பார்த்தபின் என்னை அடிக்கலாம், சற்று பொறுத்திரு என்றார். மறுநாட்காலையில் வேதியர் வந்தபோது லிங்கத்தின் தலைமீது ஓர் காயம் காணப்பட்டது. அவர் அதை ஜலத்தினால் அலம்பி தர்ப்பையையும் களிமண்ணையுங்கொண்டு சிகித்ஸை செய்தார். வேடனோ அதைப் பார்த்தவுடன் ஐயோ! யான் உயிருடனிருக்கும்போது என் சிவனது தலைமீது காயமேற்பட்டதே!! என்று கதறி மூர்ச்சித்தான். பகவான் ப்ரத்யக்ஷமாகி அந்தரங்க பக்தியுள்ள பில்லனுக்கு முதலில் வரமளித்தார். அவன் சிவ நிர்மால்யமே தனக்குணவாகும்படியும் தன் பெயரால் ஓர் தீர்த்தம் வழங்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தான். அதே பில்ல தீர்த்தமாயிற்று.

சக்ஷுஸ் தீர்த்தம். பௌவநமெனும் நகரிலே விருத்த கௌசிகரது புதல்வனான கௌதமரென்றோர் பிராமணன் இருந்தான். அவனுக்கு மணிகுண்டலனெனும் ஓர் வைச்ய நண்பனுண்டு. தான் தேடிய பொருளால் ஜீவிப்பதுதான் நல்வாழ்வெனக் கூறி கௌதமன் வைச்யனை ஏராளமான தனத்தை எடுத்து வரும்படிச் செய்து இருவரும் பொருள் தேட தூரதேசம் சென்றனர். வஞ்சகனான வேதியன் நண்பனிடமுள்ள தனத்தைக் கவரக் கருதினான். ஆதலின் அதர்மத்தினால் பொருள்தேடி அநுபவிப்பதே ஸுகமென்று வாதிக்க ஆரம்பித்தான். வைச்யன் யோக்யனாதலின் தர்மத்தினால் தேடும் பொருளே ஸுகத்தை அளிக்குமென்றான். வாதம் பலத்தது. வைச்யனிடமுள்ள தநமனைத்தையும் பந்தயமாக வைக்கச்சொன்னான். சில துஷ்டர்களை

அழைத்துவந்து அதர்மத்திலால்தான் ஸுகமென்று சொல்லி தன் கக்ஷி ஜயத்தால் அப்பொருள்களைப் பி கொண்டான். உயிருடன் அவனை விட்டால் தனக்கு ஏதா னும் தீங்கு நேறுமெனக்கருதி கைகளையும் கண்களையும் பந்த யமாகவைத்து முன்போலவே ஜயித்து அவைகளைச் சேதித் தான். அப்போதும் வைச்யன் பிடிவாதமாக தர்மமே ஸுக மென்றான். பணத்தைப் பறித்துக்கொண்டு பரிதாப நிலையில் வைச்யனை விட்டுவிட்டு வேதியன் சென்றான். வைச்யனோ தர்மத்தை நம்பினாலும் கைகள் வெட்டுண்டு கண்கள் பிடுங்க பட்ட வலியால் கதறிக்கொண்டிருந்தான். தற்செயலாக ஆங்கு ஸ்நாநம் செய்யவந்த விபீஷணனது புத்ரன் இதைக் கண்டு பரிதாபத்தை அடைந்து தனது தந்தையினிடம் சென்று முறையிட்டான். அவர், ஹநுமான் ஸ்ரீ லக்ஷ்மணருக் காக கொண்டுவந்தபோது லங்கையில் சிந்தி முளைத்த விசல்ய கரணி எனும் ஒஷதியிலிந்து ஓர் துண்டை எடுத்துக் கொடுத் தார். அதைக்கொண்டு விபீஷணபுத்ரன் அவ்வைச்யனது கைகளையும் கண்களையும் முன்போலுண்டாகும்படி செய் தான். அன்றியும் அவ்வோஷதித் துண்டையும் அவ னிடமே அளித்தான். அதைக்கொண்டு மணிகுண்டலன் எவராலும் நீக்கமுடியாத அந்தத் தன்மையை ஓர் ராஜ குமாரிக்கு அகற்றினான். அவ்வரசன் அக்கன்யகையையும் ராஜ்யத்தையும் மணிகுண்டலனுக்கு அளித்தான். அவன் தனது பிராமண நண்பனை அழைத்துவந்து அவனுக்கு ராஜ போகத்தை அளிக்கவேண்டுமெனக் கருதினான். வஞ்ச கனும் அதர்ம சீலனுமான அந்த அந்தணன் இவனிடம் தநத்தை அபஹரித்துக் கொண்டு போகும்போது பல திரு டர்களும் சூதாடிகளும் சேர்ந்து அப்பொருளை அபஹரித் துச் சென்றனர். பித்தனைப்போல் திரியும் அந்த நண்பனை அழைத்துவந்து மணிகுண்டலன் தன்னுடன் ராஜபோகந்

னுபவிக்கும்படிச் செய்தான். வைச்யன் கண்பெற்ற க்ஷேத்ரஸ் தீர்த்தமாம்.

ஊர்வசி தீர்த்தம் ப்ரமதி எனும் அரசன் ஓர் ஸமயம் தேவலோகஞ் சென்றான். ஆங்கு இந்த்ரன் சொக்கட்டா டிக்கொண்டிருந்தான். இவ்வரசனையும் சக்ரன் ஆட்டத் திற் கழைத்தான். ப்ரமதி ஆட்டத்தில் ஜயித்து ஊர்வசி வஜ்ரம் முதலியவைகளைக் கைப்பற்றினன். இதனால் இந்த்ரன் வருந்த அவன் நண்பனை விச்வாவஸு எனும் கந்தர்வராஜன் அரசனுடன் பாச்சைக்காயாட முன்வந்தான். அவன் மிக ஸமர்த்தனுதிலின் அரசனது தநமனைத்தையும் பந்தயமாக்கி அபஹரித்து அவனையும் மிகுதி பந்தயத்தைக் கொடாததால் பாசத்தால் கட்டி சிறைப்படுத்தினன். பல்லாண்டுகள் சென்றும் தந்தை வாராததால் ஸுமதி எனும் இளவரசன் வருந்தி மதுச்சந்தஸ் எனும் தன் புரோஹிதரைக் கேட்டான். அவர் ஞாநதிருஷ்டியால் நடந்ததை விளக்கி கங்கா ஸ்நாநத்தினுல் தந்தையை விடுவிக்கலாமென்றார். ஆயிரமாண்டுகள் ஸுமதி கங்கையில் ஸ்நாநம் செய்து ப்ரமதியை விடுவித்தான். அவ்விடம் ஊர்வசி தீர்த்தமாம்.

ரிஷி ஸத்ரம். ஸப்தரிஷிகள் கங்கையை ஏழுபிரிவாகப் பிரித்துக்கொண்டு அதன் கரையில் ஸத்ரம் எனும் வேள்வியைச் செய்தனர். ஆங்கு விச்வரூபனெனும் அரக்கன் அவர்களைப் பணிந்து எல்லோரையும் ஜயிக்கத்தக்க ஓர் புத்ரனைப்பெற உபாயங் கூறும்படி வேண்டினன். அவர்கள் கர்மாவே சிறந்த வழி என்றுகூறி அதை ஸாத்விகமாகச் செய்திடின் ஸாத்விக பலத்தையும் ராஜஸமானுல் ராஜஸ பலத்தையும் தாமஸமாயின் தாமஸ பலத்தையும் அளிக்குமென்றார்கள். அஸுரன் தமோகுணமுள்ளவனுதலால் அக்நியைமூட்டி தன் அவயவங்களை அறுத்து ஹோமம் செய்து பயங்கரமான கார்யத்தைச் செய்தான். விருத்ரன் என்ற

புத்ரன் பிறந்தான். அந்தஇடம் பீமேச்வரமல்லது ரிஷி
மெனப்படும். கௌதமேச்வரம் பிருஹ்மேச்வரம்
தீர்த்தம் முதலிய மூன்றரைகோடி தீர்த்தங்களிருக்கின்
கலியில் கங்கையைப்போல் புண்ய ஸாதநம் வேறுகி
யாது. உமாதேவி தனது சக்களத்தியான கங்கை
பெருமையை ஸஹிப்பதில்லை. ஆதலின் தாயின் மன
ஸந்தோஷப்படுத்த கங்கை செல்வோருக்கு விநா
ஏதேனும் தடையைச் செய்கிறார். கங்கே! கங்கே!!
வாயினால் சொன்னாலும் மநதினால் நினைத்தாலும்
பாபங்களும் அகலும். கங்கையின் மஹிமையைக் கூ
பிருஹ்மபுராணத்தைப் பக்தியுடன் கேட்பின் அச்வ
பலமுண்டாகும்

சுபமஸ்து.